# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு.

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

THE REGISTRAR OF ... No. ... SEP 192... MADRAS

தொகுதி - ௨] | பிரபவ௵ - தை, மாசி, பங்குனி | [பகுதி - ௧, ௨, ௩.

இரண்டாம் பதிப்பு

உள்ளடக்கம்.


| | | |
|---|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை | ... | ௧, ௪௧, ௮௧ |
| ஆராய்ச்சிப் பகுதி | ... | ௩, ௪௪ |
| விரதப் பகுதி | ... | ௫, ௪௫, ௮௩ |
| குலதிலகர் பகுதி | ... | ௭, ௪௭, ௮௬ |
| மாதர் பகுதி | ... | ௯, ௪௮, ௯௮ |
| பொது விஷயங்கள் | ... | ௰, ௫௰, ௯௰ |
| தொழிற் பகுதி | ... | ௰௩, ௫௩, ௯௩ |
| இல்வாழ்க்கைப் பகுதி | ... | ௰௫ |
| [illegible] பகுதி | ... | ௰௭, ௫௫, ௯௫ |
| மாணவர் பகுதி | ... | ௫௭, ௯௭ |
| விகடக் களஞ்சியம் | ... | ௬௰ |
| செங்குந்தர் கிளர்ச்சி | ... | ௰௯, ௬௧, ௱௧ |
| தலைச்சங்கத்தின் தீர்மானங்கள் | ... | ௩௰, ௭௫, ௱௧௪ |
| புது வருஷத்திய நல்விருப்பங்கள் | ... | ௩௧ |
| வர்த்தமானப்பகுதி, செய்தித்திரட்டு. | | ௩௩, ௭௬, ௱௧௭ |
| பாமாலைப் பகுதி | ... | ௩௭, ௭௮, ௱௧௭ |
| வினாவுக்கு விடை, புதிய வினாக்கள் | .... | ௩௯, ௭௮ |
| நன்கொடை | ... | ௭௬, ௱௧௯ |
| செங்குந்தர் பஞ்சாங்கம் | ... | ௪௰, ௮௰, ௱௨௰ |


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

Registered No. 1514

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு வகுப்பினரும் சீரடையவேண்டிச் சங்கங்கள் நிறுவி வெகு ஊக்கத்துடன் உழைத்து வரும் இக்காலத்தில் பண்டைப் புகழ்பெற்ற செங்குந்த குல மக்கள் மட்டும் இது விஷயத்தில் யாதொரு ஊக்கமுமின்றிக் கிடப்பதையுன்னி, நமது குல முன்னேற்றத்திற்கென உழைக்கச் சென்னையில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கின்றது. இம்மகாஜனசங்கம் நமது குலமக்கள் கல்வி, ஒழுக்கம், செல்வம், அந்தஸ்து முதலியவற்றில் மேன்மை யடையும் வழியைத் தேடிவருகின்றது.

குலத்தொண்டு செய்துவருவதே இம்மகாஜனசங்கத்தின் நோக்கமாதலால் அது நிறைவேறத் தென்னிந்தியாவிலுள்ள செங்குந்தர் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பும் உதவியும் ஆதரவும் அவசியமாகையால், மகாஜன சங்கத்தார் தற்போது செங்குந்தர் வதியும் கிராமங்கள் தோறும் பிரசாரவேலை செய்து வருகின்றனர். பிரசாரகர்களைத் தங்கள் கிராமங்களுக்கு வரவழைக்க விரும்பும் குலாபிமானிகள் சங்க அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுவார்களாக.

---

நமது தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் உபதலைவர்களுள் ஒருவரும்,
வெற்றி வேலாயுதஸ்வாமி பரம்பரை தர்மர்த்தர்களுள் ஒருவருமான

**சைவத்திருவாளர்**

**மஞ்சட்கொல்லை அரு. சி. தியாகராய முதலியார் அவர்கள்,**

பிரபவஞு தைமீ அச்சுச் செலவிற்கு நூறு ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார்.

---

மஞ்சட்கொல்லை செங்குந்தர் ஆதீனத்துள்ள ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில் தர்மகர்த்தரும்,
மதராஸ் பளயகாட்டுக் கம்பெனியின் பாகஸ்தருமாகிய

**சைவத்திருவாளர்**

**மஞ்சட்கொல்லை தி. மு. அரு. தியாகராஜ முதலியார் அவர்கள்,**

பிரபவஞு மாசிமீ அச்சுச்செலவுக்காக நூறு ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார்.

---

நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பொருட்காப்பாளரான
திருவாளர் சோ. முருகைய்ய முதலியார் அவர்கள் சகோதரர்

**சைவத்திருவாளர்**

**திருவாரூர் சொ. காயாரோகண முதலியார் அவர்கள்**

பிரபவஞு பங்குனிமீ அச்சுச்செலவுக்கு நூறு ரூபாய் நன்கொடை அளித்துள்ளார்.

---

இக்கனவான்களது குலாபிமானத்தின் சீர்த்தியும், வள்ளன்மையின் மாண்பும் செங்குந்த உலகம் அறியாதனவல்ல. இவர்கள் நம் குலமுய்ய மேற்கொண்டுள்ள தொண்டு விரைவில் நற்பயன் தந்து இவர்களது புகலை நிலைநாட்டுமாக. எல்லா வளனும் நிறைந்து இவர்கள் நெடுநாள் நம்மவரிடையே தொண்டியற்றிவர முருகன் இன்னருள் சுரப்பானாக.—ப-ர்.




# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு
[ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - உ | பிரபவஞு - தைமீ | பகுதி - க |
| --- | --- | --- |


SEP 1928
600 008.

வேலுமயிலுந் துணை.

காவாகிய கல்வியுளார் கடைசேன்
திரவாவகை மெய்ப்பொரு ளீதவையோ
தாவா தமரா துலிசாயுத தஞ்
சாவா சிவயோக தயாபரனே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### நன்றி செலுத்தல்

இறைவனருளால் நமது 'மித்திர' னுக்கு ஓராண்டு நிறைந்து இரண்டாம் ஆண்டு துவக்குகின்றது. கடந்த ஆண்டில் பத்திரிகையை நடத்துவதற்குத் துணையாக நின்று விஷயதானஞ் செய்துதவிய வித்வசிரோமணிகளுக்கும், பொருளாதாரந் தந்த சந்தா நேயர்களுக்கும் செங்குந்த உலகம் கடமைப்பட்டிருக்கின்றதென்பது சொல்லாமலே அமையும். துவக்கும் ஆண்டிலும் அன்னாரது உதவியும் ஆதாரமும் 'மித்திர' னுக்கு லபிக்குமென்றே நம்புகின்றோம். ஆதரவு அதிகமாக, நமது மித்திரன் தான் மேற்கொண்டுள்ள குலத்தொண்டைச் செவ்வனே இயற்றி, நமது சமூகம் கல்வியிலும் அறிவிலும், உலகானுபவத்திலும், கண்ணியத்திலும் செல்வத்திலும் செல்வாக்கிலும் மேலோங்கு நெறியில் சாலச் சிறப்புடன் உழைக்கப் பின்வாங்கான் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. இறைவன் துணைநிற்பாராக.

இதுகாறும் பத்திரிகை பெற்றுக்கொண்டு வந்தவர் பலர் சந்தா தொகையைச் செலுத்தாதிருப்பினும் அவர்களுக்கும் பத்திரிகை நிறுத்தாமல் அனுப்பிக்கொண்டு வந்திருக்கிறோம். இது எமது தோழர் திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்களின் வள்ளன்மையால் சாத்தியமாயதென்க. நம்மவர், சிறப்பாக நம் குல சம்பந்தமான விஷயங்களையும், பொதுவில் அறிவை விசாலிக்கச் செய்யும் விஷயங்களையும் படித்துணர்ந்து மேன்மையடையட்டுமென்னும் பெருந்தன்மையான நோக்கத்தோடு, முதலியார் அவர்கள் இலாபத்தை ஒரு சிறிதும் கருதாது தமது சொந்த செலவில் சென்ற வருஷத்திய பத்திரிகையை நடத்தித் தந்தனர். இவ்வள்ளன்மைக்கு நாம் என்ன கைம்மாறு செய்யவல்லோம்? ஆனால், முதலியார் அவர்கள் கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடையார்.

முதலியாரவர்களைப்பற்றி ஒரு நிருபர் எழுதுகின்றார் : " பல்லாண்டுகளாகத் துயில்கொண்டு கிடந்த நமது செங்குந்த சமூகம் நித்திரை தெளியும் இந்த விடியற்காலத்திலே நமது குலத்தவரைக் கூவி யெழுப்பும் சேவல் நமது சபாபதி வள்ளலாரே யாவர். அவர் நமது சமூகத்திற்கு ஆற்றியதும் ஆற்றுகின்றதுமான நன்மைகள்

இராசகங்தோரில் பதியப்பெற்று வருகின்றது. இவ்வாறு கவி வீரராகவ முதலியார் ஒழுங்குற 70 வருஷம் அரசாண்டு காலமானார்.

பிறகு, இவர் குலத்தோராகிய கைக்கோளர்கள், நிலந்திருந்துவதில் காலங்கழித்து, அரசர்க்குரிய வித்தைகளிற் பழகாதிருந்து விட்டதாலும், ஜனத்தொகை பெருகி ஒற்றுமை யற்றிருந்தபடியாலும், தம் நாட்டைத்தாமே ஆளச் சக்தியற்றவர்களாய்ச் சோழதேசம் சென்று சோழராஜனைக் கண்டு, தங்களுக்குள் ஒற்றுமையின்மையாலுண்டாகிய குறைகளைக் கூறி, தங்கள் மரபினர் தொன்று தொட்டுச் சம்மந்தப்பட்டிருக்கும் சோழராஜ வம்சத்தினர் ஒருவரை ஈழநாட்டரசனாக நியமிக்கவேண்டுமென வேண்டிக் கொண்டனர் அப்போது சோழராஜனது குமாரர்களில் ஒருவன் மதுரையில் கல்விகற்றுக்கொண்டிருந்தான். அரசன் அவனை வரவழைத்து, அவனுக்குதவியாகச் சில பிரபுக்களையும் ஒரு சிறு கைக்கோளப் படையையும் கொடுத்து, ஈழதேசத்தை நீதி தவறாது அரசாண்டு வரும்படிக் கட்டளையிட்டனுப்பினான்.

இவ்விராஜகுமாரன் ஏழு வத்தைகளில் ஜனங்களை ஏற்றிக்கொண்டு, முன் வத்தையில் கைக்கோளப்படையை யேற்றி வந்து யாழ்ப்பாணத்திலிறங்கினான். இக்கைக்கோளப் படையின் சந்ததியார், ஏழுவத்தைகளுக்கும் முன் வந்த வத்தையில் வந்திறங்கினபடியால், ஏழு வத்தையார் என்று இன்றைக்கும் அழைக்கப் பெறுகின்றனர்.

இவ்விராஜகுமாரன் கவி வீரராகவ முதலியாரது கோட்டையைப்பலப்படுத்தி, கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் கோயிலையும், மேற்கே வீரமாகாளி கோயிலையும், தெற்கே கயிலை விநாயகராலயத்தையும், வடக்கே தலங்காவல் பிள்ளையார் கோயிலையும், மத்தியில் சட்டைநாதர் கோயிலையும் கட்டுவித்து நல்லூரை ஓர் சிறந்த நகரமாக்கி, செங்குந்த முதலிமார்களால் பட்டங்கட்டி முடிசூட்டப்பெற்று அரசனானான். சிங்கையாரியன் தொடங்கிப் பராச சேகர சிங்கையாரியனீறாக யாழ்ப்பாணத்தை அரசு செய்த சோழவம்சத்தரசர்களுக்குத் துணையாயிருந்து பட்டங்கட்டினவர்கள் கைக்கோளர்களேயாவர். இது பற்றியே கைக்கோளரை மற்றைய வினத்தோர் இன்றைக்கும் பட்டங்கட்டிகளென்று அழைக்கிறார்கள். இதுவன்றி இவர்கள் வசிக்கும் தெருவை ' அரசர் தெரு ' வென்றும், இவர்களை அரசடித்தெருவாரென்றும் அழைக்கிறார்கள்.

நல்லூரில் சோழவம்சத்தரசர் இருந்து அரசாட்சி செய்த கோட்டை முதலியவை செங்குந்தர் வீதியை அடுத்தே இருக்கின்றன. கோட்டை வாயிலுக்கணித்தாய்க் கட்டப்பெற்றுள்ள சட்டைநாதர் கோயில் வெகுகாலம் கைக்கோளர் பார்வையிலேயே யிருந்து, பரங்கியர் காலத்தில் கைக்கோளர் பேர்ற் றிரும்பியெழுதப்பெற்று இராசகங்தோரில் பதியப்பட்டிருக்கிறது. இக்கோயிலும் இப்போது இவர்கள் வீதியிலேயே இருக்கிறது.

தமிழரசருக்கு அட்டிற்காரராக வந்த மடப்பளியார் பிறகாலத்தில் உத்தியோகத்தில் மேம்பட்டுக் கைக்கோளர்கள் சிறப்பைக் கண்டு சகியாதவர்களாய் இவர்கள் சிறப்பைக் குறைக்க எண்ணி ஒறுக்கத் தொடங்கினர். இதைச் செங்குந்தர்கள் தாங்கமுடியாதவர்களாய்த், தங்கள் தாய் நாடாகிய சோழநாடு சென்று, தங்களுக்குச் சகல சிறப்பும் உரித்தெனப் பட்டயம் பெற்று வந்து, ஈழ தேசத்தின் தலை நகரமாகிய கொழும்புக்கந்தோரில் பதிவுசெய்வித்து யாழ்ப்பாணம் வந்து பல்லக்கேறிச் சகல வரிசைகளோடும் வீதி வலம் வந்தார்கள். இன்றைக்கும் 'பல்லக்குச் சுப்பர்,' ' பல்லக்குக் கந்தர்' என்று உறுதி முதலிய சாசனங்களில் எழுதப் பெற்றிருக்கின்றன.

யாழ்ப்பாணக் குடியேற்றத்திற்கும் அரசுக்கும் கைக்கோளரே பேருதவியாயிருந்தபடியால், சோழ அரசர்கள் இவர்களுக்குச் சகல சிறப்புங் கொடுத்துப் பாதுகாத்து வந்தனர் என்றும், இவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பெற்ற விபூதிப்பூச்சாகிய மாட்டுக் குறியால இவர்கள் சிவ பரம்பரையினரென்றும் பெறப்படுகிறது.

பூ. தருமலிங்க உபாத்தியாயர்,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.



# விரதப்பகுதி

## மார்கழி மாதம் (தொடர்ச்சி)

### திருப்பள்ளி யெழுச்சி.

உத்தராயணமாகிய தேவாது பகற்காலம், சிருஷ்டி தொடங்கப் பெற்று உலகம் நடைபெறும் காலமாகவும், தக்ஷிணாயணமாகிய தேவரது இராத்திரி சம்மாரத்தின் பின்னுள்ள ஒடுங்கிய காலமாகவும் கொள்ளப் பெறுதலின், தக்ஷிணாயணத்தின் கடைசி பாகமாகிய மார்கழி மாதம் சிருஷ்டி ஆரம்பகாலத்தைத் தெரிவிக்கிறது.

சர்வ சம்மாரத்தின் பின்னர்ப் பரமசிவம் பழையபடியே பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கத் திருவுளங்கொண்டு வயிந்தவசக்தியைச் சிருஷ்டிக்கத் தொடங்கும் சந்தர்ப்பம், அஃதாவது சம்மார காலத்தில் சக்தியின் சம்பந்தமற்று அயர்ந்து நித்திரை செய்வது போன்று செயலற்றுத் தனித்து இருந்த நிலையினின்று புடைபெயர்ந்து ஐந்தொழில் செய்தற் பொருட்டுச் சக்தியோடு சம்பந்தப்படும் காலம் ' திருப்பள்ளி யெழுச்சி' என வழங்கும்.

எவ்விதத்திலும் குறைபாடின்றிப் பரிபூரணமாயுள்ள இறைவன் ஐந்தொழிலியற்றுதல், ஆணவ மலத்தால் மூடப்பட்டுள்ள ஆன்ம கோடிகள் பையப்பைய மலத்தடிப்பு நீங்கிக் கடைசியில் இறைவன் திருவடிப்பேறாகிய முத்தி யென்னும் பேரானந்த நிலையை அடையும்படிச் செய்தற் பொருட்டேயாகலின், மோக்ஷத்தை விரும்பிய ஆன்மாவானது யாதொரு செயலுமற்ற நிலையாகிய துயிலினின்றும் எழுந்து, தன் க்ஷேமத்திற்காக சிருஷ்டி முதலிய தொழிலை மறுபடி ஆரம்பிக்குமாறு சக்தியோடு சம்பந்தப்படும்படிச் செய்து கொள்ளும் விண்ணப்பத்தையே நமது மணிவாசகப் பெருந்தகையார் 'திருப்பள்ளி யெழுச்சி' என்னும் பதிகமாகச் செய்தருளியுள்ளார்.

### திருவெம்பாவை.

பிரபஞ்சம் நடைபெறுவதற்குக் காரணமாயிருந்த சக்திகள், சர்வ சம்மார காலத்தில், ஒன்றில் ஒன்று ஒடுங்கிக் கடைசியாக யாவும் பராசக்தியில் ஒடுங்கும். பிறகு அப்பராசக்தியும் பரசிவத்தில் ஒடுங்கும். இவ்வாறு ஒடுங்கிய சக்திகள் எல்லாம் முன்னர் ஒடுங்கிய முறைப்படியே பரசிவத்திலிருந்து தோன்றும் பரா சக்தியிலிருந்து ஒன்றிலொன்று தோன்றப் பிரபஞ்சமுண்டாகும்.

இவ்வாறு பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் பொருட்டுப் பராசக்தியில் தோன்றிய ஞானக் கிரியைகளொத்த இச்சையே திருமேனியாகக் கொண்ட சதாசிவமூர்த்தி மகேசுரதத்துவத்திலிருந்த மனோன்மணி என்னும் சக்தியை எழுப்ப (தோற்றுவிக்க), அச்சக்தி சர்வபூததமனி என்னும் சக்தியை எழுப்ப, அது பெலப்பிரமதனி என்னும் சக்தியை எழுப்ப, அது பெலவிகரணி என்னும் சக்தியை எழுப்ப, அது கலவிகரணி என்னும் சக்தியை எழுப்ப, அது காளியை எழுப்ப, அது இரவுத்திரி என்னும் சக்தியை எழுப்ப, அது சேட்டை என்னும் சக்தியை எழுப்ப, அது வாமை என்னும் சத்தியை எழுப்ப இவ்வாறு நவசக்திகள் ஒன்றையொன்று எழுப்புதலினால் மாயையை அதிஷ்டித்திருக்கிற அனந்த தேவராலே அசுத்த மாயை காரியப்பட்டுப் பிருகிருதிப் பிரபஞ்சம் நடைபெறுகிறது என்னும் சிருஷ்டி யாரம்பத்தை, மணிவாசக வள்ளல் மார்கழி மாதத்தில் திருவண்ணாமலையின் கண் எழுந்தருளியிருந்தபோது மார்கழிப்புதுநீராடும் பொருட்டு ஊரிலுள்ள பெண்மணிகள் ஒருவரையொருவர் கதவைத்தட்டிக் கூவி அழைத்துக் கொண்டு போகிற உலக நடையில் வைத்துத் 'திருவெம்பாவை' என்னும் அரிய பதிகத்தைப்பாடி யருளினார். அதனால் மணிவாசகப் பெருமானுக்கு மார்கழித் திங்கள் தோறும் திருவாதிரைக்கு முன் விடியற்காலத்தில் விழா நடத்துவது வழக்கமாயிருந்து வருகிறது.

நமது ஆசாரிய சுவாமிகள் அருளிச்செய்த திருப்பள்ளி யெழுச்சியையும், திருவெம்பாவையையும் மார்கழி வைகறையில் திருவருள் வெள்ளத்தில் திளைக்கும் பாவனையாகப் புது நீராடித் திரிகரண சுத்தியாய்ப் பாராயணஞ்செய்தல் ஒவ்வொரு சைவரது கடமையாம்.

---

* தொகுதி ௧ பகுதி ௧௨ 484-ம் பக்கம் பார்க்க.

## போகி, பொங்கல்.

கார் காலத்தில் விதைக்கப் பெறும் செந்நெல் முதலிய நன்செய்த் தானியங்கள் மார்கழியில் அறுவடை செய்யப் பெறுகின்றன. இப்பிரதானமான உணவுத் தானியங்கள், மின்னல் இடி முதலிய கருவிகளோடு கூடிய மேகம், சூரியன், சந்திரன், வாயு முதலியவற்றின் உதவியால் விளைகின்றன. மேற்கூறிய இவ்வைவர்களுக்கும் அதிதேவதைகள் உண்டென்பதும், அத்தேவதைகள் திருப்தி செய்யப்பட்டால் தான் உலக க்ஷேமத்திற்குரிய கால மழை பெய்தல் முதலியவை சம்பவிக்குமென்பதும், தேவர்களுக்கெல்லாம் இந்திரனே தலைவனென்பதும் ஆரியமதக் கொள்கையாம்.

ஆகையால் நம் நாட்டவர்க்குச் சீவாதாரமான தானியங்கள் விளைதற்குக் காரணமாயிருந்த மேகம் சூரியன் முதலியவற்றிற்குத் தலைவனாகிய இந்திரனுக்கு நன்றி பாராட்டுதலாக, புதிய செந்நெல்லரிசியால் செய்த பொங்கல் முதலியவற்றைப் படைத்துக் குதூகலமடைவது நம் நாட்டார் பண்டைக்கால வழக்கமாயிருந்தது. அதனால் உலக க்ஷேமத்திற்குத் தானே காரணம் என்று எண்ணித் தேவேந்திரன் கர்வங்கொண்டிருந்தான். அதையறிந்த ஸ்ரீ கண்ணபிரான் அவன் மனங்கொண்டுள்ள கர்வத்தை அடக்கக் கருதி அவனுக்குரிய பெரும் பொங்கல் விழாவைத் தனக்குரியதாக்கிக் கொண்டனர். அதனால் தேவேந்திரன் கோபங்கொண்டு கண்ணபிரானையும் அவருடனிருந்த கோபாலரையும் கோக்களையும் வருத்த நினைத்துக் கன்மாரிபெய்வித்தனன். அச்சமயம் அவ்வருத்தத்தைக் கண்ணபிரான் கோவர்த்தனகிரியை எடுத்துக் குடையாகப் பிடித்துத் தடுக்கக் கண்ட இந்திரன் பயந்தோடி வந்து கண்ணபிரானை வணங்கி, "எம்பெருமானே! யான் அறிவின்மையால் செய்த குற்றத்தைப் பொறுத்தருளிப் பொங்கல் விழாவைப் பழைய படியே அடியேனுக்குரியதாக்க வேண்டும்" எனப் பிரார்த்தித்தான். மாயனும் மனமிரங்கி "தேவராஜனே! நீ உன் கொவதனாலிழந்த பெரும் பொங்கல் விழாவை மறுபடியும் பெறாயாயினும், மார்கழிக் கடைசி நாளை உனக்குரியதாக்கினோம். அன்று உன்னை யாவரும் பூஜிக்கக் கடவர். அது உன் பெயராலேயே 'போகி பண்டிகை' என வழங்கப் பெறும்" எனக் கட்டளையிட்டனர்.

ஆகவே பொங்கல் பரமபதவாசனாகிய ஸ்ரீமன் நாராயணமூர்த்திக் குரித்தாய், சூரியன் மூலமாக ஆராதிக்கப்பெறும்.

### மாட்டுப் பொங்கல்.

தருமத்தை மக்களுக்கு மிகப்பயன்படுவதாகிய பசுவாகவும், அதர்மத்தைக் கண்ட மாத்திரத்திலேயே பயத்தையும் துன்பத்தையும் உண்டாக்குவதன்றி உலகத்திற்குத் தீங்குவிளைக்கக்கூடிய புலியாகவும் மேலோர் கருதுவர்.

அதர்ம சொரூபமாகிய புலியால் துரத்தப்பட்டு ஓடும் தர்மசொரூபமாகிய பசுவை, இறைவன் பரிமேல் எழுந்தருளி வந்து அதர்மப் புலியை வேட்டையாடிக் கொன்று சிதறுண்டோடிய தர்ம பசுக்களை ஒன்று சேர்த்து திரட்டிரக்ஷிக்கும் ஐதீகத்தைக் கொண்டாடுவதே மாட்டுப் பொங்கல் என வழங்கும். இக்கருத்துக் கொண்டே துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும்,

கடுமை பசும்பொற் புரவிமேற் கொண்டு
  களிமை மன மலர்கரத் தெறிபூம்
படையொடு துரந்து வந்துமென் விடையப
  பகைப்புலி தனையெறிந் திலையே

எனக்கூறியுள்ளார். இது சம்பந்தமாய்ச் செய்யும் மற்றவற்றிற்கெல்லாம் வழக்கம் ஆதாரமேயன்றி நூலாதாரமிருப்பதாகத் தோன்றவில்லை.

போகி, பெரும் பொங்கல், மாட்டுப்பொங்கல் ஆகியவை நம் தமிழ் நாட்டில் மிகச் சிறந்த பண்டிகைகளாகக் கொண்டாடப் பெற்று வருகின்றன.

மா. அ. கனகசபை முதலியார்.



# குல திலகர் பகுதி

## படிக்காசுத் தம்பிரான்.

### உண்மைச் செங்குந்த அந்தணன்.

அந்தணன் என்று எழுதுவான் புக்கது எற்றுக்கெனில், அந்தணன் என்னும் காரண இடுகுறிப் பெயரைக் காரணங்கருதி அழகிய தண்ணளியுள்ள ஒல்காப்புகழுடை நங்குலத் திரு விளக்காகிய படிக்காசுப் புலவர் தம் சீரிய பண்பு பற்றியே யாம்.

"அந்தண ரென்போ ரறவோர் மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்"

இப்பெரும் புலவர் இற்றைக்கு இருநூற்றறுபது யாண்டுகளுக்கு முன்னர் இருந்தவர்.

... "...தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று பெரும் புலவர்களால் புகழ்கொண்ட சீரிய தொண்டை நாட்டில் பொன்விளைந்தகளத்தூ ரென்றும் தென்களத்தூ ரென்றும் வழங்குகிற பேரூரிலே பிறந்தவர். 'இலக்கண விளக்கம்' செய்த வைத்தியநாத தேசிகர்க்கு மாணவரென்பர். இளமையிலேயே நம் செந்தமிழ் மொழியிலுள்ள இலக்கண இலக்கிய நூல்களை ஐயமின்றி ஆய்வோடு உணர்ந்து, நங்கன்னித் தண்டமிழ் அன்னையின் நாட்டம்போல் சிறந்து விளங்கினர். இவரது கல்வியின் பெருமையைப் பிற புலவர்கள்பாடிய கீழ்வரும் பாக்கலாலறிக.

"மட்டாருந் தென்களந்தைப்படிக்காசன் உரைத்த
  தமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
  பரிந்திவ் வேட்டைத்
தொட்டாலுங் கைமணக்குஞ் சொன்னாலும்
  வாய்மணக்குந் துய்ய சேற்றில்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே
  பாட்டினது நளினந்தானே."
"பண்பாகப் பகாசந்தம் படிக்காசலா லொருவர்
  பகரொணாதே."

புலவர் இவ்வாறு புகழ்ந்துரைக்கும் சிறப்புடையராய்த் திகழ, இதை நன்கு அறிந்துகளிப்புற்ற உண்மைச் செங்குந்தகுலச் சைவநன்னெறியாளர் ஒருவர், நம்புலவர் இல்லின் கட்போந்து, புலவரைக் கண்டு "தமிழ் பயின்ற தகையோய்! என் இல்லில் பூக்கொம்பென வளரும் இளநங்கையை வேட்டு இல்லறம் நடத்தல் வேண்டு"மென விழைந்தனர். இங்ஙனம் தம்பால் வந்து வேண்டிய பெரியாரைப் பேரன்போடு வரவேற்று, அவருடைய இன்சொல்லைப் பருகி இனிய சிற்றுண்டிகள் படைத்து உண்பித்து, பெரியார் வழியாகத் தன் கருத்தை வெளியிடுவதாகக்கூறி அனுப்பினர்.

மறுநாள் நாட்டாண்மை, பெரியதனம் முதலிய சிறப்புப் பட்டம் பலபெற்ற தங்குலப்பெரியார் துணைக்கொண்டுபெண்ணின் குலம்முதலியவற்றை நன்கு தெரிந்துகொண்டார். பிறகு நற்றினமொன்றில் தம்மைச் சார்ந்த பெருங்கல்வியாளர்களையும் குலத் தலைவர்களையும் அழைத்துக்கொண்டு பெண்வீடு நோக்கிச் சென்றனர். செல்லுழி நற்குறிகள் பல கண்டு ஒவ்வொருவரும் மிக்க களிப்புடன் நங்கையின் இல்லிற் புக்கனர். இவர்கள் வரவைக் கண்ட வீட்டின் தலைவர் தம் புதல்வியின் நற்காலத்தையுணர்ந்து அடங்கா மகிழ்வோடு வரவேற்று, மிக்க அன்புடன் பிறப்பிருக்கை புலிக்கம்பளம் முதலிய உயரிய விரிப்புகளை விரித்து, வந்தவர்கள் இருக்கையில் அமர்ந்த பின்னர், அவரவருக்கேற்ற கையுறை வழங்கித் தானும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்.

நம்புலவர் இருந்த இடத்தில் பெரிய பலகணியொன்றிருந்தது. இதன் வழியாகப் புலவர் உள் நோக்கினர். அது ஒரு பெரிய வழிபாட்டறையென உணர்ந்து பார்க்க, ஐங்கரன், சிவபெருமான், மலைமகள், ஒன்பதின்மர் பெருங்கற்பரசிகள் முதலிய தெய்வ உருக்கள் செம்பொன் வண்ணத்தில் செவ்விதின் தீட்டப்பட்டிருந்தன. இவ்வுருக்களைக் கண்டு களிக்கும் காலத்தில், திருமகளும் கண்டு பொறாமையுற்று அஞ்சும்படியான சிறந்த எழிலமைந்த இள நங்கை ஒரு பொற்றட்டில் இறைவன் வழிபாட்டிற்குரிய நறுமலர் சந்தனம் பழம் முதலான எல்லாப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு இவ்வறையினுள் பைய வந்தனளாயினும், நங்கையின் காலணிகள் புலவரை வென்றுவிட்டோமெனத்

செல்வதேவதை. அன்னபூரணியே நமது அறத்தெய்வம். ஆகவே நமது மாதர் அன்னபூரணிகளாக இருப்பதும் அவர்களின் தெய்வீகத்தைக் குறிக்கும். கணவனுக்கு "அறுசுவை உண்டி அமர்ந்து இல்லாளாய் ஊட்டு" பவளும்,

"குடநீர் அட்டுண்ணும் இடுக்கண் பொழுதும்
கடல்நீர் அறவுண்ணும் கேளிர் வரினும்
கடனீர்மை கையாறுக் கொள்" பவளும்

ஹிந்து மாதே. புது மருமகள் மிக்க அழகுள்ளவாளாயிருப்பின், அவளை இலக்ஷ்மி என்று கருதுவதை நாம் காண்கிறோம். இந்தியாவில் மாதர்களின் நிலைமை வியப்புறத் தக்கதும் அழிவுறாததுமாம். வாழ்க்கையில் இவ்வளவு உயர்ந்த நிலைமையை நமது மாதர் அடைந்திருப்பது அவர்களது அன்பின் பொருட்டும் அவ்வன்பின் நெறியே செய்யும் பணிகளின் பொருட்டும் என்க. கற்பிற் சிறந்த கண்ணகியே தென்னிந்தியாவின் பத்தினிக் கடவுள்.

(தொடரும்.)

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

## பொது விஷயங்கள்

### ஒற்றுமை

ஒற்றுமை, கூட்டம், சங்கம், ஐக்கியம் முதலியன ஒரு பொருள் குறித்த கிளவிகள். உலகில் எத்தகைய செல்வாக்குடையவனும், தான் ஒரு தொழிலை முற்றுப் பெறுவிக்க முயல்வானாகில் வேறொருவனுடைய துணையை நாடவே வேண்டுமென்பது தெள்ளிது. ஒரு மனையிலுள்ள கணவனும் மனைவியும் இல்லறத்தைச் சிறப்பிக்க வேண்டுமானால் இருவரும் மாறில்லா மனத்தராயிருந்தால் தான் இயலும். அங்ஙனமே சகோதரர்களும், ஒவ்வோரூரினரும், ஒவ்வொரு நாட்டினரும் ஒன்றுபட்டிருத்தல் வேண்டும். இங்ஙனமின்றி இவர்களுக்குள் வேறுபாடு உண்டானால் உண்டான இடத்தில் கேடுண்டாமென்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

உலகமெலாம் ஒரு குடை நிழலில் வாழ அரசியற்றும் மன்னர் மன்னனும் தன்னரசு நிலைத்திருப்பதற்காகத் தனக்குத் துணையாய் ஐம்பெருங்குழுவையும் என்பேராயத்தையும் உடையவனாயிருக்கிறான். இத்தகைய மன்னனும், தன் கீழ் வாழும் குடிகளிடம் நட்புடையனாய் அவர்களைத் தன்னுயிரென நோக்கினும், அவர்கள் ஒற்றுமைபட்டிருந்தால் தான் அவன் அரசு நிலைபெறும் இன்றேல் அன்றே அழியும்.

இதனைக் கொண்டன்றே நம் நாட்டில் "ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும்" என்னும் பழமொழி வழங்குவது. ஓரிடத்தில் வாழும் மிருகங்களுங்கூட தங்கள் கூட்டத்தில் வேறொரு மிருகம் வந்து சேராமல் பார்த்துக் கொள்ளுகின்றன.

இனி நன்கு ஆராய்வோமானால், உலகம் நிலைத்திருப்பதே ஒன்றோடொன்று ஒற்றுமைப்பட்டிருக்தலால் எனலாம். உலகம், மண், விண், காற்று, தீ, நீர் என்னும் ஐம்பெரும் பூதங்களாலாயது. நம் உயிரும் அங்ஙனமுள்ள ஐம்பூதங்களின் சேர்க்கையாலேயே நிலைபெற்றிருக்கிறது. நமது மனமும் ஐம்பொறிகளும் ஒன்றுபட்டிருந்தால்தான் ஒரு தொழிலைச் செய்யவோ ஒன்றைக் கவனிக்கவோ இயலும். தனித்த, அகண்ட, பரிபூரண, சத்தாகிய சிவமும் சத்தியின் சேர்க்கையினாலேயேயன்றோ உலகைப் படைத்தளித்து அழிப்பது. பல அணுக்களின் கூட்டமே ஒரு வடிவமாகின்றது. ஆகையால் ஒற்றுமை யாவருக்கும் இன்றியமையாத பெருஞ்செல்வமென்பதும் ஒற்றுமையின்றேல் அதைவிட நல்குரவு வேறொன்றின்றென்பதும் ஒரு தலை.

நம் நாடு வேறுநாடுகளின் வளனைவிட மிகுந்த வளனை உடையதென்பது யாவரும் உணர்வர். இங்ஙனமாகவும் அது வளனிழந்து, கற்றோரில்லா அவை போலவும், நறுமணமில்லாச் சோலை போலவும், ஒழுக்கமில்லாக் கல்வியறிவு போலவும், மங்கலமில்லா மனைபோலவும், இயற்கையறியான் செயற்கை போலவும், ஆள்வோனில்லா நாடுபோலவும் பொலிவழிந்து வறுமை புகுந்து இருக்கக் காரணமென்ன? ஒற்றுமையின்மையாலேயே யென்பதை யுணராதாரிக் காலத்தில்லை.

ஒற்றுமையாயிருத்தல் வேண்டுமானால் சுயநலங்கருதாமை வேண்டும். சுயநலங்கருதலே இவர்கள் தாம் விரும்பிய சுய நலத்தினையிழந்தனர். எவனுந்தன்னலங்கருதுபவனை விரும்பான். ஆகையால் அங்ஙன முள்ளோனுக்கு வேறொருவனும் தக்க சமயத்தில் உதவிபுரிய முன்வர இசையான். ஆகவே தன்னலங்கருதுபவன் தன் நலத்தினை இழக்க வேண்டுமன்றோ?



முக்கியமாக நமது செங்குந்த மக்கள் இருக்கும் நிலையைக் கவனிப்போம். பெரும்பான்மையும் நமது செங்குந்த மக்கள் இருக்கும் ஊர்களில் வேறு வகுப்பினர் அதிகமாகவும் செங்குந்த வகுப்பினர் குறைவாகவுமே யிருக்கின்றனர். செங்குந்த வகுப்பினர் அதிகமாகவுள்ள ஊர்கள் சிறுபான்மை. எங்ஙனமாயினும் ஆகுக. நமது செங்குந்த மக்கள் இருக்கும் ஊர்களில் பல ஒற்றுமை யின்றியே யிருக்கின்றன என்பதை வருத்தத்துடன் உரைக்க வேண்டியதாகவே யிருக்கின்றது. இங்ஙனமிருப்பதால் பிற வகுப்பினரால் அலக்ஷியம் செய்யப்படுகின்றனர்; ஒற்றுமையுடன் இருக்கும் ஊர்கள் நானிதுவரை மிகச் சிறப்பாகவும் செல்வமாகவும் இருக்கின்றன என்பதையும் மிக மகிழ்வோடு கூறிக்கொள்கிறேன்.

நம் செங்குந்த மக்களின் இயற்கைத் தொழிலாய நெய்தற்றொழிலுக்கு ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடனிருந்தால் மிகச் சிறப்பாகவும் செலவின்றியும் நடைபெறும். இதை இங்ஙனம் கைக்கொண்டு வருகின்ற நமது சகோதரர்களுக்குத் தெரிவிக்கவேண்டியதில்லை. இதன் பயனை இவர்கள் கண்கூடாகக் கண்டு பெற்றுவருகின்றனர்.

செங்குந்த மக்கள் மிக்கிருக்கும் ஊர்களில் உள்ள செங்குந்தர்கள் ஒற்றுமையாகவே யிருக்கின்றனரென்று நினைக்கின்றேன். செங்குந்த மக்கள் குறைவாயிருக்கும் ஊர்களிலேயே செங்குந்தர்கள் கட்டுப்பாடின்றி யிருக்கின்றனர். அந்தோ! இவர்கள் நமது குலவழக்க ஒழுக்கங்களையும் அறவே யொழித்து இருக்கின்றனர் என்பதையும், நம்மைவிடக் குறைந்த இயற்கை ஒழுக்கங்களையுடைய பிறவகுப்பினரால் மிகக் குறைவாக மதிக்கப்பெற்றும் நடத்தப்பெற்றும் வருகின்றனர் என்பதையும் நாணத்துடன் உரைத்துக் கொள்கிறேன். இவர்கள் ஒரு ஊரில் பத்து வீட்டினர்களானால் நான்கு பிரிவினராகப் பிரிந்துவிடுகின்றார்கள். இவர்கள் நமது குலமேன்மையையும் ஒற்றுமையின் மேன்மையையும் நன்கு அறிந்தனரில்லை. இவர்களுக்குத் தொன்றுதொட்டு அவ்வூரிற் கிடைத்திருந்த உரிமைகளும் நாளடைவிற் குறைந்துவிட்டன. உரிமைகளெனவே வேறொன்றுமன்று; தேவாலயங்களிற் செய்யும் உத்ஸவாதிகளும், இவர்களைப் பிற வகுப்பினர் மேன்மையுள்ளோரென நினைத்திருந்ததுமான இவைகளே. இவர்கள் அவற்றைச் சரிவரச் செய்யாமையால் இழக்க வேண்டி வருகிறது. இழக்கக் காரணம் ஒற்றுமையின்மையே. உத்ஸவாதிகளுக்குச் சரிவர ஒவ்வொருவரும் வரி கொடுப்பதில்லை. "உன்னிடத்திற் கொடுக்க வேண்டிய தவசியமில்லை; என் சௌகரியத்திற்குத் தக்கபடி நானே செய்து கொள்கிறேன்" என்பாரொருவர். "என்னிடம் ஒன்றுமில்லை; பிறகு கொடுக்கிறேன்" எனக் கூறிக்கொடுக்காமல் விடுபவர் ஒருவர். இங்ஙனமிருப்பதால் உத்ஸவத்தைத் தலைமையாக இருந்து நடத்துபவர் வெறுப்புக்கொண்டு விடுகின்றனர். இவ்வித சொற்ப காரணங்களே ஒற்றுமையைக் குலைக்க வழிகாட்டிகளாயிருக்கின்றன.

நிற்க தற்காலத்தில் ஒவ்வொரு வகுப்பினரும் தமது குலம் முன்னேற்றத்தையடைய முயற்சித்து முன்னேற்றமடைந்துவர, நமது குலத்தினர் மட்டும் வரவரப் பின்னேற்றமடைகிற காரணத்தை முன்னிட்டு, ஆங்காங்கு சில அறிவாளிகள் ஒன்றுகூடி முன்னேற்றமடைவதற்கான முயற்சிகளைச் செவ்வனே முயன்று நமது குலமேன்மையினையும், தற்போது அடைந்திருக்கும் சீர் கேட்டையும் நன்கு விளக்கினால் கூடவா ஒவ்வொருவருக்கும் உண்மையறிவு உண்டாகி முன்னேற்றமடைவதற்கான வழிகளிற் செல்லலாகாது? சென்ற திங்களில் வெளிப்போந்த நமது 'மித்திரனில், சிலர் செங்குந்த மித்திரனை இலவசமாக அனுப்பினால் பெற்றுக்கொள்வதும், வி.பி.யில் அனுப்பினால் திருப்பி விடுவதுமாக இருக்கின்றனர் என்பதை வாசித்தேன். அந்தோ! வருஷத்திற்கொரு முறை ரூபாய் ஒன்றரையை யனுப்பிச் 'செங்குந்த மித்திரனை' வரவழைத்துப் பார்த்து உண்மையுணர்ந்து சீர்பெற இயலாதா? மக்கட்பிறவி உண்ணவும் உடுத்தவுமேயோ நமக்குக் கிடைத்தது? இவர்கள் நமது மித்திரன் வாயிலாகவன்றி வேறு வாயிலாக மிக்க மேலான அறிவை எய்தியுள்ளாரானாலும், நல்ல அறிவாளிகள் அவரவர்கள் சமூகங்கள் முன்னேற்றமடைய முயற்சிக்கும் துறைகளில் நுழைந்து முயற்சித்தல் தமதுகடமை என்பதை உணராத காரணமென்ன? மிகுந்த அறிவாளிகளின் கூட்டுறவன்றோ அறிவுகுறைந்த தமது கூட்டத்தினரைத் தம்மைப் போன்ற அறிவாளிக

ளாக்க இயன்றது. இவர்களைப்போன்றவர்கள் பின்னிடைந்தால், மற்றையோர் முன்னேற்ற மடைவதெங்ஙனம்? ஒருகால் இவர்களுக்குப் பிறர்முன்னேற்றமடையப்பிரியமில்லைபோலும்! என்னே வியப்பு! செங்குந்தமித்திரன் நடைபெறுமோ நடைபெருதோ என்ற ஐயத்தைச்செங்குந்த மக்கள் கொள்ளலாமா? செங்குந்த மித்திரன் நன்கு நடைபெற வேண்டுமானல் செங்குந்த மக்களின் ஒற்றுமையாலேயே நடைபெற வேண்டுமென்பதை யிவர்கள் உணராத தென்னே? ஒரு கைதட்டி ஓசை உண்டாமோ? நமது சங்கம் இதுவரையில் நம்மக்களின்மேல் வைத்த ஒற்றுமைக் குணத்தினுலும் இயற்கை அன்பினுலும் இது வரையிலுங் கூட இலவசமாக மித்திரனை அனுப்பிவருகிறது என்பதைக் கேட்க, அத்தகைய பேரன்பினுக்கு எல்லாச் செங்குந்த மக்களும் நன்றியறிதலையுடையராக இருப்பதோடு, சந்தாதாரராகச் சேரவும் ஒவ்வோரிடத்திலும் கிளைச்சங்கங்களை நிறுவி முன்னேற்றமடையத் தகுந்த வழிகளை ஆலோசித்து நடத்தவும் கடமைப் பட்டவர்களாவர்.

நமது குலத்தினர்களில் கல்வி யறிவுடைய மக்கள் பலர் இருக்கவும் நமது மித்திரனிற் சிலர் கட்டுரைகளே வெளிவருகின்றன. பல துறைகளிற் பலர் கட்டுரைகள்வெளிவர வேண்டாவோ? பத்திரிகையை நடத்துபவரோடு பத்திரிகைகளிற் கட்டுரைகள் வெளியீடு செய்பவர்கள் பலர் தாமே வெளிவந்து உதவி செய்யின் அன்றோ நலமாக இருக்கும். செங்குந்தர்கள் முன்னேற்ற மடைவதற்கு ஒவ்வொரு செங்குந்த அறிவாளரும் பல துறையிற் பயின்ற தமது அறிவின் பயனை மித்திரன் வாயிலாக மக்கட்கு ஊட்ட வேண்டிக்கொள்கிறேன். பத்திரிகையே மக்களின் அறிவைப் பல துறைகளிலும் பிரகாசிக்கச் செய்வது என்பதையான் உரைக்க வேண்டியதில்லை.

நிற்க, ஒற்றுமையைக் கெடுக்குங் காரணங்கள் பல. அவற்றை அறிவாளர்கள் நீக்க வேண்டும். நமது கைவிரல்கள் ஐந்தும் ஒரே தன்மையையுடையனவாயில்லை. அப்படியுள்ள ஐந்துமே ஒன்று சேர்ந்து ஒன்றைச் செய்ய வேண்டி யிருக்கின்றன. மக்களுள்ளும் ஒரே தன்மையான மக்களில்லை. பல தன்மைகளையுடையவர்களாகவேயிருக்கிறார்கள். ஒரு தாய் வயிற்று மக்களே பல்வேறு தன்மைகளையுடையவர்களா யிருக்கின்றனர். அங்ஙன மிருப்பதினால், அவர்கள் ஒற்றுமையின்றி யிருந்தால் அவர்களின் மதிப்பென்ன? அவர்கள் அடையும் பயன் என்ன? நமது செங்குந்த தாய் வயிற்றிற் பிறந்த நாம் அவ்விதமே பலவேறு தன்மைகளையும், குணங்களையும், வழக்க ஒழுக்கங்களையும் உடையவராயிருக்கிறோம். அவைகளைப் பாராட்டுதலின்றி நாம் யாவரும் செங்குந்த அன்னை வயிற்றிற்பிறந்தவர்களே யென்று நினைத்து ஒற்றுமைக்கான வழிகளைத் தேடி ஒற்றுமைப்பட்டு வாழ வேண்டும். "குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை" என்பது உண்மையான நல்ல பழமொழி. ஒருவர் பொறுமையுள்ளவராயும், ஒருவர் கோபமுள்ளவராயும், ஒருவர் அறிவு மிக்கவராயும், ஒருவர் அறிவிற் குறைந்தவராயும் இங்ஙனம் வேறுபட்டிருப்பினும், அறிவுடையோர் அவற்றைச் சீர்திருத்தி ஒற்றுமைப்படுத்தி வாழவேண்டும். ஆகவே, ஒற்றுமையும் நமக்குள் அறிவுமிக்க மக்களாலேயே நடைபெற வேண்டுமென்பதும், அவர்கள் பராமுகமாய் இருத்தலாகாது என்பதும், அங்ஙனமிருத்தல் அவருக்கும் பிறர்க்கும் நன்மை பயவாதென்பதும் இதுவரையுங் கூறப்பட்டன. எல்லாம் வல்ல முருகன் நமக்குள் ஒற்றுமையையும் கல்வியறிவையும் விளங்கச் செய்வானாக.

"ஒற்றுமையென் றன்ன வுயர்வுபெறு நற்கருவி
நற்றுணையாப் பெற்று நலமிகவே—வெற்றித்
தனிமயிலோன் பொற்சரணஞ் சார்பாகக் கொள்வீர்
நனிவாழ்வீர் நானிலத்து நன்கு."

பண்டிதர் ஜ. இராஜு முதலியார்,
போர்டு உயர்தர பாடசாலை, பூவிருந்தவல்லி.

---

## அபிமானம்.

அபிமானம் என்பது மனிதர்களுக்கு இருக்கவேண்டிய சிறந்த குணங்களுள் ஒன்று. அது தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம், சாதியபிமானம் எனப் பலவகைப்படும். இந்த அபிமான மில்லாதவர் மனிதரோடு சேர்ந்திருந்தாராயினும் மனிதரா யெண்ணப்படார். மனிதருட்படதாக மதிக்கப்படுவார்.

நம் தேசத்தவருள்ளே அபிமானமென்னுங் குணம் மிகக் குறைந்துவிட்டது. சிலரிடத் தொழிய அநேகரிடத்து இந்தக் குணமில்லை. அதுவும் நமது செங்குந்த குலத்தவர்களிடத்து இக்குணம் மிகக் குறைந்துபோய்விட்டது. அந்நிய நாட்டவரையாவது அந்நிய சாதியாரையாவது பார்த்தும் பழகுகின்றார்களில்லை. அவர்களோ அபிமான மிகுதியால் கல்வியையும், அறிவையும், கைத்தொழிலையும், வியாபாரத்தையும், விவசாயத்தையும் விருத்தியாக்கிக்கொண்டார்கள். இன்னும் ஆக்கிவருகிறார்கள். இன்னும் தங்கள் சாதியார் பலவகையிலும் சிறப்படைய வேண்டுமென்ற உயர்ந்த எண்ணம் அவர்களுக்கு மிகவுமுண்டு. அவர்களிடத்து அபிமானம் என்னும் விதை முளைத்திருக்கின்றது. அம்முளை நாளாக நாளாக வளர்ந்து பெரும் பயனைக் கொடுக்கும். அத்தகைய விதை இன்னும் நம்மவரிடத்து உண்டாகவில்லை. தேசாபிமானம் இல்லை. சாதி அபிமானம் அடியோடில்லை. கைத்தொழில், வியாபாரம், விவசாயம், மற்றும் தொழில்களால் அடைந்திருக்கும் குறைவுபாட்டை நீக்கிக் கொள்ள நம்மினத்தவர் எள்ளளவும் சிந்திப்பதில்லை. ஒற்றுமை இல்லை. பரோபகார சிந்தையில்லை. அயலாரும் வாழவேண்டுமென்னும் நட்பில்லை. சாதி விருத்தியின் பொருட்டு உழைக்கும் கருத்தில்லை. நமது சாதிப் பொது நன்மையின் பொருட்டுப் பொருள் செலவிடும் பழக்கமில்லை. அற்ப சீவனத்திலும் அற்ப சுகத்திலும் மகிழ்ச்சியடைந்து விடுகின்றார்கள். இவர்களுக்குச் சாதியபிமானம் என்றைக்கு வருமோ தெரியவில்லை.

உலகத்திலுள்ள ஒவ்வொரு சாதியாரும் விழித்துக்கொண்டு எல்லா வகையிலும் சிறப்படையப் போராடுகின்ற இக்காலத்தில் நமது செங்குந்தர்கள் ஒரே தூக்கமாகத் தூங்கிக் கொண்டிருப்பது தக்கதாகுமா? இவ்வளவு காலமாகத் தூக்கமே கதி என்று கிடக்கின்ற நம்மை ஒரு வருடகாலமாகச் 'செங்குந்தமித்திரன்' வந்து எழுப்பவும் எழுந்து வரவேற்காது வீணே உறங்குகின்றோம். இனியும் இப்படி இருத்தல் கூடாது. அபிமானங்கொண்டு நமது சாதி முன்னேற்றமாகப் பாடுபட முயலவேண்டும். ஆரம்பத்திற் சிலருக்காவது இந்த சாதி அபிமானம் உண்டாக வேண்டும். அவர்கள் இடையறு முயற்சியோடு எங்கணும் அபிமான விதையை விதைத்து முளைக்கும்படி செய்து பாதுகாத்தல் வேண்டும். எல்லாருள்ளத்தும் அபிமானக்கொடி படர்ந்து பூத்துக் காய்த்துப் பழந்தரக் கண்டு களித்தல் வேண்டும். அபிமானம் மிக அவசியமானது, அவசியமானது.

திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார்,
தமிழ்ப்பண்டிதர், காஞ்சீபுரம்.



# தொழிற் பகுதி

## தொழிற் கல்வி

செல்வம் யாவற்றிலும் கல்விச் செல்வம் அழியாததும், அன்னியரால் அழிக்க முடியாததும், செலவழிக்கின்குறையாது பெருகுவதுமாகும். இத்தகைய செல்வம் ஆண் பெண் பாலரிருவரும் அடைந்தால்தான் மனிதயாக்கையை யடைந்ததின் பயனும் உலகவின்பங்களை இனிதனுபவிப்பதாகும். கல்வி கற்றவனே எல்லாச் சுகங்களையும் அனுபவிப்பான் என்றால் கல்வி கற்கக் கற்க வேண்டிய பொருள்கள் யாவும் தாமே வந்து சேர்ந்துவிடுமென எண்ணவொண்ணாது, கற்பதால் அறிவு விருத்தியடைய அவ்வறிவினால் தகுந்த முறையில் தீங்கின்றி பொருளை யீட்டி நமக்கு வேண்டுவன செய்தும் ஆதரவற்றவர்களுக்கு உதவியும் ஆனந்த மெய்துவதாகும்.

கல்வி வாசனையே யற்றவர்கள் உலகத்தில் பிழைக்கவில்லையா? இப்பொழுது பெரிய பரீக்ஷைகளில் தேறி பி.எ., எம்.எ. பட்டம்பெற்றவர்கள் எல்லாம் வேலையின்றித் திண்டாடுகிறார்களே, ஏன் அவ்விதம் பணத்தைச்செலவுசெய்து நஷ்டமடையவேண்டு மென்னலாம். ஆம். அது ஞாயமே. முற்காலத்தில் கல்வி கற்றோர் யாவரும் அறிவு விருத்தியடையவே பயின்றனர். கல்வியைக்கொண்டு சேவகஞ் செய்து உஜ்ஜீவிக்க வேண்டுமென எண்ணமுற்றுக் கற்றவரல்லர். உதாரணமாக, நங்குல முன்னோர் தம் தொழில் முறைகளையே ஜீவனாதாரமாகக் கொண்டே கல்வி நிரம்பப் பெற்றிருந்தனர். எங்ஙனமெனில் காவிரி யாற்றின் பக்கம் சாரி வந்த சோழர் தம்முடன் வந்த புகழேந்தியாரிடம் நங்குலத்தோர் நூற்பொதி கொண்டோடுவதைக் கண்டு "கல்வியின்மையால் இக்கைக்கோளர் கால்கடுக்கப் பொதி தாங்கிச் சிரமத்தோ டோடுவதைக் காண்க' என, நங்குலத்தோர் கல்வியாற்றலை அரசர்க்குணர்த்துவான் வேண்டிப் புலவர் பெருமான் அரசரோடு வழியவர் உருவந்தாங்கி

அங்குற்ற கிராமத்திற்கேகினர். அங்கு பல வருணத்தோர் இல்லங்களிலும்இரந்தும் உணவு கிடைக்காது செங்குந்தரில்லமொன்றிற் புகுந்து சாப்பாடுண்டாவென்றனர். உடன் அவ்வகத்தார்

“ சாப்பாடு குந்தக்குச் சந்ததமு மெய்மில்லின்
மீப்பாடா முண்டி மிளிருங்கா—ளுப்பாடு
கொண்டோ யிருந்து மிகுங் குக்கிப் பசியாற
வுண்டே குகநீ யுடுத்து ”

என்றனர். என்னே முன்னோர் கல்வி யாற்றல்! இக்காலத்தில் அநேகமாகத் தாம் கல்வி கற்பது அறிவு தெளிவடைய வேண்டு மென்பதற்கல்லாமல் ஏதாவது குமஸ்தா உத்தியோகமாவது கைக்கொண்டு உஜ்ஜீவிக்கலாம் என்ற நோக்கங் கொண்டதாகவே யிருக்கிறது. கல்லூரிகளில் கல்விபயின்ற மாணவர், தங்கல்வி முடித்துப் பட்டம் பெற்றதும், ராஜதானியிலுள்ள அநேகமாக எல்லா உத்தியோகசாலைகளுக்கும் மனுப்பத்திரம் எழுதி யனுப்பிவிட்டு, ஏதோ ஒருசில கருணையுள்ள உத்தியோகஸ்தர் “பெயர் தாக்கல செய்யப்பட்டது, அவசியமானபோது தெரிவிக்கப்படும்” என எழுதும் பதில்களைப் பெற்றுக்கொண்டு, வாடாமல்லிகைக்கு வாசனையுண்டான பிறகு எடுத்துச் சூடுவதாக எதிர்பார்த்திருப்பர். அது மட்டுமா? உத்தியோகம் சம்பாதித்துக் கொடுக்கும் தரகிரிச் சங்கங்கள் ஒரு சில விருக்கின்றனவாம். அவர்களுக்கு மனு பண்ணிக்கொண்டால் அவர்கள் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுக்கச் சம்பளத்திற்கு தக்கவாறு அவர்களுக்குத் தரகு கொடுதது விட வேண்டுமாம். அச்சங்கங்களுக்கு மனுப்பண்ணிக் கொள்ளும் போதே பிரவேச கட்டணம் ஏதோ செலுத்திய தங்கள் பெயரை பதிவுசெய்து கொள்ளவேண்டும். அவ்வித சங்கங்களுக்கு நம்மாணவர்கள் மனு பண்ணத் தவறுமல கல்விச் சாலையை விட்டும் தாம் வீண்செலவு செய்துகொண்டு நாட்களை அவலமாக்குகிறார்கள். இவ்வித சிரமங்களில் தமதாயுளிற பாதியை வீணாக்கி அவர்கள் அடையும் பயன் அநேகமாக இரண்டரை அல்லது மூன்று பத்துரூபாய் நோட்டுகள் கிடைக்கும் குமாஸ்தா வேலையே யாகும்.

எந்நாட்டிற்கும் இன்றியமையாதவை ஆகாரப் பொருளகளும் கைத்தொழிற சாமான்களுமே யாகும். ஆகையால் நாட்டிற்குரியவைகளை சம்பாதித்தறகு மாந்தர்கள வேலைசெய்ய வேண்டிய தவசியம். அவற்றிற்கு இக்குமாஸ்தா வேலை யாது பயனளிக்கும்? விவசாயமும் கைத்தொழிலுமே யபிவிருத்தியடைய வேண்டும். ஆகையால் ஜனங்களில் அநேகர் இவ்விதத் தொழில்களினாலேயே உஜ்ஜீவிக்க வேண்டியவர்களாவர். ராஜ்ய துறைகளிலும் வியாபார துறைகளிலும் ஒரு சிலர்க்கே உத்தியோகம் கிடைக்கும். யாவரும் உத்தியோகம் வேண்டுமென்பதாலேயே வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாயது.

ஆகையால், வாசித்து என்ன செய்யவேண்டுமென்று கேட்கலாம். செல்வம் சிறந்த ஐரோப்பா அமெரிக்கா முதலிய மேல் நாட்டாரையும் சமீப காலமாய்ப் பெருமை பெற்றுவரும் ஜப்பானியரையும் கவனிப்போம். அங்கே கல்வியறிவில்லாதவர்கள் வெகு சொற்பம். அவர்கள் செல்வத்தில் சிறநதமைக்குக் காரணம் கைத்தொழில் சிறப்பினாலேயேயலலாமல் உத்தியோகத்தைக் கைக்கொண்டல்ல. அவர்கள், கல்விச் சாலைப் படிப்பை முடித்ததும், தொழில் துறைகளில் புகுந்து தொழில் முறைகள் செவ்வனே கற்றுத், தாம் கலாசாலைகளில் பயின்ற இயற்கை இலக்ஷண சாஸ்திரங்களினால் தம் தொழில் முறைகள் எந்த முறையில் செய்தால் இன்னும் சிறப்பாகவும் மிகுந்த ஊதியம் தரத் தக்கதாகவும் செய்யலாகுமோ அவ்விதம் செய்து, கைத்தொழில் முறைகளையும் விவசாயத்தையும் திருத்திக் கொண்டதாலேயும், இன்னும் திருத்திக் கொண்டு வருவதாலேயும் அவர்கள் செல்வத்திலும் நாகரீகத்திலும் சிறப்புற்று விளங்குகிறார்கள்.

எந்நாடு சிறப்புற வேண்டுமானாலும் அந்நாட்டில் தொழிலபிவிருத்தி யடைய வேண்டும். தொழிலபிவிருத்தி யடைய வேண்டுமாயின் அவாகள் அறிவு துலங்கி யிருக்கவேண்டும். ஆகையால் எந்த ஜன சமூகத்திற்கும் கல்வி அவசியம். தமக்குப்பிற்காலம் தம் மக்கள்சீரும் சிறப்புமாக வாழநினைக்கும் ஒவ்வொருவரும், அச்சிறுவர்களுக்கும் கல்வியினால் அறிவைத் துலக்கிச், சேவகாபிவிருத்திக காளாக்காமல், அவ்வக்குல முன்னோர்கள் கையாண்டு வந்த தொழில் அபிவிருத்தியடையத் தகுந்த போதனைகளைச் செய்யும கல்விக்கூடங்களில் சேர்த்து அத்தொழில் முறைகளைச் சீரும் சிறப்புமாகச் செய்யுந் திறமையைப் பெரும்வழியைத்தேடித் தரவேண்டும். (தொடரும)

S. பாலசுந்தரமுதலியார்,
நெய்தற்றொழிலாசிரியர்,
போர்டு உயர்தர பாடசாலை, பூவிருந்தவல்லி.



# இல்வாழ்க்கைப் பகுதி.

## எது சிறந்தது?

“என்ன, இன்னமுமா தூக்கம்? எழுந்திருங்கள். சங்கு ஊத இன்னும் கொஞ்சநேரமே இருக்கிறது.” என்று படுத்திருந்த தன் கணவன் வீராசாமிப் பிள்ளையை அலர்மேலு தட்டி எழுப்பினள்.

**வீராசாமி:**—என்னடி, உன் இழவை எப்பொழுது பார்த்தாலும் பெரிதாய்ப் போயிற்று. யாரையோ சாகக்கொடுத்தவள்போல் அடித்துக்கொள்ளுகிறாய்.

**அலர்மேலு:**—எனக்கென்ன, எப்படியாவது போங்களேன். உங்களப்பன் இன்னும் கொஞ்ச நேரத்தில் புஸ் புஸ் என்று வந்துவிட்டால் நான் பழிகாரியல்ல. எழுப்பி விட்டேன், அப்பால் உங்கள் இஷ்டம்.

வீராசாமிப் பிள்ளை பர பர வென்று எழுந்தார். வெளியிலே எட்டிப்பார்த்தார்; பொழுது நன்றாய் விடிந்து விட்டது. மலபாதைக்குப் போகவேண்டியது அவசரம்; ஆனால் நேரமில்லை,சமீபத்தில் இருந்த குளத்துக்கு ஓடினர். அங்கிருந்த சாம்பல் கட்டியை எடுத்துப் பல்லில்போட்டு இரண்டு இழுப்பு இழுத்தார் வாய் கொப்பளித்துக்கொண்டு வீடு வந்தார்.

**வீராசாமி:**—அடியே, சாதம் போடு, ஜல்தி.

**அலர்மேலு:**—இப்பொழுதானே போனீர்கள். அதற்குள்ளாகவா வெளிக்குப்போய்ப்பல்தேய்த்து வந்து விட்டீர்கள்?

**வீராசாமி:**—அதெல்லாம்உன்னைக்கேட்கவில்லை. வர வர அதிகப் பிரசங்கித்தனம் ஜாஸ்தியாகிறது. சாயங்காலம் வந்துவகை சொல்லுகிறேன் உனக்கு.

அலர்மேலு கலத்தில் பழையசாதம் போட்டாள். சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே ரயில் ஊதின சப்தம் கேட்டது. அவசர மவசரமாய் இரண்டுவாய் அள்ளிப்போட்டார். எழுந்து கையலம்பிக்கொண்டு ஓட்டம் பிடித்தார். ரயில் புறப்பட்டுவிட்டது. ஓடும் பொழுதே ஏறிக்கொண்டார்.

நாகைப்பட்டினத்தில் தென்னிந்திய ரெயில்வே கம்பெனியார் வைத்திருக்கும் வேலைக்கூடத்தில் (Work Shop) நமது வீராசாமிப் பிள்ளை ஓர் கூலி. தினம் பன்னிரண்டணா சம்பளம். காலை 7 மணிக்கெல்லாம் வேலைக்கூடத்தில் தயாராய்ச் சேர்ந்துவிட வேண்டும். சுற்றுப்பக்கத்துக் கிராமங்களில் வசிக்கும் வேலைக்காரர்கள் வரவேண்டியதற்காக அவர்கள் சவுகரியத்தை உத்தேசித்துக் கம்பெனியார் ரயில்வண்டி விடுகிறார்கள். அவர்கள் அதில் வேலைக்கு வருவதும், அதிலேயே திரும்பச் சாப்பாட்டுக்குச் சென்று வருவதும், மாலையிலும் அந்த ரயிலிலேயே வீடு சேர்வதும் வழக்கம். நமது வீராசாமிப்பிள்ளை நாகைப்பட்டினத்துக்கு மேற்கே 2-மைல் தூரத்தில் வசிப்பவர். ஆனதால் மேலே சொல்லியபடி ரயில் ஏறி வேலைக்குச் சென்றார்.

மத்தியானம் 12-மணிக்குச் சாப்பாட்டுக்குத் திரும்பினர். ரயிலைவிட்டிறங்கிஓடோடியும் வீடுசேர்ந்தார் குளத்துக்குப்போய் அழுக்குக்கூட தேய்க்க நேரமில்லை; ஸ்நானஞ்செய்து வீட்டுக்கு வந்தார்.

இதற்கிடையில் அலர்மேலைச் சற்றுக்கவனிப்போம். காலையில்புருஷன் வேலைக்குச்சென்றபிறகு குழந்தைகளுக்குச் சாதம்போட்டுப் பள்ளிக்கு அனுப்பிவிட்டுப் பொழுது போக்குக்காக எதிர்வீடு சென்றாள். அங்கு வேலாயுதத்தின் தாயாருக்கும் சம்சாரத்துக்கும் சண்டை. ஒருவருக்கொருவர் சாமாரியாகப்பேசுகிறார்கள். நியாயம் மாமி பக்கமே இருந்தது ஆகவே, நமது அலர்மேலுவும் சமாதானமாகவே மருமகளைக் கண்டித்துச் சமாதானப்படுத்தினள். இதற்குள் மணி பத்தரை ஆயிற்று. அலர்மேலு உத்தமி. ஒருவரிடமும் வம்புக்குப் போகிறவள் அல்ல. வேலையில்லாதிருந்ததாலே எதிர்வீடு சென்றாள். அங்கும் அவள் வித்தியாசமாக நடந்து கொள்ளவில்லை. ஓடோடியும் வந்து சமையல் செய்தாள். புருஷன் வரும்பொழுது குழம்பு அடுப்பில் இருந்தது. வீராசாமிப் பிள்ளை ஐந்து நிமிஷத்தில் ஸ்நானம் செய்து வந்துவிட்டார். அலர்மேலு சாதம் வட்டித்தாள். சாப்பிட்ட முறையைப் பற்றி நாம் எழுதவேண்டியதில்லை அடுப்பிலிருந்த குழம்பு, அப்போதே வடித்த சாதம். வாசகர்களே ஊகித்துக்கொள்ளட்டும். சாப்பிட்டு எழுந்தார்; ரயில் சப்தம் கேட்டுவிட்டது வெற்றிலைப் பாக்கைக் கையில் எடுத்துக்கொண்டார். ஓடோடியும் சென்று ரயில் ஏறினர். குழந்தை பள்ளிக்குச் சென்றதை என்றுகூடக் கேட்கவில்லை. இரவு 6½-மணிக்குச் சாவகாசமாய் வீடுவந்து சேர்ந்தார். 5 மணியுடன் வேலைமுடிந்துவிடும். ஆனால் வேலைவிட்டு வரும்பொழுது அவர் இன்னொரு வேலையை வாடிக்கையாய் வைத்திருந்தார். அதுதான் குடியைக்கெடுக்கும் குடி.

வீராசாமிப் பிள்ளை நல்ல யோக்கியர். ஏற்கனவே குடித்து அறியாதவர். அவருடைய வேலை கடின

மானதென்றும், குடி இல்லாவிட்டால் அவ்வேலை பார்க்க முடியாதென்றும் அவர் சொல்லுவார். வீடு வந்தபின் அவர் வேறு ஜோலிக்குப் போவதில்லை. சில குடியர்களைப்போல் வீட்டிலோ வெளியிலோ தானே வம்பு இழுப்பவரல்ல.

இங்கு எழுதப் புகுந்தது நல்லோர்களைப் பற்றியல்லாது கசடர்களைப் பற்றியல்ல என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டியதவசியம்.

எதிர் வீட்டு வேலாயுதம் வேலைவிட்டு வந்ததும் அவன் சம்சாரம் தன் மாமி தன்னைப் பேசியதாயும், எதிர்வீட்டு அலர்மேலும் வந்து மாமியுடன் சேர்ந்து கொண்டு தன்னைத் திட்டியதாயும், கூட்டவேண்டிய இடத்தில் கூட்டியும், குறைக்க வேண்டிய இடத்தில் குறைத்தும் சொல்லிவிட்டாள். வேலாயுதத்துக்குக் கோபம் வந்துவிட்டது, கண்கள் சிவந்தன, மீசைகள் துடித்தன. தன் தாய்மீது கூட அவனுக்கு அதிக கோபமில்லை. தெருவில் வந்தான். அலர்மேலைக் கண்டபடி திட்ட ஆரம்பித்தான். அவனுடைய நிலைமையும் அந்நேரம் ஒழுங்காயில்லை. அப்பொழுதே நமது வீராசாமிப் பிள்ளையும் வந்துவிட்டார். அதற்குமேல் அவர்கள் இருவருக்கும் நடந்த சம்பவங்களை இங்கு எழுதிக்கொண்டிருந்தால் சஞ்சிகை இடந்தராது. என்ன நடந்திருக்கும் என்பதை வாசகர்களே ஊகித்துக்கொள்ளும்படி விட்டுவிடுகிறேன்.

இதை இத்துடன் விட்டு, மறுநாள் பக்கத்து வீட்டில் நடந்த சம்பவங்களைக் கவனிப்போம்.

கந்தசாமிப் பிள்ளை கதர் அபிமானி. அவர் பத்தினி சிவகாமியோ பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை. கந்தசாமிப் பிள்ளை அதிகாலையிலே எழுந்தார். கழனிக்குச் சென்று மல உபாதை கழித்துப் பல்துலக்கி ஸ்நானம் செய்து வீடு வந்தார். பூசைமுடித்துப் பழைய சாதம் சாப்பிட்டார். குழந்தை ஆறுமுகம் உடன் உண்டான். குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு ராட்டினத்தருகில் போய் உட்கார்ந்தார் சற்று நேரத்தில் சிவகாமியும் அருகிலிருந்த இன்னொரு ராட்டினத்தின் முன்பு உட்கார்ந்துகொண்டாள். இருவரும் பஞ்சைப் பட்டை போட்டுக்கொண்டு நூற்க ஆரம்பித்தார்கள். போட்டி போட்டு நூற்றதில் சிவகாமியே வெற்றியடைந்தாள். இருவருக்கும் சோம்பல் என்பதே கிடையாது. பின்னும் கொஞ்சநேரத்தில் பள்ளிக்குச் சென்றிருந்த சிறுவன் வந்துவிட்டான் ஆறுமுகமோ பள்ளியில் நூற்கும் போட்டிப் பரீக்ஷையில் முதல் பரிசு பெற்றவன். அவன் வந்தவுடனே சிவகாமி சமையல் அறைக்குச் சென்றுவிட்டாள். அவன் ஸ்நானத்தை ஆறுமுகம் அடைந்தான். சமையல் முடிந்ததெல்லோரும் சாப்பிட்டார்கள். பையன் பள்ளிக்குச் சென்றான். கந்தசாமி பிள்ளையோ ராட்டினத்தில் கவனத்தைச் செலுத்தினார். சிவகாமி வெற்றிலை பாக்குக்கொண்டுவந்து தன் பர்த்தாவின் வாயில் தன் கையாலேயே மடித்து மடித்துக்கொடுத்தாள். பின்னர் போய்ச் சாப்பிட்டுச் சமையலறை வேலையை முடித்துக்கொண்டுப் புருஷனுக்குப் பக்கத்தில் தன்னுடைய ராட்டையில் நூற்க ஆரம்பித்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் இருவருக்கும் கீழ்க்கண்ட சம்பாஷணை நிகழ்ந்தது.

சிவகாமி:—நாதா, நேற்றுச் சாயங்காலம் பக்கத்து வீட்டாரும் எதிர்வீட்டாரும் சண்டையிட்டுக்கொண்டார்களே, அது என்ன காரணத்தால் உண்டானது? யார் மேல் குற்றம்?

கந்தசாமி:—பெண்ணே, அதைப்பற்றி நமக்கென்ன? நீ ஏன் ஊரார் சண்டையில் தலையிடுகிறாய்?

சிவகாமி:—நாதா, இதில் எனக்கென்ன கவலை? நேற்றுத் தாங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததால் கேட்டேன். அதுகூட பொழுதுபோக்குக்காகக்கேட்டேன். இஷ்டமிருந்தால் சொல்லுங்கள் இல்லையேல் வேண்டாம்.

கந்தசாமி:—பெண்ணே, பொழுது போக்குக்கு ஏதாவது ஒரு கதை சொல், நான் கேட்டுக்கொண்டே நூற்கிறேன்.

சிவகாமி:—நான் சிறியவளாயிருக்கும்பொழுது என் பாட்டியார் வேடிக்கையான கதையெல்லாம் சொல்லக்கேட்டிருக்கிறேன். அதையெல்லாம் இப்பொழுது நம்பமாட்டீர்கள். மத்தியில் பரிகாசம் செய்யாதிருப்பதாகச்சொன்னால் சொல்லுகிறேன்.

கந்தசாமி:—அப்படியே ஆகட்டும், சொல்.

சிவகாமி கதை சொல்ல ஆரம்பித்தாள், கொஞ்சநேரத்துக்கெல்லாம் கந்தசாமி பிள்ளை குறுக்குக்கேள்வி போட ஆரம்பித்தார். சிவகாமி கதைக்குக்காலுமில்லை தலையுமில்லை என்று சொன்னார். இருவருக்கும் பிரமாதமான சண்டை வந்துவிட்டது. என்ன சண்டை? சிவகாமி கந்தசாமிப் பிள்ளையின் கன்னத்தில் கிள்ளுவதும், கந்தசாமிப் பிள்ளை சிவகாமியின் தலையில் தன்னுடைய தலையால் முட்டுவதுமேயாம்,

என்ன இன்பம்! என்ன காதலின் வளர்ச்சி! என்ன குடும்பத்தின் ஒற்றுமை!

சகோதரர்களே, சகோதரிகளே! கந்தசாமிப்பிள்ளையின் தினசரி வருமானம் ஐந்தரையணாதான். ஆனால் வீராசாமிப் பிள்ளையோ மாதம்மாதம் வட்டிக்குக் கடன் வாங்காமலிருப்பதில்லை. கந்தசாமிப் பிள்ளை மாதம் இரண்டு ரூபாய் மிச்சப்படுத்தி வருகிறார்.

வரவு செலவு கணக்கெழுதச் சஞ்சிகை இடந்தராததால் இம்மட்டில் நிறுத்தினேன். வாசகர்கள் மன்னிக்க.

தி. பு. கரு. [illegible] முதலிய



# சுகாதாரப் பகுதி

## அரிசி தீட்டும் அறியாமை

### வைத்திய நிபுணர்களின் ஆராய்ச்சி முடிவு

நீதிபதி இராமேசம் "நியூ ஹெல்த் என்னும் பத்திரிகையில் இவ்விஷயத்தைப்பற்றி எழுதியதின் சாராம்சம் 'ஸ்நான தர்மம்' என்னும் பத்திரிகையில் கீழ்வருமாறு பிரசுரிக்கப் பெற்றிருக்கிறது:—

பிளிம்மர் சகோதரர்கள் "உணவும் சுகமும்" என்ற நூலில் பின் வருமாறு கூறியுள்ளார்கள்:—"1870-ம் ஆண்டில் தானியங்களைக் குத்தும் இயந்திரங்கள் ஏற்பட்டதிலிருந்து தானிய உணவு வகைகளுக்குக் கேடு வந்துவிட்டதெனலாம். கீழ்நாட்டின் முக்கிய தானிய உணவான அரிசி முன்பெல்லாம் கையினால் குத்தப்பட்டு வந்தது. நீராவி சக்தியினால் இயங்கும் தற்கால இயந்திரங்கள் தானியத்தின் தவிட்டையும் முளையையும் அறவே நீக்கிவிடுகின்றன. எனவே, அரிசியின் சத்தற்ற மாவுப்பகுதியையே இப்போது உண்கிறார்கள். "நாகரிக" மனிதனிடம் நல்லுணவைத் தேர்ந்தெடுக்கும் இயற்கை நுண்ணுணர்வு மங்கிப்போய் விட்டது. செயற்கை உணவுப்பொருள்கள் கணக்கற்றனவாகிவிட்ட இக்காலத்தில், அவனுடைய நாவின் சுவையை ஆதாரமாகக் கொண்டு நல்ல உணவு எது, பொல்லாத உணவு எது என்று கண்டு பிடித்தல் இயலாத காரியம். திடமான உடல் அமைப்பும் நோயற்ற வாழ்வும் பெற்ற சாதியாரைக் காணவேண்டுமானால் நாகரிகம் இன்னும் பரவாத மூலைமுடுக்குகளைத் தேடிப்போகவேண்டும்? இத்தகைய விடங்களில் தங்கள் மூதாதைகளின் உணவையே இன்னும் உட்கொண்டுவரும் சாதியாரைப்பார்க்கலாம். இவர்கள் தானியங்களையும், கறி காய் வகைகளையும் பெரும்பாலும் பச்சையாகவே உட்கொண்டு வருகிறார்கள். நாகரிக நோய்களான மலச்சிக்கல், அஜீரணம், குன்மம், குடலறுபட்டப்புண், வயிற்றுவலி, கீல்வாயு, பிளவை, நீர்ரோகம், க்ஷயம் முதலியவை இச்சாதியாரிடம் அணுகுவதேயில்லை, மிகவும் சுகாதாரக் கேடான நிலைமையில், அதிதீவிர வெப்பத்தாக்கும் அதிதீவிர குளிருக்கும் உட்பட்டு இவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்களாயினும், நோய் நொக்காடின்றி நீண்டகாலம் உயிர்வாழ்கிறார்கள். முதுமைப் பருவத்திலும் திடதேக முடையவர்களாயிருக்கின்றனர். இதற்குக் காரணம் இவர்கள் உட்கொள்ளும் உணவு வகையேயாகும்.

"வெள்ளை அரிசியாவதற்காக நெல்லைக் குத்தும் போது தாதுப்பொருள்கள் எல்லாம் போய்விடுகின்றன. இத்தகைய தீட்டிய வெள்ளை அரிசியைப்பிரதான உணவாக உட்கொண்டுவாழும் தாய்மார்களின் பால் உண்டு வளரும் குழந்தைகள் கணச்சூடு என்னும் நோயினால் பீடிக்கப்பட்டு மெலிகின்றன."

அரிசியைத் தீட்டுவதினால் மூன்றுவகை "வைடமின் என்னும் உயிர் அணுக்கள் போய் விடுவதாகப் பிரிட்டிஷ் வைத்திய ஆராய்ச்சி சங்கத்தாரும், பிளிம்மர் சகோதரர்களும், டெஞ்சமின் ஹரோ என்பாரும் தனித்தனியே சோதனை நடத்தி முடிவு செய்திருக்கிறார்கள்.

"வைடமின் அணு என்பது கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னால் 1912-ம் ஆண்டில் மேஜர் பாவல் என்பார் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். அந்நூலில் பின்வரும் புள்ளி விவரத்தை அவர் கொடுத்திருக்கிறார்:—

| | கொழுப்பு சத்து | | |
|---|---|---|---|
| | பசை | அல்லது நெய். | உப்பு. |
| தீட்டாத அரிசி | 11 | 7·2 | 5·2 |
| தீட்டிய அரிசி | 7·4 | ·8 | ·4 |

முதன் முதலில் தீட்டிய அரிசியின் தீமையைக் கண்டு பிடித்தவர் டச்சு வைத்தியரான ஏக்மான் என்பாரே யாவர். இவர் 1897-ல், "பெரி பெரி" என்னும் நோய்க்குக் காரணம் தீட்டிய அரிசியே என்று கண்டு பிடித்துக் கூறினார். அவர் சில புறாக்களையும் கோழிக்குஞ்சுகளையும் வைத்துக்கொண்டு பரிசோதனை நடத்தினார். இயந்திரக் குத்தரிசியை மட்டும் அவற்றிற்கு உணவாக அளித்து வந்ததில் நான்கு வாரத்திற்குள் "பெரி பெரி" போன்ற நோயினால் அவை பீடிக்கப்பட்டன. இதிலிருந்து இயந்திரக் குத்தரிசிக்கும் மேற்படி நோய்க்குமுள்ள தொடர்பை அவர் நிரூபித்து அரிசியைச் சுற்றியுள்ள தவிட்டில் மேற்படி நோயினின்று பாதுகாக்கும் சக்தி ஏதோ இருப்பதாகக் காட்டினார்.

1910-ம் ஆண்டில் போலந்து தேசத்து இரசாயன சாஸ்திரி பங்க் என்பார் இச்சோதனையைத் தொடர்ந்து நடத்தினார். தீட்டிய அரிசி உணவு மட்டும் தின்று வந்ததின் பயனாக உயிர் விடும் நிலைமைக்கு வந்துவிட்ட புறாவுக்குப் பின்னர் தவிட்டை உணவாக அளித்து அவர் நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்தார்.

மக்கல்லாம் என்பார் "பெரி பெரி" நோயிலிருந்து காப்பாற்றக்கூடிய சத்து அரிசியின்முளையில் இருப்பதாகக் கூறுகிறார். அரிசியின் முனையில் நுட்பமான ஒரு சிறு பள்ளம் இருக்கிறது. இப்பள்ளத்தில் மேற்சொன்ன முளை இருக்கிறது. இவ்வரிசியை இயந்திரத்தில் குத்தும்போது இது வெகு எளிதில் நீக்கப்பட்டுவிடுகிறது. எனவே இயந்திரக் குத்தரிசி இம்முளையைக் காணலரிது. உணவுப்பொருளில் இருக்கவேண்டிய நான்கு சத்துகள் இயந்திரக் குத்தரிசியில் கிடையாதென்று அவர் சொல்கிறார்.

மக்காரிஸன் என்பாரும் புறாக்களைக் கொண்டு சோதனை நடத்தினார். தீட்டிய அரிசியே தின்று வந்த புறாக்களுக்கு அடிக்கடி அதிசாரம் என்னும் வயிற்றுப்போக்கு நோய் வருவதாகவும், "வைடமின்" சத்துக் குறைவுக்கு இஃது அறிகுறியென்றும் அவர் சொல்லுகிறார். மேலும், புறா உடலின் ஒவ்வோர் உறுப்பும்—பீஜம், மண்ணீரல், கல்லீரல், குண்டிக்காய், இருதயம் மூளை ஆகியவை—நாளுக்கு நாள் வலிவிழந்து சும்பிப்போவதாக அவர் சொல்லுகிறார்.

இயந்திர அரிசி சாப்பிடும் தாய்மார்களின் முலைப்பாலே அருந்தும் குழந்தைகளுக்கு எறக்குறைய இந்நிலைமையே ஏற்படுவதாகவும் அவர் கூறுகிறார். இத்தகைய குழந்தைகளுக்கு அடிக்கடி வயிற்றுப்போக்கு நோய் வருவதுடன், அவை வளர்ச்சி குன்றி வயிறு உப்பி, ஈரல் சுருங்கி, எலும்பு மெலிந்து, பொதுவாகப் பலவீன மடைந்திருப்பதைச் சாதாரணமாகக் காணலாம்.

ஷெர்மன் என்பார் "உணவு இரசாயனமும் உடல் போஷணையும்" என்னும் ஒரு நூல் எழுதியுள்ளார். அதில் அவர் உணவுப்பொருளில் இன்னவின்ன தாதுக்கள் இருக்கவேண்டுமென்று கூறிவிட்டு, தீட்டிய அரிசியில் சுண்ணாம்பு சத்துக் குறைவென்றும், புளிப்புச் சத்து மிகுதியென்றும், இதனால் தீட்டிய அரிசி உட்கொள்வோரின் இரத்தம் கெட்டுப் போகுமென்றும் சொல்கிறார். இரத்தத்தில் புளிப்புச் சத்து அதிகமாவது பெரிபெரி நோய்பரவுவதற்கு ஒரு முக்கிய காரணமாகும். அதிலும் இவ்வரிசிச் சோற்றை அளவுக்குமிஞ்சித் திணியத்திணியத்தின்பதனால் நோய் இன்னும் எளிதில் பரவும். சென்ற மகாயுத்தத்தின் போது ஷாடல் அரப் நதியின்முகத்வாரத்திலிருந்து இந்திய மாலுமிகள் பெரி பெரி நோயினால் பீடிக்கப்பட்டார்கள். அவர்கள்மதப்பற்றுள்ள முஸ்லிம்களாதலின் ஐரோப்பியஉணவை அடியோடு மறுத்துத் தீட்டிய அரிசிமட்டும் தின்றுவந்ததே அதற்கு காரணம். தீட்டிய அரிசியிலுங்கூட அரிசியின் மேல்தோல் ஒன்றேனும் இருக்கும்படி குத்தப்பட்ட அரிசியை உட்கொள்பவர்க்குப் பெரி-பெரி வருவதில்லையென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பக்கோ என்பாரும் இன்னும் சிலரும் ஆராய்ச்சி செய்து அரிசியில் பருத்திவிதையிலுள்ளது போன்ற ஒருவகை விஷம் இருக்கிறதென்றும், தீட்டப்படாத அரிசியின் தவிட்டில் மேற்படி விஷத்துக்கு மாற்றான சத்து இருப்பதாகவும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஜப்பான் தேசத்து யாமிகாவா, கோயாமா, மிடோரி காலா, மோரி என்னும் வைத்தியர்கள் இதை ஆதரிக்கிறார்கள். இவர்கள் அரிசியிலிருந்து இறக்கிப் புளிக்கவைத்த திரவத்தைச் சில பிராணிகளின் உடலில் செலுத்திப் பரிசோதித்தார்கள். தீட்டிய அரிசி மட்டும் தின்று வந்த பிராணிகளுக்கு மட்டும் உடனே நோய்கண்டது.

ஜப்பானில் ரயில்பாதைகள் அதிகமானதும் குடியானவர்களிடையே பெரி பெரி நோய் பரவிற்று. இதற்குக் காரணம் இயந்திரக் குத்தரிசியே என்று கண்டுபிடிக்கப்பட்டது. ரயில்வேக்கள் வந்ததும் குடியானவர்கள் தங்கள் விளைபொருள்களைப் பட்டணங்களில் கொண்டுபோய் நல்ல விலைக்கு விற்றுவந்தார்கள். ஆனால் அதேசமயத்தில் நகரநாகரிகமும் அவர்களைப் பற்றிக்கொண்டபடியால், பட்டணங்களில் இயந்திரங்களில் குத்திய வெள்ளை அரிசியை வாங்கிக்கொண்டு போக ஆரம்பித்தார்கள். இவ்வாறு கைக்குத்தரிசி உண்பதை விட்டதே "பெரி பெரி" பரவியதற்குக் காரணம் என்று தெரியவந்தது.

இவ்வாராய்ச்சிகளின் பலனாகத் தென்னிந்தியாவிலுள்ள ஜனங்கள் தீட்டிய அரிசியைத் தொலைத்து, தீட்டாத முளையுடன் கூடிய அரிசியே உணவாகக் கொள்ளும்படி செய்தல் இப்போது உடனே செய்யவேண்டிய இன்றியமையாச் சீர்திருத்தமாகும் என்று ஏற்படுகிறது. இதில் கவனஞ் செலுத்தாமல் வேறு சுகாதார முயற்சிகள், குழந்தை வாரக் கொண்டாட்டங்கள், அம்மை குத்தல் முதலிய துறைகளில் இறங்கி எத்தனைதான் செய்தாலும் பயன் விளையப்போவதில்லையென்பது நிச்சயம். அடுத்த இருபத்தைந்தாண்டிற்குள் இதன் உண்மையைத் தென்னாட்டார் நன்கு காண்பார்கள்.



## செங்குந்தர் கிளர்ச்சி

### கருங்குழி மேலவலம்பேட்டைச் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

13—11—27 தேதியில் நிறைவேறிய தீர்மானங்களை வலியுறுத்தும்பொருட்டு 14—11—27 தேதி மாலை 5-மணிக்கு மேலூர் கற்பக விநாயகர் ஆலயத்தில் சங்க நிர்வாக விசேஷக் கூட்டம் திரு. வெ. வேதகிரி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று.

அச்சமயம் சங்கம் நீடூழி நிலைத்து வேலை செய்யும் பொருட்டுச் சங்கத்தை நடத்தவேண்டிய முறைகளைப் பற்றியும் பொருள்வருவாய் முதலியவற்றைப்பற்றியும் யோசித்து, சங்க நடவடிக்கைகளைப் பற்றி அப்போதைக்கப்போது 'திராவிடன்', 'குடியரசு,' 'செங்குந்தமித்திரன்' முதலிய பத்திரிகைகளின் மூலம் வெளிப்படுத்துவதன்றித் தலைச்சங்கத்திற்கும் தெரிவிக்கவேண்டுமென்றும், சங்கம் கூடுவதற்கு ரீடிங் ரூம் ஒன்று தேவையானபடியால் அதைப்பற்றி மறு கூட்டத்தில் யோசிக்கப்படுமென்றும் தீர்மானிக்கப் பெற்றன. இரவு 7-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

21—11—27 தேதியில் திரு. வெ. வேதகிரி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய கூட்டத்தில் சங்கம் கூடுவதற்குத் தனி ரீடிங்ரூம் ஏற்படுத்தப்படும் வரையில் கற்பக விநாயகர் ஆலயத்திலேயே கூட்டம் நடைபெறவேண்டுமென்றும், சங்கத்தை இன்னின்ன வழியில் விருத்திசெய்யவேண்டுமென்றும், ஏக மனதுடன் தீர்மானிக்கப்பெற்றன.

சங்க சட்டதிட்டங்களும் வரையறுக்கப் பெற்றன.

கருங்குழிப்பேட்டை பெரியதனம் திரு. ந. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களை நிர்வாக சபை அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்றது.

27—11—27 தேதியில் மற்றொரு கூட்டம் திரு. ந. சிங்காரவேலு முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. அச்சமயம் திரு. மா. நடேச முதலியார் அவர்கள் 'நமது முன்னேற்றம்', 'கல்வி', 'ஒற்றுமை' என்னும் விஷயங்களைப்பற்றி நீண்ட நேரம் உபந்யாசம் செய்தார். பிறகு கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது:—

இவ்வூருக்குப் போர்டு ஸ்கூல் வேண்டியதைப் பற்றி முன்னரே செங்கற்பட்டு தாலூக்காபோர்டு பிரசிடெண்டு அவர்களுக்கு 29—9—27, 5—10—27 தேதிகளில் அனுப்பிய ஸ்டேட்மெண்டுடன் 2—11—27ல் ரிஜிஸ்டர் மூலமாயும் மனுக்கள் கொடுத்தும், நாளது வரையில் யாதொரு பதிலும் கிடைக்கவில்லையாகையால், ஷை தாலூக்கா போர்டிற்கே சங்கக் காரியதரிசி திரு. S. சாம்பசிவ முதலியாரை நேரில் மனு கொடுக்கும்படி அனுமதிக்கிறது.

7—12—27 தேதியில்கூடிய கூட்டத்திற்குத் திரு. அ. வேதாசல முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். அப்போது திரு. மா. நடேச முதலியார் அவர்கள் 'கார்த்திகை தீபத்'தைப்பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர். பிறகு,

1. ஸ்கூல்விஷயமாக 29—11—27-ல் திரு. S. சாம்பசிவ முதலியார் தாலூக்கா போர்டு பிரெசிடெண்டை நேரில்கண்டு மனுக்கொடுத்தும் சரியான பதில் கிடைக்கவில்லையாகையால் டிஸ்டிரிக்ட் போர்டு பிரசிடெண்டு அவர்களுக்குச் சங்க நிர்வாக சபையாரும் இதர அங்கத்தினரும் சேர்ந்து மனு செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

2. கருங்குழிப்பேட்டை திரு. சு. வேதாசல முதலியார் அவர்களும் நிர்வாக சபை அங்கத்தினராகச் சேர்க்கப் பெற்றார்.

3. இதுவரையில் சங்கத்தில் நடந்த விஷயங்களை நமது தலைச் சங்கத்திற்குத் தெரிவித்து, நமது 'மித்திரன்' வாயிலாக அவற்றை வெளியிடும்படி கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் செவ்வேள் திருக்கூட்டத்தாரால் இன்னிசைக் கருவிகளுடன் தேவாரமோதப்பெற்றுக் கூட்டம் 9½-மணிக்கு இனிது கலைந்தது.

9—12—27ல் டிஸ்டிரிக்ட் போர்டு பிரெசிடெண்டு அவர்களுக்கு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்வூரில் போர்டு ஸ்கூல் வைப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யுமாறு நமது தலைச்சங்கத்தையும் குலாபிமானிகளையும் வேண்டிக் கொள்ளுவதாகச் சங்கக் காரியதரிசி S. சாம்பசிவ முதலியார் எழுதுகிறார்.

### வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

சென்ற 10—11—27 வியாழக்கிழமை மாலை 3½-மணிக்கு ஸ்ரீமான் ந. பிச்சாண்டி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கமிடி கூட்டம் கூட்டப் பெற்றது. அப்போது, சங்கக் கட்டடத்தில் நடைபெற்றுவரும் ஸ்கூலுக்காக வசூலிக்கப் பெற்ற மகமை கணக்கு பரிசோதிக்கப் பெற்றது.

5 மணிக்கு இச்சங்கத்தின் 11-வது ஆண்டு 5-வது கூட்டம் ஸ்ரீமான் சு. ஆவுடைநாயக முதலியாரவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. அச்சமயம் திரு. ஆ. மு. ஆறுமுக முதலியாரவர்கள் 'சமூகம்' என்னும் விஷயத்தைப்பற்றியும், சு. பாக்கியம் என்னும் மாணவர் 'புலால் மறுத்தல்' என்பதைப்பற்றியும் விரிவாகப் பேசினார்கள்.

3—1—28 செவ்வாய்க்கிழமை மாலை 5-மணிக்கு ஸ்ரீமான் சி. ப. ஆறுமுக முதலியாரவர்கள் தலைமையின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அப்போது ஸ்ரீமான் S. ஆதிநாராயண செட்டியாரவர்கள் 'கேதாரி கோன்பின் மகிமை' என்பதைப்பற்றி விவரமாக எடுத்துரைத்தார். பிறகு தேகாப்பியாச விளையாட்டில் ஜெயம்பெற்ற சி. ப. பழநி, பி. சுப்ரமணியம், பெ. முத்தையா என்னும் 3 மாணவர்களுக்குப் பரிசளிக்கப் பெற்றது எனச் சங்க காரியதரிசி திரு. சி. ப. ஆறுமுக முதலியார் எழுதுகிறார்.

### வீரவநல்லூர் செங்குந்த வாலிபர் சங்கம்.

11—11—27 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இச்சங்கத்தின் நான்காவது கூட்டம் ஸ்ரீமான் ஆவுடையநாயக முதலியாரவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. சங்கத்தின் அங்கத்தினரே யன்றி மற்றும் சில பெரியோர்களும் வந்திருந்தனர். அச்சமயம், ரெங்கராஜ், ஆறுமுகம் என்ற மாணவர்கள் முறையே 'இந்து மதம்,' 'பலி மறுத்தல்' என்னும் விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். மற்றுஞ் சில மாணவர்கள் அதே விஷயங்களை ஆதரித்துப் பேசிய பிறகு ஸ்ரீமான் ஆ. மு. ஆறுமுக முதலியாரவர்கள் வாலிபர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றியும், வாலிபர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப்பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். பின்னர் ஸ்ரீமான் ஆதிநாராயண பிள்ளையவர்கள் 'மது விலக்கு,' 'புலால் மறுத்தல்,' என்னும் விஷயங்களைப்பற்றி வற்புறுத்திப்பேசினார். தலைவர் தமது பின்னுரையில் மேற்கூறிய விஷயங்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஆதரித்துப் பேசி அவசியமாக அநுஷ்டிக்கவேண்டியவற்றை எடுத்துக் காட்டினார். கடைசியாகக் காரியதரிசி பி. இராமசாமி என்னும் மாணவரால் வந்தனோபசாரம் கூறப்பெற்றுக் கூட்டம் இனிது கலைந்ததெனச் செங்குந்தர் அபிவிருத்தி சங்கக் காரியதரிசி திரு. சி. ப. ஆறுமுக முதலியார் எழுதுகிறார்

### துடவாசல் செங்குந்த வாலிபர் சங்கம்.

சென்ற கார்த்திகை மீ 26வ சைவ சித்தாந்த பரமாசாரிய பக்தஜன சபையின் வாலிபர்கள் தமிழ் வேதபாராயணமான பிறகு சங்கம் ஒன்று நிறுவவேண்டுமெனச் செய்த தீர்மானத்தை யொட்டி மேற்படி மாதம் 30வ மாலை 5-மணிக்கு மேற்படி சபையில் ஒரு மகாநாடு கூடிற்று. நூற்றுக்கணக்கான செங்குந்த மகாஜனங்களும் மற்றையோரும் கூடியிருந்தனர். திரு. தா. த. கி. கோவிந்தசாமி முதலியார் தலைமை வகித்தார். அச்சமயம் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப் பிள்ளையவர்கள் 'சங்க நலன்' என்பதுபற்றி 1-மணி நேரம் உபந்யசித்தார். அவ்வரிய உபந்யாசத்தில் சங்கத்தின் அவசியம், அதனாலாம் பயன், அதுகொண்டு செய்யும் வேலை முதலியவை வற்புறுத்தப் பெற்றன.

அப்பொழுதே செங்குந்த மகாஜன சங்கம் எனப் பெயரிய சங்கஸ்தாபனமும் அதன் அங்கங்களாக வாசக புத்தக பிரார்த்தனா சாலைகளும் அமைக்கப் பெற்றன. இச்சங்கம் மாதாமாதம் கூடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றது. அவ்வூர் திரு. சப்மாஜிஸ்ட்ரேட் அழகிரிசாமி பிள்ளை அவர்கள் போன்ற பிரமுகர்களும் வந்திருந்து சபையைச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது எனத் திரு. வெ. சா. க. உத்திராபதி முதலியார் எழுதுகிறார்.

### மணக்குடி செங்குந்தர் மகாஜன சங்கம்.

15—12—27 வியாழக்கிழமை மாலை 5-மணிக்கு மணக்குடி ஸ்ரீ அண்ணாமலை சுவாமி மடத்தில் ஓர் கூட்டம் கூடிற்று. அதற்கு உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் பெருந்திரளாக விஜயஞ்செய்திருந்தனர். சிக்கில் பொருள்வைத்தசேரி செங்குந்த வாலிபர் சங்க காரியதரிசி திரு. நா. நாகப்ப முதலியார் அவர்களும் வந்திருந்தனர். அக்கூட்டத்திற்குப் பிரபல மிராஸ்தாரும், சிவன் கோயில் பஞ்சாயத்தாருமான உயர்திருவாளர் மு. வெ. மாணிக்க முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவரது முன்னுரையின் பின்னர் திரு. நா. நாகப்ப முதலியார் அவர்கள் 'சமூக முன்னேற்றமும் சங்கத்தின் அவசியமும்' என்பதைப் பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பிரபல வியாபாரியும் சமூகத்தொண்டருமான திரு. தி. சு. ந. கு. சீனிவாச முதலியார் அவர்கள் 'கல்வியும் பத்திரிகையும்' என்பதைப்பற்றி ஒரு விரிந்த சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர், இவ்வூரில் ஒரு சங்கம் ஸ்தாபிப்பது அவசியமென்றும், கோயம்பத்தூர் போலிச் செங்குந்தர்கள் உண்மைச் செங்குந்தர்களுக்கு அவமானமுண்டாக்கும் விஷயத்தைக் குறித்துப் பலமாய்க் கண்டிக்கிறதென்றும் தீர்மானிக்கப்பட்டது.



18-12-27 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு ஓர் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கவும் சங்கத்தைத் திறந்து வைக்கவும் ஒத்துக்கொண்ட மன்னார்குடி முனிசிபல் கௌன்சிலரும், பிரபல தனவந்தருமான திரு. பெரி. ரா. நடராஜ முதலியார் அவர்கள் ஏதோ அசந்தர்ப்பத்தினால் வர முடியாததை முன்னிட்டு, பொருள்வைத்தசேரி செங்குந்த வாலிபர் சங்க காரியதரிசி திரு. நா. நாகப்ப முதலியார் தலைமை வகித்தார்கள். பின்னர் தலைவரவர்கள், திரு. தி. சு. ந. கு சீனிவாசமுதலியார், திரு. V. தம்பிராயக் கவுண்டர், திரு. இராமசாமி முதலியார், திரு. வே. ரா. கணபதி முதலியார், திரு. அ. சிங்காரவேலு முதலியார், திரு. வயி. காளிமுத்து முதலியார் ஆகிய கனவான்கள் முறையே 'அரசியலும் பத்திரிகையும்', 'ஒற்றுமை', 'கல்வி', 'புலாலுண்ணாமை', 'கைத்தொழில்', 'வாலிபர்களின் கடமை', 'சங்கம்' என்பனவற்றைக் குறித்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பிறகு தலைவர் அவர்களால் நீண்ட கரகோஷத்தினிடையே சங்கம் திறந்து வைக்கப் பெற்றது.

அச்சமயம் இச்சங்கம் மாதாமாதம் கூடவேண்டுமென்றும் 'செங்குந்த மித்திரன்,' 'திராவிடன்,' 'குடியரசு' முதலான பத்திரிகைகளைச் சங்கத்திற்கு வரவழைக்கவேண்டுமென்றும் இச்சங்கத்தில் சேர்ந்த அங்கத்தினர் மாதமொன்றுக்கு நாலணா செலுத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப் பெற்றன.

கீழ்கண்டவாறு உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பெற்றனர்:—

போஷகர்கள்.

திரு. மு. வெ. மாணிக்க முதலியார் அவர்கள்
,, க. சு. விஸ்வநாத முதலியார் ,,
,, வெ. சு. அரங்கசாமி முதலியார் ,,
,, சு. சம்பந்த முதலியார் ,,
,, சு. பா. சுப்பிரமணிய முதலியார் ,,

தலைவர்.

,, வயி. காளிமுத்து முதலியார் ,,

உப தலைவர்.

,, சு. இராமசாமி முதலியார். ,,

காரியதரிசி.

திரு. வெ. ரா. கணபதி முதலியார். அவர்கள்

உபகாரியதரிசி.

,, கா. சோமசுந்தர முதலியார். ,,

பொக்கிஷதார்

,, வே. க. கா. இராமச்சந்திர முதலியார் ,,

நிருவாக அங்கத்தினர் 30 வரையில் சேர்க்கப்பெற்றனர். காரியதரிசியவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்றுக் கூட்டம் இனிது முடிந்தது எனத் திரு. வே. ரா. கணபதி முதலியார் எழுதுகிறார்.

### மதுரைச் செங்குந்த முதலியார் வாலிபர் சங்கம் திறப்புவிழா.

12-12-27 தேதி திங்கட்கிழமை இரவு 7-மணிக்கு மதுரைப்புரலம் ஸ்டேஷன் ரோட்டு செங்குந்த முதலியார் மடத்தில் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அக்கூட்டத்திற்கு மதுரைச் செங்குந்த முதலியார் மகாஜன சங்கத்தின் காரியதரிசி திரு. P. V. முத்துக்கறுப்ப முதலியார் அவர்கள் அவைத் தலைமை வகித்தார்.

தலைவரவர்கள் நமது பண்டைப் புகழைப்பற்றியும், தற்கால பரிதாபகரமான நிலைமையைப் பற்றியும், நாம் பழைய நிலைமையை அடைவதற்குச் சாதனமாயுள்ளது கல்வியும் சங்கமுமே என்றும், எண்ணிய எண்ணியாங்கு செய்யவல்ல வாலிபர்கள் சங்கங்கள் நிறுவிக் குலத்தொண்டு செய்ய முன்வரவேண்டுமென்றும் வற்புறுத்தினார். பின்னர் மதுரைச் செங்குந்த வாலிபர் சங்கம் நிறுவப் பெற்றது.

கீழ்க்கண்டவர்கள் உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். பின்னர் சந்தனம் தாம்பூலம் புஷ்பம் கற்கண்டு வழங்கப்பட்டு இரவு 9½ மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

தலைவர்.

திரு. P. V. முத்துக்கறுப்ப முதலியாரவர்கள், மதுரைச் செங்குந்த முதலியார் மகாஜன சங்க காரியதரிசி.

உபதலைவர்.

திரு. K. இருளாண்டி முதலியாரவர்கள், வியாபாரம்.

காரியதரிசி.

திரு. S. S. சிதம்பர முதலியாரவர்கள்.

உப காரியதரிசிகள்.

திரு. S. வெள்ளைச்சாமி முதலியாரவர்கள்
திரு K. பழனி முதலியாரவர்கள்.

பொக்கிஷதார்.

திரு. M. கறுப்பசாமி முதலியாரவர்கள்.

### நிர்வாக சபை அங்கத்தினர்.

திரு. M ராமசாமி முதலியாரவர்கள்.
திரு. S. A. S. செல்ல. முதலியாரவர்கள்.
திரு. M. முத்து முதலியாரவர்கள்.
S. மாணிக்க முதலியாரவர்கள்.
சி. ம. கந்தசாமி முதலியாரவர்கள்.
V. ராமசாமி முதலியாரவர்கள்.
R. கந்தசாமி முதலியாரவர்கள்.
R. சுப்பராய முதலியாரவர்கள்.
S. குருநாத முதலியாரவர்கள்.

### செங்குந்த முதலியார் வாலிபர் சங்கம், மதுரை.

சென்ற 31-12-27-ல் சிக்கல் பொருள்வைத்தசேரி செங்குந்தமுதலியார் மகாஜன சங்கத்தின் காரியதரிசியும் தையூர் வாலிபர் சங்கத் தலைவருமான உயர்திருவாளர் சொ. ச. கந்தசாமி முதலியாரவர்கள் மாலை 3½-மணி வண்டிக்கு மதுரை ஸ்டேஷனில் வந்திறங்கினார்கள். சங்கத்தாரால் வரவேற்புக்கான ஏற்பாடுகளெல்லாம் முன்னதாகவே செய்யப்பட்டிருந்தன. அதையொட்டி நமது முதலியாரவர்களைச் சங்கத்தலைவரவர்கள் வரவேற்றுப் பூமாலை சூட்டினர். உடனே பக்கத்திருந்த வாலிபர்களெல்லாம் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். பின்னர் ஸ்ரீமான் கி. முத்து முதலியார் அவர்கள் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மாலையில் சங்க விஷயமாகப் பலரும் கண்டு பேசிச் சென்றனர். இராப்போஜனம் முடிந்ததும் சங்கத்தின் ஆதரவில் கூட்டப்பெற்ற மீட்டிங்குக்கு 8-மணிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கூட்டம் நடைபெற்ற முனிசிபல் ஸ்கூல் ஹால் நிறையக் குலாபிமானிகள் பலரும் குழுமியிருந்தனர்.

சங்கத் தலைவர் P. V. முத்துக்கருப்ப முதலியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க் கடவுள் வணக்கம் பாடப்பட்டுக் கூட்டம் துவக்கப்பட்டது. முதலில் 'சமூக முன்னேற்றம்' என்னும் விஷயத்தைப்பற்றித் திரு. கந்தசாமி முதலியாரவர்கள் சுமார் 2-மணி நேரம் வரை சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

அதன் பிறகு மாணவர் அங்குசாமி என்பவர் 'குல ஒற்றுமை' என்பது பற்றியும் திரு. எஸ். மாணிக்க முதலியார் 'சங்க நோக்கம்' என்பது பற்றியும் மிகவும் விரிவாய்ப் பேசினார்கள். பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) நம் மரபினர்கள் கல்வியில் அபிவிருத்தியடையும் பொருட்டு இராப்பள்ளிக்கூடம் ஒன்று கூடிய சீக்கிரம் திறத்தல்.

(2) முக்கியமாக நம்குலப் பத்திரிகையான 'செங்குந்த மித்திரனை' ஒவ்வொருவரும் ஆதரிப்பதோடு அரசியல் துறையில் உண்மையில் உழைக்கும் திராவிடன், குடியரசு, சுதந்திரன் போன்ற பத்திரிகைகளை வாங்கி வாசித்தல் வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்கள் எல்லோராலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. பின்னர் சபையோர்கட்குச் சந்தன தாம்பூலங்கள் வழங்கப்பட்டுக் காரியதரிசி வந்தனோபசாரம் கூறி முடிந்ததும் சுமார் 10½-மணிக்குக் கூட்டம் இனிது கலைவுற்றது.

திரு. சொ. ச. கந்தசாமி முதலியார் அவர்கள் 2-1-28 தேதி யன்று காலை வண்டியில் திருச்சிக்குச் சென்றனர். வழியனுப்ப வாலிபர்களெல்லாம் ரயிலடிக்குச் சென்றிருந்தனர்.

S. S. சிதம்பர முதலியார்,
காரியதரிசி.

### சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கம்.

நிகழும் 29-1-28 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்குச் சென்னை அரண்மனைக்காரன் தெரு, நெ-31ல் மேற்படி சங்கத்தின் சார்பில் திரு. க. வச்சிரவேலு முதலியார் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று.

அப்போது திரு. E. V. சிங்காரவேலு முதலியார் (கிறிஸ்துவ கலாசாலையில் பி.ஏ. மாணவர்) "வாழ்வின் நோக்கம்' என்பதைப்பற்றி ஓர் அரிய கட்டுரை நவின்றார். மாணவர் பலர் பின் தொடர்ந்து பேசினர்.

இறுதியில் பிப்ரவரி மாதத்தில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமையில் உபந்யாசப் பொதுக்கூட்டம் கூடவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. தலைவர் முடிப்புரை முதலிய முறையே நிகழ்ந்து இரவு 7-30-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

குறிப்பு 6-2-28 திங்கட்கிழமை மாலை 4-30-மணிக்கு இச்சங்கத்தின் சார்பில் நிகழும் பொதுக்கூட்டத்தில் "சமூக சம்பந்தமாகச் சங்கத்தாபனங்கள் அவசியமா?" என்னும் விஷயமாக ஒரு விவாதம் நடக்கும் (Debate) ராஜதானிக் கலாசாலை எப்.ஏ. மாணவர் தங்கவேலு முதலியார் அதை யொட்டியும் பச்சையப்பன் கல்லூரி எப்.ஏ. மாணவர் குமாரசாமி முதலியார் மறுத்தும் உரையாடுவர். பிறர் பலரும் உடன்பட்டும் மறுத்தும் வாதிப்பர் என மேற்படி சங்கத்துக் காரியதரிசி யெழுதுகிறார்.



### தலைச் சங்கத்தின் பிரசாரம்

#### பிரதிநிதிகளின் சுற்றுப் பிரயாணம்

சென்னையில் 6 லட்சம் செங்குந்தர்களின் முன்னேற்றத்தின் பொருட்டுஸ்தாபிக்கப்பட்டுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரகர்களாகிய 'செங்குந்தமித்திரன்' ஆசிரியரும் மேற்படி சங்க அமைச்சருமாகிய திருவாளர் ம. ஷண்முகசுந்தர முதலியார், எம் ஏ. எல் டி., திரு. ம. சரவண முதலியார், திருவாளர்கள் ம. அ. கனகசபை முதலியார், ப. ம. கந்தசாமி முதலியார், தி. அ. ஷண்முக முதலியார், குருசுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ சாமிநாத தேசிகர், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார், திரு. மா. சு. ஆ. ஆறுமுக முதலியார் முதலியோர் செங்குந்த குல முன்னேற்றத்தின் பொருட்டுப் பிரசாரம் செய்வதற்காக புறப்பட்டு 1-1-28 மாலையில் சைதாப்பேட்டை செங்குந்தர் சங்கத்தின் ஆதரவில் நடந்த 'செங்குந்த மித்திரன்' ஆண்டு நிறைவு விழாவிற்கு வந்து சேர்ந்தனர். அவ்வூர்ச் சங்கத்தினர் தமது தலைவர் திரு. சை. சடையப்ப முதலியார் அவர்களோடு வந்த செங்குந்த குலத்தொண்டர்களை வரவேற்று உபசரித்தனர்.

### சைதாப்பேட்டை

மாலை 6 மணிக்குச் சைதாப்பேட்டை சந்தன விநாயகர் ஆலயத்தில் ஓர் பெருங் கூட்டம் கூட்டப்பட்டது. இக்கூட்டத்திற்கு திருமலைராஜன் பட்டினம் திருத்தொண்ட பக்தஜன சபைப் பிரசாரகர் திரு. உ. அ. அருணாசல முதலியார் அவர்களும் வந்திருந்தனர். கூட்டத்திற்குத் திருநெல்வேலி செங்குந்த சங்கத்தின் தலைவரும் மேற்படி ஜில்லா காங்கிரஸ் கமிடி தலைவருமாகிய திரு. எஸ். பழனியாண்டி முதலியார் பி.ஏ. அவர்கள் தலைமை வகிக்க, மேற்குறித்தவர்கள் அனைவரும் சமூக முன்னேற்றத்திற்காக அநேக விஷயங்களைக் குறித்து உபன்யசித்தனர். அங்கு திரு. நடராஜ முதலியார் ப்ரோப்ரைட்டர் 'செங்குந்தமித்திரன்' பத்திரிகையை ஓராண்டு பொருள் வருவாயை எதிர்பாராமல் செவ்வனே நடத்திவந்த தென்னிந்திய செங்குந்தமகாஜன சங்கத்திற்கு அக்கூட்டம் நன்றி செலுத்துவதாகவும் எல்லாம் வல்ல இறைவன் அது நீடூழி நடைபெற அருள்புரிய வேண்டுமென்றும், அவ்வூரிலுள்ள ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'செங்குந்தமித்திரன்' பத்திரிகையை வரவழைத்து ஆதரிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு இரவு 10-மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுபெற்றது.

### குடியேற்றம்.

மறுநாள் பிரசாரகர்கள் அனைவரும் குடியேற்றம் சென்றனர். அங்கு முனிசிபல் சேர்மென் திரு எம் வி. பீமராஜ முதலியார், முனிசிபல் கவுன்சிலர்கள் திருவாளர்கள் மாக்காத்தை வேலாயுத முதலியார், வேணுகோபால முதலியார், முனிசிபல் ஆபீஸ் மானேஜர் திரு. சி. பழனியாண்டி முதலியார், பி.ஏ, திருப்பத்தூர் சேர்மன் ஷண்முக முதலியார்முதலிய பிரமுகர்கள் அன்றுமாலை 6-மணிக்குத் தகரக்கொட்டகையில் குடியேற்றம்போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் திரு. கா. செங்கல்வராய முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு பொதுக் கூட்டம் கூட்டினர். அக்கூட்டத்திற்குக் குடியேற்றத்தைச் சுற்றியுள்ள 18 பேட்டைகளிலிருந்தும், திருப்பத்தூர், ஒட்டிவாணம், பள்ளிகொண்டா, ஆம்பூர், பெரியாங்குப்பம் முதலிய ஊர்களிலிருந்தும் சுமார் ஆயிரம் பேர் செங்குந்த சிரோமணிகள் குழுமி யிருந்தனர். அப்பொழுது பிரசாரகர்களில் ஸ்ரீ கா. ச. சுவாமிநாத தேசிகர், திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார், தி. அ. ஷண்முகமுதலியார், ம, ஷண்முக சுந்தர முதலியார், எம்.ஏ. எல்.டி., மா. அ. கனகசபை முதலியார் முதலியோர் மகாஜனங்களின் மனதில் பசுமரத்தாணியெனப் பதியும்படி சமூக முன்னேற்ற விஷயமாக உபந்யாசங்கள் செய்தனர். பிறகு சேர்மென் திரு. பீமராஜ முதலியார் அவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்டு இரவு 11-மணிக்குக் கூட்டம் ஜெயகோஷத்தோடு முடிவடைந்தது.

திரு. M. V. பீமராஜ முதலியார் அவர்களும், திரு. மாக்காத்தை வேலாயுத முதலியார் அவர்களும் அன்றும் மறுதினமும் ஒன்றாக இருந்து பிரசாரர்களை உபசரித்தமையையும், பத்திரிகைக்குச் சந்தாதாரர்கள் சேர்க்க எடுத்துக்கொண்ட முயற்சியையும், அடுத்த தை மாதத்தில் குடியேற்றத்தில் செங்குந்தர் சங்கம் ஸ்தாபிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதாக வாக்களித்தமையையும், 3-1-28ந் தேதி பிரசாரகர்களோடு பள்ளிகொண்டா என்ற கிராமத்திற்குச் சென்று அங்கு அன்றிரவு பிரசாரம் செவ்வனே நடைபெறத் துணையாக இருந்தமையும் உணர்ந்து அவர்களுக்கு நம் சமூகத்தினிடம் உள்ள பற்றும் ஆர்வமும், அச்சமூகம் முன்னேறவேண்டுமென்ற நல்லெண்ணமும் எவ்வளவு தான இருக்கிறதென்பதைச் செங்குந்தர் அனைவரும் அறிய வேண்டும். அவர்களுக்குத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தாரும் ஏனைய செங்குந்தர்களும் மிகவும் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றனர். அவர்களது முயற்சியினால் குடியேற்றத்தில் கூடிய விரைவில் செங்குந்தர்களது மகாநாடு நடைபெறுமென்றே கருத வேண்டியிருக்கிறது.

### பள்ளிகொண்டா.

3-1-28 மாலை பிரசாரகர்களும், திருவாளர்கள் பீமராஜ முதலியார், மா. வேலாயுத முதலியார், வேணுகோபால் முதலியார் முதலியவர்களும் பள்ளிகொண்டா யூனியன் பிரஸிடெண்டு திரு. முருகேச முதலியாரவர்களது வேண்டுகோளுக்கிணங்கி அவ்வூருக்கு விஜயம் செய்தனர். அன்று மாலை 5-மணிக்குச் செங்குந்தர் மடாலயத்தில் திரு பீமராஜ முதலியார் அவைத்தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில் பிரசாரகர்கள் அரிய உபந்யாசங்கள் செய்தனர். கடைசியாகத் தலைவர் முடிவுரைக்குப் பின் திரு முருகேச முதலியாரவர்களால்வந்தனோபசாரங் கூறப்பட்டு 9-மணிக்குக் கூட்டம் இனிது முடிவடைந்தது.

### சேலம் அம்மாப்பேட்டை

அன்றிரவே இரண்டு மணிக்குப் பிரசாரகர்கள் சேலத்திற்குப் பிரயாணப்பட்டு மறுநாள் 4-1-28 பகல் 10-30 மணிக்குச் சேலம் அம்மாபேட்டைக்குச் சென்று அங்கு பல பிரமுகர்களைக் கண்டு அவ்வூரில் செங்குந்தர் சங்கம் ஸ்தாபிக்கவேண்டியதைப் பற்றியும் 'செங்குந்த மித்திர'னுக்கு அனைவரும் சந்தாதாரராய்ச் சேரவேண்டிய விஷயத்தைப் பற்றியும் பேசிவிட்டுத் திரும்பி, அன்று மாலை ரயிலிலேயே ஈரோடு வந்து சேர்ந்தனர். வந்தவர்களை அவ்வூர் பிரமுகர்களாகிய திருவாளர்கள் M. லக்ஷ்மண முதலியார், எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், பி.ஏ.எல்.டி.;, வ.மு. மொட்டையப்ப முதலியார், எம். என். ஷண்முகசுந்தர முதலியார், வையாபுரி முதலியார் முதலியவர்கள் வரவேற்று உபசரித்தார்கள்.

### திருச்செங்கோடு.

பிரசாரகர்கள் அன்று திரு. மொட்டையப்ப முதலியார் அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்து மறுநாள் 5-1 28ந் தேதி காலை 11-மணிக்குத் திருச்செங்கோட்டிற்குத் திரு. எம். லக்ஷ்மண முதலியார், திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார் முதலியவர்களோடு சென்று பிரசாரஞ் செய்தனர். இதன் விவரத்தை திரு. V.V.C.R. கந்தப்ப முதலியார் அவர்கள் எழுதியிருக்கும் வியாசத்தில் மற்றோரிடத்தில் கண்டு கொள்க.

### ஈரோட்டு.

மறுநாள் இரவு 9-மணிக்குத் திரு. ஷண்முகசுந்தர முதலியார் அவர்கள் திரு. சென்னியப்ப முதலியார் அவர்களின் தலைமையின் கீழ் ஈரோடு பெருமாள் கோவிலில் 'நமது குலத்தின் நிலைமை' என்னும்விஷயமாக உபன்னியாசம் செய்தனர். அன்று ஈரோடு செங்குந்தர் சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றது.

### சென்னிமலை

பிரசாரகர்கள் திருவாளர் வ. மு. மொட்டையப்ப முதலியாருடன் 7-1-28 3 மணிக்குச் சென்னிமலையடைந்தனர். அவ்வூர்ப் பிரமுகரும், முனிசிபல் கௌன்சிலரும், தாலூக்கா போர்டு மெம்பருமாகிய திரு. வி. எஸ். செங்கோட்டையா முதலியார் அவர்களும், அவர் தமையனார் திரு வி. எல். பழனியப்ப முதலியார் அவர்களும், பிரதிநிதிகளை வரவேற்று உபசரித்தனர். அன்று மாலை 5-மணிக்குக் காமாட்சியம்மன் ஆலயத்தில் செங்குந்தர்களது பொதுக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் நாட்டாண்மைக்காரர் திரு. நாச்சிமுத்து முதலியார் தலைமை வகிக்கத் திருவாளர்கள் எம்.சண்முகசுந்தரமுதலியார் எம்.ஏ.,எல்.டி., காஞ்சிபுரம் பி. செ. மாணிக்கவாசக முதலியார், ஸ்ரீ கா. சுவாமிநாத தேசிகராதியோர் முறையே "சங்கமும் பத்திரிகையும்," "தற்கால உலகத்தில் செங்குந்தர் நிலை," "நமது முன்னேற்றம்" என்ற விஷயங்களைக் குறித்து நீண்ட சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பிறகு 'சென்னிமலை செங்குந்தர் சங்கம்' என்ற பெயரோடு ஒரு கிளைச் சங்கம் ஸ்தாபிக்கப் பட்டது. பிறகு திரு. வி. எஸ். செங்கோட்டையா முதலியாரவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 11-மணிக்குக் கூட்டம் முடிவுற்றது. 'செங்குந்த மித்திர'னுக்கு அங்கு 30 சந்தாதாரர்கள் புதிதாகச் சேர்ந்தனர்.

பிரசாரகர்கள் அவ்வூரில் இருந்த வரையில் திரு. பழனியப்ப முதலியாரவர்களும் செங்கோட்டையா முதலியாரவர்களும் காட்டிய வணக்கமும் செய்த உபசாரமும் என்றும் மறக்கற்பாலனவல்ல.

### வல்லிபுரத்தான் பாளயம்.

பிரசாரகர்கள் 8-1-28ந்தேதி காலை சென்னிமலையிலிருந்து புறப்பட்டுத் திரு. வ. மு. மொட்டையப்ப முதலியார் அவர்களது கிராமமாகிய வல்லிபுரத்தான் பாளையத்தை யடைந்து அங்கு காலை 10-மணிக்குக் கூட்டப்பட்ட கூட்டத்தில் அவ்வூர் நாட்டாண்மைக்காரருடைய தலைமையில் திரு தி. அ. சண்முக முதலியாரும், திரு. மா. அ. கனகசபை முதலியாரும் முறையே 'செங்குந்தர் ஒழுக்கம்', 'ஒற்றுமை' என்னும் விஷயமாக உபந்யசித்தனர். அவ்வூர் ஆலய சம்மந்தமாக ஏற்பட்டிருந்த இரு கட்சிகளை ஒன்றுபடுத்திச் சமாதானஞ் செய்துவிட்டு ஓர்கிளைச் சங்கமும் ஸ்தாபித்தனர். இதற்கு வேண்டிய நிர்வாக அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செஙகுந்த மித்திரனுக்குப் புதிதாக 15 சந்தாதார் சேர்ந்தனர்.



### சித்தோடு.

அன்று மாலை பிரசாரகர்கள் 6-மணிக்குப் புறப்பட்டு இரவு 7 மணிக்கு ஈரோடு அடைந்தனர். அங்கிருந்து திரு. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ. எல். டி. அவர்கள் நேரே சென்னைக்குப் பிரயாணப்பட்டனர். மற்றவர்கள் உடனே பஸ் ஏறி 8-30 மணிக்குச் சித்தோடு என்னும் கிராமத்தை யடைந்தனர். அங்கு பிரபலஸ்தராகிய திரு. எம். என். பெரியசாமி முதலியார் அவர்களால் உபசரிக்கப்பட்டனர் இரவு 10-மணிக்கு 300 செங்குந்தர்களுக்குமேல் காமாட்சியம்மன் கோவிலில் குழுமினர். அக்கூட்டத்துக்கு அவ்வூர் நாட்டாண்மைக்காரர் திரு. நா. கு. அ. ராமசாமி முதலியார் தலைமை வகிக்கத் திருவாளர்கள் காஞ்சிபுரம் பி செ. மாணிக்கவாசக முதலியார், மா. அ. கனகசபை முதலியார், ஸ்ரீகா. ச. சுவாமிநாத தேசிகர் முதலியோர் கல்வியும் கைத்தொழிலும், தலைச்சங்கமும் கிளைச்சங்கங்களும், ஒழுக்கமே உயிர் என்னும் பொருள்கள் பற்றி நீண்ட உபந்யாசங்கள் செய்தனர். பிறகு ஓர் கிளைச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு இரவு 1½-மணிக்கு வந்தனோபசாரத்தோடு கூட்டம் இனிது முடிவடைந்தது. அந்தக் கூட்டத்திலேயே 'செங்குந்த மித்திர'னுக்கு 30 சந்தாதாரர்கள் சேர்ந்தனர்.

### நல்ல கவுண்டன் பாளையம்

9-1-28ந்தேதி காலை பிரதிநிதிகள் சித்தோடு திரு பெரியசாமி முதலியாரோடு நல்ல கவுண்டன் பாளயம் சென்றனர். அன்னையதினம் கொங்குநாட்டுச் செங்குந்தர்களுக்குக் குருஸ்வாமிகளாக விளங்கும் பெருந்தலையூர் ஸ்ரீலஸ்ரீ பரஞ்சோதி சுவாமிகள் அங்கு எழுந்தருளியிருப்பதாகக் கேள்விப்பட்டு அவரிடம் செல்லச், சுவாமிகள் அனைவரையும் மிக்க அன்போடு வரவேற்று வேண்டிய உபசாரமும் செய்து விரும்பியபடி சில ஏட்டுப்பிரதிகளும் கொடுத்து முக்கியவிஷயங்களைக் குறித்துக்கொள்வதற்கு உத்தரவும் தந்தனர். சுவாமிகள் பிரதிநிதிகளோடு உடன் இருந்து காலைச் சிற்றுண்டியும் மத்தியான உணவும் அருந்தினர். அன்று காலை 10-மணிக்குச் சுவாமிகளது தலைமையின் கீழ்க்கூடிய செங்குந்தர் கூட்டத்தில் ஸ்ரீகா. ச. சுவாமிநாத தேசிகர் 'நமது வேலை' என்பது பற்றி உபந்யசித்தார். சுவாமிகளது சிவசின்னப் பொலிவுகளைக் காணப் பிரதிநிதிகளுக்கு அளவற்ற இன்பம் பெருகியது. இந்த இரண்டு தினங்களிலும் தமது அலுவலைக் கவனியாது பிரசாரகர்களோடு இருந்து வேண்டிய உபசாரம் செய்த திரு. எம். பெரியசாமி முதலியாரவர்கட்குத் தலைச்சங்கத்தின் நன்றி உரியதாகுக.

### ஈரோட்டு.

அன்று மாலை 3-மணிக்குப் புறப்பட்டுப் பிரதிநிதிகள் ஈரோடு அடைந்தனர். அவ்வூர்ச் சிவாலயத்தில் இரவு 8-மணிக்கு ஈரோடு செங்குந்தர் சங்க ஆதரவில் திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், பி. ஏ., எல். டி., அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அச்சமயம் திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியார், காஞ்சீபுரம் பி. செ. மாணிக்கவாசக முதலியார், வா. அ. கனகசபை முதலியார், ஸ்ரீகா. ச. சுவாமிநாத தேசிகர் முதலியோர் நமது பண்டைய நிலைமை, குல ஒழுக்கம், கல்வியும் நாகரீகமும், சங்கத்தின் நோக்கம் என்னும் விஷயமாகச் சொற்பெருக்கிட்டனர். பிறகு 6ந் தேதி ஸ்தாபிக்கப்பட்ட செங்குந்தர் சங்கத்திற்குக் கீழ்கண்டவர்கள் நிர்வாக அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திருவாளர்கள் சி. வி. வி. சி. ஆர். சென்னியப்ப முதலியார், தலைவர்; எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், பி. ஏ., எல். டி., காரியதரிசி; வ. மு. மொட்டையப்ப முதலியார், பொக்கிஷதார்; மற்றும் 12 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் முடிப்புரைக்குப்பின் வந்தனோபசாரத்தோடு கூட்டம் இரவு 12-மணிக்குக் கலைந்தது.

### கீவாணி.

10-1-28 தேதி காலை 12-மணிக்குப் பிரதிநிதிகள் அனைவரும் புறப்பட்டுக் கீவாணி என வழங்கும் கீழ் பவானிக்குச் சென்றனர். அவ்வூர் பெருதனக்காரர் திரு. செங்கோட முதலியாரும், புள்ளிகார் திரு. காளியண்ண முதலியார் குமாரர் திரு. பழனியப்ப முதலியாரும் பிரதிநிதிகளை நன்கு உபசரித்துச் 'செங்குந்த மித்திர'னுக்குச் சில சந்தாதாரர்களையும் சேர்த்துக் கொடுத்தனர்.

### மேவாணி.

பிரசாரகர்கள் அன்றிரவே மேவாணி எனவழங்கும் மேல் பவானிக்குச் சென்று அங்கு சிலரைச் 'செங்குந்த மித்திர'னுக்குச் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொண்டு மீண்டும் கீவாணிக்குத் திரும்பினர்.

### ஜம்பை.

பிரசாரகர்கள் பவானிக்குத் திரும்பும் வழியில் ஜம்பை செங்குந்தர்கள் வழியில் வரவேற்றுத் தமதூரிலும் பிரசாரம் செய்துவிட்டுப் போகவேண்டுமென்று வேண்டிக் கொண்டதின்மேல் ஸ்ரீ தேசிகரவர்களை ஜம்பையில் நிறுத்திவிட்டு மற்ற மூவரும் பவானி சேர்ந்தனர். ஜம்பையில் நடந்த வற்றின் வரலாற்றை மற்றோர் இடத்தில் விவரமாக அச்சிட்டிருக்கிறோம்.

### பவானி.

காலை 10-மணிக்குப் பவானியடைந்த பிரதிநிதிகளாகிய திருவாளர்கள் மா. அ. கனகசபை முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார், தி. அ. சண்முக முதலியாராகிய மூவரும் அவ்வூர்ப்பிரபலஸ்தர்களாகிய திருவாளர்கள் வெ. ரா. பழனியப்ப முதலியார், அருணாசல முதலியார், காரியக்காரர் குருநாத முதலியார் முதலியோரால் உபசரிக்கப்பெற்றனர். அவ்வூரில் அன்று மாலை கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டமையால் பிரதிநிதிகள் அவ்வூருக்கு ஒரு மைலிலுள்ள குமாரபாளையம் சென்று நாட்டாண்மைக்காரர் கறுப்பண்ண முதலியார், காரியக்காரர் வடிவேலு முதலியார் முதலியோரைப் பார்த்துச் சங்கத்தின் நோக்கத்தை எடுத்துக்கூறிச் சில சந்தாதார் சேர்த்துக்கொண்டு, அதற்கு ஒரு மைலிலுள்ள சின்னப்ப நாய்க்கன் பாளையம் சென்று அவ்வூர்ச் செங்குந்தர்கள் சுப்பிரமணியர் ஆலயத்தில் குழும செங்குந்தர் முன்னேற்றத்திற்கான அநேக விஷயங்களை இரண்டு மணி நேரம் எடுத்துக் கூறிவிட்டுப் பவானியடைந்தனர். பவானியில் மாலை 5-மணிக்குச் செங்குந்தர் மடத்தில் ஓர் பெருங் கூட்டம் குழுமியது. அதற்கு, உள்ளூரிலிருந்தும், குமாரபாளையம், சின்னப்ப நாயக்கன்பாளையம், ஜம்பை முதலிய வெளியூர்களிலிருந்தும் ஏராளமான செங்குந்தர்கள்விஜயம் செய்திருந்தனர். கூட்டத்திற்கு காரியக்காரர் திரு செ. குருநாத முதலியார் தலைமை வகிக்க, திரு. தி. அ. சண்முக முதலியார், காஞ்சிபுரம் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார், திரு. மா. அ. கனகசபை முதலியார், ஸ்ரீ கா. ச. சுவாமிநாத தேசிகர், திரு. ஈ. வி. அப்பாவு முதலியார் முதலியோர் சமூகம் முன்னேறுவதற்கான வழிகளைக் குறித்து நீண்ட நேரம் உபந்நியசித்தனர். பிறகு கிளைச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுக் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்.

திரு. வ. கு. அ. கஞ்சப்ப முதலியார்.

உப தலைவர்.

திரு. க. செ. வீ. ராமசாமி முதலியார்.

காரியதரிசி.

திரு. வெ. ரா. பழனியப்ப முதலியார்.

கூட்டுக் காரியதரிசி.

திரு. ரா. க. பெருமாள் முதலியார்.

பொக்கிஷதார்

திரு. V. R. S. வெங்கடாசல முதலியார்.

இதர நிர்வாக அங்கத்தினர்கள்.

திரு. ச. கு. பழனியப்ப முதலியார்.
,, க. செ. அர்த்தநாரி முதலியார்.
,, டி. ராமசாமி முதலியார்.
,, மு. க. கந்தசாமி முதலியார்.
,, B. S. குழந்தைவேலு முதலியார்.
,, காரியக்காரர் S. குருநாத முதலியார்.
,, ஆ. அருணாசல முதலியார்.
,, கு. செல்லப்ப முதலியார்.
,, செ. கஞ்சப்ப முதலியார்.
,, அ. கு. குருநாத முதலியார்.

சுமார் 40 பேர் செங்குந்த மித்திரனுக்குப் புதிதாகச் சந்தாதாரராகச் சேர்ந்தனர்.

இப்பிரசாரம் முழுவதற்கும் பிரசாரகர்களோடுடனிருந்து தமது தேக கஷ்டங்களையும் சொந்த அலுவல்களுக்கு ஏற்பட்ட இடையூறுகளையும் பொருட்படுத்தாது உண்மை அன்புடன் அவர்களுக்குப் பேருதவிபுரிந்த திருவாளர் ஈரோட்டு மொட்டையப்ப முதலியார் அவர்கள் குலாபிமானம் மிகவும் பாராட்டற்பாலதாம்.

### சேலம்.

12-1-28 காலை பிரதிநிதிகள் சேலத்தை யடைந்தனர். அங்கு அநேக பிரமுகர்களைக் கண்டு பேசிவிட்டுப்பல சந்தாதாரர்கள் சேர்த்துக்கொண்டு இரவு 11-மணி மெயிலுக்குத் திரு பி. செ மாணிக்கவாசக முதலியார் காஞ்சிபுரத்திற்கும், ஸ்ரீ கா. ச. சுவாமிநாத தேசிகர் குடியேற்றத்திற்கும், திருவாளர்கள் மா. அ. கனகசபை முதலியாரும், தி அ. சண்முக முதலியாரும் சென்னைக்குத் திரும்பினர்.

### மாணம்பதி.

திருவாளர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் 17-1-28 தேதி மாலை மாணம்பதி யடைந்தனர். அவ்வூர் போர்டு பாடசாலை ஆசிரியர் திரு. ஆறுமுக முதலியாரும் கிராம முனிசிப் திரு. சம்பந்த மூர்த்தி முதலியாரும் அவரை வரவேற்று உபசரித்தனர். மாலை 5-மணிக்குச் செங்குந்த இளைஞர்கள் ஜேகோஷ்டத்தோடு ஊர்வலம் வந்தனர். 6-மணிக்குச் செங்குந்தர்கள் பெருந்திரளாகக் குழுமினர். கூட்டத்திற்குச் சென்னை திரு. மா. அ. முருகேச முதலியார் தலைமை வகிக்கத், திரு. பி. செ. மாணிக்கவாசக முதயாரும், திரு. ஆறுமுக முதலியாரும் நீண்ட நேரம் சொற்பெருக்கிட்டனர். பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இரவு 10-மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

### ஐயங்கார் குளம்.

21-1-28 தேதி மாலை திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரும், திரு. து. செ. கந்தசாமி முதலியாரும் மற்றுஞ் சிலரோடு ஐயங்கார் குள



செங்குந்தர் சங்கத்தினரின் வேண்டுகோளுக் கிணங்கி அவ்வூர்க்குச் சென்றனர். மாலை 6-மணிக்கு மேற்படி சங்க ஆதரவில் பொதுக் கூட்டம் குழுமியது. புராணிகர் ச. பொன்னுசாமி முதலியார் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கத், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரும், திரு. து. செ. கந்தசாமி முதலியாரும் முறையே 'ஐக்கிய நாணய சங்கமும் கைத்தொழிலும்', 'நமது நிலை' என்ற விஷயமாகச் சொற்பெருககிட்டனர். தலைவர் முடிப்புரைக்குப் பின் வந்தனோபசாரத்தோடு இரவு 11-மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

---

## திருச்செங்கோடு செங்குந்த மகாஜன சங்கம்

### முதல்கூட்டம்.

5-1-1928 தேதியில் உண்மைச் செங்குந்த மஹாஜனங்களின் பொதுக்கூட்டமொன்று இவ்வூர். பரவடிக்கடுத்த திருஞானசம்பந்தர் பக்தஜன சபையிற் கூட வேண்டுமென்றும், சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க வமைச்சரும் மற்றும் சிலரும் வரப்போவதாகவும், காலை 10-மணிக்கு அறிவிக்கப்பட்டது. உடனே பந்தலுடன் மண்டபம் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டது. பகல் 3-மணியிலிருந்தே இவ்வூர் வாசிகளேயன்றிச் சுற்றுப் பக்கங்களிலுள்ள சூரியம் பாளையம் கவுண்டம் பாளையம் முதலான கிராமங்களினின்றும் செங்குந்த மகாஜனங்கள் ஏராளமாக வந்து கூடத் தொடங்கிவிட்டனர். மாலை 6-மணிக்குக் கடவுள் வாழ்த்துடன், இவ்வூர் பிரபல நூல் வர்த்தகரும், சங்ககிரி தாலூக்கா போர்டு வைஸ் பிரஸிடெண்டும், யூனியன் போர்டு பிரஸிடெண்டுமாகிய, திரு. வ. வெ. கா ரா. கந்தப்ப முதலியாரவர்களின் தலைமையின் கீழ்க் கூட்டம் ஆரம்பமாயிற்று. அச்சமயம் பிரபல நூல் வர்த்தகரும், சங்ககிரி தாலூக்கா போர்டு மெம்பருமாகிய திருவாளர் வ. வெ. கா. வி. கடேச முதலியாரும், பிரபல வர்த்தகர் திருவாளர்கள் கூ. சு. சுப்பராய முதலியார், குழந்தைபாளையம் கந்தப்ப முதலியார், வையூர் சுப்பராய முதலியார், அ. மு. இராமசாமி முதலியார், புதூர். ஆ. பா. வையாபுரி முதலியார், மு. சி. சின்னமாரியப்ப முதலியார், தோ. கா. அரங்கசாமி முதலியார், தோ. ரா. திருவேங்கட முதலியார், மு. ப. பெ. இராமசாமி முதலியார், நா. சொ. மாரியப்ப முதலியார், ஈரோடு S. மீனாக்ஷிசுந்தர முதலியார் B.A., L.T., நூல் வர்த்தகம் இலட்சுமண முதலியார், தமிழ்ப்பண்டிதர் ஈ. வீ. அப்பாவு முதலியார் முதலிய பிரமுகர்களும், இன்னும் அநேக பிரபலஸ்தர்களும் வந்திருந்தனர். பின் சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சரும் "செங்குந்த மித்திரன்" பத்திராதிபருமாகிய திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார் M. [illegible] L.T., அவர்களுக்கும், ஸ்ரீ சாமிநாத தேசிகர், தமிழ்ப் பண்டிதர்கள் மாணிக்கவாசக முதலியார், தி. அ. சண்முக முதலியார் அவர்களுக்கும் இவ்வூர் ஷை மஹாஜனங்களின் சார்பாக உபசார பத்திரம் வாசிக்கப்பட்டது. அதன்பின், மேற்காட்டிய வித்வமணிகளுள் பத்திராதிபர் "உண்மைச் செங்குந்தரின் தற்காலநிலை" என்னும் விஷயமாக அரியதொரு சொற்பொழிவை நிகழ்த்தினர். மற்றவர்களும் அதனையொட்டிச் செங்குந்த மஹாஜனங்களின் முன்னேற்றத்திற்கான பலவிஷயங்களை எடுத்துக்காட்டி, அரிய பிரசங்கங்கள் புரிந்தனர். பின்னர் கீழே காணப்படும் இரண்டு தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின :—

(1) கோயமுத்தூர் ஜில்லாவில் தாசி வகுப்பினரைச் சேர்ந்த சிலர் செங்குந்தர் என்னும் புனைப் பெயருடன் தங்களுக்குள் உள்ள இழிதொழிலை ஒழிக்கும்பொருட்டு, முத்தையன், முருகனய், முருகப்பனுப், முருகப்ப முதலியாரும் பொருட்டுத், தம தெண்ணம் பூர்த்தியாகாமை கண்டு, அரசாங்கத்தின் உதவியை நாடி, சென்னை சட்டசபை அங்கத்தினர்க்கும் பிறருக்கும் எழுதிக்கொண்ட மனுவில், இமிடேஷன் சிகப்புக்கல் ஜாதிச் சிகப்புக்கல்லைப் போக்கவேண்டி இமிடேஷன் சிகப்புக்கல்லும் ஜாதி சிகப்புக்கல்லும், ஒரே ஜாதியென்று கூறுகிற மாதிரி, உண்மைச் செங்குந்தர்களின் கௌரவத்திற்கும், புகழுக்கும், மேன்மைக்கும் பெரும் பாதகத்தை விளைவிப்பனவாயுள்ள சில சொற்றொடர்களை உபயோகித்து இருப்பதாகத் தெரியவருகின்றதாதலின் அவற்றை இக்கூட்டம் ஏகமனதுடன் கண்டிக்கின்றது.

(2) நம் குல ஒழுக்கத்திற்கும் நீதிபரிபாலனத்திற்கும் நமது ஜாதிச் சங்கம் தொண்டு செய்து வருகிறதாயினும், சென்னை மாகாணம் பூராவுக்குமுள்ள காரியங்களை கவனிக்கும் பொருட்டுச் சென்னை தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கம் ஸ்தாபனம் செய்திருப்பதால் ஷை சங்கத்தின் கிளைச்சங்கமாக இவ்வூரிலும் ஒரு சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

### இரண்டாவது கூட்டம்.

5-1-28-ல் கூடிய முதல் கூட்டத்தில் தீர்மானித்த தீர்மானப்படி 20-1-28-ல் மாலை 6-மணிக்குச் சங்ககிரி தாலூக்கா போர்டு வைஸ் பிரஸிடெண்டும்,

இவ்வூர் யூனியன்போர்டு பிரஸிடெண்ட்டும், பிரபல வர்த்தகருமாகிய திருவாளர் வ. வெ. கா. ரா. கந்தப்ப முதலியார் அவர்களின் தலைமையின்கீழ்க் கூட்டம் கூடி, மை சென்னை தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் கிளைச்சங்கமாகச் சங்கமொன்று ஸ்தாபனம் செய்யப்பட்டது. மை சங்கத்திற்கு, பிரஸிடெண்டாக, திரு. வ. வெ. கா. ரா. கந்தப்ப முதலியாரவர்களையும், வைஸ் பிரஸிடெண்டாக, சங்ககிரி தாலூக்கா போர்டு மெம்பரும், பிரபல வர்த்தகருமாகிய திரு. வ. வெ. கா. வி. நடேச முதலியாரவர்களையும், காரியதரிசியாக பிரபல வியாபாரி திருவாளர் ப. கு. மு. விஸ்வநாத முதலியாரவர்களையும், உபகாரியதரிசியாக பிரபல வியாபாரி திருவாளர் தோ. ந. பெருமான் முதலியாரவர்களையும், பொக்கிஷதாரராக பிரபல வியாபாரி திருவாளர் கூ. அ. க. அருணாசல முதலியாரவர்களையும், யோசனையாளராக (அட்வைஸர்) பிரபல வியாபாரி திரு. T. S. குமாரசாமி முதலியாரவர்களையும், உபாத்தியாயர் S. A. சோமசுந்தர முதலியாரவர்களையும், இதர நிர்வாக கமிட்டி மெம்பர்களாக,

திரு. கூ. க. சுப்பராய முதலியார்.
,, மொ. வெ. ப. காளியப்ப முதலியார்.
,, ஆ. ந. வேலப்ப முதலியார்.
,, பு. க. சி. வேலாயுத முதலியார்.
,, ந. சொ. பா. மாரிமுத்து முதலியார்.
,, க. ப. பெ. அங்கப்ப முதலியார்.
,, கொ. கி. கந்தப்ப முதலியார்.
,, தோ. ந. பச்சைவண்ண முதலியார்.
,, மு. சி. சி. மாரிமுத்து முதலியார்.
,, மு. சி. அர்த்தநாரி முதலியார்.
,, மு. ப. சி. ராமசாமி முதலியார்.
,, கா. அ. ராமசாமி முதலியார்.
,, T. G. நடேச முதலியார்.
,, நா. கு. கந்தப்ப முதலியார்.
,, மு. சென்னியப்ப முதலியார்.
,, மொ. செ. பொன்னுசாமி முதலியார்.
,, பொ. வ. வீ. பொன்னுசாமி முதலியார்.
,, மொ. அ. மாரியப்ப முதலியார்.
,, மோ. ப. காளியப்ப முதலியார்.
,, மு. ப. ரா. பெரியதம்பி முதலியார்.
,, க. வெ. அ. அங்கப்ப முதலியார்.

முதலியோர்களையும் நியமிக்கப்பட்டதுடன், முதல் கூட்டத்தின் நடவடிக்கைகளையும் இரண்டாவது கூட்டத்தின் நடவடிக்கைகளையும், 'தமிழ்நாடு' பத்திரிக்கைக்கும், சென்னை தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்திற்கும் அனுபபிப் பத்திரிக்கைகளில் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு, பின் யாவருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டபின் சபை இனிது நிறைவேறிற்று.

வ. வெ. கா. ரா. கந்தப்ப முதலியார்.

## ஜம்பை செங்குந்தர் பொதுக்கூட்டம்

11-1-28-ந் தேதியாகிய இன்று காலையிற் சென்னை தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கப் பிரசாரகர்களாகிய ஸ்ரீமான்கள் கனகசபை முதலியார், தமிழ்ப் பண்டிதர் மாணிக்கவாசக முதலியார், சண்முக முதலியார், ஸ்ரீலஸ்ரீ C. S. சுவாமிநாத தேசிகராகிய நால்வர் கீழ்வானியிலிருந்து பவானி மார்க்கமாகத் தமதூர போவதையறிந்த இந்கர்வாசிகளாகிய செங்குந்தர் நாட்டாண்மை பெரியதனக்காரர்களும் மற்றுமுள்ள பிரபலஸ்தர்களும முதனுளே சமீபத்துள்ள குண்டு செட்டி பாளையம், தளவாய்ப்பேட்டை, பெரிய வடமலை பாளையம் முதலான பல கிராமச் செங்குந்த மஹா ஜனங்களை வரும்படியான ஏற்பாடுகளைச் செய்து வைத்துக் காலை 7½-மணிக்கு வழியில் எதிர்கொண் டழைத்துவந்து, ஆங்கும மை தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்திற்குக் கிளைச் சங்கமொன்றை நிறுவுவதோடு நங்குலத்தவர் முன்னேற்றத்திற்கான பல வழிகளை யெடுத்துக்காட்ட வேண்டுமென வேண்டிக்கொண்டதை யாமோதித்து ஸ்ரீலஸ்ரீ தேசிகரவர்களை நிறுத்திவிட்டுப் பவானியிலும்படியே செய்விக்கவேண்டுமெனப் பலர் வேண்டிக்கொண்டதற்கிணங்கி மற்றைய மூவரும் அங்குப புறப்பட்டுச் சென்றனர். பின் பகல் 3½-மணிக்கு முதனுளேற்பாட்டின்படி சுற்றுப் பக்கங்களிலுள்ள கிராமத்துச் செங்குந்த மஹா ஜனங்களும இவ்வூர் வாசிகளான நம் குலத்தவருமாகப பெருந்திரளான ஜனங்கள் வந்து கூடினர். கடவுள் வாழ்த்துடன் இவ்வூர் பெரியதனக்காரரும ஜம்பை ஐக்கிய நாணய சங்கத்தினர்கள் தலைவருமாகிய திரு. மு. பழனியபப முதலியாரவர்கள் தலைமையின்கீழ் கூட்டம் ஆரம்பமாயிற்று. அச்சமயம "செங்குந்த மக்களினுயர்வு" என்னும் விடயமாகத் தமிழ் பண்டிதர் திரு. ஈ. வீ. அப்பாவு முதலியாரவர்களும், "செங்குந்தர் கடமை" என்னும் விஷயமாக ஸ்ரீலஸ்ரீ C. S. சுவாமிநாத தேசிகரவர்களும் பண்டைய இலக்கண விலக்கியங்கள் சரித்திரங்கள் பிரபந்தங்கள் முதலியவற்றினின்றும் பற்பல ஆதாரங்களை யெடுத்துக்காட்டி அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். அதன் பின் கீழேகண்ட தீர்மானங்கள் ஏக மனதுடன் நிறைவேறின.

(1) "கோயம்பத்தூர் ஜில்லாவிலுள்ள தேவதாசி வகுப்பினரைச் சேர்ந்த சிலர் செங்குந்தரென்னும் புனைப்பெயருடன் தங்களுக்குள் உள்ள இழிந்தொழிலை யொழிக்கும்பொருட்டுக் கூடித் தீர்மானங்களைச் செய்தும் தமதெண்ணம் பூர்த்தியாகாமையை



யுணர்ந்து அரசாங்கத்தின் உதவியை நாடிச்சென்னை சட்ட சபையங்கத்தினருக்கும் பிறருக்கும் எழுதிக்கொண்ட மனுவில் உண்மைச் செங்குந்த மக்களின் கௌரவத்திற்கும் புகழுக்கும் மேன்மைக்கும் பெரும் பாதகத்தை விளைவிப்பனவாயுள்ள சில சொற்றொடர்களையுபயோகித்திருப்பதாகத் தெரியவருகின்றதாதலின் அவற்றை இக்கூட்டம் மிகவும் பலமாக ஏக மனதுடன் கண்டிக்கிறது."

(2) "சென்னை தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்திற்குக் கிளைச் சங்கமாக இவ்வூரில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பெற வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது."

இத்தீர்மானங்களைத் தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் மூலமாகச் சென்னை சட்ட சபையின் உபதலைவர் ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷ்மி யம்மையாருக்கும், தேவஸ்தான பரிபாலன சபைக்கும் தெரிவிப்பதோடு பத்திரிகைகளுக்கும் அறிவிக்கும்படி இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

அதன்மேல் சங்கம் ஏற்படுத்தப்பட்டு வந்தனோபசாரத்துடன் சபை கலைந்ததும், ஸ்ரீ தேசிகா இவ்வூர் வாசிகள் சிலருடன் பவானிக்குப புறப்படடுச் சென்றனர்.

### ஜம்பை செங்குந்தர் சங்கத்தின் நிருவாகசபை அங்கத்தினர்.

தலைவர்

திரு. மு. பழனியப்ப முதலியார்.
ஜம்பை ஐக்கிய நாணய சங்கத் தலைவர்.

உப தலைவர்

,, செ. நாகலிங்க முதலியார்.

காரியதரிசிகள்

,, நா. முத்தி முதலியார்.
,, க. குருநாத முதலியார்.

இதர நிருவாக அங்கத்தினர்கள்.

,, மா. பழனிவேல் முதலியார்.
,, மா. முனியப்ப முதலியார்.
,, கா. குருசாமி முதலியார்.
,, ரா. குமார முதலியார்.
,, மா. கந்த முதலியார்.
,, சி. சம்பந்த முதலியார் (தளவாய்ப் பேட்டை)
,, சி. பழனியப்ப முதலியார் (குண்டு செட்டி பாளையம்).
,, க. குப்பண்ண முதலியார்.
,, கா. காளியண்ண முதலியார்.
,, கா. அர்த்தநாரி முதலியார்.
திரு. ம. முத்து முதலியார்.
,, மு. காளி முதலியார்.
,, அ. ப. முத்து முதலியார்.
,, கு. பச்சையப்ப முதலியார்.
,, நா. வாஞ்சியண்ண முதலியார்.

11—1—28. மு. பழனியப்ப முதலியார்.

## சென்னிமலைச் செங்குந்தர் சங்கம்.

7-1-28-ல் திரு. நாச்சிமுத்து முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிய கூட்டத்தில் 'சென்னிமலையில் செங்குந்த சமூக முன்னேற்றத்திற்கென உழைக்கச் 'சென்னிமலைச் செங்குந்தர் சங்கம்' என ஓர் சங்கம் ஸ்தாபித்து அதனைச் சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தோடு அதன் கிளைச் சங்கமாக இணைக்க வேண்டுமென்றும், இச்சங்கத்திற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களை அடுத்த கூட்டத்தில் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும தீர்மானிக்கப்பெற்றது.

15-1-28-ல் கூடிய கூட்டத்தில் அச்சங்கத்திற்கு உத்தியோகஸ்தர்கள் கீழ்க்கண்டபடி தெரிந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்.

ம-ள-ள-ஸ்ரீ க. பாலசுப்ரமணிய முதலியார்.

துணைத்தலைவர்.

,, நாட்டாண்மை ஆ. பழனியப்பமுதலியார்

அமைச்சர்.

,, வா. செ. முருகேச முதலியார்.
,, மு. பழனியப்ப முதலியார்.

பொக்கிஷதார்

,, ஒ. ஆ. ஆறுமுக முதலியார்.

ஆடிட்டர்.

,, ஓ. சொ. சென்னியப்ப முதலியார்.

அத்தியக்ஷகர்கள்.

,, ப. நாச்சிமுத்து முதலியார்.
,, வா. மா. நாச்சிமுத்து முதலியார்.
,, செ. ராமசாமி முதலியார்.
,, மோ. செ. கிருஷ்ண முதலியார்.
,, க. ப. நாச்சிமுத்து முதலியார்.
,, ரா. செ. பாலசுப்ரமணிய முதலியார்.
,, ப. சி. பொன்னப்ப முதலியார்.
,, பொ. செ. சென்னியப்ப முதலியார்.
,, ப. முத்துசாமி முதலியார்.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்து நிருவாக சபையின் நடவடிக்கைகள்.

1927ஞு டிசம்பர் மீ 31வ சனிக்கிழமை மாலை 5-30 மணிக்குச் சென்னை அரண்மனைக்காரன் வீதியிலுள்ள "செங்குந்தமித்திரன்" காரியாலயத்தில் நமது சங்கத்தின் ஐந்தாவது நிருவாக சபைக்கூட்டம் திருவாளர் மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிக் கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது:—

1. முடியும் வருஷத்தின் வரவு செலவு விவரங்களைப் பல தலைப்பின் கீழ் வகுத்துக்காட்டும் ஒரு ஸ்டேட்மெண்டை அமைச்சர் தயாரித்து அடுத்த நிருவாக சபைக் கூட்டத்திற்குச்சமர்ப்பிக்கவேண்டும்.

2. (a) நமது மரபினரைக் குறித்து இழிவாகவும் அவதூறாகவும் சில பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் சிலர் எழுதியிருப்பதாக எமக்கு ஒரு சிலர் தெரிவிப்பதால், அவ்விதம் எழுதியுள்ள பிரசுரங்களைக் காண்போர் இச்சங்கத்து அமைச்சருக்கு அவற்றைக் குறித்து எழுதும்படி வேண்டிக்கொள்ளப் படுகின்றனர். (b) இத்தகைய பிரசுரங்களைப்படித்து அவற்றிலுள்ள விஷயங்களைக் கண்டிக்க ஆலோசனை கூறவும், நம்மரபினர் பிரதாபங்களை விவரிக்க வல்ல ஆதாரங்களை ஆராயவும் திருவாளர்கள் S. குழந்தைவேல் முதலியார், தி. நா. சபாபதி முதலியார், மா. அ. கனகசபை முதலியார், மா. பா. கந்தசாமி முதலியார், மு. சரவணமுதலியார், மா. அ. முருகேச முதலியார், தி. அ. சண்முக முதலியார், தி. மு. அ. அருணாசல முதலியார், ம. சண்முக சுந்தர முதலியார் ஆகிய ஒன்பதின்மர் கூடிய ஒரு சபை ஏற்படுத்தப்பட்டது.

3. கோயம்புத்தூர் ஜில்லாவில் பிரசாரஞ் செய்யத் திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியாரையும், பி. செ. மாணிக்கவாசக முதலியாரையும் அனுப்பவேண்டும்.

4. அடுத்த மாதம் ஷை இருவரையும் குடியேற்றம், சேலம், ஈரோடு, ஒத்தபாலம் (மலையாளம்) முதலிய இடங்களில் பிரசாரஞ் செய்து இனச் சங்கங்கள் ஸ்தாபித்து மித்திரனுக்குப் புதுச் சந்தாதாரர்களைச் சேகரிக்க அனுப்பவேண்டும்.

5. முடியும் வருஷத்தில் மித்திர'னைத் தமது சொந்த செலவில் வெளியிட்டுத் தந்த திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்களுக்கு இச்சங்கம் நன்றியறிதலைத் தெரிவித்துத் துவக்கும் வருஷத்திலிருந்து இச்சங்கமே பத்திரிகையைத் தனது சொந்த செலவில் நடத்தத் தீர்மானிக்கிறது.

6. காஞ்சீபுரம் முனிசிபல் கவுன்சில் அங்கத்தினராகத் தேர்தல் அடைந்த திரு. சு. வினைதீர்த்த முதலியார் அவர்களுக்கும், சைதாப்பேட்டை முனிசிபல்கவுன்சில் வைஸ்சேர்மென் பதவியடைந்த திரு. சை. இரத்தினவேல் முதலியார் அவர்களுக்கும் இச்சங்கம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து அவர்கள் அச்சபைகளில் நமது மரபினரின் சிறந்த பிரதிநிதிகளாக இருப்பரென்றே நம்புகின்றது.

7. (a) திருநெல்வேலி பொன்னுசாமிக்கும் திருமயிலாப்பூர் செ. பாலசுப்பிரமணியத்துக்கும் ஜனவரியிலிருந்து பாதிசம்பளம் கொடுக்கவேண்டியது.

(b) கிறிஸ்தவ கல்லூரி சோமசுந்திரத்துக்கு பரீக்ஷை கட்டணத்துக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுக்கவேண்டியது.

8. திருநெல்வேலி ஜில்லா சிவ விஷ்ணு தேவஸ்தான கமிட்டிகளுக்கு ஏற்கனவே சிபார்சு செய்த திரு. தென்காசி T. P. K. ஆறுமுக முதலியாரோடு திருநெல்வேலி செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் திரு. S. பழனியாண்டி முதலியார் B.A., அவர்கள் பெயரையும் சிபார்சு செய்து, அவர்கள் இருவர்களையும் நமது மரபினரின் பிரதிநிதிகளாக அச்சபைகளில் நியமனம் செய்ய இச்சங்கம் கவர்ன்மெண்டாரையும் இந்துமத பரிபாலன சபையாரையும் கேட்டுக்கொள்ளுகிறது.

9. சங்கத்தின் பொக்கிஷதார் திரு. S. முருகய்ய முதலியார் அவர்கள் சென்னையில் இல்லாமையை உத்தேசித்துச் சங்கத்தின் நிதியைச் சென்ட்ரல் அர்பன் பாங்கியிலும், இந்தியன் பாங்கியிலும், திரு. ம. சண்முக சுந்தர முதலியார், மா. அ. கனகசபை முதலியார் இவர்கள் கூட்டுப் பெயரில் சேமித்து வைக்கவேண்டும்.

10. The South Indian Senguntha Mahajana Sangam, Madras, on behalf of the six lakhs of Sengunthers (Kaikolars, the Tamil Weavers of South India) whom it represents, conveys to His Excellency the Governor of Madras, the Heads of Departments, and other Public Leaders, through its Secretaries, its best greetings and hearty good wishes for the happy New year, and solicits their sympathy and whole-hearted support in its efforts to ameliorate both mentally and materially the large body of Kaikola-weavers it represents.



**மொழிபெயர்ப்பு:**—ஆறு லக்ஷம் உண்மைச் செங்குந்தர்களின் பிரதிநிதியாக யிருக்கும் இத்தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் தனது அமைச்சர்களின் மூலமாகக் கனம் சென்னைக் கவர்னர் துரை அவர்களுக்கும், எல்லாத் துரைத்தன இலாக்காக்களின் தலைமை அதிகாரிகளுக்கும், மற்றுமுள்ள சமூக தலைவர்களுக்கும் தனது புது வருஷத்திய நல் விருப்பங்களையும் கோரிக்கைகளையும் தெரியப்படுத்திக்கொண்டு, அக்கனவான்களை இச்சங்கம் செங்குந்த சமூகத்தின் முன்னேற்றத்திற்குச் செய்துவரும் வேலைகளில் ஆதரவு காட்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

தி. நா. ச. மு
ம. ச. மு.
அமைச்சர்கள்.

## தலைச்சங்க அமைச்சருக்கு வந்த புது வருஷத்திய நல் விருப்பக் கடிதங்கள்.

### கனம் கவர்னர் துரையவர்களின் கடிதம்.

Government House,
Madras, 10th January, 1928

M. R. Ry.
M. Shunmugasundara Mudaliar Avl., M.A., L.T.,
Joint Secretary, The South Indian Senguntha Mahajana Sangam,
31, Armenian Street, Madras.

Dear Sir,

I am desired by His Excellency to thank you and the Members of the South Indian Sengundha Mahajana Sangam, Madras, for your good wishes for the New year which he heartily reciprocates.

Yours faithfully,
Major H. F. C. HOBBS,
Military Secretary
to His Excellency the Governor of Madras.

கவர்னர் வீடு, சென்னை,
10—1—28.

ம-ா-ா ஸ்ரீ ம. சண்முகசுந்தரமுதலியார், எம்.ஏ.எல்.டி., அவர்கள், அமைச்சர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

அன்புள்ள ஐயா,

கனம் கவர்னர் துரையவர்கள் தாங்கள் அவர்களுக்கு அனுப்பிய புது வருஷத்திய உபசார கடிதத்திற்காகத் தங்களுக்கும் தங்கள் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அங்கத்தினர்களுக்கும் வந்தனமளித்துப் புது வருஷம் உங்களுக்கு மங்களகரமாக ஆகுக எனத் தாம் மனமார விரும்புவதாக அறிவிக்கச் சொல்லுகிறார்.

இங்ஙனம், உண்மையுள்ள,
மேஜர் H. F. C. ஹாப்ஸ்,
கனம் கவர்னரின் இராணுவ காரியதரிசி.

II

From

The Hon'ble Khan Bahadur,
M. Bazlullah Saheb Bahadur,
C.I.E., O.B.E.
Director of Industries, Madras.

To

The Joint Secretary,
The South Indian Sengunthar Mahajana Sangham,
31, Armenian Street, G. T., Madras.

Dear Sir,

I write to thank you, and through you the Sengunthars of South India for their New Year greetings and good wishes which I cordially reciprocate. I shall be glad to do all I can to ameliorate their position.

Yours sincerely
W. FYFE,
for Director of Industries.

—

III

"Gopaul Bagh",
Mount Road, Madras,
7th January 1928.

Dear Mr. Shunmukasundara Mudaliar,

Thanks very much for your kind greetings for the New year.

I wish you and your Sangham a happy New Year and many returns.

Yours Sincerely,
P. RAMARAYANINGAR,
The Rajah of Panagal.

—

IV

With warmest greetings and all good wishes for the Happy New Year.

From

M. V. Bhimaraja Mudaliar,
(குடியேற்றம் பீமராஜ முதலியார்,)
Municipal Chairman, Gudiyattam,
Taluq & District Board Member,
North Arcot.

சென்னை, 6—1—28

ஹானரபில் கனம் கான்பஹதூர்
M. பஸ்லுல்லா சாஹிப் பஹதூர் அவர்கள்
கைத்தொழில் இலாகா தலைவரிடமிருந்து
சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன
சங்கத்து அமைச்சருக்கு,

அன்புள்ள ஐயா,

தாங்கள் தங்கள் சங்கத்தின் சார்பாக அனுப்பியிருக்கும் புதிய வருஷத்திய நல்லுபசார விருப்பங்களுக்காகத் தங்களுக்கும், தங்கள் மூலமாகத் தென்னிந்தியாவிலுள்ள செங்குந்தர்களுக்கும் வந்தனமளித்து, என் மனமார்ந்த புது வருஷத்திய நல்லுபசார விருப்பங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். செங்குந்தர் முன்னேற்றத்திற்கு என்னாலியன்றவை யெல்லாம் செய்தல் எனக்கு மகிழ்ச்சிதரும்.

தங்கள் அன்புள்ள,
W. பயிப்,
கைத்தொழிலிலாகா உதவித் தலைவர்.

—

கோபால பாக், சென்னை,
7—1—28.

அன்புள்ள திரு. சண்முகசுந்தர முதலியாரவர்களுக்கு,

தங்கள் புதிய வருஷத்திய நல்விருப்பங்களுக்கு நிரம்ப வந்தனம். தங்களுக்கும் தங்கள் சங்கத்திற்கும் புது வருஷமும் மேல் வருஷங்களும் மங்களமாகுக.

தங்கள் உண்மையுள்ள,
பீ. இராமராயனிங்கவாரு.
பனகால் ராஜா.

—

V

Mr. R. G. Grieve
(the Director of Public Instruction,)
கல்வியிலாகா தலைவர் கிரீவ் துரையவர்கள்,
thanks
Mr Shunmukasundara Mudaliar,
For his Kind Greetings and wishes him
a Happy and Prosperous New Year.

(17)



## உண்மைச் செங்குந்தர்கட்கு ஓர் எச்சரிக்கை.

கோயமுத்தூர் செங்குந்த மகாஜன சங்கத்தார் என்போர் கொடுவாயில் நாளது பிப்ரவரி மாதம் முதல் தேதி கூட்டுவதாக விளம்பரப் படுத்தியிருக்கும் பதினைந்தாவது 'செங்குந்தர்' மஹாநாடு என்பதைக்கூட்டுவதில், இந்தச் சென்னை இராஜதானியிலும் இலங்கையிலும் உள்ள ஆறு லக்ஷம் உண்மைச் செங்குந்தர்களுக்கு மாகாண தலைச்சங்கமாகவும் தனது அங்கமாக ஐம்பதிற்கு மேற்பட்ட கிளைச் சங்கங்களையுடையதாகவும் இருக்கும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் யாதொரு சம்பந்தமும் உடையதாக இல்லையென்பதையும், செங்குந்த சமூகத்தின் பெயரால் விளம்பரப்படுத்தியிருக்கும் ஷை மகா நாட்டைத் தன்னுடைய ஆணையிலுள்ள உண்மைச் செங்குந்தர்கள் தமது மகா நாடாகக் கருதவில்லையென்றும் இதனைப் பொது ஜனங்களுக்குத் தெரியப் படுத்திக் கொள்ளுகிறோம். சென்னை மாகாண முழுவதிலும் இலங்கையிலும் உள்ள உண்மைச் செங்குந்தர்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு பெரிய மகாநாட்டை அடுத்த வேனிற்கால விடுமுறையில் கூட்ட எமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் ஏற்பாடுகள் செய்து வருகின்றது என்பதையும் இத்தோரணையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். உண்மைச் செங்குந்தர்கள் மயங்காதிருப்பாராக.

தி. நா. சபாபதி முதலியார்,
ம. சண்முகசுந்தர முதலியார்,
அமைச்சர்கள்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.

## வர்த்தமானப் பகுதி

### சென்னையில் மகாநாடுகள்.

#### அகில இந்திய காங்கிரஸ் மகாநாடு.

இது ஸ்ரீ எம். ஏ. டாக்டர் அன்ஸாரி அவர்களின் தலைமையின்கீழ் 26, 27, 28 தேதிகளில் சென்னை எழும்பூர் ஏரியில் இதற்கென அமைக்கப்பெற்ற பெரிய பந்தலில் நடைபெற்றது.

ஸ்ரீ சி. ந. முத்துரங்க முதலியார் பிரதிநிதிகளை வரவேற்புக் கொண்டாடினார்.

#### நிறைவேறிய சில தீர்மானங்கள்.

இக்காங்கிரஸ் திரு. பி. வி. ராய் அகால மரணத்துக்காக வருந்துவதாகவும், காக்கோரி கைதிகளுக்கு அனுதாபம் காட்டுவதாகவும், சீனர்களின் சுதந்திரப் போராட்டத்தில் சீனர்களுக்காக அனுதாபம் காட்டுவதாகவும், ஸ்ரீ சக்லத் வாலாவுக்குப் பிரயாணச்சீட்டுக் கொடுக்க மறுத்ததைக் கண்டிப்பதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

இந்தியாவிலும், கீழ்ப்பாகக் கடல்களிலும் முக்கியமாய் இந்தியாவின் வடமேற்கு எல்லையிலும் அரசாங்கம் அமிதமான பெரும் ஏற்பாடுகள் செய்து வருவதைப்பற்றி இக்காங்கிரஸ் பெரிதும் வருந்துகின்றது.

இந்தியாவிலிருந்து பர்மாவைத் தனியாகப் பிரிவினை செய்ய முயற்சிப்பதையும் வடகிழக்கு எல்லைப்புற மாகாணம் ஒன்றைச் சிருஷ்டிக்கும் யோசனையையும் இக்காங்கிரஸ் பலமாகக் கண்டிக்கிறது.

இந்தியா பூரண தேசீய சுதந்திரம் அடைவதே அதன் லக்ஷியமென்று இக்காங்கிரஸ் ஒப்புக்கொள்கிறது.

இந்தியாவின் சுய நிருணய உரிமையைச் சற்றும் மதிக்காமல், பிரிட்டிஷ் சர்க்கார் அரசியல் விசாரணை கமிஷனை நியமித்திருப்பதால் அந்தக் கமிஷனை ஒவ்வொரு விஷயத்திலும் பகிஷ்கரிப்பதே இந்தியா செய்யக்கூடிய சுயமரியாதையான வேலையென்று இந்தக் காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

மாகாணங்களை எல்லாம் பாஷாவாரியாகப் பிரித்துவிட வேண்டுமென்கிற விஷயத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டிய காலம் வந்துவிட்டது.

### ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை.

சட்டசபைகளின் பிரதிநிதி ஸ்தானங்களுக்குரிய தேர்தல்கள் எல்லாம் பொதுத் தேர்தல் தொகுதிகள் மூலமாகவே நடைபெறும்படி ஏற்பாடு செய்யவேண்டும்

இந்துக்களும் முஸ்லீம்களும் விரும்பும் விஷயத்தில், ஒரு மாகாணத்தில் அந்தந்த சமூகத்துக்குள்ள விகிதாசாரப்படி ஏற்படும் ஸ்தானங்களை ஒதுக்கி வைத்துக் கொள்ளலாம்.

ஹிந்துக்கள் எந்த மசூதியின் வழியாகவும் மத சம்பந்தமான ஊர்வலங்களையும் இதர ஊர்வலங்களையும் நடத்திச் செல்லவும், வாத்தியங்களை வாசிக்கவும் உரிமையுண்டு. ஆனால் மசூதியின் முன்பாக ஊர்வலத்தை நிறுத்திக்கொண்டு ஆரவாரம் செய்வதும், மசூதிக்குள் பிரார்த்தனை செய்யும் முஸ்லீம்களுக்கு இடைஞ்சல் ஏற்படும்படியான காரியத்தைச் செய்வதுங் கூடாது.

முஸ்லீம்கள் எந்தக் கிராமத்திலும் பட்டிணத்திலும் குப்பானிமித்தமாகப் பசுக்கொலை செய்ய உரிமையுண்டு. ஆனால் பொது இடங்களிலும், ஆலயங்களுக்குச் சமீபமான இடங்களிலும், இந்துக்களுடைய பார்வைக்கு உட்பட்ட இடங்களிலும், அங்ஙனம் பசுப் பலி செய்தலால் இந்துக்களுக்குள்ள ஆழ்ந்த மத உணர்ச்சியைப் பாராட்டி, முஸ்லீம்கள் எந்த இடத்திலும் இந்துக்களுடைய மனதைப் புண்படுத்தும்படியான வழியில் பசுப் பலி செய்யாமல் இருக்கவேண்டும்.

### பெண்கள் மகாநாடு.

டிசம்பர்மீ 29௳ காலை 10-மணிக்கு ஸ்திரீகள் மகாநாடு காங்கிரஸ் விஷயாலோசனை கமிட்டி பந்தலில் கூடியது. கூட்ட நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொருட்டு ஏராளமான ஸ்திரீகள் வந்திருந்தனர். ஸ்ரீமதி ஜானகி பாய் தலைமை வகித்தார்.

ஸ்ரீமதி சென் (பூனா) மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசினார். பிறகு தலைவர் பிரசங்கம் செய்தார்.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

இந்திய மக்கள் திடசாலிகளாயிருக்க வேண்டுமானால், தாய்மார்களைச் சம்ரட்சணை செய்து சிசு மரணங்கள் அதிகப்படாமல் தடுப்பதே சர்க்காரின் செலவுகளில் முதன்மையாக இருக்கவேண்டும்.

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஸ்திரீகளின் நன்மையைப் பாதுகாக்க வேண்டுமென்றும், தாய்மார்கள் தந்தைகளைப்போல் குழந்தைகளுக்குக் கார்டியனாக இருக்கவேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

கட்டாய கல்வி சம்மந்தமாகவும், பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் குழந்தைகளுக்குக் கட்டாய வைத்திய பரிசோதனை செய்யப்படவேண்டுமென்றும், ஸ்திரீகள் சங்கங்கள் ஏற்படுத்துவதென்றும், ஒவ்வொருவரும் சிசு சம்ரக்ஷணை பிரசவ ஆஸ்பத்திரிகளைப் பார்வையிட்டுக் கல்வி சம்பந்தமான வேலை முதலியவைகளைக் கவனிக்க வேண்டுமென்றும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

### அகில இந்திய சங்கீத மகாநாடு.

ஸ்ரீ கே. சூரியநாராயணமூர்த்தி நாயுடு இம் மகாநாட்டைத் திறந்து வைத்தார். ஹிந்துஸ்தானி சங்கீதப் பிரிவுக்குப் பண்டித விஷ்ணு திகம்பர் தலைமை வகித்தார். கர்நாடக சங்கீத சம்பந்தமான பிரிவுக்கு ஸ்ரீ வி ஆர். சீனிவாச ஐயங்கார் அக்கிராசன மேற்றார். மகாநாடு நடக்கும் தினங்களில் மியூசியம் தியேட்டரிலும் காங்கிரஸ் நகரில் அமைக்கப்பட்டிருக்கும் கொட்டகையிலும் சங்கீத கச்சேரிகள் நடந்தன.

இத்துடன் சங்கீதக் கருவிகளடங்கிய கண்காட்சியொன்றும் அமைக்கப்பட்டிருந்தது. பண்டைக் காலத்தில் வழக்கத்திலிருந்த வாத்தியங்கள், தற்காலத்தில் உபயோகப்பட்டுவரும் வாத்தியங்களும் வைக்கப்பட்டிருந்தன.

மகாநாட்டில் சங்கீதத்தைப்பற்றிப் பலர் வியாசங்கள் வாசித்தனர்.

### சமுதாய சீர்திருத்த மகாநாடு.

டிசம்பர் 27௳ காலை 7-3) மணிக்கு அகில இந்திய சமுதாயச் சீர்திருத்த மகாநாடு திரு. கே. நடராஜன் தலைமையின்கீழ்க் காங்கிரஸ்பந்தலிற் கூடிற்று. டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் தனது வரவேற்புச் சபைதலைவராயிருந்தார்.

### வர்த்தகர் கைத்தொழில் மகாநாடு.

டிசம்பர் 29௳ சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் அகில இந்திய வர்த்தக கைத்தொழில் காங்கிரஸின் 5-வது வருஷக்கூட்டம் கூடியது. ஸர் இப்ராஹீம் ரஹிம்துலா தலைமை வகித்தார். ஸர் எம். வி. டி. முத்தையா செட்டியார் பிரதிநிதிகளை வரவேற்றார்.



### இயற்கை வைத்திய மகாநாடு.

டிசம்பர் 23௳ அகில இந்தியா இயற்கை வைத்திய மகாநாடு ஸ்ரீ ஆர். சி. சட்டர்ஜ்ஜி (கல்கத்தா) அவர்களின் தலைமையின்கீழ்க்கூடினது. ஸ்வாமி சுத்தானந்த பாரதி வரவேற்றார்.

### வன்னியகுல க்ஷத்திரிய மகாநாடு.

இது சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் 25-12-'27ல் கூடியது. உபசரணைக் கமிட்டி தலைவர் ஸ்ரீமான் எம். ஏ. மாணிக்வேலு நாயகர் அவர்கள் வரவேற்பு உபந்யாசம் செய்தார். திவான்பகதூர் வி. திருமலைப் பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார்.

#### தீர்மானங்களின் விவரம்.

வன்னிகுல க்ஷத்ரியரின் ஜனத்தொகைக்கு ஏற்றபடி தேச நிர்வாகத்திலும் பொதுஜன ஸ்தாபனங்களிலும் ஆதிக்கம் பெறவேண்டிய உணர்ச்சியைப் பெறுவதற்காக இராஜ்ஜிய ஸ்தாபனங்களில் கட்சிப் பிரதி கட்சி வேற்றுமையின்றிக் கலந்து உழைக்கும்படி இம்மகாநாடு வன்னிகுல க்ஷத்திரியரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

இந்தியாவுக்கு உடனே சுயராஜ்யம் வேண்டுமென்றும், மதுபானத்தை ஒழிக்கவேண்டுமென்றும், கதர் முதலிய சுதேச சாமான்களை ஆதரிக்க வேண்டுமென்றும், வீண் சண்டையிட்டுக் கோர்ட்டுச்குப் போய்ப பணத்தை விரயஞ் செய்யாமல் பஞ்சாயத்தார் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், ஜில்லாபோர்ட், தாலூக்கா போர்ட், யூனியன் போர்ட் முதலிய ஸ்தாபனங்களை வன்னியர் கைப்பற்ற முயற்சி செய்யவேண்டுமென்றும், வன்னிகுல க்ஷத்திரிய ஆண் பெண் பிள்ளைகள் ஒவ்வொருவரும் குறைந்தது ஆரம்பக் கல்வியையாவது பெற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### அகில இந்திய கத்தர் கண்காட்சி.

டிசம்பர் 24௳ மஹாத்மா காந்தி காங்கிரஸ் நகரில் ஏற்படுத்தப் பட்டிருந்த கத்தர் கண்காட்சியைத் திறந்துவைத்தார். அப்பொழுது அவர் "கத்தர் விஷயத்தில் யாதொரு அபிப்பிராய பேதமும் இல்லை. தென்னிந்தியாவில் 2000 கிராமங்களிலுள்ள 75000 ஏழைத் தாய்மார்களுக்குக் கத்தர் தற்காலம் உணவளித்து வருகிறது. கத்தரையே வாங்கி யணியுங்கள்" என்று சொன்னார்.

கத்தர் கண்காக்ஷியில் அகில இந்திய நூல் நூற்பவர் சங்கத்தின், பம்பாய், வங்காளம், தமிழ்நாடு, கர்னாடகம் முதலிய பல கிளைகளும், ஆந்திரா கத்தர் ஸ்டோர், பம்பாய் கத்தர்கடை, முதலியன ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### பார்க்கு வேடிக்கை கண்காட்சி.

டிசம்பர் 24௳ காலை 10-30மணிக்குத் தென்னிந்திய தேகாப்பியாச சங்கத்தால் நடத்தப்படும் சென்னை பார்க்கு வேடிக்கைகளையும், கண்காட்சியையும் ஸ்ரீமதி சரோஜனி நாயுடு திறந்துவைத்தார்.

## உற்சவாதி விழாக்கள்.

### சைதாப்பேட்டை ஸ்ரீ சிவஷண்முக திருப்புகழ் சபை.

நிகழும் பிரபவஹு மாசிமீ 13௳ (25-2-28) சனிவாரம் முதல் ஷை௵ ஷைமீ 25௳ (8-3-28) வரையில் முறையே விமரிசையாய் நடந்தேறிவரும் பிரம்மோற்சவத்தில் 5-ம் திருநாளாகிய 29-2-28 இரவு 10-மணிக்குமேல் மயில்வாகன சேவையும், 8-ம் திருநாளாகிய 3-3-28 பிற்பகல் 2-மணிக்குமேல் அருணகிரிநாத சுவாமிகளுக்குப் பொருள்பாலித்த ஐதீகமும், 12-ம் திருநாளாகிய 7-3-28 இரவு வேடர்பறி உற்சவமும் அதி விமரிசையாய் நடைபெறும். அவ்வமயம் பக்தகோடிகள் யாவரும் வந்து எல்லாம் வல்ல இறைவன் திருவிழாவை கண்டு அவனருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

### திருமருகல் ஸ்ரீஷண்முகானந்த சன்மார்க்க சங்கம்.

நன்னிலந் தாலூக்கா திருமருகல் ஸ்ரீ ஷண்முகாநந்த சன்மார்க்க சங்கத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழா நாளது மாதம் 29, 30 (11-2-28, 12-2-28) தினங்களில் நடைபெறும். அவ்வமயம் அறிஞர் பலர் அரும் பெரும் சொற்பொழிவு நிகழ்த்துவார்களாகையால் அன்பர்கள் யாவரும விஜயஞ்செய்து கேட்டின்புறுமாறு அன்புடன் பிரார்த்திக்கின்றோம்.

### காரை ஸ்ரீ சைவ சித்தாந்த மகா சபை.

இச்சபை செங்குந்தனடியார்களின் முயற்சியால் பிரதி சோமவாரந் தோறும் பெரிய புராணம் நாயன்மார்களின் சரித்திரம் ஸ்ரீமான் மாரியப்பசாரியார் அவர்களால் நடைபெறுகிறது.

## கருங்குழி மேலவலம்பேட்டை செங்குந்தர் சங்க தைப்பூச தர்ம கைங்கரிய விண்ணப்பம்

இப்பரதகண்டத்தில் வடதலையருவா நாட்டில் வேதகிரியெனும் கழுக்குன்றத்திற்கு நைருதி திசையின்கண் ஞானகிரியாகும் கருங்குழி மாநகரைச் சார்ந்த மேலவலம் பேட்டை தோகை வாகனர் பாலசுப்பிரமணியப் பெருமானுக்கு நிகழும் பிரபவ ஆண்டு தைத்திங்களின் இருபத்து இரண்டாம் பகல் (4-2-28) சனிக்கிழமை மாலை 2-மணிக்குமேல் அபிஷேக சோடசஉபசார நைவேத்திய தீபாராதனைகளும் முறை பிறழாது செய்வித்து அக்காலத்தில் கற்றுவல்லார்களால் பிரசங்கஞ் செய்வித்து மாலை 6-மணிக்குமேல் ஊர்வலமாய் முருகப்பெருமானை யெழுந்தருளச் செய்யச் செங்குந்தர் விருத்தி சங்கத்தாருன்னி யிருப்பதால் தாங்கள் எம்பிரானுக்குச் சீரிய தர்மம சிறிதே யெனினுமில்லை யென்னாது, இருப்பதிற் சிறிது பொருளை தந்து உற்சவத்தை நடத்திவைத்துப் பேரானந்த மடைவீரென்று பிரார்த்திக்கின்றோம்.

---

## செய்தித் திரட்டு.

---

### லண்டனில் இந்துக்கோயில்.

இங்கிலாண்டிலுள்ள லண்டன் நகரிலே ஹாம்ஸ்டெட் என்னுமிடத்திற்கருகில் ஸ்ரீராமசந்திர சுவாமிக்குப் பிரதிஷ்டைக்காக ஒரு கோயில் கட்டும் முயற்சி இருந்து வருகிறது. இதற்காக பிகானீர் சேட் ராம்கோபால் என்னுங் கனவான் 50,000 ரூபா உபகரித்திருக்கிறார்.

---

### நூதன தபாற் பெட்டி.

லீப்ஸிக் என்னும் நகரிலே நூதனமான தபால் பெட்டியொன்று செய்திருக்கின்றனர். இந்தத் தபால் பெட்டியில் போடவேண்டிய கடிதத்தை அப்பெட்டியிலுள்ள திறப்பில் போட்டுவிட்டு அதற்கு ஒட்டவேண்டிய ஸ்டாம்புக் கட்டணத்தை அருகிலுள்ள சிறு மெல்லிய துவாரத்தின் வழியே உள்ளே தள்ளினால் அக்கடிதத்திற்கு அப்பெட்டி தானக ஸ்டாம்பு ஒட்டிப் பெட்டிக்குள் தள்ளிவிடுகின்றது. இத்தகைய நூதனமான தபால் பெட்டிகள் தற்போதுதான் பலவிடங்களிலும் பரவி வருகின்றன.

---

## வினாக்கள்.

‘செங்குந்தமித்திரனீடு வாழ்க’
வென்னும் மூன்றக்ஷரங்கொண்ட
நடுவெழுத்தலங்கார விடுகவி வினா.

சீரேறு பெருமைதிகழ் செய்யநன் மொழியொன்று சேர்மரப் பெயரிலொன்று செகசால வித்தை பெயர் செப்பிடில் தற்கை பெயர் திகலறு கம்புல்லின்பெயரும்

பேரேறு நடுக்கத்தின் பெயருடன் திருவின் பேர் பேசிடில் விலங்கின பெயரும் பேணரவிதன் பேயர்பேர் சிவன் பெயருடன் பெருசத்தி நாயகாள் பேர்

ஏரேறு நீதியின் பெயரொன்று எய்திடும் வஞ்சகப் பெயரிலொன்று எழிலான வாசனைத் திரவியந்தனிலொன்று இசையாக பெயரிலொன்று

தாரேறு ஞானத்தின் பெயருடன் தனித்தனி தயங்குமூன்றெழுத்திலோர்ந்து தருநடுவெழுத்தினாற் செங்குந்தமித்திரன்றன் நீடு வாழ்க வருமே.

பி. க. கணேச முதலியார்,
மணிமந்திர சோதிட உபாத்தியாயர், செங்குந்தர் வீதி, நல்லூர், வடக்கு யாழ்ப்பாணம், இலங்கை.

---

## ஓர் ஐயவினா.

### திருநாவுக்கரசு சுவாமிகளருளிச்செய்த திருவாரூர் திருத்தாண்டகம்.

புகைவெட்டும்போக்கெட்டும் புலன்களெட்டும்பூதங்
களைவெட்டும் பொழில்களெட்டும்
கலைவெட்டெ ாப்பெட்டென காட்சியெட்டுங்
கழர்சேவடியடைந்தார் களைகணெட்டு
நகையெட்டு நாளெட்டு நன்மையெட்டு
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்களெட்டுந்
திசையெட்டுந் தெரிப்பதற்கு முன்னேபின்னே
திருவாரூர் கோயிலாகக்கொண்ட நாளே.

இப்பாசுரத்திற்கு அறிவுடையோர் எவரேனும் பொருளெழுதி விடுக்கவேண்டுகின்றேன்.

த. தணிகாசல முதலியார்,
மூன்ளிப்பட்டு.



## பாமாலைப்பகுதி

### ‘செங்குந்த மித்திரன் முதலாண்டு’ நிறைவு வாழ்த்துப் பாக்கள்.

1. சீரிசைந்த செங்குந்த மித்திரனுஞ் செல்வமக்
கேரிசைந்த வின்பம் இயைவித்தான்—பேரியை
செங்குந்த மக்கள் சிறப்பெய்தி வாழ்கதிசெ [ந்த
றெங்குந்த னின்னிசையை யீந்து.

2. ஓராண்டி யைந்தானு லொண்டைச் செங்குந்தனை [னும்
பேராண்டுப்பெற்றவிளம் பெம்மானுஞ்—சீராண்டு
செல்வமிகச் செங்குந்த மக்கள் களிகூற
கல்விஞ னின்பம் நயந்து.

3. நாவ தாண்டி லியல்கின்ற நம்முடைய
சீராளன் செங்குந்த மித்திரனைப—பாரார்ந்த
செங்குந்தச் செல்வர்களே சேர்ந்து மகிழ்வபீர்
பொங்கும் கதிரணிகள் பூண்டு.

4. நங்குழவி நம்மை மகிழ்விக்க நாமவற்கு
இங்கியற்ற வேண்டுவன இன்றியே—உங்களின்
காலத்தை வீணாற் கழிக்காதீ லந்தவற்குக்
கோலத்தை நலையறநீர் கொண்டு

5. செங்குந்தன் செம்மனத்தான் செம்மையுறுஞ் சிரு [யர்கோன்
செங்கோலை ஒச்சிச் சிறப்படைய—செங்குந்த
மக்களே நீவிர் மனமகிழ்ந்து போற்றுவீர்
திக்குளே வீறத் திகழ்ந்து.

6. ஒருமை யிரும்புகழான் மும்மையினும் மக்கட்
கருளுற நான்களிக்கும் அண்ணல்—பெருமைந்து
கொணட நல்லாறளித்துக் காவாய் நனிவாழ்க
அண்டர்கோன தன்னருளா லார்ந்து.

7. ஆறுமுகன் ஐம்முகவன மைந்தன நானமுகனை
வீறுசிறை யிட்ட வியன் புகழோன்—பேறுயாந்த
மூதேவர் மூர்த்தி யிருபத்தைத யொன்றுனத் [ந்தாக
கொந்தே யளிப்பனிவற் குண்டு.

ஐ. ராஜு முதலியார், தமிழ்ப் பண்டிதர்,
பூவிருந்தவல்லி.

---

௬-வது பாட்டு :—ஒருமை=ஒப்பின்மை, இரும்புகழ்=பெரியபுகழ், மும்மை=இம்மை, மறுமை, உம்மை, நான்கு=அறம், புகழ், இன்பம், வீடு, பெருமைந்து=மயிக்கணிமை. நல்லாறு=நல்வழி.

1. நீரூர்ந்த வையமிசை நீள்கொடிஞ்சி மாடமிசைச்
சீரூர்ந்த சென்னைநகர் செங்குந்த—பேரூர்ந்த
சங்கத்தின் சார்பாகச் சந்திவேல் தன்னருளால்
பொங்கும் கடலெனவே போந்து.

2. போந்தவொரு மித்திரனும் புண்ணியற்சிந்தையுப
சாந்தமுறும் நம்புகழைச் சாற்றினன்—சாந்தமுடன்
ஆறிரண்டு திங்கடொறும் ஆழ்கடனீர் சூரனுடல்
வேறிரண் டாக்கிய வேல்.

3. கூர்வேலன் தன்னருளாக் குந்தர்பால்மித்திரனும்
சீர்பெற்றுச் சிந்தை களிப்புறவே—நேர்மையுடன்
சந்தாத் தொகையைத் தசமிரண்டிற் றந்தேனும்
தந்தா தரிப்போம் தனம்.

4. நங்குறையைத் தீர்க்க நடனஞ்செய் நாயகனும்
பொங்குங் குகனுமே பூதலத்தில்—பங்கமிலா
கூர்கொண்டார் கீர்த்தி குவலயத்தி லெஞ்ஞான்
கார்போல வாழ்க களித்து. [றும்

5. பண்டைப் புகழனைத்தும் பட்சமுடன் கூறுகின்ற
தண்டாண்மை கொண்ட தனிக்குழவி—கொண் [டலைப்போல்
ஆண்டாண்டு தோறும் அறுமுகவ னருளைப்
பூண்டிண்டு வாழ்கவே பூத்து.

6. செங்குந்த மித்திரனுஞ் சீர்பத்தி ராதிபரும்
பாங்காகப் பெற்றேரும பட்சமுடன்—தங்கமிகு
கட்டுரைகள் தந்தவரும் கற்றவரும் வாழிசிதம்
நட்டனருளாலே நயந்து.

மு. சண்முகமுதலியார்,
தமிழ்ப் புலவர்,
கருக்குப்பேட்டை, காஞ்சிபுரம்.

## செங்குந்தர் சிறப்புந்தி

காப்பு.

செங்குந்தர் போற்றுஞ் சிறப்புந் தியைப்பாட
எங்குந்தங் கும் பொருளை எந்து.

### கலித்தாழிசை உந்திகள்.

செங்குந்தர்தாமே சிறப்புட் சிறப்பென்றந்
தங்குந் தமிழ்பாடி யுந்தீபற
தலைவன் கணத்த ரென் றுந்தீபற. (௧)

பொங்குந் தலைவற் பொறியிற்பொலிதரு
நங்கந்தற் றோழரென் றுந்தீபற
நவசத்தி சேயரென் றுந்தீபற. (௨)

கந்தன் அவுணக் கடலைக் கடியுநாட்
குந்தம் படைத்தவா றுந்தீபற
குமரற் கிளையாரென் றுந்தீபற. (௩)

முந்தை மகத்தை முனிந்த கடாவைக்கொண்
டெந்தைக் களித்தவா றுந்தீபற
எமனை வென் றோரென் றுந்தீபற. (௪)

சத்த விடங்கவி மானந் தாபித்தன
உத்தம சிலரென் றுந்தீபற
உலகின் முதலியார்க் குந்தீபற. (௫)

கைத்தாளம் பற்றிமுன் காளியைவென்றுபல்
சித்தாடு முத்தரென் றுந்தீபற
செங்குந்த மன்னருக் குந்தீபற. (௬)

வல்லானைத் துற மனைவி வணங்கவச்
சொல்லா தளித்தவா றுந்தீபற
துவாதச வீரரென் றுந்தீபற. (௭)

எல்லாக கவியின் எழுபதிற் காய்கீர்த்தி
கொல்லாமகற் பெற்றோர்க்குந் தீபற
கூத்தற் களித்தவா றுந்தீபற. (௮)

கச்சிப்பதி யினங்காழி முனிவாக்குண்
மெச்ச வணஞ்செய் தோர்க் குந்தீபற
விபன்புலவோரென் றே வுந்தீபற. (௯)

அச்சமில் தொண்டைமுபத்து மூவரோ
டெச்சம் பெற்றோரென்றே விந்தீபற
உயர் நவவீரரென் று உந்தீபற. (௧0)

*உந்திபறத்தல்-மகளிர் விளையாட்டினொன்று

## செங்குந்த மித்திரன் சீர்விளையாடல்

அன்னைபிதா குருதெய்வ மாகுமரன் விளையாடல்
அறுபான் நான்கும்
முன்னர் மதுராபுரியி னடித்திடல்போல்
முருகன் மகிழ் முனைச் செங்குந்தர்
சென்னை முதல் மித்திரனத்* தேசமெலாம்
நடிப்பதற்குச் சிந்தை கொண்டார்
நன்னயமாஞ் சஞ்சிகையாய் அவர்மகிமை
யினிதறிய நாடுவீரே. (௧)

நாடிடுவீர் சைவநலங் கைத்தொழிலு
முத்தமிழும் ஞானவின்பம்
தேடிடுவீர் செங்குந்தமித்திரனுஞ்சஞ்சிகையைத்
தினமும் வாழ்த்திப்
பாடிடுவீர்நற்பயனைப் பருகிடுவீர் அறிந்தபின்பு
பரிவாகக் கூட்டம்
கூடிடுவீர் சவை அமைப்பீர் நலம் உரைப்பீர்
கோரிடல் நங்குலத்தொண்டாமே (௨)

தொண்டுசிவத் தொண்டுகுலத் தொண்டுபுவித்
செங்குந்தத் தொண்டு [தொண்டுஞ்
விண்டதளித் தொண்டு மற்றதொண்டின் வளம்
மேன்மைபெற மிக்கார் சொற்றூர்
அண்டர்தமைப் பழிசாரா தாழிவினைக்
கடைந்த விதமறிவீராற்றல
மண்டலத்தீர் செய்கேட்ட வகையருள்வீர்
மகிழ்வீர் எம்மன்னையாமால். (௩)

*செங்குந்த மித்திரனச் சென்னைமுதல்
என மொழி மாற்றிக்கொள்க.

### வாழ்த்துச் சந்தப்பா.

தன்னந்தன—தன்னத்தன—தன்னந்தன—தான.

தென்னிந்தியா சென்னைப்பதி செங்குந்தரும் வாழ்க
மன்னும்புகழ் தன்னைப்புகல் வன்சங்கமும் வாழ்க
நன்னுங்குற வன்னைக்குறு நங்கந்தனும் வாழ்க
என்னுங்கலை சொன்னற்சவை எங்குந்தமிழ் வாழ்க.

குமாரகுரு அடிமை.



## மார்கழி மாதத்திய விடுகவி வினவுக்கு விடைகள்

1. பாரிலம்மையப்பனூர் திருச்செங்கோடு
பாவையெனுங் கடலில்வளர் சந்துசங்கு
சீரிலகுவள்ளலக் குரன்புட்சகுந்தம்
சிறவர்பேர்மதலை தமிழ்ப்பாஷையின்பேர்
கூரில்மரமாத்தி விலங்கினங்கடன்னிற்
குதிரையவய த்திலொன் றுகரமதாகும்
சேர்மலைப்பேர்குன்று நடுவெழுத்தைக்கூட்டிற்
செங்குந்த மித்திரனைச் செப்பலாமே.

திருச்செங்கோடுடன் சங்கக்குரன் சகுந்தம்
திகழ்வறுமதலையுந் தமிழும்
அருச்சனைபுரியுமாத்தியுங்குதிரை
யவயமதாகியகரமும்
பொருப்பெனுங்குன்றிப்பெயரிவைபத்தின்
புணைநடுவெழுத்தினால் விளங்கும்
ஒருத்தனுகிய செங்குந்த மித்திரனே
உலகெலாம் விளங்கிட உதித்தோன்.

சோதிடம் ப. சிதம்பரநாதமுதலியார், ஐவர்பாடி.

| | | |
|---|---|---|
| திருச் | செ | ங்கோடு |
| ச | ங் | கு |
| அக் | த | ரன் |
| சகு | ந் | தம் |
| ம | த | லை |
| த | மி | ழ் |
| ஆ | த் | தி |
| கு | தி | ரை |
| க | ர | ம் |
| கு | ன் | று |

2. பாரிலம்மையப்பனூர் திருச்செங்கோடு
பரவைவளர்செந்து வேதிமிங்கிலப்பேர்
சீருடையவள்ளலக்குரன் புள்ஆந்தை
சிறூர்மதலைபாஷைதமிழ்மரமேயத்தி
வீரமிகு விலங்குமது குதிரையாகும்
மேவுமவயவஞ்சிரமேமலையேகுன்றம்
சேருமிச்சொன்னடுவே செங்குந்தமித்திரன்
செகம்விளக்குமினக்கதிராய் ஐயாற்றீரே.

கு. பெ. கந்தசாமி முதலியார், உன்னியூர்.

| | | |
|---|---|---|
| திருச் | செ | ங்கோடு |
| திமி | ங் | கிலம் |
| அக் | த | ரன் |
| ஆ | ந் | தை |
| ம | த | லை |
| த | மி | ழ் |
| அ | த் | தி |
| கு | தி | ரை |
| சி | ர | ம் |
| கு | ன் | று |

3. கருதுமடியவரிடர்தீர் திருச்செங்கோடு
கடியவிடங்காக்குரனேடாந்தை நன்மை
தருதுணையாய்த்தோன் றுசதர் தமிழ்மெல்லத்தி
சாரிவருகுதிரைவிரல்குன்றென்றோதி
வருதுகளில்லாமொழியினிடையெழுத்தால்
வரமருள் வேற்காமுருகன்றனைவர்க்கெல்லா
மொருதுணையாஞ் செங்குந்தமித்திரன்பே
ருளத்து மிகக்களித்தேவருமுரைக்கலாமே.
தமிழ்ப்புலவர் முள்ளிப்பட்டு ச. பூபால முதலியார்.

| | | |
|---|---|---|
| திருச் | செ | ங்கோடு |
| இட | ங் | கர் |
| அக் | த | ரன் |
| ஆ | ந் | தை |
| ச | த | ர் |
| த | மி | ழ் |
| அ | த் | தி |
| கு | தி | ரை |
| வி | ர | ல் |
| கு | ன் | று |

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

ஸ்ரீலஸ்ரீ கா. ச. ஸ்வாமிநாத தேசிகரால் கணிக்கப்பட்டது.

பிரபவஹூ தைமீ, மாசிமீ (1928ஹூ பிப்ரவரிமீ)

உத்தராயணம், ஹேமந்தருது, கலி-5029, பசலி-1338, சாலி-1849, பிரபவ 1.

| பிப்ரவரி | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷ நாட்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 19 | புத | தச, 3-41, உப 55-40 | ரோ 25-7 | சி, 25-7 ம | பீஷ்ம ஏகாதசி |
| 2 | 20 | வியா | துவா, 59-28 | மிரு 22-37 | ம, 22-37 சி | கண்ணப்ப நாயனர் |
| 3 | 21 | வெ | திர, 52-7 | ஆரு 20-36 | சி, 20-36 சி | அரிவாட்டாயர் |
| 4 | 22 | சனி | சசி, 49-27 | புன 19-9 | சி, 60 | கோடியடுக்க |
| 5 | 23 | ஞா | ○ 47-42 | பூச 18-34 | சி, 60 | தைப்பூசம், மதுரை தெப்பம் |
| 6 | 24 | திங் | பிர, 47-2 | ஆயி 18-58 | சி, 19-55, ம | சுவக்கிர சாந்தி செய்ய |
| 7 | 25 | செவ் | துவி, 47-54 | மக 20-28 | சி, 60 | திருமழிசையாழ்வார் |
| 8 | 26 | புத | திரி, 50-8 | பூர 23-25 | அ, 60 | மாடு வாங்க |
| 9 | 27 | வியா | சது, 53-52 | உத் 27-50 | ம, 27-50 சி | சண்டேஸ்வரர் |
| 10 | 28 | வெ | பஞ், 58-58 | அஸ் 33-42 | அ, 33-42 சி | சுபதினம் மகா லக்கினம் |
| 11 | 29 | சனி | ஷஷ்., 60-0 | சித் 40-38 | ம, 40-45 அ | ஆபரணம் பூண |
| 12 | 30 | ஞா | ஷஷ்., 5-2 | சுவா 48-13 | சி, 48-13 ம | கிரகப்பிரவேசம் |
| 13 | 1 | திங் | ஸப், 11-38 | விசா 55-47 | ம, 56-5 சி | தானியம் செலவிட. |
| 14 | 2 | செவ் | அஷ், 18-13 | அனு 60-3 | சி, 50 | சீதா ஜனனம் |
| 15 | 3 | புத | நவ, 28-46 | அனு 2-50 | சி, 60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 16 | 4 | வியா | தச, 28-2 | கே 8-52 | பி, 8-52 சி | குளம், கிணறு வெட்ட |
| 17 | 5 | வெ | ஏகா, 30-27 | மூ 13-6 | அ, 13-6 பி | மாடு சொன்ன |
| 18 | 6 | சனி | துவா, 30-55 | பூரா 15-33 | சி, 69 | காரியர் |
| 19 | 7 | ஞா | திர, 29-28 | உத் 16-7 | அ, 60 | மஹா சிவராத்திரி |
| 20 | 8 | திங் | சசி, 26-14 | திரு 14-50 | அ, 14-50 ம | போதாயன அமாவாசை |
| 21 | 9 | செவ் | ●, 21-24 | அவி 12-1 | சி, 12-23 ம | கோட். செங்கட் சோழர் |
| 22 | 10 | புத | பிர, 15-41 | சத 8-16 | சி, 8-16 அ | |
| 23 | 11 | வியா | துவி, 9-10 | பூ 3-40<br>உப, 55-4 | சி, 60 | |
| 24 | 12 | வெ | திரி, 2-25<br>உப, 53-17 | சே 53-52 | அ, 60 | |
| 25 | 13 | சனி | பஞ், 49-18 | அசு 49-17 | சி, 60 | |
| 26 | 14 | ஞா | ஷஷ்., 43-25 | பர 45-10 | சி, 60 | |
| 27 | 15 | திங் | ஸப், 38-14 | *கி 41-46 | ம, 41-46 அ | கிருத்திகை |
| 28 | 16 | செவ் | அஷ், 33-45 | ரோ 39-11 | அ, 39-11 சி | வாகன மேற |
| 29 | 17 | புத | நவ, 30-12 | மிரு 37-22 | சி, 60 | திருக்கச்சியூர் ரிஷபவாகனம் |

| | | | |
|---|---|---|---|
| குரு | | ராகு | |
| குரு<br>புத | மாசிமீ 4உ<br>மகர. சுக்.<br>6உ ,,செவ் | | |
| செவ்<br>சுக் | சனி<br>கேது | | |



# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - ௨ | பிரபவஹூ - மாசிமீ | பகுதி - ௨ |
|---|---|---|

முருகன் துணை.

இரவும் பகலுந் துதிசெய் திருதாள்
பரவும் பரிசே பரிசின் றருள்வாய்
கரவுண் டெழுசூர் களையக் கதிர்போல்
விரவுஞ் சுடர்வேல் விடுசே வகனே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### செங்குந்த வாலிபரியக்கம்

நம்மவரிடை வாலிபருள் தோன்றிவரும் உணர்ச்சியையும் கிளர்ச்சியையும் குறித்து முன்னொரு சமயம் எழுதியுள்ளோம். அப்பொழுது எதிர் பார்த்தபடியேஇப்பொழுதுஇச் செங்குந்த வாலிபர் இயக்கமே நமது குல முன்னேற்றத்திற்கு அஸ்திவாரம் போட்டுவருகின்றதைக் கவனித்து அதிகமும் மகிழ்கின்றோம். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள வீரவநல்லூர் செங்குந்தர் வாலிபர் சங்கம் வெகு ஒழுங்காகக் காலந் தவறாது கூடி, அங்குள்ள நம்மவர்களிடையே ஒரு புத்துணர்ச்சியையும் ஒற்றுமையையும் குதூகலத்தையும்உண்டாக்கிக்கொண்டு வருகின்றது. மதுரைச் செங்குந்த முதலிமார் வாலிபர் சங்கம் நூதனமாகத் தோன்றிக் கட்சிப் பிளவுகளை ஒருவாறு விலக்கித் தன் ஆதரவில் ஓரிராப்பள்ளியும் ஏற்படுத்திக் குலத் தொண்டியற்றி வருகின்றது. காஞ்சீபுரத்துச் செங்குந்தர் வாலிபர் சங்கத்தின் தாளாண்மையால் எண்ணிறந்த நலன்கள் காஞ்சியிலுள்ள நம்மவர்க்குச் சித்தித்திருக்கின்றனவென்பதைப் பத்திரிகைகளில் அவ்வப்போது வரும் விருத்தாந்தங்களிலிருந்து நம்மவர் உணர்ந்து மகிழ்கின்றனர். தைப்பூசத்தன்று காஞ்சியில் இச் சங்கத்தின் ஆதரவில் ஒரு இராப்பள்ளி ஏற்படுத்தப்பட்டு வெகு விமரிசையாக உழைத்துப் பலர்க்கு உதவி வருகின்றது. திருமயிலாப்பூர் செங்குந்தர் வாலிபர் சங்கமும் அதே தினத்தன்று ஒரு வாசக சாலையைத் திறந்து வைத்தது. சென்னைச் செங்குந்தர் வாலிபர் சங்கம் வாரவாரம் கூட்டங்கள் போட்டு வெகு உற்சாகத்துடன் உழைத்து வருவதோடு சோளங்கிபுரம், திருவோத்தூர் முதலிய இடங்களுக்கும் அவற்றின் சூழல்களுக்கும் கூடிய சீக்கிரம் வேடிக்கையார்த்தஞ் செல்வதுபோற் (excursion) சென்று தம்மாலியன்ற பிரசாரத்தையும் அதே சமயம் செய்து வரவும் தீர்மானித்திருக்கின்றது. இவை தவிர இன்னும் பல இடங்களிலும் நம்மவர் வாலிபர் சங்கங்கள் ஏற்பட்டு உழைத்து வருவதோடு, வாரவாரம் புதிதாகவும் பல சங்கங்கள் ஸ்தாபனஞ் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாலிபர் சங்கங்கள் கேவலம் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் வயது முதிராத சிறுவர்களையும் கொண்டவையல்ல. இவற்றின் அங்கத்தினராக இருப்பதிற்கு மேற்பட்டு காற்பதிற்கு உட்பட்ட வயதுள்ளவர்களே பெருந்தொகையினராக உள்ளனர். ஊக்கமும் வாலிப உணர்ச்சியுமுள்ள எல்லாரும் இவற்றின் அங்கத்தினராக இருக்கின்றனர். இவர்கள் தகுந்த அறிவு முதிர்ச்சியும், ஊக்கமும், சுறுசுறுப்பும், புத்தி நுட்பமும், ஆற்றலும், ஆண்மையும் நிறைந்தவர்களென்பது தத்தம் சங்கங்கள் தைரியமாகவும் சுறுசுறுப்பாகவும் புத்தி சாலித்தனமாகவும் வேலை செய்துகொண்டு வருவதினின்றுமே விளங்கும். இவர்கள் ஊக்கங்குன்றாது தாமேற்கொண்ட தொண்டை முட்டின்றியற்றிவர எல்லாம் வல்ல இறைவன் அருள்சுரப்பாராக. இவர்கள் ஊக்கத்தினால் நம் குலம் துரிதமாக முன்னேற்றமடையும் என்பதிற் சந்தேகமில்லை.

## இலவச இராப் பள்ளிக்கூடங்களின் அவசியம்.

'தாலூகா போர்ட்டார் ஆதாவில் இலவசமான ஆரம்பக் கல்வியைக்கற்பிக்க ஆங்காங்கே பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டுவரும் இக்காலத்தில் நம் வாலிபர்கள் இம்முயற்சியில் ஏன் தலையிட வேண்டும்?' எனச் சிலர் கேட்கலாம். அவர்களுக்குச் சில காரணங்களை யெடுத்துச் சொல்ல விரும்புகின்றோம். முதலாவது தாலூகா போர்ட் பள்ளிக்கூடங்கள் நம்மவர் வதியும் சில கிராமங்களில்மட்டும் இருக்கின்றனவே ஒழிய எல்லாக் கிராமங்களிலும் இல்லை. இரண்டாவது, அடுத்த கிராமங்களில் போர்ட் பள்ளிக்கூடங்கள் இருந்தாலும், சிறு பிள்ளைகளைப் பெற்றோர் நெடுந்தூரம் அனுப்பிவைக்கப் பின் வாங்குகின்றனர். மூன்றாவது, உள்ளூரிலேயே இரா திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்தாலும் அங்கு இலவசமாகக் கல்விகற்றுக் கொடுக்கப் பெறுததால், ஏழைச் செங்குந்தர் பிள்ளைகள் கல்விகற்க முற்படுவதில்லை. நான்காவது, ஒரு கிராமத்தில் போர்ட்டு பள்ளிக்கூடமிருந்தாலும், அது நம்மவர்க்குச் சவுகரியமான வேளைகளில் திறந்து வைக்கப்படாததால், பிள்ளைகளின் உதவியைக்கொண்டு வருவாய் தேடவோ அல்லது தமது தொழிலுக்கு அவர்கள் ஒத்தாசை நாடவோ எதிர் பார்க்கும் பரம ஏழைகள் தம் சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்ப இயலாது அவர்களை இளம்பிராயத்திலிருந்தே அந்தகாரத்தில் அமிழ்த்தி வைத்து ஆயுள்பரியந்தம் உழைத்து அல்லற்பட விடுகின்றனர். ஐந்தாவது, பிள்ளைகளுக்கே யன்றி, நம்மவர்களுள் வயது முதிர்ந்தவர்களுள்ளும் அநேகருக்குக் கல்வி வாசனையையும் விஷய ஞானத்தையும் உண்டாக்கவேண்டியிருப்பதால், பிழைப்பிற்கு உழைப்பதற்குத் தகுதியான பகற்பொழுதிலல்லாமல் இராப்பொழுதில் நடைபெறும் பிரத்தியேகமான பள்ளிக் கூடங்கள் ஏற்படல் அன்னவர்க்கு அவசியமாகின்றது. ஆறாவது, நம்மினத்தைச் சேர்ந்தவர்களே உபாத்தியாயராக அமர்ந்து போதிக்கும் பள்ளிக்கூடங்களே நம்மவர் முன்னேற்றத்துக்கு அவசியம் வேண்டுவனவாகும்.

இவ்விஷயங்களை யுன்னுவோர்க்கு நம் வாலிபர் சங்கங்கள் ஆங்காங்கே இராப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நம்மவருள் ஏழைகளாக இருப்பவரின் மக்கட்கும், கல்வியுணர்ச்சி யில்லாத மேழர்களுக்கும் செல்வத்துட் சீரிய செல்வமாம் கல்விச் செல்வத்தை அளிக்கும் பொருட்டுச், சுயநலத்தை மறந்து பொது நலத்தைக் கருதிச்செய்துவரும் தொண்டுகளின் அவசியமும் பயனும் விளங்காமற்போகா. இப்பள்ளிக்கூடங்களில் யாதொரு பொருள் வருவாயையும் எதிர் பார்க்காது, தருமசிந்தையுடன், நம்மவர் கல்வியுணர்ச்சி பெற்றால் போதும் என்னும் ஆர்வத்தோடு உழைத்துவரும் ஆற்றலும் அறிவுமிக்க தொண்டர்கள் உழைப்பு நற்பலன் விளைவிக்குமாக.

'இச்சங்கங்கள் தாம் ஏற்பட்டு உழைக்கின்றனவே, நாம் இனி என்ன செய்யக் கிடக்கின்றது' என்று சிலர் வினவலாம். இதற்குப் பதிலாக நாம் 'முயற்சி எத்தனை வகையில் செய்தாலும் வீணாகாது' என்றே சொல்லுவோம். முயற்சி திருவினையாக்கும்; அஃதின்மை இன்மை புகுத்திவிடுமல்லவா? நமது குலத்திற்றோன்றிக் குலத்தொண்டியற்ற முன் வந்துள்ளவர்கள் இன்னும் பல வேலைகள் செய்யவேண்டியிருக்கிறது (அவற்றை மற்றொரு சமயம் விவரிப்போம்.) அவற்றைச்செவ்வனே செய்ய அவர்களுக்கு அதிக அவகாசம் வேண்டும். ஆகவே இத்தகைய அவகாசத்தை அவர்கள் அடைவதற்கு அவர்களை இத்தொண்டினின்றும் சீக்கிரம் விடுவிக்கவேண்டும்.

## ஸ்தல ஸ்தாபனங்களில் நம்மவர் அங்கத்தினரா தல் வேண்டும்.

இவ்விழிதலை எவ்வாறு இயலும்? இலவச போர்ட்டு பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களில் அவற்றை ஏற்படுத்த முயற்சி செய்வதாலும், இலவச பகற்பள்ளிகள் இருக்குமிடங்களிலும் இலவச இராப்பள்ளிகள் ஏற்படுவதற்கு வழிதேடுவதாலும், அப்பள்ளிகளில் நம்மினத்து உபாத்தியாயர்களை வைத்துப்போதிக்க ஏற்பாடு செய்வதாலுமே இயலும். இதற்கு நம்மவர்கள் அநேகர் பஞ்சாயத்துக்களின் அங்கத்தினராகவும் யூனியன் போர்ட்டு அங்கத்தினராகவும் இருப்பதோடு, முனிசிபாலிடிகளிலும் தாலூகா போர்ட்டுகளிலும் ஜில்லா போர்ட்டுகளிலும் அங்கத்தினராக, ஒன்றிருவரோடு நில்லாது, பெருந்திரளாகப்புக முயலவேண்டும். அப்படிப் புக முயலுஞ் செங்குந்தர் ஒவ்வொருவருக்கும் வோட்டர்களாக உள்ள நம்மவர் பெரிதும் ஒத்தாசை செய்து அவர்களைத் தேர்தலில் வெற்றியடையும்படிச் செய்யக் கங்கணங் கட்டிக்கொள்ள வேண்டும். தேர்தலில் அங்கத்தினராக வருவதே மிகவும் சிலாக்கியமான முறையாம். நாமினேஷனில் வருவதற்குப் பலரை நாடிக் கெஞ்சவேண்டும். தேர்தலிலேயே நம்மவர் வெற்றியடைந்து விடுவதற்கு வசதியுள்ள பிர்க்காக்களிலோ வார்டுகளிலோ நம்மவர்களையே நிறுத்தி, நம்மவருள் மிகவும் கேவலமான பிளவுகளை உண்டாக்கும் கட்சி பேதங்களையும் மனஸ்தாபங்களையும் களைந்து, நிற்போர் எந்த இராஜீய கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் வித்தியாசம் பாராட்டாது, அவர் நமது முன்னேற்றத்திற்கான (இலவச பகற் பள்ளிக்கூடங்களையும் இராப்பள்ளிக்கூடங்களையும் ஸ்தல ஸ்தாபனங்களின் ஆதரவில் ஸ்தாபித்து, அவற்றில் செங்குந்த உபாத்தியாயர்களை அமர்த்தல் முதலிய) விஷயங்களைக் கண்ணுங் கருத்துமாகப் பார்த்துக் கொள்ளுவதாக வாக்குறுதி செய்து, அவ்வண்ணஞ் செய்யவல்ல ஆற்றலும் ஆர்வமும் உடையவரானல், ஏக மனதாக நம் வோட்டர்களெல்லோரும் அவர்க்கே வோட்டு கொடுத்து அவர் அவாவும் ஸ்தானத்தை யடைவதில் சிறிதும் முயற்சி குன்றாது ஒத்தாசை செய்யவேண்டும். அப்படி அவ்வபேக்ஷகருக்கு ஒத்தாசை செய்தல் நம் குலத்திற்குச் செய்த ஒத்தாசையாகும்.

எலக்ஷனில் நம்மவர் வெற்றிபெற்று வர முடியாத இடங்களில், சர்க்கார் நாமினேஷனில் நம்மினத்துப் பிரதிநிதிகளைக் கொண்டுவர நமது தலைச்சங்கத்தின் மூலம் முயற்சிக்கவேண்டும். இது சம்பந்தமான சில பாரங்களைக் கிளைச்சங்கங்கள் நிரப்பியனுப்புவதற்குத் தலைச்சங்கத்தினிடமிருந்து பெற்றிருக்கின்றன. அவற்றைச் சீக்கிரம் நிரப்பியனுப்புமாறு வேண்டுகின்றோம். எலக்ஷன்கள் வாயிலாகவும் சர்க்கார் நாமினேஷன் வாயிலாகவும் நம் பிரதிநிதிகள் பலர் ஸ்தல ஸ்தாபனங்களில் அமர்ந்து நம்மினத்தவர் முன்னேற்றத்திற் குரிய தொண்டுகளை இயற்றுவதற்கு வழிதேடுவது நம்மவர் இனி மேற்கொண்டியற்ற வேண்டிய கடமைகளுள் முக்கியமான தொன்றாகும்.

## எலக்ஷன் சம்பந்தமாகச் சில எச்சரிக்கைகள்.

தற்போதும் நெருக்கத்திலும் ஸ்தல ஸ்தாபனங்களுக்குத் தேர்தல்கள் நடந்துகொண்டு வருகின்றன. அவை சம்பந்தமாக நம்மவர் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன:—

(1) அந்தந்த இடங்களிலுள்ள கட்சிப்பிரதி கட்சிகளை ஒன்றுபடுத்தி, அவற்றால் இதுவரைக்கும் நமது குலத்துக்கு ஏற்பட்டுள்ள பலஹீனத்தோடு இனியும் அநர்த்தங்கள் நேராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

(2) ஸ்தானங்களுக்கு அபேக்ஷகராக நிற்கும் செங்குந்த கனவான்களிடையே நமது குல முன்னேற்றத்திற்கு ஊனமாகும் அநாவசியமான போட்டிகளும் மனஸ்தாபனங்களும் நேராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

(3) இராஜ்ய கட்சிகளுக்குள்ள வித்தியாசங்கள் நம்மவரிடையே அநாவசிய மென்பதை யுணர்ந்து, குல முன்னேற்றத்திற்குரிய தொண்டுகளை இயற்றுதல் வரைக்கும், நமது குல அபேக்ஷகரிடையே ஒற்றுமையான அபிப்பிராயங்கள் உதிக்கச் செய்யவேண்டும்.

(4) நம் குல அபேக்ஷகர்கள் நமது ஓட்டுகளை நாடுவரேல், அவர்கள் எந்த இராஜீய கட்சியினராயிருந்தாலும், நமது குலத்தை முன்னேற்றுவதில் முயற்சி தளரமாட்டார் என்னும் உறுதி ஏற்படுமாயின், அவர்க்கே நம் ஓட்டுகளைப் போடவேண்டும்.

(5) ஏதாவது ஒரு இடத்தில், நம்மவர் வேற்று இனத்தார் எவர்க்காயினும் தேர்தலில் வோட் கொடுக்க நேருமாயின், எவர் அக்கம் பக்கத்திலுள்ள நம்மவர் முன்னேற்றத்திற்கு உண்மையாக உழைக்கக் கூடியவரோ அவர்க்கே, அவரிடமிருந்து அதற்கு உறுதி வாங்கிக் கொண்டு, ஓட்டு கொடுக்கவேண்டும்.

ம . ம் எலக்ஷன் விஷயமாக நம்மவர் கவனிக்கற்றலோடிய விஷயங்கள் இன்னுஞ் சில உண்டு :—

(1) தேர்தல் சமயங்களில் சாதிச் சண்டைகளேயோ கட்சி சண்டைகளேயோ கிளப்பிவிட்டு இதர வகுப்பாரையும் கட்சிகளையும் தூஷித்தல் செய்யாமலும், கலகங்களில் தலையிடாமலும், நம்மவர் வெகு அமைதியாகவும் ஒழுங்கான முறையிலும் முயற்சியைத் தளரவிடாது வேலை செய்யவேண்டும்.

(2) ஓட்டுக்காகப் பணங்கொடுத்தல் அல்லது பெறுதல் என்னும் இழிவான செய்கை எங்காவது தோன்றுமாயின் அதை உடனே கண்டித்து நம்மவர் கண்ணியத்தையும் சுயமதிப்பையும் நிலைநாட்டவேண்டும்.

இவ்விஷயங்களையும் இன்னும் இவைபோன்ற பலவற்றையும் கவனித்து ஆங்காங்கேயுள்ள நமது கிளைச் சங்கங்கள் பெரிதும் ஊக்கமெடுத்து உழைக்குமென்றே நம்புகின்றோம்.

சென்ற சில வாரங்களுள், பல ஜில்லாக்களிலும், செங்குந்தர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைகளாக வேலை செய்யத் தொடங்குவதைக் கவனிக்க நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்திக்குமென்றே நம்புகின்றோம்.*

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.எ., எல்.டி.,
பத்திரிகாசிரியர்.

* இச் சங்கங்களின் நடவடிக்கைகள 'செங்குந்தர் கிளர்ச்சி' என்னும் பகுதியில் விரிவாகப் பிரசுரிக்கப் பெற்றிருக்கின்றன.

## ஆராய்ச்சிப் பகுதி

### யாழ்ப்பாணமும் கைக்கோளரும்.

### இலங்கைக் காவேட்டி செங்குந்த குல சங்கத்தார் ஆராய்ச்சியின் முடிபுகள்.

காலந்தவறுத காவிரியாற்றின் பெருக்கத்தினுல் நெல்விளைவை மிகுதியாகத் தந்து இகபோகத்தையும், தரிசிக்க முத்திதரும் சிதம்பரம், தொன்மை மிக்க திருவாரூர் முதலிய பலபுண்ணிய க்ஷேத்திரங்களையுடையதால் பரபோகத்தையும் ஒருங்கே தந்துதவுகிறது என்னும் பொருட்பட 'சோழவளநாடு சோறுடைத்து'* என ஆன்றோரால் புகழ்ந்துரைக்கப் பெற்ற சோழநாட்டை அரசாண்டு வந்தவனும், நம் குலதிலகராகிய ஒட்டக்கூத்தரைக் குருவாகவும் முதன் மந்திரியாகவும் பெற்று விளங்கியவனுமாகிய குலோத்துங்க சோழன் கால்வழித் தோன்றிய ஒரு சோழனைப் பல ஈழநாடடைச் செங்குந்த தலைவர்கள் அணுகி, இலங்கையின் ஒரு பகுதியாகிய மணற்றிடலை† அரசாளத் தன் குமாரனை அனுப்பும்படிக் கேட்டுக் கொண்டதற் கிணங்கினனாயினும், அன்னனைத் தனியாயனுப்ப மனமில்லாதவனாய், அந்நாளில் தனக்கு மந்திரியாயமைந்திருந்த குலசேகர முதலியாரை அழைப்பித்து அவரது மகன் பாரி முதலியாரை ஈழம் சென்று அங்குக் குடியேறும்படித் தனது மகனுடன் அனுப்பிவைக்க வேண்டுமென்று சொல்ல, அவரும் அதற்குடன்பட்டுத் தமது மகன் பாரி முதலியாரை அனுப்பிவைத்தார்.

இவ்வாறிருவரும், தமதுறவினர் பலருடனும ஒரு செங்குந்தப் படையுடனும், தமதடிமைகளுடனும் கப்பலேறி யாழ்ப்பாணம் வந்திறங்கினர். இவர்கள் ஆண்டிருந்து புறப்படும்பொழுது, பெண்மணிகள் அதற்குடன்படாமல் நின்றமையால், அன்னோரை இதுவே பெண்ணையாறெனக் கப்பலிலேற்றித் தந்திரமாகக் கொண்டுவந்து இறக்கியமையால், அவர்கள் முதன்முதல் வந்திறங்கிய துறை இன்றும் பெண்ணைத்துறையென வழங்கி வருகின்றது. இவ்வாறிறங்கியோர் அந்நாளில் தலைநகரமென வழங்கிய நல்லூர் சென்று ஆண்டு அவ்வரசகுமாரனுக்குப் பட்டங்கட்டினர். பின்னர் அப்பாரி முதலியாரும் அவரதுறவினரும், அச் செங்குந்த படையையும ஒரு சிலரையும் அவ்விடம் விட்டுத் தம்மடிமைகளோடும் வேறு சிலரோடும் இலங்கையினதிவட பகுதியே பல்வள மிக்கதும், மிகச் சிறந்ததுமான நாடெனவறிந்து, அப்பெண்ணைத் துறையில் கப்பலேறி வடபகுதியிலுள்ள வோர் துறையில் வந்திறங்கினர்.

இவ்வாறாக அவ்விடம் வந்திறங்கினோர் அதற்குச் சிறிதப்பால் தற்போது கரவெட்டி என வழங்கும் பாகத்தை வாசஸ்தானமாகக் கொண்டனர். இவர்கள் அவ்விடம் குடிகொள்ளும்படி வந்தபொழுது, ஆங்குக் குடியேறியிருந்த வோர் சாதியாருள் ஒரு சிலர் இன்னோருட னெதிர்த்து நின்றமையால், இவர்கள் தம்முடைய உடைவாட்களை உருவி அவர் கரங்களைத் துணித்தா ராதலின், இவர் குடிகொண்ட வூர் கரவெட்டியென வழங்கலாயிற்று.

இவ்வண மிக் கரவெட்டியை யடைந்த பாரி முதலியாருடன் வந்தோரில், அளகையப்ப முதலியாரும், வீரப்ப முதலியாரும், சுப்பராய முதலியாருமே பிரபலமானவர்கள். இவ்விடம்வந்த பாரி முதலியாரும், அளகையப்ப முதலியாரும் கொடையி லதிகம் மேம்பட் டிருந்தமையால் இன்னோரைப் பாரிசீமான் அளகைசீமான் எனவும அழைத்தனர். இவர்கள் வசித்த விடத்தை இன்றும் பாரிசீமா, அளகைசீமா என்று வழங்குகின்றனர்.

இவரோடு வந்த வீரப்ப முதலியார், மறைஞான சம்பந்த சிவாசாரியர்க்கும உமாபதிசிவத்திற்கும் பாவடியில் கூழ்வாரத்த வமசத்தவராதலின், இவர் ஈண்டுக் குடிகொண்ட விடம் கூழ்ப்பாவடி என இன்றும் வழங்கிவருகின்றது.

இனி, இவர்களுள் சுப்பராய முதலியாரென்பார், சிதம்பரத்தில் வடக்காவணி மூலவீதியினின்றும் வந்து குடியேறியமையால், இவர் குடிகொண்ட விடத்தை இப்போதும் வடக்காவணித் தெருவென வழங்குகின்றனர்.

இவர்கள் இவ்விடத்திலும் தமது குலத்தோராற்கையாளப்பட்டு வந்த நெசவுத்தொழிலையே தாமும் கையாண்டு அதற்கு வேண்டும் பருத்தியை இந்தியாவினின்றே வருவித்தனர். இவ்வாறு பருத்தியைக் கொணடுவந்து இறக்கினமையால அத்துறை பருத்தித் துறையென வழங்கலாயிற்று.

இது நிற்க, இன்னோருடன் முன்வந்து நல்லூர் சென்று கோட்டைக் கருகாமையில் வசித்தோர் சிலரும் ஈண்டுவந்து குடியேறினர். இவர் கோட்டையினின்றும் வந்து குடியேறினமையால் இவர்கள் ஈண்டு குடிகொண்ட விடத்தைக் 'கோட்டையடி'யென வழங்கி வந்தனர். இப்போது அப்பெயர் கோட்டடி யென வழங்கி வருகிறது. இவர்களே மற்றைப்பகுதியில் வசிப்போரினும் அதிக உரித்துப் பூண்டவர்கள். இவர்களையும இந்திலையையும் ஒரு சிறுகால்வாயே பிரித்துக் கொண்டிருக்கிறது.

(தொடரும்.)

உபாத்தியாயர், க. சிற்றம்பல முதலியார்,
காவை செங்குந்தகுல சங்கத் தலைவர்.

* சோறு என்பதற்கு 'மோக்ஷம்' என்பதும் ஒரு பொருள்.

† இது சம்பந்தமாகப் பிரபவஹு தைமீ'த்து 'செங்குந்தமித்திர'னின் ௬-ம பக்கம வந்த வரலாற்றைப் பார்க்க.

## விரதப் பகுதி

### சிவராத்திரி விரதம்

சிவராத்திரி தனி சிறந்த சிவ விரதங்களுள் ஒன்று. இவ்விரதத்தை முறைப்படி அநுஷ்டிப்போர் முக்கட் கரும்பாகிய முழுமுதற் பொருள் போல் யாவரும் வணங்க வாழ்வர். இது நித்திய சிவராத்திரி, மாச சிவராத்திரி, யோக சிவராத்திரி, பக்ஷ சிவராத்திரி, மகா சிவராத்திரி என ஐவகைப்படும்.

அவற்றுள் சதுர்த்தசி தோறும் அநுஷ்டிக்கப் பெறும் (ஒரு வருஷத்திற்கு) இருபத்து நான்கும நித்திய சிவராத்திரி யென்றும், இவ்விருபத்து நான்கனுள் அமரபக்ஷ சதுர்த்தசிகளெனச் சொல்லும் பன்னிரண்டும மாச சிவராத்திரி யென்றும், சோமவார இரவில வரும் அமாவாசைகள் யோக சிவராத்திரி யென்றும, தைமாதத்தில் அமரபக்ஷப் பிரதமைதொடங்கிச சதுர்த்தசி வரையில் ஒரு வேளை உணவுண்டு அநுஷ்டிப்பது பக்ஷ சிவராத்திரி யென்றும், இகபர போகங்களை ஒருங்கே தருவதாய மாசிமாத அமரபக்ஷ சதுர்த்தசியில் அநுஷ்டிப்பது மகா சிவராத்திரி யென்றும் சொல்லப்படும்.

திருவருள்பாலிக்கும் இவ்வைவகைச் சிவராத்திரிகளையும ஆகம விதிப்படி ஆகார நித்திரைகளின்றித் தொடர்ச்சியாக நோற்கவல்

லோரடையும் பயனை எத்தகையோரும் எவ்வித வேறு தவத்தாலும் அடைய இயலாது.

ஒப்புயர்வற்ற மகாசிவராத்திரியன்று அதி காலையில் திரிகரண (மனம், வாக்கு, காயம்) சுத்தியோடு நீராடி நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு சிவாலயம் புக்குச் சிவபெருமானை மனமார்ந்த அன்போடு துதித்து நெய் விளக்கு முதலிய திருப்பணிகள் புரிந்து திருவடிகளை வணங்கி நித்திரை ஆகார முதலியவற்றை நீக்கிச் சிவபெருமானைப் பகலிரவாகிய எட்டு ஜாமங்களிலும் விதிப்படி பூசிக்கக் கடவர். அவ்வாறு சிவலிங்கப் பெருமானை பூசிக்கப் பெறாதவர் மேற்கூறியவாறு சிவாலயஞ்சென்று எட்டு ஜாமங்களிலும் தரிசிக்கக்கடவர். மேற்கூறிய ஐவகைச் சிவராத்திரிகளையும் கிரமப்படி அநுஷ்டிக்க இயலாது, அவற்றுள் ஒரு விரதத்தையேனும் அநுஷ்டிப்பார் எய்தும் பயனைப் பிரம தேவனாலும் சொல்ல முடியாதென்றால், ஐவகை விரதங்களையும் தவறாது அநுஷ்டிப்போர் அடையும் பெரும்பயனை எவரால் அளவிட்டுக் கூறல் முடியும்?

திருமால் உலகங் காப்பதும், பிரமன் உலகத்தையும உயிர்களையும் படைப்பதும், பொன்மயமான தேவலோகத்தைத் தேவேந்திரன் அரசு புரிவதும், குபேரன் அளவிறந்த வளங்கள் சேரப்பெற்று வாழ்வதும், இவ்வரிய சிவராத்திரி விரதத்தை அநுஷ்டித்ததனாலேயாம்.

அளவிறந்த பிறவிகளிற் செய்த புண்ணிய மிகுதியால் சைவராய்ப் பிறந்து, உலகிலுள்ள எல்லாச் சமயங்களையும் புறக்கணிக்காது தனக்கு அங்கங்களாகக் கொண்டு ராஜாங்கத்தமர்ந்திருக்கும் சைவ நன்னெறியில் ஒழுகும் பெரும் பேற்றையுடைய சிவநேயச் செல்வர் எண்ணிலார் சிவராத்திரி விரதத்தை விதிப்படி அநுஷ்டித்து உய்ந்தனர். அன்னோர் சரித்திரங்களை ஈண்டு கூறபபுகின் விரியுமெனறு விடுத்தோம்.

## பங்குனி உத்திரம்

(மண விரதம்)

காலகண்ட மூர்த்தியாகிய முதல்வனை அவமதித்துத் தான் செயத யாகத்தில் அவிகொடேனென்று அகங்கரித்துத் தன் தலையிழந்து ஆட்டுத்தலைபெற்ற தக்கனது புத்திரியாகிய தாக்ஷாயணி என்னும் பெயருடன் இருத்தல் கூடாதெனக் கருதிப் பர்வதராஜன் பெண்ணாக வளர்ந்துவந்த பார்வதிதேவியாரைச் சிவபிரான் உலகமுய்யத் திருமணஞ் செய்தருளிய திருநாள் பங்குனி உத்திரமாகும்.

பங்குனி மாதத்தில் உத்திர நக்ஷத்திரமடையும் தினத்தில் பார்வதிபாகராகிய பரமசிவனைத் திருமணக்கோலத்தோடு தியானித்துக்கொண்டு நீராடி நித்திய கருமங்களை முடித்துச் சிவலிங்கப் பெருமானைப் பூசிப்பவராயின், தமதான்மார்த்தமாகிய அம்மூர்த்தியையே பார்வதி தேவியாரைத் திருமணஞ் செய்தற்குக் கொண்டருளிய திருக்கோலமாகப் பாவித்து முறைப்படி பூசித்து வணங்கி, சிவபெருமானைப் பூசிக்கும் வதில்லாதவராயின், செம்பொன்னாற் செய்த சிவலிங்க வடிவத்தைப் பர்வதராஜன் புதல்வியாகிய உமாதேவியார் உருவத்தோடும் அமைத்துப் பாலினாலும் பஞ்சகவ்யத்தினாலும் அபிஷேகஞ் செய்து வணங்கி; நெல்லைப்பரப்பி அதன்மேல் பூர்ண கும்பமமைத்து மாந்தழை செருகி அக்கலசத்தில பொன்னாற் செய்த சிவபெருமானைப் பிராட்டியாரோடும் எழுந்தருளச் செயது சிவபெருமானுக்கும், தேவியாருக்கும் உரித்தெனக் கூறப் பெற்றுள்ள மலர்களைக் கொண்டு அருச்சித்து அன்புடன் தூபதீபங்கள் காட்டி வணங்கிச் சிவனடியார்க்கமுது செய்வித்துச் சிவாலயமடைந்து பூமாலை திருவிளக்கு முதலியவையிட்டுப் பிராட்டியாரைத் திருமணம் புரியும் சிவபிரானது திருமணக் கோலத்தை மனதில் தியானித்துக் கோயில் வலம் வந்து வீட்டிற்குத் திரும்பி அன்றிரவு அடியார் பந்துமித்திரர்களோடு சுத்தமான உணவருந்திப் பரிசுத்தமான படுக்கையிலுறங்கி மறுநாட் காலையிலெழுந்து நீராடிச் சிவபெருமானையும் உமாதேவியாரையும் அம்மூர்த்தங்கள் ஸ்தாபித்திருந்த கலசத்தோடு மற்றைப் பொருள்களையும் சிவனடியார்களுக்குத் தானமாகக கொடுத்து அன்னவர்பாதஙகளை வணங்கி அவர்களுடன் பாரணை செய்தோர் எண்ணிய வரங்களை அடைவர்.

இத் திருமண விரதத்தை விதிப்படி அநுஷ்டித்துப் பெறற்கரிய பேறெய்தி உய்ந்தோர் எண்ணிலராவர். அன்னவர் வரலாற்றைச் சொல்லப்புகின் பத்திரிகை இடந்தராதென வஞ்சி விடுத்தோம்.

ம. அ. கனகசபை முதலியார்,



## குலதிலகர் பகுதி

## படிக்காசுத் தம்பிரான்

(தை மாதம் ௬௰ம் பக்கத் தொடர்ச்சி)

நாயகரின் விடைபெற்ற புலவர் கொங்கு நாட்டுத் திருக்கோயில்களைக் காண நினைந்து ஆவினன்குடி (பழநி), திருவவிஞசி, பேரூர் முதலிய திருக்கோயில்களைக் கண்டு களித்து வந்தவர், தற்செயலாய் ஒரு ஊரில் திருமணம் நடந்துகொண்டிருந்த கொங்கு வேளாளர் வீட்டிற்குச் செல்ல நேர்ந்தது. வீட்டிற்குரியவர் புலவரை வரவேற்று உணவளித்த பின்னர்க் கவனிக்க நேரமின்றி மணவினையில் ஈடுபட்டிருந்தார். திருமணக் கூட்டத்தில் இருந்தவர்களில் பொட்டை நாவிதன், குழலூர் புலவன் (பாணர் குடியினன்), நாடார் முதலியவர்கள் தான் படிப்புடைய ரென்பதைச் சிலரால் சேட்டறிந்த புலவர், இவர்களுடைய கல்விநலத்தைக் காண ஒரு இடத்தில் அமர்ந்திருந்தார். திருமணத்தில் நாவிதனுக்குத்தான் மிக்க வேலையும் செல்வாக்கு மிருந்தது. குழலூதுநர் கருவிகள் முழங்க (மேளம் வாசிக்க) ஆரியன் மறையோத, கொங்குவேளாளர்க்குரிய சீர்ச் சடங்குகள் எல்லாம் முடியப்பெற்று, மணமகன் பெண்ணுக்குத் தாலி கட்டினான். பின்பு தலைமுறையாக வரும் வழக்கம்போல மாப்பிள்ளையையும் பெண்ணையும் மணவறையில் வைத்துப், பொட்டை நாவிதன் (ந ண ன ல ழ ள ற ர) முதலிய எழுத்துக்களை இலக்கண நூல் கூறும் ஒலிக்குச் சிறிதும் பொருந்தாமலும்,

கிரேதா திரேதா துவாபர கலியுகம்

என்ற முதலடியினையும், 'கேட்டவர்கள் எல்லோரும் கிளைகோத்திரமாய் வாழ்ந்திருக்க' என்ற ஈற்றினையுமுள்ள சுமார் ௩௰ (30) அடிகள் கொண்ட ஆசிரியப்பா போன்ற ஒருவகைப் பாட்டை, மிடற்றில் கோழையை அடக்கிக் கொண்டு கிழவர்கள் தன்புறுவதுபோல் பாடி முடித்தான். புலவர் இவ்வழகுகளைக் காண ஒருநாள் அங்கு தங்கிவிட்டார். மறுநாள் மொய்க் கூட்டப்பட்டது. நாடார் மொய்ப்பேடு குறித்தார். அது பின்வருமாறு :—

முமண கவண்டன் உருவாய் ௰
குட்டக்காட்டு சிண்ணக்கவண்டன் ,, ரு
பண்ணற பெரிய கவண்டரு ,, உரு
வலசு எசமாங்கோ உருவாய் ௰
பொம்புட்டி நல்லக்கா ,, ௩

இதுபோலப் பதினைந்து ஏடுகளை நிரப்பினான்.

இவைகளை யெல்லாம் கண்ட புலவர், ஔவை, செங்குன்றூர் கிழார், குமணன் முதலியவர்கள் பிறந்த இந்நாடு மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கின்றதே யென்று மனம் புழுங்கி யிருந்தார். மொய் வாங்கியானவுடன் வண்ணான், வட்டிலிற் பாலுண்ட புலவன், நாவிதன் முதலிய தொழிலாளர்களுக்குப் பரிசு கொடுக்க நீண்டு பருத்த உடலுடைய பெரிய கவண்டரொருவர் ஒரு பணப்பையுடன் வெளியில் வந்து, உயர்வான ஓரிடத்தில் அமர்ந்தார். வேலைக்காரர்கள் தங்கள் தங்களுடைய சிறப்புக்களைப் பெரிய கவுண்டரிடம் நன்குகூறிக் கவுண்டரவர்கள் கொடுத்த பரிசுகொண்டு வீடுசென்றனர். இதில் முதல்தரமான பரிசு கால் ரூபாயாகும். தொண்டைநாட்டாரும் புலவரெனக் கூறினமையால், தங்கள் கலத்தில் பாலுண்ட புலவரைப் போல எண்ணி, ஒரு தட்டில் வெற்றிலை பாக்குடன் நான்கணா கொண்டுவந்து மரியாதையாகக் கொடுத்தனர். புலவர், அவர்களுடைய அறியாமைக்கு வருந்தியவராயும் அன்பிற்கு மகிழ்ந்தவராயும் "என்னுடைய திறமறியாதவரிடம் யான் பணம் வாங்குவதில்லை" என்றும், சுயமரியாதையற்ற மக்கள் கொங்கு நாட்டில்

செந்தமிழைப்
பஞ்சாகத் தூற்றி யரைக்காசுக்கோர் கவிபாடுவதால்
நஞ்சாகப் போயிற்றையோ என்தமிழ்க் கொங்குநா
டெங்குமே

எனப்பாடிவிட்டுக் குடியானவனுடைய வீட்டை விட்டகன்ற புலவர் ஒரு கிணற்றில் தண்ணீர் குடித்துவிட்டு நடந்த இளைப்பால், ஒரு மரத்தடியில் இருந்துகொண்டு,...

"அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டே மறிவில்லாமல்
திடமுளதோ ரனமாடக் கழைக்கூத்தாடச்
செப்படி வித்தைகளாடத் தெரிந்தோமில்லைத்
தடமுலைவே சையாகப் பிறந்தோமில்லைச்
சனியான தமிழைவிட்டுத் தையலார் தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை
என்ன சென்ம மெடுத்துலகி லிரக்கின்றோமே."

என்று பாடி எழுந்து, பாவானி (திருநணு) திருச்செங்கோடு, கொடுமுடி, வஞ்சி (கரூர்) முதலிய திருக்கோயில்களைக் கண்டு வணங்கிக் கொண்டு சோணாட்டில் நுழைந்து ஈங்கோய் மலை, திருவானைக்கா, திரிசிரபுரம் முதலிய கோயில்களை வழிபட்டுக் கொண்டு, திருத்தண்டலை நீணெறி யடைந்து வணங்கியவர், பல பெரியோர்கள் விழைந்தவாறு அந்நாட்டின்நலத்திற்காகத் "தண்டலையார் சதகம்" என்ற நூலைப் பாடித் திருக்கோயிலில் அரங்கேற்றினர்.

சின்னாள் கழிந்த பின்னர் இல்லறத்தில் வெறுப்புற்றுத் துறவை விரும்பி, கருமபுரத்தை அடைந்து அங்குள்ள அறிவுப் பேராசிரியரால் (பண்டார சந்நிதிகளால்) மெய்வழி (ஞானம்) கிடைக்கப்பெற்று, ஆசிரியர் கட்டளைப்படிச் சின்னாள் வேளூரில் "படிக்காசுத் தம்பிரான்" என்ற பட்டத்துடன் (அறநெறித் தலைவராக கட்டளைத் தம்பிரானாக வீற்றிருந்து, "புள்ளிருக்கும் வேளூர்க் கலம்பகம்" என்ற நூலை இயற்றி அறங்கேற்றி வைத்தனர்.

பிறகு தில்லையைக் காண விருப்பு மீக்கொள ஆசிரியரிடம் விடைபெற்றுப் புலியூரை யடைந்து, அம்பலவாணரையும் அம்மையையும் வணங்கி, முன்போல நாள்தோறும் பொற்காசு பெற்றனர். முன்னர் ஒன்பதின்மருக்கு உலகங்காக்க கட்டிகள் உதவிய அன்னை ஒவ்வொரு காசு இவருக்குக் கொடுத்தது ஒரு வியப்போ? தில்லையிலேயே மாணவர் சிலருக்குப் பாடஞ் சொல்லிக்கொண்டிருந்து நற்றினமொன்றில் இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்தார்

புலவர் திருமலைநாயக்கரைப் பாடியிருப்பதால் நாயக்கருடைய காலத்தவரொன்பது நன்கு தெரிகிறது. நாயக்கர் காலம் கி.பி. 1623 ஆண்டு முதல் 1659 வரை எனவே, இவர் இருநூற்றறுபது யாண்டுகளுக்கு முன்னிருந்தவ ரென்பது தவறாகாது,

இம்முடி குமாரசாமி,
திருவையாரு.

# மாதர் பகுதி.

## இந்திய மாதர்

(தைமீ சஞ்சிகையின் ம-ம் பக்கத்துத் தொடர்ச்சி)

இந்தியாவில் மாதர்கட்குச் சுவாதீனம் இல்லை என்பது உண்மைக்கு மாறான கூற்று வேதங்களின் காலம்தொட்டு நாளது தினம் வரையில் நமது பெண்டிர் சுவாதீனம் அனுபவித்தே வருகின்றனர். பல இராஜாங்க விஷயங்களிலும் தமது கணவர்கட்கு மதியாலோசனை சொல்லி வந்தவர்கள் இப்பெண் மணிகளே. மங்கையர்க்கரசி, மங்கம்மை, அகல்யாபாய் முதலியவர்களின் சிறப்பே இந்திய மாதர்களின் இராஜாலோசனைத் திறத்தை வெளிப்படுத்துகின்றது. "நுனிப்புல் மேய்ச்சலாகச் செல்லும் ஒவ்வொரு வெளிநாட்டானும் தன்னுடைய நாட்டின் வழக்க ஒழுக்கங்களைப்பற்றிப் பேசும்நெறியில், இந்திய மாதரைத் தாழ்ந்த ஸ்திதியிலுள்ளோர் என்று அதிக காருண்யமுள்ளவன் போலும் சொல்லிப் பிரலாபிப்பது இயல்பு. ஆனால் இவ்வித பிரலாபங்களில் இந்தியமாதர் சேரச் சற்றும் நினைத்திலர். எனினும், அவன் அவர்களுடைய சுயேச்சை யின்மையைப் பற்றி அதிகமும் வருந்துகிறான். அவர்களது குடும்பவாழ்க்கையைச் சிறையென்கிறான். இராஜபுத்திரமாதர் அனுபவிக்கும் சுயேச்சையைப் பற்றியும் அவர்களது கௌரவம் இன்பம் முதலியவைகளைப் பற்றியும் எனக்குக் தெரிந்தவரையில் நான் ஒருவிதத்திலும் அவர்களது வாழ்க்கையைச் சிறைவாழ்க்கை என்று சொல்லத் துணியேன்' என்றார் கர்னல் டாட் (Colonel Todd). இந்தியாவிலுள்ள மற்ற சனங்களைக்காட்டிலும் இராஜபுத்திரர்களே புர்தா (purdah) வை அதிகமும் கவனிப்பார்கள் என்று அறிவார்க்கு, இவரது சொற்களின் சிறப்புச் சாலவும் பொலிவுறும்.

ஆயினும் இவர்களது சுயேச்சை மேல்நாட்டு மாதர்களின் சுயேச்சையன்று. இருவர்களது சுயேச்சையையும் ஆளும் முக்கிய தத்துவங்கள் வெவ்வேறு. நமது மாதர் தமது மனைகளில் சுயேச்சைப் பெற்றிருக்கின்றனர். தமது கிராமங்களிலும் தமது இனங்களிலும் சுயேச்சை யடைந் திருக்கின்றனர். அடுப்பங்கரையில் அடைக்கப்பட்டுக் கிடக்கவில்லை. ஆனால்



(25)

அவர்கள் வாழ்க்கையின் ஆரவாரங்களை விரும்புவதில்லை.

வழக்கத்தாலும் சாஸ்திர விதிகளாலும் இந்துக்கள் மதாசார நியமங்களைச் செலுத்த மாதரை வாழ்க்கைத் துணைவராகக் கொள்கின்றனர். மனைவி கணவனின் பாகமாய் விடுகிறாள். கணவன் மனைவியின் பாகமாய் விடுகிறான். யூரோப்பில் பெண்ணைத் தகப்பன் கலியாணத்தில் கொடுக்கிறான்; தகப்பனில்லையாயின் அப்பெண்ணின் சிற்றப்பனோ, சகோதரனோ, அல்லது நெருங்கிய பந்து ஒருவனோ கொடுக்கிறான். ஆகவே அங்கு வாழ்க்கையின் சடங்காகிய கலியாணத்தில் முன்னின்று நடத்துபவன் ஆண்மகனே. அங்கு அப்பன், சிற்றப்பன், அண்ணன் முதலியோரது மனைவியர் யாது செய்கின்றனர்? இச்சடங்கு செய்யும்போது அவர்களுக்குத் தமது கணவர்கள் பக்கத்தில் யாதொரு சுதந்தரமுமில்லை. இச்சடங்கில் அவர்கள் இன்றியமையாதவர்கள் அல்லர். அவர்கள் நிகழும் வைபவங்களைக் கண்டு இன்புறலாம். புது ஆடை உடுத்திக்கொண்டு இங்குமங்கும் உற்சாகத்துடன் செல்லலாம். ஆயினும் அவர்களுக்குப் பெண்ணைக் கொடுப்பதில் யாதொரு பாத்தியதையுமில்லை. இந்துக்களுள் கலியாணச் சடங்கு செவ்வனே நடைபெறுமாறு பெண்ணின் தாய் அல்லது பெண்ணைக் கொடுப்போனது பத்தினி இருக்கவேண்டியது அத்தியாவசியம். கணவனும் மனைவியும் இருவருமாய்ப் பெண்ணைக் கொடுக்காவிட்டால் இச்சடங்கு குறையற முடிந்ததாகக் கருதப்படாது. பிணி, மூப்பு, சாக்காடு முதலிய காரணங்களால் கொடுப்போனது அர்த்தாங்கினி (மற்றொரு பாதி) அவன் பக்கல் நிற்க முடியாவிடின், அவனது பக்கத்தில் அவன் மனைவியைக் குறிக்கும்படி ஒரு துணித்துண்டையாவது வைத்துச் சடங்கைச் செய்கின்றனர். எனவே, இந்தியாவில் ஆண்மக்கள் பெண்மக்களின்றிப் பாதி மனிதர்களே. வாழ்க்கையின் முக்கிய சடங்குகளைக் கணவனும் மனைவியும் ஒன்று சேர்ந்தே செய்தல்வேண்டும்.

பண்டைகாலத்தில் இந்திய மாதர்கள் அன்பின் ஆழத்தாலும், வீட்டிற் சுயேச்சையாலும், சடங்குகளிற் சுதந்தரத்தாலுமே ஆட்சி செலுத்தியவரல்லர். அவர்கள் சங்கம் அபிவிருத்திகளிலும் ஆண்மக்கள் பக்கம் நின்று ஆலோசனையும் உதவியும் புரிந்தனர். அமர்க்களத்திலும் கணவர் பக்கம் நின்று அமர்புரிந்தனர். சரித்திரத்திற்கு எட்டாத காலத்திலேயே கைகேயி என்னும் அரசி தனது வீரச் செய்கையால் தன் கணவனது உயிரைக் காப்பாற்றி இராமாயண நிகழ்ச்சிகளுக்கு ஆரம்பக்கல் நட்டுவிட்டாள். ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர்ப் பத்தினித் தேவியாகிய கண்ணகியின் சிலையை நாட்டச் சேரமான் தனது மனைவியின் அபிப்பிராயத்தைக் கேட்கிறான். எழுநூறு வருஷங்களுக்கு முன்னர்ப் பிரிதிவிராஜன் பக்கல் நின்று சம்யுக்தை மகம்மதியருடன் கைகலக்கின்றாள். இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இராஜபுத்திரர்களின் கீர்த்தி ஜ்வலித்துக் கொண்டிருந்த காலத்தில் இந்தியாவில் பிரயாணம் செய்த பர்னியர் (Bernier) என்னும் பிரெஞ்சுக்காரர் பின்வருமாறு எழுதுகின்றனர்:—

"ராணாவின் பெண் தனது கணவன் ஜஸ்வன்ட்சிங் சண்டையில் தோல்வியடைந்து ஓடி வந்ததும் அவனை எதிர்கொண்ட வைபவத்தைச் சொல்லாவிடின் எனக்கு மனவமைதியிராது. அவன் மிகவும் வீரத்துடன் சண்டை செய்து, எதிரியின் பலத்தால் தோல்வியடைந்து, அவர்களை மீண்டும் எதிர்க்கச் சக்தியற்றவனாய், இறந்தவர் போக ஐந்நூறு மனிதர்களே தன்னைச் சூழ வீட்டைநாடி வந்துகொண்டிருக்கிறான் என்று கேட்டதும், அவன் மனைவி வாயிற்காவலர்களுக்குக் கோட்டையின் கதவைமூடச் சொல்லி 'அந்த மானமிழந்த மனிதனை உள்ளே விடவேண்டாம்' என்று கட்டளையிட்டுவிட்டாள். கீர்த்திபெற்ற ராணாவின் மருமகனுக்கு இவ்வளவு வீரக்கேடான செய்கை இயலாது. புகழ்மிகுந்த இக்குடும்பத்தில் வந்து நுழைந்தவர் இக்குடும்பத்தின் வீரச்செயல்களுக்கு ஏற்ப நடந்து இதன் பண்டைப் புகழை நிலைநாட்ட வேண்டாவா? வெற்றிபெறுதல் வேண்டும்; இல்லையேல் இறத்தல் நன்று' என்று வெகுண்டாள். மறுக்ஷணமே அவளது மனம் மாறிவிட்டது: "கட்டைகளை அடுக்கித் தீ மூட்டுங்கள். அவர்கள் என்னை ஏமாற்றிவிட்டார்கள். என்னுடைய கணவன் இறந்தே இருத்தல்வேண்டும். ஆம், அப்படித்தான் இருத்தல்வேண்டும்" என்று தீயில் பாயப் பிரயத்தனம் செய்தாள். ஆயினும் மற்றொரு நொடியில் அவளது முகக்குறிகள் மாறிவிட்டன. கணவனின் வீரக்குறைவை அதிக கோபத்துடன் நொந்தாள். இவ்வாறு எட்டு ஒன்பது நாட்கள் சென்றும் கணவனைப் பார்க்கக்கூடாதென்றே அவள் தீர்மானித்திருந்தாள். கடைசியாய் அவளது தாய்

அவளிடம் வந்து சில தேறுதல்களைச் சொல்லி, 'உனது அரசன் சற்று இளைப்பாறத்தான் இங்கு வந்திருக்கிறான். இளைப்புத் தீர்ந்ததும் மற்றொரு சேனையைக் கூட்டிக்கொண்டு அவுரங்கஜீப்பை எதிர்த்துத் தனது கீர்த்தியை ஒளி செய்வான், எழுந்திரு' என்று அவளைச் சமாதானம் செய்தாள். இக்கதையால் அந்நாட்டுப் பெண்களின் வீரவுணர்ச்சியின் சிலாக்கியத்தை அறியலாம்."

பண்டை காலத்துக தமிழ் மாதர்களும் இவ்வாறே வீரவுணர்ச்சி யுடையவர்கள் என்பது

"நரம்பெழுந்துலறிய நிரம்பாமென்றோள்
முளரிமருங்கின் முதியோள், 'சிறுவன்
படையழிந்து மாறினன்' என்று பலர் கூற,
'மண்டமர்க் குடைந்தனனாயின் உண்ட என்
முலையறுத்திடுவன் யான்' எனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ,
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே."

என்ற புறநானூற்று 278-வது பாவினின்றும் தெற்றென விளங்குகின்றது.

ஒருதரம் அல்ல, பன்முறையும் இந்திய தாயரும், மனைவியரும், சகோதரிகளும் தமது பிள்ளைகளையும், கணவர்களையும், சகோதரர்களையும் அமர்க்களத்திற்கு அனுப்பிப் பண்டைநாள் ஸ்பார்டன் (Spartan) மகளிரைப்போல, "வெற்றிபெற்று உயிருடன் வாருங்கள், இல்லையேல் கேடையங்களின்மீது பிணமாக வாருங்கள்" என்று ஆசீர்வதித்து வந்தனர். இத்தகைய வீர எண்ணங்களை அவர்கள் முன்னால் காண்பித்ததுமின்றி இந்நாளும் காண்பிக்கின்றனர். இந்நாளும் பண்டைகாலத்து இயல்பிற்கு ஏற்ப இந்திய மக்களும் கணவரும் சகோதரர்களும் மீண்டும் இந்நூற்றாண்டில் தமது தாய், மனைவி, சகோதரிகளிடம் விடைபெற்றுக் கொண்டு வீரச்செயல் புரியக் கடல்கடந்து போயினர். இவ்வீரர்கள் நமது இராஜ்யத்தின் காவலுக்காகத் தம் நாட்டைவிட்டுப் புறப்பட்டதினம் தம்மை வழிவிடக் கப்பல் துறையில் வந்து நின்ற தாயரின் அடிகளிற் பணிந்து எழுந்து நின்றனர். அத்தாயரும் பிள்ளைகளுக்கு முத்தமிட்டு ஆசீர்வதித்து வாட்படைகளைத் தம் கைகளினாலேயே மாட்டி முன்னாள் இந்தியாவின் கீர்த்தியைப் பொலியச் செய்த இராஜபுத்திர மாதர்களைப்போலும் வீரத் தமிழ்த் தாயரைப் போலவும் வீரச் சொற்களைச் செப்பியனுப்பினர்.

(இன்னும் வரும்.)

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி

## பொது விஷயங்கள்

### அறிவு

மக்கட் கூட்டத்திற்கும் மற்றுமுள்ள உயிர்த் தொகைகட்கும் இயற்கையாகவே அவ்வவற்றின் நிலைமைக் சேற்பக் கடவுள் அறிவை அளித்திருக்கிறார். உயிர்த்தொகைகளில் அறிவில்லாதன ஒன்றுமில்லை. அறிவு, உணர்ச்சி என்பன ஒரு பொருளையே குறிப்பன.

அறிதற்குப் புலன்கள் கருவிகளாக இருக்கின்றன. எவ்வெவ்வுயிர்கள் எவ்வெப்புலன்களைக் கொண்டு உணர்கின்றனவோ அவ்வத்தன்மையைக் கொண்டு ஆன்றோர் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறி வுயிர், ஆறறிவுயிர் எனப் பகுத்துள்ளார்கள். இவ்வகையில் புல், மரம், முதலியன மெய்யின் உணர்ச்சியாகிய ஊறு ஒன்றை மட்டும் உள்ள ஓரறி வுயிர்கள். (ஊறு =தொடுதல்.) இப்பி, சங்கு போன்றவை மெய்யுணர்ச்சியோடு நாவுணர்வாகிய சுவை யுணர்வையும் உள்ள ஈரறிவுள்ள உயிர்கள். (இப்பி = சிப்பி), சிதல், எறும்பு போன்றவை முற்கூறிய இரண்டு அறிவோடு நாற்றமுணர்தலாகிய மூக்கின் அறிவையும் உள்ள மூவறி வுயிர்கள். (சிதல் = கறையான்). நாற்றம் = வாசனை). தும்பி, வண்டு, போல்வன முற்கூறிய மூவகையறிவோடு காட்சியாகிய கண்ணின் உணர்வையும் உள்ள நான்கறிவுள்ள உயிர்கள். விலங்குகளும் பறவைகளும் போல்வன மேற்கூறிய நால்வகை யறிவோடு கேட்டல் ஆகிய செவியுணர்வையும் உள்ள ஐயறிவு உயிர்கள். மக்கள் இதுகாறும் கூறிய ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை என்னும் ஐவகை அறிவுடன் நன்மை தீமைகளைப் பிரித்து உணரும் பகுத்தறிவும் உள்ளோராவர். இவற்றைத் தற்காலத்தில் இயற்கைப்பொருள் ஆராய்ச்சியாளரும் நன்கு



அறிவார்கள். இவற்றுள் நாம் ஆராயவேண்டுவது மக்களின் அறிவைப்பற்றியேயாம்.

மக்களுடைய அறிவு சிறுபோதில் மாசுண்ட மணியென அறியாமையால் மூடப்பட்டிருக்கிறது. பின்னர், சிறிது சிறிதாகக் கல்வி கேள்விகளால் அறியாமை விலக, கழுவியமணியை யொத்து அறிவு துலக்கமுறுகின்றது. ஆகவே, கல்வியும் கேள்வியும் அறிவைத் துலக்கும் கருவிகளாகின்றன. ஆனது பற்றியே, வள்ளுவனார்,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" எனவும்
"கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப்படாத செவி" எனவும்

சிறப்பித்துக் கூறுவாரானார். கல்வி எத்தகைத்தாக வுள்ளதோ அத்தகைத்தே அறிவும். இக்கூற்றை "மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்னும் வள்ளுவர் வாக்கே பின்னரும் வலியுறுத்துகின்றது. கல்வி யென்னும் பெருங்கடலானது மிகப்பரந்து ஆழ்ந்து கிடக்கின்றமையானும் அதனை அள்ளியுண்ணும் மக்கள் சிலவாழ்நாட் பல்பிணியினரும், மூப்பும் சாக்காடு என்னும் இவற்றிற் கிலக்காயினரும் ஆயினமையின், முற்றவுண்ண வலியுடையாராக இன்றித் தத்தமது தகுதிக்கேற்பப் பகிர்ந்து உண்கின்றனர். அறிவுடைமையின் சிறப்பை,

"அறிவ அற்றங் காக்கும் கருவி செருவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்" (திருக்குறள், ௪௨௧)

எனவும்,

"அறிவுடையா ரெல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்." (திருக்குறள் ௪௩௦)

எனவும் வள்ளுவனார் கூறிய தெள்ளிய தொடர்களால் மக்கட் கூட்டம் நன்கு அறிக.

உணவானது அழிவுள்ளதும் துக்கமயமும் ஆன உடலை வளர்ப்பதுபோல, கல்வியானது அழிவில்லதும் இன்பமயமுமான அறிவை வளர்க்கின்றது; உண்ட உணவே பின்னரும் அவ்வுணவை உண்ண வலியை யளிப்பது போன்று, முதலில் அறிந்த கல்வியறிவே பின்னரும் அக்கல்வியையே மேலும் அறிய வலியளிக்கின்றது. நிற்க, இனி மக்களின் அறிவு எவ்வெவ்வகையில் ஒளிசெய்கிறது என்பதை ஆராய்வோம்.

முன்னர், மக்கள் யாவரும் தம் அறிவின் ஆற்றலைக் கொண்டு கல்விக்கடலில் சிறுசிறு பகுதியே பகிர்ந்து உண்கின்றனர் எனக் கூறினோம். அவ்வாறே கிடைத்த அறிவைக்கொண்டு, ஒரு கவி, உலகில் இயற்கை யழகைத் தன் கவியால் நலன்பெறப் புனைந்து உலகினருக்கு அமுதமென மாந்தி யமைவு பெற அளிக்கின்றான். ஒரு கணிதன், உலகின்கண் காணும் பொருள்களையும், இடங்களையும் வானத்தின்கண் தோன்றும் நாண்மீன், கோண்மீன், தாரகைகளையும் அவற்றின் இயக்க முதலானவற்றையுங் கணக்கிட்டு அகிலம் வியப்ப அறிய அளிக்கிறான். ஒலிநூல் வல்லுநன், உலகத்துறும் உன்னத மொழிகளின் ஒலி வேற்றுமையை யுணர்ந்து, அம்மொழிகளின் அமைப்பையும் பொருளையும், வேற்றுமையையும் புலவினர் புந்தியிற் புகுத்து நெகிழ்த்து அறிவெனும் மலரை அலர்த்துகிறான். உயிர் நூல் உணர்ந்தோன், உயிர் வருக்கங்களின் இயற்கை யமைப்பின் அழகை இத்தகைத்தென அதிசயிக்குமாறு தெளித்துப் புலவினர்க் களித்துக் களிக்கிறான். இவ்வாறு ஒவ்வொரு மற்றைய பகுதியினருந் தத்தமக்கியன்றவாறு அறிவெனும் புணையால் கல்விக்கடலில் அமர்ந்து கடந்து ஆங்காங்குத் தத்தமக்குக் கிடைக்கும் நவமான நலன் மணிகளை யுலகினர்க் குவந்துதவிக் களிப்பிக்கின்றனர்; இத்தகைய பெருமை யியைந்த பொருள்களை யுண்டாக்கி அவற்றில் அணிந்து மகிழும் கடவுளின் அற்புத ஆற்றலை வியக்கின்றனர்; நம்மையும் வியப்பிக்கின்றனர். இவர்கள் தாம் தத்தம் வாழ்நாட்களை யின்ப நாட்களாக்கி, உலக வாழ்க்கையில் நிகழும் இன்பதுன்பங்களில் மூழ்கிக் கிடவாமல், அவ்வின்ப துன்பங்களின் உணர்ச்சியையே அறியாது கழிக்கின்றனர்.

மற்றுஞ் சில உண்மையறிவினர், "சத்தமுஞ் சோதிடமும் என்றுங்கிவை பிதற்றும் பித்தரிற் பேதையாரில்" என அத்தன்மையாளரை யிகழ்ந்து தம்மைப் படைத்த தனிமுதற்பொருளை யுணரும் வாழ்க்கையில் மூழ்கி நம்போன்ற உலகத்தினரினின்றும் பிரிந்து ஏமாப்புறுகின்றனர். இவ்வறிவே உண்மை யறிவாம். இத்தகைய அறிவு நமக்குக் கிடைக்கும்படி முன்வினையியற்றிய அறிவுச்செல்வர்களை நோக்கி நாமும் அவரென ஆக விரும்புதல், "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்துத் தானுந்தன் பொல்லாச் சிறகை விரித்தாடினார்" போன்று முடியுமாதலின், இத்துடன் நிறுத்தி உலகவாழ்க்கையே நேர்கொண்டு இவ்வாழ்க்கையையாவது நன்கு நிறைவேற்றுமாறு நம் அறிவைச் செலுத்துவோம்.

மக்களுக்குத் தம் உயிர் உடலில் உறைந்திருக்கும் வரையில், உண்ணவும் உடுக்கவும் வேண்டுவது முக்கிய மாகின்றது. இதற்காகவே நாம் நம் வாழ்நாட்களை,

நாட்டு வளப்பத்துக்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் நம் நாட்டிற்கு அவைகள் எத்துணையும் ஒப்பற்றவாகச் சொல்லவியலாது, அவர்கள் விவசாயத்தில் காட்டும் சிரத்தை நம்மவர்க்கிருக்கின் நாடு முழுவதும் குபேரனின் அளகாபுரி பட்டணமாகவே விளங்கும். இத்துறையில் ஊக்கமுடையோர் ஏழைக்குடியானவர்களே நம் நாட்டிலுளர். இன்னோரால் அவைகளை எப்படி சீர்திருத்த முடியுமென பார்ப்போம். பணமின்றிப் பரிதபித்து, விதைக்கும், மாட்டிற்கும், இன்னும் வேண்டுவன வற்றிற்கும் கடன்பட்டுத் தாம் விளைவினால் ஈட்டிய சம்பாத்யத்தை முதலுக்கும் வட்டிக்கு மீந்து மிகுதி தம் வயிற்றிற்கு மெட்டா ஊழியத்தைக் கஷ்டத்தின் பலனாகக்கொண்டு ஏக்கமுறும் ஏழைமக்கள் எங்ஙனம் சிறந்த முறைகளை யறிய எண்ண முடியும்? தவிர அவர்களில் அநேகர் கல்வியறிவு சொற்பமுடையவராகவும்,—ஏன், அற்றவராகவும்—இருக்கிறார்கள். பெரிய மிராசுதாரரா யுள்ளோரைப்பற்றிப் பேசுவோமானால் அநேகர்,

> **'நாவின் கிழத்தி யுறைதலால் சேரானே**
> **பூவின் கிழத்தி புலந்து'**

என்னும் வாக்கியத்தைப் பொய்ப்படுத்தாதவரா யிருக்கிறார்கள். ஏனெனில், இம்மக்களிற் சில்லோர் பெற்றோரின் அளவு மீறிய செல்வத்தால் கல்வி கற்கும் முயற்சியில் தவறுவதுமன்றி, ஒரு சிலர் ஆங்கிலம் கற்கவேண்டிய நிமித்தம் நகரங்களுக்கு அனுப்பப்பட்டுக் கல்வி பயிற்சிசெய்யுங் காலங்களில், பெற்றோர் அசிரத்தையாலோ, சரியானபடி மேற்பார்வை யில்லாமையாலோ, துர்ச்சகவாசங்களுக் கிலக்காகிக் கெட்டுப்போய்க் கற்றது போதுமெனத்திரும்பி வீடுவந்து சேர்ந்துவிடுவார்கள். பிறகு இவர்கள் நடத்தும் விவசாய முறைகள் சொல்லத்தரமல்ல. யாவற்றையும் வேறொருவர் மேற்பார்வையில் விட்டுத் தாம் சுகபுருஷராகவே யிருப்பர். ஒரு சிலர், கலாசாலையை நாடிப் பட்ட பரீக்ஷையிலும் தேறிப் பட்டம் பெற்றும், மற்ற வித்தியார்த்திகளைப் போல் கவலையின்றி ஏதாவது உத்தியோகம் பெற்றுக் கிராமவாசமே பிடிக்காது தம் கிராமம் எவ்விடமிருக்கிற தென்பதையும் மறந்து நகர சுகத்தில் ஈடுபட்டுக் கிடப்பர். இன்னவர்கள், விவசாயத்தைச் சீர்திருத்துவ தெப்படி? உத்தியோகஞ் செய்வதும் பிடிக்காத ஒரு சில பிரமுகர் தம் பிதுரார்ஜித சொத்தின் உதவியால் நகரங்களின் உயர்ந்த சங்கங்களின் தலைவராவதிலும், வீண்காலம்போக்கும் சங்கங்களின் விருந்து கேளிக்கைகளிலும் ஈடுபட்டுக் காலத்தைக் கழிப்பர்; அல்லது தம் கிராமத்தை நாடி விவசாயப் பொறுப்பை மேற்குறித்தவரைப்போல் தம் ஆட்களைத் தலைமேதேற்றி அறுவடைக் காலத்து மட்டுங் களங்காத்துக் காலம் போக்குவர்.

செங்குந்த சகோதரர்களே! நம்மனோரின் ஜீவனோபாயம் விவசாயமும், நெய்யுந் தொழிலுமே யாகும். அவையே நம் நாட்டு மக்களின் பெரும்பாலோர் தொழிலாகின்றன. நெய்தற்றொழிலைப்பற்றிப் பின்வரும் வியாசம் பார்க்க. விவசாயம் பொறுத்த மட்டில் நம்மக்களின் முன்னேற்றம் விரும்பும் ஒவ்வொருவரும் தம் மக்கள் பாடசாலைப் படிப்பை முடித்ததும் அவ்வவர்கள் ஜீவனோபாயப் போக்கை யனுசரித்து அதற்கேற்ற கல்விக்கூடங்களிற் சேர்த்துப் பயிலச்செய்து தொழிலபிவிருத்தி யடையச் செய்யுங்கள். விவசாயக் கல்லூரி கோயம்புத்தூரில் இருப்பது அநேகருக்குத் தெரிந்ததே. விவசாயம் செய்யும் முறைகளையும், செயற்கை எரு செய்யும் முறையையும் அவற்றின் பயன்களையும், நிலத்தின் தன்மைகளையும் அதில் எப்பயிர் விளையுமென்பதையும், புதுமாதிரி கலப்பை முதலிய கருவிகளைப் பற்றியும், விதைகளின் தன்மைகளையும், பயிர்களின் நோய்களைப் பற்றியும், அவற்றின் பரிகாரமும், பயிர்களுக்குத் தீங்கிழைக்கும் பூச்சிகளும், அவற்றை யொழிக்கும் முறையும், இடத்திற்கும், காலத்திற்கும், சீதோஷ்ண ஷ்திதிக்கும் ஏற்றவற்றை விளைவிக்கும் மற்றெல்லா முறைகளையும் அங்கு பயிற்றுகிறார்கள். எல்லா பெற்றோர்களுக்கும் தத்தம் மக்களை எங்ஙனம் பயிலச் செய்வதென்று நோக்க மிருக்கலாம். விவசாயக் கல்லூரியில் விவசாயம் செய்வோர் மக்களுக்கு உபகாரச் சம்பளமும் கொடுக்கப்படுகிறது. இவற்றிற்கு ஏழை மக்களுக்கு உதவிசெய்ய நங்குலாபிமானச் செல்வர்கள் முன்வருமாறு முருகன் திருவருள் துணைநிற்குமாக. மற்றும் கிராமத்திற்கு அங்குளச் செல்வச் சீமான்களின் செல்வச் சிறுவர்கள் இரண்டொருவராவது தீரக்கற்றுத் தாம் கற்ற முறைகளை மற்றவர்களுக்கு விளக்கித் தொழிலைச் சிறப்புறச் செய்க. விவசாய விஷயமாய் விவசாய டிபார்ட்மெண்டார் வெளிப்படுத்தும் கிராமவாசியின் பஞ்சாங்கத்தில்



(28)

அத்தொழிலைப் பற்றிய அநேக குறிப்புகள் பிரசுரமாகின்றன. அதை வாங்கிப் படிப்பதாலும் அநேக விஷயம் அறிந்துகொள்ளலாம்.

இனி நெய்தற் றொழிலைப்பற்றிக் கூறுவாம். நம்மனோரில் பெரும்பாலோர்க்கு இது சிறப்புத் தொழிலா யிருக்கிறது.

(தொடரும்.)

**S. பாலசுந்தர முதலியார்.**

## சுகாதாரப் பகுதி

### நாகரிகமும் நோயும்: மருந்து

'மருந்து' என்னும் பதத்திற்குப் பொருள் யாது என்பதை யாராய்வாம். அது நோயை யொழிப்பதற்குக் கருவியாக உதவும் மூலிகை முதலிய பொருள்கள் என்பது. அதனை வடமொழிவாணர் 'ஔஷதம்' என்பர். அதற்கு நேர்த் தமிழ்ப்பதம் 'அவிழ்தம்' என்பது. தேவர்கள் சூக்ஷ்ம சரீரத்தைப் பரிபாலித்தற்கு 'அமிர்தம்' எப்படி உதவுகிறதோ, அப்படி மனிதர்களுக்கு ஸ்தூல சரீரத்தைப் பரிபாலிப்பதற்கு 'அவிழ்தம்' உதவும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் பழமொழிக்கிணங்க மானிடர் யாவரும் தேகாரோக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்வது முதற் கடமை. அரோக திடகாத்திரமுள்ளவர்களே குதூகலத்தோடு தம் ஆயுள் நாட்களைச் செலவிட வல்லார்; மற்றையோர் பீதியும் மனச் சஞ்சலமுமுற்று வாடிக்கிடப்பர். மக்களாய்ப் பிறந்த நாமெல்லோரும் முழு சுகத்தையுமடைய முயலவேண்டும்; நோயணுகா வகை தேடவேண்டும். தேகக் கூறுக்கொத்தவாறு உண்டி உடை முதலியவைகளை யமைத்துக் கொள்ளவேண்டும். ஒருவனுக்குக் கால தேச வர்த்தமான வித்தியாசத்தால் ஏதாவது நோயணுகும் பக்ஷத்தில், அதனை யவன் உடனே (Nip it in the bud என்னும் ஆங்கிலப் பழமொழியின் பிரகாரம்) முளையிலேயே கிள்ளியெறிந்துவிட வழிதேடவேண்டும். அப்படிச் செய்யத் தவறினாலோ, அந்நோய் முதிர்ந்து உயிர்க்கே தீங்கை விளைவித்து அகாலமரணத்தை யடைவிக்கும் எமதூதர்களுக் கொப்பான விஷசுரம் முதலிய கொடுநோய்கள் வரும்பொழுதே தக்க மருத்துவரைக்கொண்டு மருந்துகள் குடித்துண்டு பத்தியத்திற் பிசகாது அந்நோய்களை ஒழிக்கவேண்டும். பத்தியத்திற்குப் பழுது நேரிடில் நோய் குணமடையாது மேலும் மேலும் விருத்தியாகி நோயாளியைப் பேராபத்திற் சிக்கவிடும்.

இற்றை ஞான்று சித்தர் சாஸ்திரப் பயிற்சியிற்றேர்ந்த மருத்துவர்கள் ஒரு சிலரேயுளர். ஆயினும், புண்ணியக் குறைவாலோ வேறெந்தக் காரணத்தாலோ அவர்களது பாண்டித்ய விசேஷம் உலகத்துக்குத் தெரிவதில்லை. அவர்கள் புற்றிலுள்ள நாகம்போல மறைந்திருப்பர். நமது தாய்நாடாகிய இந்தியா தேசத்தில் கணக்கற்ற வயித்தியர்கள்—ஆங்கில, ஆயுர்வேத, யூநாநி வயித்தியர்கள்—எங்குப் பார்த்தாலும் காணப்படுகின்றனர். பெரும்பாலும் அவர்கள் அவ்வித்தையை அரைகுறையாகக் கற்றபோலி மருத்துவர்களே (Quacks) யாவர். பரம்பரையாகச் சில மருந்துகளைக் கையாடிவரும் சில மருத்துவர்களுமுண்டு; அவர்களுக்குச் சாத்திரப் பயிற்சியே கிடையாது. அவர்கள் ஒரே ஒரு மருந்தை எல்லாவித நோய்களுக்கும் முன்பின் யோசியாது பிரயோகஞ் செய்துவிடுவார்கள்.

ஆதலால், நோயாளிகள் மருத்துவர்களையமைத்துக் கொள்வதில் அதிக எச்சரிக்கையுடையவர்களா யிருக்கவேண்டும். ஏனெனில், அவர்களது உயிர் வாழ்விற்கோ சாவிற்கோ அம் மருந்துவர் கையிலொப்புவிக்கப் படவேண்டுமன்றோ? அதுபற்றி நாம் சுகாதார விதிகளைச் செவ்வையாக அனுஷ்டிப்போமானால், உண்மை மருத்துவர்களைத் தேடிப் பிடிக்கும் கஷ்டங்களுக்குள்ளாக மாட்டோமென்பது திண்ணம்.

நோய் வாராது தடுப்பதற்கு முதற்காரணமாயுள்ளது மனச் செம்மையே. நமது மனம் நம்மைக் கெட்ட வழியிற் செலுத்தாது பாதுகாக்கப்படவேண்டும். சன்மார்க்க நெறியிற் செலுத்தும் மனத்தூய்மையே நோயணுகாமைக்கு ஆதாரமாகிறது நாகரிகம் தலையெடுத்திருக்கும் நம் தேசத்தில் இக்காலத்தில் ஆயிரக்கணக்கான மரணங்கள்—அநேகமாக, அகால மரணங்கள்—சம்பவிக்கின்றன.

ஒரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் அத்தகைய அகால மரணங்கள் அபூர்வமாக நிகழ்ந்தன. பெரும்பாலும் பண்டையோர் மூப்பினாலே சாக்காடெய்தினர் என்பது யாவரும் அறிந்ததொரு விஷயம். ஆண்டுகள் பல ஒவ்வொன்றாய்ச் செல்லச் செல்ல அநியாயச் சாவுகள் ஏற்படுகின்றன. என்னே தற்கால நாகரிகம்? நம் தேசாசாரத்திற் கொவ்வாத நடையுடை பாவனைகள்! நம் தேச சீதோஷ்ண ஸ்திதிக் கொவ்வாத உண்டிகள், பானகங்கள்!

கிராமவாசிகளும் நாருசிகொண்டு நாற்காத தூரம் நகரக் காப்பி ஹோட்டலுக்கு ஓடுகிறார்கள்! மகா தரித்திரரும் கண்காட்சியின் பொருட்டு வாராவாரம் பயாஸ்கோப்புகளிலும், நாடகங்களிலும் ஆஜராகிறார்கள்! நகரத்திலோ சாலைக்குச் சாலை, வீதிக்கு வீதி, சந்துக்குச் சந்து காப்பிக் கடைகள் காலை 5-மணியிலிருந்து இரவு 9 மணி வரையிலும் சிற்றுண்டிகள் ஓயாது வழங்கினபடியே இருக்கும். இதுவோ தற்கால நாகரிகத்தின் ஏற்றம்!

மொழிநூலாராய்ச்சி யுடையார் 'நாகரிகம்' என்னும் பதத்திற்கு 'காப்பிக் குடித்தல்' என்பது லக்ஷியார்த்தமெனக் கண்டுகொண்டனர். நம் தேசத்தவர்கள் என்றைக்கு இந்தக் காப்பிக் குடியை நிராகரிக்கிறார்களோ அன்றைக்கே அவர்களுக்கு நல்லகாலம் பிறந்துவிடும். அது கூடுமோ கூடாதோவெனும் விஷயம் வாசகர்களுக்கே ஒருவாறு தெரியுமென விடுகிறேன்.

முடிவாகக் கூறும் விஷயம் ஒன்றுளது. எவனொருவன் மேனாட்டுக் கம்பள (flannel) முதலிய வுடைகளை யொழித்து நம் நாட்டுப் பருத்தியுடைகளை யணிகிறானோ அல்லது அணிவானோ, எவனொருவன் மேனாட்டுக்காப்பி முதலிய பானகங்களை நீக்கி, நீராகாரம், சுக்கு நீர் முதலிய பருகுகிறானோ அல்லது பருகுவானோ, எவனொருவன் மேனாட்டாசாரங்களை விலக்கி நம் தாய்நாட்டாசாரங்களின்படி ஒழுகுகிறானோ அல்லது ஒழுகுவானோ, அவனே நாகரிகமடைந்தவனாவான்; நீண்ட ஆயுளையுடையவனாவான்; மருத்துவர்களினுதவி அவனுக்கு ஒருபோதும் வேண்டியிராது.

நண்பர்காள்! நீவிர் இனியேனும் காப்பிக் குடித்தல் என்னும் கொடிய வழக்கத்தைக் கைவிட்டுச் சுக்கு நீரையாவது, அல்லது வெண்டாமரைப்பூ பரங்கிச் சக்கை முதலிய கடைச் சரக்குகளினாலாய பானகத்தையாவது பருகித் தேகசுகம் உன்னத நிலையையடைய முயலுவீர்களென்பது என் கோரிக்கை—ஈசனருளும் அங்ஙனமே யாகுக.

யதார்த்தவாதி.

## குடும்ப வைத்திய முறைகள்.

நிலவேம்பு, சோரைக் கிழங்கு, பற்பாடகம், கடுகுரோகணி, சிற்றில்கொடி இவைகளை இடித்துக் கஷாயம் செய்து சாப்பிட்டுவர எவ்வளவு நாள்பட்ட சுரமும் நிவர்த்தியாகும்.

மேற்படி கஷாயத்தில் 4, 5 துளி விளாவின சங்கு திராவகம் சேர்த்துச் சாப்பிட்டுவரில் சுரக்கட்டி நிவர்த்தியாகும்.

ஆவாரம்பட்டை, கடாரஞ்சிப் பட்டை, மருதம் பட்டை, நாவல்கொட்டை, மேற்படி பட்டை பாதிரிவேர், மரமஞ்சள், கல்நார், குரோசாணி, ஓமம் இவைகளை இடித்துக் கஷாயம் செய்து சாப்பிட்டுவர மதுமேகம் தீரும்.

வெண்ணாவல் விதையும் படிகாரமும் பொடித்து காசிடை வீதம் சாப்பிட்டுவர நீரிழிவு குணமாகும்.

படிகாரமும் வால் மிளகும் பொடித்து காசிடை வீதம் சாப்பிட்டால் நீருடன் இரத்தம் பெருகும் இரத்தப் பெருமேகம் குணமாகும்.

படிகாரம், நெல்லிமுள்ளி, கல்கண்டு மூன்றும் சூரணித்து சாப்பிட்டுவர வெட்டைச்சூடு நீங்கும்.

வெள்ளெருக்கன் செடியில் வசிக்கும் வெட்டுக்கிளியைப்பிடித்து சிறகு கால் நீக்கி உலர்த்தி வறுத்துக் கொஞ்சம் மிளகு சேர்த்துப் பொடித்து ஆக்கிராணரசியம் செய்தால் காக்கைவலி குணமாகும்.

படிகாரம், கல்மதம் இவ்விரண்டும் சரி இடை சோற்றுக் கற்றாழைச் சாற்றாலரைத்து வில்லை செய்து அகலில் வைத்து 50 விறுட்டியில் புடமிட்டரைத்து இரண்டு நெல் இடை வீதம் வெண்ணெயில் சாப்பிட்டுவர அஸ்திவெட்டை நீங்கும்.

எட்டிவேரைச் சீவிப்போட்டு எட்டிலொன்றாய்க் கஷாயம் காய்ச்சி வீசம் சேர்வீதம் ஆறுநாள், ஆறுவேளை கொடுக்க சங்காதோஷமென்று பிரமிக்கும்படியான இசிவு வலிப்புடன் கூடிய நுதுநூலைசூதக ஜன்னி குணமாகும். (இஸ்டிரியா) அநுபவம் பொய்யான போலி மந்திரவாதிகளுக்குப் பிழைப்பைக் கொடுக்குமிக் கொடியநோய் குணமாகும்.

ஜீ. கண்ணுசாமி,
முனிசிபல் தமிழ் வைத்தியர், திருவாரூர்.



# மாணவர் பகுதி

## சநாதனன்
அல்லது
### சுயநலங் கருதாச் சுகுமாரன்
### "தந்தை தாய்ப் பேண்"

பஞ்சத்தால் பாழ்பட்ட ஜில்லாக்கள் பலவற்றுள் ஒரிஸ்ஸா ஒன்றாகும். 1866 ம் ஆண்டில் ஒரு பெரும் பஞ்சம் அந்த ஜில்லாவைத் தாக்கி மூன்று வருடங்களாக அங்கு நிலைத்து, ஜீவராசிகளை நசுக்கி வாட்டிற்று. மழையென்பதே அங்குத் தலைகாட்டவில்லை. ஆகவே,

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி"

என்னும் பொய்யாமொழிக் கிலக்காகக் குடிகளெல்லாம் ஆகாரமின்றிப் பசிப்பிணியின் வாய்ப்பட்டு அல்லலுழன்றனர்; வெளுத்த வானத்தையும் வரண்ட நிலத்தையும் பார்த்துப் பார்த்துப் பதறினர். மரங்களெல்லாம் தீய்ந்தன; புல் பூண்டுகளெல்லாம் சாய்ந்தன. பசுமையான நிலங்கள் குதிரைக் கொம்பாயின. பக்ஷிகள் இறையும் இடமுமின்றுச் சுருண்டு விழுந்து மடிந்தன. மச்சங்களும் கழிக்கரைகளில் குவிந்தன. ஆயினும் வருணபகவானுக்குக் கருணை பிறந்திலது. சூரியனோ ஜீவராசிகளைச் சுட்டெரித்தான். கஷ்டங்களோ அதிகரித்தன. அப்போது தரித்திரர்கள் மட்டுமன்றித் தனவந்தர்களும் பலவித கஷ்டங்களுக்காளாயினர். பல கிராமங்களில் தானியமே இல்லாமற் போயிற்று. அடுத்த கிராமங்களிலிருந்து தானியங்கொண்டுவர வசதியுங் கிடையாது. அதனால், அந்தோ! பல நாட்களாக ஒரு பருக்கையன்னம் கூட இல்லாமல் பதைபதைத்து இறந்த குடும்பங்கள் எண்ணிறந்தன. திரண்ட செல்வமுடையவர்களுக்கும் உணவு கிடைப்பதரிதாயிற்று. தங்கத்திற்கும் தவிடு கிட்டுவது அசாத்தியமாயிருந்த அப்பொழுது பணத்தால் என்ன குணம்? இத்தகைய கஷ்டங்களுக் கிடையிலும், சூரியனது கொடுமைக்குத் தப்பி வறளாது கிடந்த சிறு திட்டுக்கள் போல, சில புண்ணிய சீலர்கள் ஜனங்களுக்கு உபகாரம் புரிந்தனர். ஆயினும் போக்கு வரவு வசதியும் தக்க பாதைகளும் பிறக்காதிருந்த அக்காலத்தில் அவர்களுடைய உபகாரம் எம்மட்டு?

இத்தகைய கஷ்டங்கள் நிறைந்த அக்காலத்தில் அஜ்ஜில்லாவின் ஒரு சிறு கிராமத்தில் சநாதனன் என்னும் ஓரேழைச் சிறுவன் தனது தாய் தந்தையரோடும் தம்பியோடும் ஒரு சிற்றகத்தில் வசித்தான். ஜில்லா முழுவதையும் வாட்டி வருத்திய அப்பஞ்சம் சநாதனனது குடும்பத்தையும் விட்டிலது. அக்குடும்பத்தினரும் அளவற்ற கஷ்டங்களுக்கு ஆளாயினர். அவர்களுடைய சிறு நிலம் இரண்டு முறைகளாகப் பயன்தாவில்லை. ஆடுமாடுகளும் அவர்கள் உணவுக்காக விலைபோயின. தாயும் தந்தையும் தங்கள் பாகத்தை மக்களுக்கீந்து மாதக்கணக்காகத் தினமொரு பிடியன்னமே புசித்தனர். அவர்களது குடும்ப நகைகளையும் விற்று உணவு வாங்கினர். ஆயினும் அந்தச் சொற்ப உணவு எத்தனை நாளைக்கு வரும்? பின்னும், பணத்திற்கு உணவு கிட்டாத நாளும் வந்து விட்டது. ஆதலால் மறுநாளுணவு பெறும் வழி யறியாது பெற்றோர் திகைத்தனர்.

அதனை யறிந்த சநாதனன் இனித்தான் உணவு தேட வேண்டுமென எண்ணங்கொண்டான். ஆகவே, அவன் மறுநாள் ஒருவரும் அறியாவண்ணம் வீட்டை விட்டுப் புறப்பட்டு, நாள் முழுவதும் கதிரவனது கொடிய கிரணங்களால் தீய்க்கப்பட்டு, ஏதாவது உணவுக்காக அலைந்து திரிந்து, முடிவில் இளைத்த காலுடனும் களைத்த முகத்துடனும் வீடு வந்து சேர்ந்தான். அவனது ஆயாசத்தைக் கண்ட அவனன்னை அவனுக்கு ஒரு பிடி யன்னமளித்தாள். அதையவன், "அம்மா, நான் இன்றைக்கு வயிறாறப் புசித்து வந்தேன்; இது எனக்கு வேண்டாம்" எனக்கூறி, மறுத்தான். தனது அருமைப் புதல்வனின் அறிவான வார்த்தைகளைக் கேட்ட தாயின் கண்களில் நீர் பெருகிற்று. பின்பு, தனது பாகத்தைத் தன் தம்பி உண்ணக் கண்ட நமது உத்தமச் சிறுவன் உவப்பெய்தினான்.

ஒவ்வொரு நாளும் சநாதனன் இங்ஙனமே விடியற்காலையில் வீட்டைவிட்டு இறை கொணரச் செல்வான். சில நாட்களில் வெறுங்கை

யோடு வீடு திரும்புவான். ஏதாவது இலை, கனி, ஒருபிடி மாவு முதலிய கிடைக்கும் நாட்களில் அத்தனை மலர்ந்த முகத்துடன் கொண்டு வந்து தனது மாதாவிடம் கொடுத்து மகிழ்வான். இங்ஙனம் சில நாட்கள் சென்றன. அவனது தந்தைக்கோ அடியெடுத்து வைப்பதும் அசாத்தியமாயிற்று. அவர், தான் இருப்பதால் ஒருதவியும் தன் குடும்பத்திற்கில்லை என்றும், தான் இல்லாவிடில் தன்னுடைய பாகம் தன் மக்களுக்குக் கிடைத்து அவர்கள் பசியை ஆற்றுமென்றும் உணர்ந்தார். ஆதலால் அவர் ஒரு நாள் தன் மனைவியை யழைத்து, "என் அருமைக் காதலியே, நான் ஒரு பிரயாணம் செய்யப் போகிறேன். கடவுள் உங்களைக் காப்பாராக!" எனக் கூறிவிட்டு நகர்ந்து கொண்டே தன் வீட்டை விட்டு அருகிலிருந்த ஒரு காட்டுக்குச் சென்றார். அந்தக் காட்சி அவர் மனைவிக்கு வெந்த புண்ணில் வேலுருவியது போலிருந்தது. ஏனெனில், அவர் கூறிய பிரயாணம் எதுவென அவளுணர்வாள். அது சென்றவர் திரும்பி வாராத பிரயாணமேயாம்.

சீக்கிரத்தில் அவளுக்கும் படுக்கையை விட்டு எழமுடியாதநிலை வந்தது. அந்தோ! குடும்ப பாரம் முழுதும் இப்பொழுது நமது இளைஞன் தலையிலேயே விழுந்தது. அவன் தம்பியைத் திருப்தி செய்வானா, தாயைத் தேற்றுவானா? இத்தனை இடுக்கண்களும் அவனது தைரியத்தைக் குறைத்தில. அவன் தனது வழக்கத்தை விடாது தினமும் வெளியில் உணவு சம்பாதிக்கச் செல்வான். நல்ல வேளையாக ஏதாவது ஒரு சிறிது கிடைத்தால் அதைத் தன் தம்பிக்கும் தாய்க்கும் கொடுத்துத் திருப்தியடைவான்.

ஐயோ பாபம்! அத்தகைய நாட்களும் ஒழிந்தனவே. இனி என்ன செய்வான்? தனது தாயின் உடலில் ஊசலாடிக் கொண்டிருந்த குற்றுயிரைக் காப்பாற்ற எவரிடம் உணவு கேட்பதெனத் தெரியாது திகைத்தான். தானோ எலும்பு மனிதனானான். தனது தம்பியோ அழுத வண்ணமிருந்தான். பல தினங்கள் ஒரு சிறிது உணவுமின்றிக் கழிந்தன. இத்தனை கஷ்டங்களுக்கிடையிலும் தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்த சநாதனன் தனது முயற்சியினின்றும் பின் வாங்கினானில்லை. அவனது தசையற்ற மெல்லிய கால்கள் அவனைத் தாங்காவாயினும் அவன் யாராவது ஒரு பிடி யன்னம் கொடுப்பார்களா என்னும் ஆவலுடன் வெகு தூரம் தள்ளாடிக் கொண்டே செல்வான்.

ஒரு நாள் அவன் பெருங்கஷ்டத்துடன் தன் வீட்டை விட்டு உணவுதேடும் நோக்கத்துடன் வெகு தூரம் சென்றுவிட்டான். நடந்த களைப்பினால் தெய்வாதீனமாகக் கதிரவனது கிரணங்களுக்குத் தப்பியிருந்த ஒரு மரத்தடியில் சற்றுப் படுத்து இளைப்பாறினான். அவனுக்கருகில் ஒரு மாது பக்கத்துக் கிராமத்திலிருந்து வாங்கி வந்த சிறிது அரிசியைச் சமைத்துக் கொண்டிருந்தாள். அந்த வாசனையை யுணர்ந்த சநாதனனுக்கு அளவிலாத ஆவல் எழுந்தது. உடனே அவன் அவளிடம் மெல்லச் சென்று, "அம்மணி, நான் சாப்பிட்டு மூன்று நாட்களாயின, ஒரு பிடி அன்னம் கொடுத்தால் நலமாகவிருக்கு" மெனக் கெஞ்சினான். கருணை மிக்க அம்மாதும் தான் சமைத்ததில் சிறிது தந்தாள். அதனை அவன் அவளெண்ணியபடி ஆத்திரத்துடன் உண்ணாது தனது கந்தற் குட்டையில் ஒரு துண்டு கிழித்து அதில் பத்திரப்படுத்தி வைப்பதைக் கண்டு அவள் ஆச்சரியங்கொண்டாள்.

உடனே, சநாதனன் அநேக மைல் தூரத்திலிருந்த தனது வீடு நோக்கிப் புறப்பட்டான். ஓடி எடுத்து வைப்பதென்றால் அவனுக்குப் பகீரதப் பிரயத்தனமாக விருந்தது. அவனது பாதங்களோ சூரியனது அதிகாரத்தை யெல்லாம் தாமே பெற்றதுபோல் காய்ந்த சுடுமணலில் நடந்ததனால் கொப்பளித்தன. ஆயினும் அவற்றையெல்லாம் கவனியாது அவ்வருமைக் குமாரன் கைகளை யூன்றி நகர்ந்து நகர்ந்து சென்றான். நடுவில் அவனுக்குத் தான் வைத்திருந்ததில் ஒரு பருக்கை சாதத்தை உண்ண அடக்க முடியாத அவாவெழுந்தது. ஆயினும் மறுகணத்திற்கெல்லாம் பசியால் வருந்தும் அவனது தாயைப்பற்றிய கவனம் அவனது ஆசையை யடக்கிற்று. வெகு நேரம் ஆய் விட்டது; ஆதவனும் சநாதனனைச் சுட மனமில்லாது கருணைகொண்டவன் போல் அத்தமித்தான். பகலும் போயிற்று, இரவும் வந்தது. ஆனால் சநாதனன் மாத்திரம் தன் வீட்டினின்றும் வெகு தூரத்திலிருந்தான். களைப்புமீறியதால் அவன் சாலை ஓரத்தில் சற்று அயர்ந்தான். அப்பொழுது அவனுக்குச் சீக்கிரமெழுந்து தாய்க்கு உணவு கொண்டு போவோமென்னும் எண்ணம் பூரணமாகவிருந்தது. தான் வைத்திருந்த மூட்டையைத் தன் சட்டையில் பத்தி



ரப்படுத்தி வைத்துக் கொண்டான். படுத்தவுடனே அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை; துயில் கொள்ளப் பேரவா உண்டாயிற்று. ஒரு நக்ஷத்திரத்தை உற்றுப் பார்த்தான். தன் தகப்பன் தனக்கருகிலிருப்பதாகத் தெரிந்தது. ஆமாம், அவன் தனது தகப்பன் சென்றவிடத்திற்குத் தான் செல்லப் போகிறான். சிறிது நேரத்திற்கெல்லாம் அயர்ந்து துயின்றான்.

அந்தோ! பரிதாபம், படுத்த சநாதனன் மறுபடி எழவேயில்லை. சந்திரனும், அவன் தன் தாய்க்காக தன் நலத்தையும் ஒழித்த அருஞ்செய்கைக்காக மெச்சினது போல் அவன்மீது தனது குளிர்ந்த கிரணங்களைப் பொழிந்தான். மறுநாள் அவ்வழியே சென்ற ஒரு பெரியார் அவன் உயிரோடிருக்கிறானா எனப் பார்த்தார். அவன் தன்னிடத்தில் உணவிருந்தும் பசியாலிறந்தமைக்குக் காரணம் தெரியாது ஆச்சரியப்பட்டார். நமது சநாதனன் தன் தாய்க்காகக் கொண்டுபோன உணவைத் தான் உண்ணலாகாதென்றெண்ணித் தன்னலத்தைக் காட்டிலும் தன் தாய் நலத்தையே எண்ணினான் என்றும் அவர் பின்னர் உணர்ந்திருப்பார். இவனன்றோ தன் தாய்க்குகந்த குமாரன்? இவனது செய்கையன்றோ பொன்னினும் மணியினும் மேம்பட்டது, பல்லோராலும் புகழப்படுவது?

**இக் கதையால் உணரக்கிடக்கும் சில நீதிகள்.**

இவ்விளைஞன் புகழுடம்பெடுத்தற்குக் காரணமாய் நின்றவை அவன் தன்னலத்தை யொழித்தமையும், தன் தாயிடத்துத் தான் கொண்ட அன்புமன்றோ? ஆஹா! இத்தகைய குமாரர்களைப் பெறும் புண்ணியர்கள் மனம் எங்ஙனம் களிக்கும்! இத்தகையோரன்றோ "இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும் சொல்" லைத் தமது தந்தைகளுக்கு ஆற்றும் மக்கள்? தாயைக் காப்பாற்றலாகிய தனது முக்கிய கருத்தை நமது சநாதனன் தன்னலத்திற்கு ஊறு வந்த காலத்தும் விடாது செய்ய எத்தனித்தது புத்திமான்களாற் பாராட்டற் பாலதேயாம். "இவனது இருதயத்தில் திகழ்ந்த இவ்வருங்குணமாகிய மாணிக்கத்தின் ஒளி நம்மீதும் வீசாதோ! நாமும் இத்தகைய அரும்பெருஞ் செயல்களைச் செய்யேமோ!" என்னும் எண்ணத்தின் வித்தை நாம் இவனிடமிருந்து எடுப்போமாக. இம்மாதிரியான செய்கைகளாலேயே நாம் புகழுடம்பெய்தலாம். இல்லாவிடில் புகழ்பெற எத்தனிப்பது வாரிதியை ஓடமின்றித் தாண்டச் செய்யும் எத்தனமேயாம். புகழிலாப் பிறப்பு இகழ்ச்சியுடையதேயாகும். புகழிலாவிடில் நாமும் மிருகங்களைப் போலவேயாவோம். அதனாலன்றோ நமது செந்நாப்புலவராகிய திருவள்ளுவனாரும்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

என அறைந்துளார்?

முன்காலத்தில் பஞ்சமானது பலநாடுகளையும் நகரங்களையும் படுத்தியபாடு ஏட்டிலடங்காது. அதனால் கணக்கற்ற நகரங்கள் அழிந்து போய் இருந்த விடமும் தெரியாமற் போயின. அத்தகைய நகரங்கள் இப்பொழுது தோண்டியெடுக்கும்பொழுது அகப்படுகின்றன. அவற்றில் உட்கார்ந்த வண்ணமும், படுத்த வண்ணமும், பல விதமாக மனிதர் எலும்பு கூடுகள் கிடக்கின்றன. இதனால் பல குடும்பங்கள் மொத்தமாக இறந்திருக்க வேண்டுமென்றும் அவர்களை எடுத்து அடக்கம் செய்வதற்கும் ஆட்கள் இல்லாது இருந்திருக்கவேண்டுமெனவும் தெரிகிறது. அக்காலங்களில் அடுத்த கிராமங்களிலாவது நகரங்களிலாவது வேண்டிய உணவு இருந்திருக்குமாயினும், அவைகள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட நகரங்களுக்கோ கிராமங்களுக்கோ கொண்டு வருவதற்கேற்ற வசதியும் தக்க சீர்திருத்தங்களும் இருந்திரா. அப்பொழுது மரம் செடி கொடி முதலிய தீய்ந்தும், மிருகங்களும் பக்ஷிகளும் வாடி மடிந்தும் போயின. மனிதர்கள் ஆயிரக்கணக்காக இறந்தனர். அப்பஞ்ச காலங்களில் பெருந்தொகையான பணத்திற்கும் உணவு கிடைக்காமற் போயிற்று. பத்துவராகனுக்கும் ஒருபடி அரிசி கிடைக்காமற் போயிற்றென்றும், ஜனங்கள் எரும்புகளின் வளைகளிலிருந்து அரிசி எடுத்து உபயோகித்தனரென்றும் நாம் இப்பொழுது கேள்விப்படுகிறோமல்லவா? அப்பொழுது ஜனங்கள் எத்தகைய கஷ்டங்களுக்கு ஆளாகியிருப்பார்களென நாம் எண்ணிப் பார்ப்போமானால், நமது உள்ளங்களில் பரிதாபப் பிரவாகங்கள் பெருகும். அப்பொழுது அத்தகைய கஷ்டங்களெல்லாம் இருந்திருக்க, நாம் இப்பொழுது பஞ்சமென்கிறோம். இது ஒரு பஞ்சமாகுமா? இப்பொழுது ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்திலிருந்து உணவுச் சாமான்கள் மட்டுமன்றி, மற்றைய சாமான்களும் ஓய்வின்றி வந்துகொண்டேயிருக்கின்றன. ஒரு நாட்டில் தானியமில்லையென்றால் வேறு நாட்டிலிருந்து வருகிறது. ஆகையால் இப்பொழுது எந்த நாட்டிலும் தானியமில்லை என்கிற சங்கதி

நாம் கேட்பதில்லை. இப்பொழுது பணத்தைச் செலவிடுவோமானால் எத்தகைய பொருளும் கிடைக்கிறது. அப்பொழுதோ ஒரு ரூபாவுக்கு ஒரு கோழி முட்டை யவ்வளவு அரிசியும் அகப்படவில்லையாம். அப்பொழுதிருந்த பஞ்சத்திற்கும் இப்பொழுது நாம் இருக்கிறதெனச் சொல்லும் பஞ்சத்திற்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. அதையுமிதையும் ஒத்திட்டுப் பார்ப்போமாயின் இப்பொழுது நாம் சொல்வது சூரியன் முன் மின்மினியேயாகும்; திரை கடல் முன் சிறுதிவலையேயாகும். இத்தகைய வசதிகளையெல்லாம் நமக்கு ஏற்படுத்தியுள்ள சர்க்காராருக்கு நாம் கடமைப்பட்டவர்களாகிறோம். இவை யெல்லாவற்றிற்கும் காரணபூதராயிருக்கும் ஒரு முழுமுதலுக்கு நாம் எவ்வளவு நன்றியறிதலுடையவர்களாக இருக்க வேண்டுமென்பது சற்று யோசிப்பின் நன்கு புலப்படும். ஆகவே, நாம் என்றும் நமது அப்பன் அறுமுகனை அன்போடு போற்றுவோமாயின் அவர் நமக்கு இன்னும் பல வசதிகளையும் அளித்தருள்வார்.

ஜெ. தங்கவேல்.

## விகடக் களஞ்சியம்

**உபாத்தியாயர்:**—ஒரு தகப்பனார் தன்னிடமிருந்த 20 லக்ஷ ரூபாய்களைத் தன் மூத்த பிள்ளைக்கு 6 லக்ஷமும், இரண்டாமவனுக்கு 3 லக்ஷமும், மூன்றாமவனுக்கு மீதியும் கொடுத்தால் கடைசி பிள்ளைக்கு என்ன வரும்?

**கோவிந்தன்:**—மூன்றாமவனுக்கு கர்வம் வரும்.

—

**உபாத்தியாயர்:**—இந்த ஊரில் பெரிய பணக்காரன் வீட்டிற்கும் மூன்று மெத்தைகள் தான் இருக்கின்றன.

**முருகன்:**—எங்கள் வீட்டில் 10 மெத்தைகளிருக்கின்றனவே.

**உபா:**—மெய்யாகவா?

**முருகன்:**—ஆமாம்; நான படுத்துக்கொள்வதொன்று, எங்களப்பாவுக்கு ஒன்று, அம்மாவுக்கொன்று, அண்ணன், தங்கை, மாமா, மாமி, அக்காள், அத்தான், ஆயாள் முதலிய எழுபேருக்கு எழு, ஆக மொத்தம் 10.

—

**ஒரு உத்தியோகஸ்தர்:**—என்ன கலிகாலம் சார்! இங்கிலாந்தில் பெண்கள் தங்கள் புருஷர்களை வலிச்சண்டைக் கிழுத்து உதைக்கிறார்களாமே.

**நண்பர்:**—அப்பொழுது என் மனைவி பரவாயில்லை. அவள் நான் அடித்தால்தான் திருப்பி அடிக்கிறாள்.

—

**பங்கஜவல்லி:**—ஏனம்மா, இந்த ஊரில் யாரோ சாமியார் வந்திருக்கிறாராமே அவர் எப்பேர்ப்பட்டவரென்று உங்களுக்குத் தெரியுமா?

**மீனாக்ஷி:**—அவர் மிகவும் நல்லவர். அவர் ஒரு வேளைக்குப் பத்து வாழைப்பழங்களும முக்கால்படி பாலும் தவிர வேறொன்றும் சாப்பிடுவதில்லை.

—

**ஒருவன் (அமெரிகாவில்):**—(எருமைகளை ஓட்டிக் கொண்டு போகும் ஒரு பெண்ணைப் பார்த்து) அம்மா! உங்கள் தெருவில் இருக்கிற கனகாங்கியைத் தெரியுமா?

**பெண்:**—தெரியும்; எதற்காகக் கேட்கிறீர்?

**ஒருவன்:**—கனகாங்கிக்கு ஒரு முத்தப்பரிசு கொடுத்தனுப்பவேண்டும். அதை உன்னிடத்தில் கொடுத்தனுப்பட்டுமா?

**பெண்:**—ஐயா, என்னைக்காட்டிலும் இவ்வெருமைகள் முந்திபோய்ச் சேரும். ஆதலால், அவைகளிடத்தில் கொடுத்தனுப்பும்.

—

**நவாப் தர்பார்:**—நவாபினிடத்தில் 50 காணியினும் வாங்கிய ஒரு பக்கிரிக்குப்பட்டாசெய்து வைப்பதற்காக கணக்கப்பிள்ளை ஒரு காணி லஞ்சம்கேட்க அதை நவாபினிடத்தில் சொல்லிவிடுவதாக மிரட்டினாராம். அதனால் கணக்கப்பிள்ளை பக்கிரிக்கு 50 காணியையும் மைனுக்கு வீசங்காணியாக எழுதிவைக்கப் பக்கிரி கோபங்கொண்டு தன்னிலத்தை கணக்கப்பிள்ளை தாராதாரமாக எழுதி வைத்ததாக நவாப் தர்பாரில் பிராது செய்தார். விசாரணையில், கணக்கப்பிள்ளை ஓலைச்சுவடியைக் காட்டி (எழுத்துக்களை) 'ஒன்றன் பக்கத்தில் ஒன்றாய் நெருக்கமாய் எழுதியிருக்கிறேன் பக்கிரிசாயபு தெரியாமல் சொல்லுகிறார்' என்று சொல்ல, நவாப் பக்கிரி மேல் கோபங்கொண்டு கேசை டிஸ்மிஸ் செய்துவிட்டார்.

—



**கந்தன்:**—குமரா! உன்பாக்கியமே பாக்கியம் உனக்கு எத்தனையோ மித்திரர்களிருக்கின்றனர். நான்தான் ஒருவருமில்லாமல் தனியாகக் காலங் கழிக்கிறேன்.

**குமரன்:**—இவ்வளவுதானா? நீதான் பணக்காரனாயிற்றே; ஒன்றரை ரூபாய் கொடு; உனக்கு ஒரு நல்ல மித்திரனைச் சம்பாதித்துத் தருகிறேன்.

**கந்தன்:**—அப்படியா, அவன் பெயரென்ன எப்பேர்பட்டவன்?

**குமரன்:**—அவன் பெயர் 'செங்குந்த மித்திரன்.' அவன் நான் சொன்ன தொகை கொடுத்தால் ஒருவருடம் வரை மாதமொரு முறை உன்னைவந்து காண்பான். அப்பொழுதெல்லாம் செங்குந்தர்களைப்பற்றிய விஷயங்களெல்லாவற்றையும் இனிமையாகச் சொல்வான்.

## செங்குந்தர் கிளர்ச்சி

கிளைச்சங்கங்களின் நடவடிக்கைகளும், புதுச்சங்க ஸ்தாபனங்களும் போலியர்க்கு மறுப்புக்களும்,

### செங்கற்பட்டு ஜில்லாவில் கிளர்ச்சி.

### காஞ்சிச் செங்குந்தர் இரவுபாடசாலைத் திறப்பு விழா.

சென்ற பிப்ரவரி 5௳ காலை காஞ்சி வாலிபர் சங்கத்தின் ஆதரவில் செங்குந்தர் இரவு பாடசாலைத் திறப்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. பாடசாலை வைக்கவேண்டிய இடமும் சங்கம ஸ்தாபித்துள்ள இடமும் தழைகளாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. சரியாக காலை 7 மணிக்குத் தலைவர் ஸ்ரீ. எ. ராமானுஜம் ஐயங்காரும், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. பி. சீதாராமய்யரும் மற்றும் பல பிரமுகர்களும் விஜயஞ் செய்திருந்தனர். அனைவருக்கும் மாலைகள் சூட்டப்பட்டு வாத்தியங்களோடு ஊர்வலமாகப் பாடசாலை வைக்கவேண்டிய இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு செங்குந்த பிரமுகர்கள் பெரும்பாலோர் வந்திருந்ததோடு முனிசிபல் கவுன்சிலர்களான ஸ்ரீமான்கள் டி. பரமசிவ முதலியார், வை. விநாயகமுதலியார், முனிசிபல் கவுன்சிலரும் கவர்ன்மெண்டு ஸ்திரீ டிரெயினிங் ஸ்கூல் தலைமை உபாத்தியாயினியுமான ஸ்ரீமதி அம்மா குட்டியம்மாள், பி.ஏ., எல்.டி., யும், ஆனரரி மாஜிஸ்ரேட் திரு. அப்பாராவுகவினரும் மற்றும் ஸ்ரீமான்கள் டி.சி. ரங்கசாமி ஐயங்கார், ச. சிவஸ்வாமி தேசிகர், இராமலிங்க தேசிகர் முதலிய பலரும் விஜயம் செய்திருந்தனர்.

கடவுள் வணக்கம் முடிவுற்றதும் ஸ்ரீ பி. செ. மணிவாசக முதலியார் எழுந்து பச்சையப்பன் ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீ எ. ராமானுஜம் ஐயங்கார் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பாடசாலையைத் திறந்து வைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அவர்களும் அப்படியே தலைமைவகித்துப் பாடசாலையைத் திறந்து வைத்ததுமன்றி, மாணவர்களைப்பதிவுசெய்து அக்ஷராப்பியாசமும்செய்து வைத்தார். பிறகு காஞ்சிபுரம் பச்சையப்பன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ வி. திருஞான சம்பந்த முதலியார் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். உடனே டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ பி. சீதாராமய்யர், பி.ஏ., எல்.டி. 'மௌவன கல்வி' என்பதுபற்றி உபந்யசித்தார். பிறகு ஸ்ரீ டி. சி. ரங்கசாமிஐயங்கார் பாடசாலையின் ஒழுங்கைப்பற்றிச் சிறிது நேரம் பேசியபின் ஸ்ரீ ச. சிவசாமிதேசிகரால், வந்தனோபசாரம் கூறப்பட்டுச் சந்தன தாம்பூலம் முதலியன வழங்கியதும் 10-மணிக்குக் கூட்டம் கலைந்தது. தற்போது இப்பாடசாலையில் 90 மாணவர்கள் வாசிக்கிறார்கள்.

### ஐயன்பேட்டை செங்குந்தர் வளர்நிலை சங்கத்தின் நிருவாகச் சபைக்கூட்டம்.

21-2-28ல் நடந்த இச்சங்கத்தின் நிருவாக சபைக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

1. சங்கத்தின் பெயர் 'ஐயன்பேட்டை செங்குந்தர் வளர்நிலைச் சங்க' மென்றும்.

2. ஐயன்பேட்டை போர்டு பாடசாலையிலேயே சங்கம் கூடலாமென்றும் (காரிய நிலயம்).

3. நிருவாகசபை அங்கத்தினர்கள் வருஷம் 1-க்கு இச்சங்கத்திற்கு ரூ. 1-0-0 கட்டவேண்டுமென்றும்

சாதாரண அங்கத்தினர்கள் ரூ. 0-4-0 கட்டவேண்டியதென்றும்.

4 தலைச் சங்கத்திற்கு இச்சங்கம் அனுப்பவேண்டிய வருஷக் கட்டணம் ரூ. 10-0-0 என்றும்.

5. நிருவாக சபைக்கூட்டம் பிரதி இங்கிலீஷ் மாதம் மூன்றாவது ஆதிவாரம் கூடவேண்டியதென்றும், பொதுக் கூட்டம் பிரதி அமாவாசை தினங்களில் கூடவேண்டுமென்றும்.

6. சங்கத்தை நிர்வஹிக்கச் சட்டங்களைத் தலைச்சங்கத்தின் சட்டங்களை அனுசரித்து காரியதரிசிகள் அடுத்த கூட்டத்தில் நடத்தவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டு திரு. ம. தெய்வசிகாமணி முதலியாருக்கு 17-2-28-ல் தலைச் சங்கத்திலிருந்து வந்த லெட்டர்களையும் அப்ளிகேஷன் பாரம் முதலான பாரங்களையும் வாசித்து ரிக்கார்டு செய்யப்பட்டன.

7. தலைச் சங்கத்திற்கு நம் சங்கத்தைக் கிளைச்சங்கமாகச் சேர்த்துக்கொள்ள அப்ளிகேஷனில் கையொப்பங்கள் வாங்கப் பெற்று அப்ளிகேஷனைத் தலைச் சங்கத்திற்கு அனுப்ப தீர்மானிக்கப் பட்டது.

8. தாலுக்கா போர்டு கவர்ன்மெண்டு நாமினேஷனில் இந்த (வாலாஜாபாத்) பிர்க்காவுக்கு தலைவர் திரு. கை. காமகோட்டி முதலியார் நிற்கலாமென்று துணைத் தலைவர் திரு. வி. கச்சபால முதலியார் பிரேரேபித்து எல்லோராலும் ஆமோதிக்கப் பெற்றது.

9. கோயமுத்தூர் சங்கத்தார் காலித்தனத்தைக் கண்டிக்க 26—2—28 விசேஷ கூட்டம் கூடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

10. சங்க ஸ்தாபன விஷயத்தையும் நிருவாகசபை கூட்டத்தில் நடந்த தீர்மானங்களையும் தலைச் சங்கத்திற்கு அனுப்பும்படி காரியதரிசிகளுக்கு உத்திரவு அளிக்கப்பெறறுக் கூட்டம் இனிது கலைந்தது எனச் சங்க காரியதரிசி திரு. V. K. பழநி முதலியார் எழுதுகிறார்.

### ஐயன்பேட்டை செங்குந்தர் வளர்நிலைச்சங்கத்தார் போலியர் கூற்றுக்கு விடுத்த கண்டனம்.

1928 ஹு பிப்ரவரிமீ 26உ ஐயன்பேட்டை போர்டு ஆண்பாடசாலையில் இரவு 7-மணிக்கு ஓர் கூட்டம் நடைபெற்றது. சுமார் 250 செங்குந்த குலாபிமானிகள் குழுமியிருந்தனர். அச்சமயம் திருவாளர் கை. காமகோட்டி முதலியார் அவைத் தலைமை வகித்தார். அப்பொழுது காஞ்சிபுரம் திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார், அ. கந்தசாமி முதலியார், தி. முருகேச முதலியார், கரு மு. ஷண்முகமுதலியார் முதலிய அறிஞர்கள் செங்குந்தர் பண்டைப்புகழையும், தற்போதைய நிலையையும், சீர்திருத்திப் பழைய புகழுடைய முக்கியமான வழிகளையும், சுயநலத்தைக் கருதாமல் நம்மவர்க்கு உதவி செய்யும் தாலுக்கா போர்டு அபேக்ஷகருக்கே ஓட்டு கொடுக்கவேண்டு மென்றும் நீண்ட நேரம் உபந்யசித்தார்கள். பிறகு இவ்வாலாஜாபாத் பிர்க்காவுக்கு அபேக்ஷகராகிய திரு. W. T. மாசிலாமணி முதலியார் தம்மால் கூடியமட்டில் நம்மவர்க்கு உதவி செய்வதாக உறுதி கூறினர்.

பின்னர் ஷை சங்கத்தின் காரியதரிசியாகிய திரு. வி. க. பழநி முதலியார் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித்தார் :—

"இச்சங்கம் செங்குந்தர் பூர்வீகத்தில் குறுநில மன்னர்களாகவும் பெரும் புலவர்களாகவும் சிறந்து வாழ்ந்து வந்ததோடு பாவமற்ற நெய்தற்றொழிலையே கைக்கொண்டவர்களென நம் சமூக நூல்களிலும் சர்ண பரம்பரையிலும் பிரத்தியக்ஷ ஒழுக்க முறைகளிலும் காணப்படுகிறதேயன்றிக் கோவைச் சங்கத்தார் கூடிய மகாநாட்டில் வரவேற்புத் தலைவர் பேச்சிலும், கூட்டத்தில் நடந்த தீர்மானத்திலும் செங்குந்தர்க்குப் பொட்டுக் கட்டும் வழக்க முண்டென்றும், அப்படி எல்லாக் குடும்பங்களிலு மில்லாதிருந்த போதிலும் சில குடும்பங்களிலேனு முண்டென்றும் காலித்தனமாகத் தாக்கியிருக்கிறபடி எந்தத் தமிழ் நூலிலுமில்லை யாகையால், உண்மைச் செங்குந்தருக்கு இத்தகைய இழிவான செய்கை ஒருக்காலு மிருந்ததில்லை யென்றும், இப்பொழுதுமில்லை யென்றும், தேவதாசி வகுப்பினர்கள் செங்குந்த சமூகத்தினர் என்று சொல்லிக்கொள்ள உரிமையற்றவர்களென்றும், இன்னும் உண்மை செங்குந்தர்கள் கௌரவத்திற்கும், புனிதமான தொழிலுக்கும், சீலமான ஒழுக்கத்திற்கும் பொருந்தாத ஒவ்வொரு வார்த்தையையும் இச்சங்கம் மிகவும் பலமாகக் கண்டிப்பதுடன் செங்குந்த சமூகத்தின் பெயரால் விளம்பரப்படுத்தப்பட்டுக் கூடின மகாநாட்டை நாங்கள் எங்கள் மகாநாடாகக் கருதவில்லை யென்றும் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றது."

இத்தீர்மானத்தைத் தலைவரவர்களும், திரு. மு. ஷண்முக முதலியாரும் ஆமோதிக்கக் கூட்டத்தில் கூடியிருந்த எல்லோராலும் மேற்படி தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேறியது. பிறகு தலைவருக்கும் மற்றவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறிக் கூட்டம் 10-மணிக்கு இனிது கலைந்தது என மேற்படி சங்கக் காரியதரிசி யவர்கள் எழுதுகிறார்.



### மாஹும்பதி செங்குந்தர் சங்கம்.

18-2-28 இரவு 7-மணிக்கு மாஹும்பதி செங்குந்த சங்க சார்பில் திரு. துரைசாமி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. கூட்டத்திற்கு அநேக பிரமுகர்கள் குழுமியிருந்தனர். கூட்டம் துவக்குமுன் மாணவர்களால் கடவுள் வாழ்த்துக்கூறப்பட்டுக்கூட்டம்ஆரம்பிக்கப்பட்டது.

திரு. S. ஆறுமுக முதலியார் அவர்களால் நமது 'முற்கால மாட்சியும் தற்கால நிலைமையும்' என்பது பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

"செங்குந்தர் மஹாநாடென்று கோடுவாயில் கூட்டிய கூட்டத்தில் தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்திற்கும், கிளைச் சங்கங்களுக்கும், உண்மைச் செங்குந்தர்களுக்கும் இழிவையும் அவமானத்தையும் உண்டாக்கக்கூடியசொற்கள் கூறியிருப்பதால், அவற்றை இச்சங்கம், உண்மைக்குலாபிமானிகள் கூற்றல்லவென்று கண்டிக்கிறது." பிரேரேபித்தவர் திரு. ரத்தின முதலியார்.

உண்மையை உணராமல் அவற்றைப் பதிப்பித்த 'தமிழ்நாடு' பத்திரிகையை இக்கூட்டம் கண்டிக்கிறது.

தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் 9-மணிக்கு முடிந்தது.

### புதுப்பட்டு செங்குந்தர் சங்கம்.

27—1—28-ல் புதுப்பட்டு செங்குந்தர் கூட்டத்தில் ஒரு செங்குந்தர் சங்கம் நிறுவப்பெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் :—

1. இந்தக் கிளைச்சங்கத்தைச் சென்னையிலுள்ள தலைச் சங்கத்தோடு இணைக்கவேண்டியதென்றும்,

2. தலைச் சங்கத்திற்கு வருடப் பிரதிவருடம் இவ்வளவு கட்டணம் செலுத்தவேண்டியது என்றும்,

3. மாதப்பிரதிமாதம் அமாவாசையில் கூடவேண்டியது என்றும்,

4. ஒவ்வொரு செங்குந்த குடும்பத்திலுள்ள தறி 1-க்கு மாதம் 1-க்கு 1 அணா காரியதரிசி வசூல்செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றன.

---

20—2—28-ல் கூடிய கூட்டத்தில் திருவாளர் தலைவர் வே. த. ஏகாம்பர முதலியார் தலைமை வகித்தனர். அவர் தலைமையின்கீழ் நிறைவேறிய தீர்மானங்கள்:—

1. மேற்படி சங்கமெம்பர்கள் செங்குந்தமித்திரன் பத்திரிகை இரண்டு வரவழைக்க வேண்டியதென்றும், இதின்தொகையை உடனே வசூல்செய்து அனுப்பவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

2. மேற்படி சங்கத்தில் கொல்லாமையைப்பற்றி நீண்டநேரம் பேசி ஜீவவதைகள் செய்யப்படாதுயென்று தீர்மானிக்கப்பட்டது.

3. புதுப்பட்டு கிராமத்தில் ஸ்ரீ ஆனந்தவல்லி சமேத ஸ்ரீ ஆபத்சகாய ஈசுரசுவாமிகள் ஆலயத்தில் யெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்குக் கும்பாபிஷேகம் செய்ய வேண்டியதைப்பற்றிப் பேசி அடுத்த கூட்டத்தில் பேசலாகுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

4. கல்வியைப்பற்றிப் பேசி மாலை 6-மணிக்கு இனிது கூட்டங்கலைந்தது என ஷை சங்கக் காரியதரிசி திரு. சோ. கந்தசாமி முதலியார் எழுதுகிறார்.

---

### தேன்ஞர்க்காடு ஜில்லாவில் கிளர்ச்சி

### கன்றச்சேரி செங்குந்தர் கூட்டம்

22—1—28 தேதி காலை 10-மணிக்குச் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அப்போது நமது சங்கப் பிரசாரகர் திரு. தி. ஷண்முக முதலியார் 'நமது குல முன்னேற்றம்' என்பதைப்பற்றிப் பேசினர்.

பிறகு மாலை 4-மணிக்கு மீண்டும் கூட்டம் துவக்கப்பெற்று இவ்வூரில் கிளைச்சங்கம் ஒன்று மறுகூட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றது.

---

### வடஆர்க்காடு ஜில்லாவில் கிளர்ச்சி

### வந்தவாசிக்கடுத்த அம்மையப்பட்டில் கனம் கைத்தொழில் இலாகா மந்திரியார் விஜயம்

### செங்குந்தர் வரவேற்பும் கனம் மந்திரியார் பதிலும்

24-2-28 காலை 10-மணிக்கு வாழைமரங்களினாலும் மாவிலை பத்திரத்தோரணங்களாலும் முத்து விதானங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற அழகிய பந்தலில் பலவித வாத்தியம் அதிர்வெடி முழங்க கனம் மந்திரி திரு. A. ரங்கநாத முதலியார் அவர்கள் போர்டு பாடசாலை திறந்து வைத்த சமயம் அம்மையப்பட்டுச் செங்குந்தர்களால் வரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுக்கப்பட்டது. பதிலளிக்கையில் மந்திரி அவர்கள் "உங்கள் குலப்பிள்ளைகள் 10-வது (S.S.L.C.) படித்தவர்களாக முன் வருவார்களானால் 60 ரூ.

ஸ்டைபெண்டில் பாம்பேய்க்குத் தொழிற் கல்விக்கு அனுப்புகிறோம். இன்னும் இவ்விடங்களிலுள்ள கைத்தொழில் சாலைகளிலும் எம்மாலான உதவியைச் செய்கிறோம்" என்று கூறினர்.

## அம்மையப்பட்டு செங்குந்தர் பொதுக்கூட்டம்.

அபிவிருத்தி இலாகா மந்திரி கனம் திரு. A. அரங்கநாத முதலியார் அவர்கட்கு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்த பிறகு ஸ்ரீமான் பாலசுந்தர முதலியார் தலைமையின் கீழ் 300 பெண்மக்களும் பல பிரபலஸ்தர்களும் கூட்டமாகக் குழுமினர்.

திரு. S. ஆறுமுக முதலியார் அவர்களைப் பேசும்படிகேட்டுக்கொள்ள அவர் எழுந்து பேசியதாவது:--

"தாய்மார்களே, பெரியோர்களே! நமது செங்குந்த சமூகமானது ஆங்கிலப் படிப்பில் கவனம் செலுத்தாமல் இருக்கிறது தற்கால வாழ்விற்கு ஏற்றதல்ல. எவ்வளவோ தாழ்ந்த நிலையிலிருந்த சமூகமெல்லாம் அதிதீவிரமாக முன்னேற்றமடைவதைக் காண்கிறோம். நாம் ஒவ்வொருவரும் நமது பிள்ளைகள் கல்விபயிலுமாறு ஊக்கமெடுத்துக்கொள்ளவேண்டும். இங்குள்ளவர்கள் ஆங்கில பாடசாலை அருகிலிருந்தும் அதில் தமது பிள்ளைகளைக் கல்வி பயிற்றுவிக்க முயற்சிக்கவில்லை. சிறிது நேரத்துக்குமுன் கனம் மந்திரியார் அவர்கள் படித்தவர்களாக நமது குலப்பிள்ளைகள் முன்வந்தால் கைத்தொழில் இலாகாவில் இடந்தருவதாகக் கூறியதைக் கேட்டிருந்தோம் உலகத்தில் பட்டுத்துணிகள் அதிகமாக உபயோகப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். அதனால் புது தினுசுகளை செய்யப் பழகிவர வெளியிடங்களுக்கு நமது வாலிபர்களை அனுப்பவேண்டியது அவசியமே. 15 வருஷங்களுக்குமுன் கைதறியாக நெய்வதை விசைத்தறியாகவும், 35 வருஷங்களுக்குமுன் நடந்து பாவு ஓடியதை ஆலை மூலமாகவும் மாற்றிக்கொண்டதுபோல், நவீன யந்திரங்களினால் நெய்யப் பழகிக்கொள்ளவேண்டும்.

பெண்களையும் படிக்க ஏற்பாடு செய்யவேண்டும். மருத்துவம், உபாத்தியாயர்த்தொழில், நியாயஸ்தலம், ஸ்தலஸ்தாபனம் முதலியவைகளிலெல்லாம் இதர வகுப்புப்பெண்கள் அமர்ந்து மிகவும் புத்திசாலித்தனமாக வேலை செய்கிறார்கள். நம்மவர் பெண்கள் தொழில் முறையினாலும் இலாபமில்லாமையினால் கஷ்டப் படுத்தப்படுவதை காண்கிறோம்.

மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பதில் தடை செய்யாதீர்கள். மேற் கூறிய கருத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவோமானால் நாமும் நமது சந்ததி பேரன் பேத்தி முதலியவர்களும் சுகப்படுவோர்கள்.

## திருவாரூப்பேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்.

22-1-28 அமாவாசையன்று 3-மணிக்குப் போர்டு ஸ்கூல் ஹாலில் கூடிய கூட்டத்திற்கு திரு. குட்டி சிதம்பர முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். கடவுள் வாழ்த்தான பிறகு சங்க வாலிபர்களாகிய திரு. விநாயக முதலியாரும், திரு. வீராசாமி முதலியாரும் முறையே 'இரட்டைப் புலவர்,' 'கல்வி' என்னும் விஷயங்களைப் பற்றி அருமையாகப் பேசினார்கள். பிறகு சங்கத்தின் கௌரவ அதிதிகளாய் திருவாளர்கள் கோவிந்தராஜ முதலியார் அவர்களும் ஜெயமன்னார் முதலியார் அவர்களும் முறையே கண்ணப்ப நாயனார் சரித்திர மூலமாக 'அன்பை'ப்பற்றியும், இளையான் குடிமாறநாயனார் சரித்திர மூலமாக 'இல்வாழ்க்கை'யைப் பற்றியும் விவரமாகப் பேசினார்கள். பிறகு அவைத் தலைவர் தமது பின்னுரையில் சங்கத்தின் கூட்டம் ஒவ்வொரு அமாவாசை தோறும் கூடவேண்டுமென்றும், சங்கத்தை இன்னின்ன முறையில் விர்த்திசெய்துகொண்டு வரவேண்டுமென்றும் பேசி முடித்தார். இக்கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன:—

1. சங்கத்திற்குப் பதினேழு (17) ரூபாய் நன்கொடையாக உதவிய திருவாளர்கள் தளவா மாணிக்க முதலியார், குட்டி சிதம்பர முதலியார், சு. மு வரதப்ப முதலியார், பெ. முனிசாமி முதலியார், தளவா குப்பண்ண முதலியார் ஆகிய ஐவருக்கும் சங்கத்தின் சார்பாக நன்றி செலுத்தப்பட்டது.

2. சுதேசமித்திரன் வாரமும்மூறைப் பத்திரிகை ஆனந்தபோதினி, சிவநேசன், செங்குந்தமித்திரன் முதலிய பத்திரிகைகளைச் சங்கத்திற்கு வரவழைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

உபந்யாசகர்களுக்கும் சபையில் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை சுவாமியார் அவர்களுக்கும் மாலை முதலிய மரியாதை செய்து இரவு 8-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது. கூட்டத்திற்குச் சுமார் 200 ஜனங்களுக்கு மேல் வந்திருந்தார்கள் எனக் காரியதரிசி திரு. M. G. தணிகாசல முதலியார் எழுதுகிறார்.

## திருவோத்தூர் செங்குந்தர் பொதுக்கூட்டம்.

19-2-28 இரவு 9-மணிக்குத் திருவோத்தூர் திருதவணம்பேட்டை - செல்வவிநாயகர் ஆலயத்தில் செங்குந்தர் கூட்டம் கூட்டப்பட்டது. அவ்வமயம் தலைமை வகித்த ஐயங்கார்குளம் புராணிகர் ஸ்ரீமான் அ. க. பொன்னுசாமி முதலியார் அவர்கள் (காளத்தி மான்மியத்)தைக் குறித்து உபந்நியாசம் செய்து நம்மவர்களது முற்கால மேன்மையையும் தற்கால நிலைமையையும் செங்குந்த சிவானுபூதிமான்களின் சரித்திரங்களையும் எடுத்து விளக்கி நாம் இனி முன்னேற்றமடைய வேண்டுமாயின் ஆங்காங்கு சங்கங்கள் ஸ்தாபித்து உழைத்து வருவதோடு, 'செங்குந்த மித்திரனை' ஒவ்வொரு செங்குந்தரும் ஆதரிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார். அநேகர் நம் மித்திரனுக்குச் சந்தாதாரராகச் சேரச் சம்மதப்பட்டார்கள் எனத் திருவாளர் க. சின்னசாமி முதலியார் எழுதுகிறார்.

## பொன்னூர் செங்குந்தர் கூட்டம்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க சார்பாக 2-2-28௳ உத்திரன்மேரூர் திரு. கா. உ. பொன்னுசாமி முதலியார் (போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர்), திருப்புலிவனம் திரு. வையாபுரிமுதலியார், உத்திரன்மேரூர் திரு. வ. மு. கதிர்வேலு முதலியார், திரு. க. தங்கவேலு முதலியார் ஆகியவர்களுடன் இரவு 10-மணிக்குப் புறப்பட்டு அம்மையப்பட்டிற்குச் சென்று அவ்வூரிலிருந்து திரு. மு. முனுசாமி முதலியாரையும் மற்றும் சில குலாபிமானிகளையும் உடன்கொண்டு 3-2-28 காலை 8-மணிக்கு வந்தவாசி தாலுகா பென்னூர் கிராமம் திருவாளர் கன்னியப்ப முதலியார் இல்லத்தை அடைந்தனர்.

அந்தக் கிராமத்திலுள்ள செங்குந்த குலமக்கள் பெரவளூர் கிராம செங்குந்தர்களுக்குள் ஏற்பட்ட கக்ஷிபேத காரணமாக, இரண்டு கக்ஷிகளாக 6-வருஷ காலமாக இருப்பதாய்த் தெரிய வந்தது.

அவ்வாறு கக்ஷிபேதப்பட்டிருப்பது சமூக முன்னேற்றத்திற்கு இடையூறாகும் என்னும் நோக்கத்தால் இரண்டு கக்ஷி குலமக்களுக்கும் ஏற்ற சமாதானங்களை எடுத்துவிளக்கி ஒற்றுமைப்படுத்திப் பின்னர் திரு. க. உ. பொன்னுசாமி முதலியார் அவர்கள் நமது குலமக்களின் முற்கால தற்கால நிலைமையையும், தலைச்சங்கத்தின் நோக்கத்தினையையும், நாம் செய்யவேண்டிய கடமையையும், கிராமங்களில் கிளைச்சங்கங்கள் ஏற்படுத்தவேண்டிய அவசியத்தையும் விளக்கமாக எடுத்துக் கூறினார். 6 வருஷ காலமாகப் பிரிந்து இருந்த இருகக்ஷி மக்களும் விசால அறிவுடன் தாராளசிந்தையாக ஒற்றுமைப்பட இசைந்தது பாராட்டத் தக்கதாகும். 3௳ 4௳ ஆகிய இரண்டு நாட்களிலும் கூட்டப்பட்ட நான்கு கூட்டத்திற்கும் மிகுந்த ஊக்கத்துடனும் அவாவுடனும் விஜயம் செய்திருந்த மகாஜனங்களின் செயல் பாராட்டற்பாலது.





4-2-28 மாலை கூடிய குலாபிமானிகளின் பெருங் கூட்டத்தில் திருவாளர்களாகிய கா. உ. பொன்னுசாமி முதலியார், வையாபுரி முதலியார், வ. மு. கதிர்வேலு முதலியார், மு. முனுசாமி முதலியார், க. தங்கவேலு முதலியார், முதலியவர்களின் வேண்டுகோளின்படிக் கக்ஷிபேதங்களைக் களைந்து எறிந்து சபா தாம்பூலம் வழங்கிய பின்னர், தலைச்சங்கத்திற்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 12-8-0 உதவி செய்வதெனவும், கிளைச்சங்கம் நிறுவும் விஷயம் அடுத்த மாதத்தில் முடிவு செய்வதாகவும், தலைச்சங்கத்திற்கு இந்தக் கிராம குலமக்களின் பெரியதனக்காரரில் ஒருவராகிய திரு. கன்னியப்ப முதலியார் அவர்களைப் பிரதிநிதியாக ஏகோவித்த மனதுடன் தீர்மானிக்கப் பெற்றது. அநேகர் மித்திரனுக்குச் சந்தாதாரராகச் சேர்ந்தார்கள். இரவு 8-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

---

## மதுரை ஜில்லாவில் கிளர்ச்சி.

### மதுரைச் செங்குந்த முதலியார் வாலிபர் சங்கம்.

28—1—28 தேதியில் ஷை சங்கமடத்தில் திரு பி. வி. முத்துக்கருப்ப முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

1. மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசப் பெருமான் தேவஸ்தானத்திற்கு 12 கமிடி மெம்பர்களைச் சமீபத்தில் நியமனஞ் செய்வதாகத் தெரிகிறபடியால் அக்கமிடியில் அரசியற்றுறையிலும், பொதுஜன ஊழியத்திலும் தளராத ஊக்கமுடையவரான திரு. சி. ரா. சுந்தர முதலியார் அவர்களை நம் மரபினரின் பிரதிநிதியாக அனுப்பவேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. பிப்ரவரிமீ 1, 2 தேதிகளில் கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள கொடுவாய் என்னும் குக்கிராமத்தில் செங்குந்தர் மகாநாடு என்னும் பெயரோடு கூடும் கூட்டம் போலிகள் கூட்டமெனத் தெரியவருகிறபடியால், உண்மைச் செங்குந்தர்களுள் எவரும் மயங்கி அக்கூட்டத்திற்குப் போகக்கூடாதெனக் கேட்டுக் கொள்ளுகிறது.

3. ஊற்றுக்குழியில் காஞ்சி சரவண சங்கிலியை வரவேற்பு செய்த விஷயமாய் நம் மரபினர்க்கும் போலிகளுக்கும் நடந்த விவாதத்தைக்குறித்துப் பஞ்சாயத்து நடந்ததாகத் தெரிகிறது. ஆகையால் அப்பஞ்சாயத்து சம்பந்தமான ரிகார்டுகளுக்கு நகல் அனுப்பும்படி ஊற்றுக்குழி உண்மைச் செங்குந்தர்

களுக்கு எழுதுமாறு காரியதரிசியைக் கேட்டுக் கொள்ளுகிறது.

---

## திருநெல்வேலி ஜில்லாவின் கிளர்ச்சி.

### வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

நாளது ஆண்டு 13-வது நிர்வாக கமிட்டியின் கூட்டம் தை மாதம் 17ல மாலை 3 மணிக்கு ஸ்ரீமான் மு. சி. தம்பி முதலியார் அவர்களின் தலைமையின்கீழ்க் கூடிற்று. அப்போது மகமை வசூல் செய்த கணக்குப் பரிசீலனை செய்தபின், சைவவினாவிடை பரீக்ஷையில் தேறிய வெ. தனகோடி, பி. இராமசாமி, சு. பாக்கியம் என்ற மாணவர்களுக்குத் தலைவரவர்களால் பிரைஸ் அளிக்கப்பெற்று, கடவுள் வாழ்த்து பாடி சபை இனிது கலைந்தது. உடனே 4½-மணிக்கு ஷை சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று ஸ்ரீமான் ஆ. மு. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிற்று. கடவுள் வாழ்த்துப்பாடிய பிறகு 'மும்மூர்த்திகள்' என்னும் விஷயமாய் சி. ப. சிவசங்கரம் என்ற மாணவன் வெகு தெளிவாகப் பேசினன். சபா நாயகர் பின்னுரையுடன் கடவுள் வாழ்த்துப் பாடிச் சபை இனிது கலைந்தது எனக் காரியதரிசி திரு சி. ப. ஆறுமுக முதலியார் எழுதுகிறார்.

---

## தஞ்சை ஜில்லாவின் கிளர்ச்சி.

### திருமருகல் செங்குந்த குலாபிமான சங்கம்.

13-2-28 தேதி மாலை 5-மணிக்கு ஸ்ரீ சிவசங்கர மடாலயத்தில் திருமருகல்போர்டு ஸ்கூல் ஹெட் மாஸ்டர் திரு. S. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்ச் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அச்சமயம் 'செங்குந்த குலாபிமான சங்கம்' என்ற பெயருடன் ஒரு சங்கத்தை அவ்வூரில் நிறுவி, அதைச் சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச்சங்கமாக்க வேண்டுமென்றும், அது தலைச்சங்கத்திற்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 10 கட்டணமாகச் செலுத்தவேண்டுமென்றும் தலைவரவர்கள் பிரேரேபிக்க கூட்டம் அதை ஏகமனதாய் ஒத்துக்கொண்டது. உடனே ஸ்ரீமான்கள் S. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களும், இவ்வூர் நாட்டாண்மைக்காரரும் ஸ்ரீ சிவசுப்பிரமணியராலய பஞ்சாயத்தாருமாகிய மு. சி. சிங்கார முதலியார் அவர்களும் தலைவர்களாகவும், திரு. வ. மி. சா. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் காரியதரிசியாகவும் நியமிக்கப்பெற்றனர். பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன:—

1. இச்சங்கத்தின் ஆதரவில் செங்குந்த மக்களுக்குச் கல்வி பயில்விக்கும்பொருட்டு ஒரு இலவச பாடசாலை ஏற்படுத்தவேண்டும்.

2. சோமம்புத்தூர் போலிச் செங்குந்த மகாஜன சங்கத்தார் 1, 2-2-28 தேதிகளில் கோவையில் கூடிய கூட்டத்தில் உண்மைச் செங்குந்தரின் தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தையும் அதன் பிரதிநிதிகள் செய்யும் பிரசாரத்தையும் தாக்கிப்பேசியதோடு, தங்களுக்குள் இருக்கிற பொட்டுக்கட்டும் வழக்கம் செங்குந்தர்களுக்கு உண்டென்று பேசியும் பத்திரிகைகளுக்கு எழுதியுமிருக்கின்றது. உண்மைச் செங்குந்தர்களுக்கு அவமானத்தையுண்டாக்குவதும் ஆதாரமற்றதுமான இத்தகைய பிரசாரங்களையும் தீர்மானங்களையும் இச்சங்கம் பலமாய்க் கண்டிக்கிறது.

3. ஷை கோவை சங்கத்தார் செய்யும் ஆதாரமற்ற பிரசாரத்தை மறுத்துப் பல பத்திரிகைகள் மூலமாக வெளிபடுத்த வேண்டுமென்று சென்னை தலைச்சங்கத்தை இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

### வாழமங்கலம் செங்குந்தர் சன்மார்க்க சங்கம்

வாழமங்கலம் சமரச சன்மார்க்க சங்கத்தின் 2-வது ஆண்டு நிறைவிழா இம்மாதம் 1-2-தேதிகளில் திருப்பாதிருப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் மாணவர் திரு. ம. நா. குமாரசாமிப் பிள்ளையவர்கள் தலைமையின்கீழ் நடந்தது. அச்சமயம் அநேகம் பெரியோர்கள் அரிய உபந்நியாசங்கள் செய்தார்கள்.

மறுநாள் மாலை மணி க்கு ஷை சங்கத்தின் ஆதரவில் 3-வது வருஷத்திற்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி யோசிக்கும்பொருட்டு விசேஷ காரிய நிர்வாகக் கூட்டம் கூடிற்று. அக்கூட்டத்தில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றதன்றிச் சங்க உத்தியோகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.—

(1) 'சமரச சன்மார்க்க சங்கம்' என்ற பெயரை மாற்றிச் 'செங்குந்த சன்மார்க்க சங்கம்' என்று இன்று முதல் அழைக்கவேண்டுமென்றும்.

(2) இச்சங்கத்தை நமது தலை சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச் சங்கமாகச் சேர்த்துக் கொள்ளல்வேண்டும் என்றும், தலைச் சங்கத்திற்கு வருஷம் 1-க்கு ரூபாய் 10 வீதம் சந்தாதொகை செலுத்தி வைக்க வேண்டுமென்றும்.

(3) கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள செங்குந்தரல்லாத ஒரு ஜாதியார் தங்களின் இழிதொழிலை மறைக்கும் பொருட்டுத் தங்களைச் செங்குந்தரென்று



சொல்லிக்கொண்டு உண்மையாக உள்ள செங்குந்தர்களுக்குப் பங்கம் ஏற்படுத்துவதை இச்சங்கம் பலமாகக்கண்டிக்கிறது.

(4) செங்குந்தர்கள் முன்னேற்றமடைய வேண்டியதற்கான பற்பல துறைகளில் உழைத்துவரவேண்டுமென்று இச்சங்கம் தீர்மானிக்கிறது.

---

## இராமநாதபுரம் ஜில்லாவில் கிளர்ச்சி

### மண்டலமாணிக்கம் செங்குந்த மகாஜனக் கூட்டம்.

18-1-28 மாலை 7 மணிக்குச் செங்குந்தர் பொதுக் கூட்டம் ஒன்று சமூகி C. S. M. பாடசாலையின் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் M. வீராசாமி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. கடவுள் வாழ்த்தும் தலைவர் முன்னுரையும் ஆனபிறகு இவ்வூர் போர்டு பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீமான் இ. முனியப்பமுதலியார் அவர்களால் தலைவர்க்கு வரவேற்புக்கவி வாசித்துக் கொடுக்கப்பெற்று 'செங்குந்த குல முன்னேற்றம்' என்னும் விஷயம் உபந்யாசிக்கப் பெற்றது. பின்னர் ஸ்ரீமான் மு. பாதம்பிரியா முதலியாரவர்கள் 'கல்வி' யைப்பற்றி வெகு தெளிவாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். கடைசியாகத் தலைவர் எழுந்து 'செங்குந்தர் பூர்வீக மேன்மை' 'முதலியார் என்ற பட்டத்தின் வரலாறு' 'நெய்தற்றொழிலைக் கைக்கொண்ட விபரம்' முதலியவற்றைப் பற்றி நன்கு விளக்கி ஜனங்களுக்கு ஊக்கத்தை உண்டாக்கித் தற்சமயம் சென்னையில் நிறுவப்பெற்றுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நோக்கங்களையும், இதுவரையில் அது செய்துள்ள சமூக ஊழியத்தையும் இதற்காக உழைத்துவரும் குலாபிமானிகளையும் குறித்து விவரித்து, இவ்வூரிலும் ஒரு கிளைச்சங்கம் நிறுவி அதைச் சென்னை தலைச்சங்கத்தோடு சேர்க்கவேண்டுமென்றும், செங்குந்தமித்திரனை ஒவ்வொரு செங்குந்தரும் ஆதரிக்கவேண்டுமென்றும், அப்போது உபந்நியாசகர்கள் சொல்லியபடி ஒவ்வொருவரும் ஒழுகவேண்டுமெனவும், இவ்வூரில் கிளைச்சங்கம் நிறுவுவதற்கும் மித்திரனுக்குச் சந்தாதாரைச் சேர்ப்பதற்கும் முயற்சித்துவரும் ஸ்ரீமான் இ. முனியப்ப முதலியார் அவர்களும், கருணைவள்ளல் மு. ஆ. பாதம்பிரியா முதலியார் அவர்களும், செவுக்காரர் கோவாபரேடிவ் சொசைடி பிரசிடெண்டு ஸ்ரீமான் அம்பலம் இ. முத்து முதலியார் அவர்களும் உழைக்க முன்வருவார்களானால் எல்லாக் காரியங்களும் சுலபத்தில் கைகூடுமென்றும் சுமார் 2-மணி நேரம் பேசினர். 15 அன்பர்கள் மித்திரனுக்குச் சந்தாதாரராகச் சேர்ந்தார்கள். இரவு 12-மணிக்குக் கூட்டம் கலைந்தது என மண்டலமாணிக்கம் செங்குந்த குலாபிமானிகள் தெரிவிக்கிறார்கள்.

---

## சேலம் ஜில்லாவில் கிளர்ச்சி.

### திருச்செங்கோடு செங்குந்தர் சங்கக் கூட்டம்.

9-2-28 மாலை 5-மணிக்கு இவ்வூர்பாவடிக்கு அடுத்த திருஞான சம்பந்த பக்தஜன சபையில் இவ்வூர் பிரபல நூல் வர்த்தகரும், யூனியன் போர்டு தலைவரும் தாலுகா போர்டு வைஸ் பிரசிடெண்டும் ஆகிய ஸ்ரீ வ. வெ. கா. நா. கந்தப்ப முதலியார் தலைமையில் செங்குந்த மகாஜனங்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று.

அப்பொழுது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கௌரவப் பிரசாரகர் ஸ்ரீ க. வச்சிரவேலு முதலியார் 'செங்குந்தர் குடிப்பிறப்பு' என்பது பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்திய பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

"தாசிப்பிரிவினர் ஆசார சீர்திருத்தத்தைத் தமது நோக்கமாக உடைய கோவைச் செங்குந்த மகாஜன சங்கத்தார் என்னும் ஒரு சிலர் தாங்கள் இம்மாதம் 1, 2 தேதிகளில் கோவையில் கூடிய மகாநாட்டில் சென்னைத் தென்னிந்திய மகாஜன சங்கத்தைக் கண்டித்துப் பல இழிவுரைகளை நியாயமற்ற முறையிலும், தோல்வித்தனப்படவும் தங்கள் வரவேற்புரைகளிலும் தீர்மானங்களிலும் புணர்த்தியதாகச் சில பத்திரிகையில் தெரிகிறது. அவர்கள் செங்குந்தர்களது ஆசாரம் தொழில் முதலியவற்றைக் கூறும் போது பலவேறு வகைப்பட்ட முன்பின் முரண்படும்படி எழுதி வந்திருப்பதைக் கவனித்தால், செங்குந்தர் என்போர் தாங்கள் தாமோ அன்றித் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் கூறும் உண்மைச் செங்குந்தர்கள்தாமோ என்று சந்தேகித்து இடர்ப்படுவது தெற்றென விளங்குகிறது. ஆதலின் அவர்கள் அறியாது கூறிய அவ்விழிவுரைகளை இக்கூட்டம் பலமாகக் கண்டிப்பதோடு, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் வெளியிட்டுவந்துள்ள கண்டனம் பதில் முதலியவற்றை நுட்பமாக ஓதியுணர்ந்து உளச்சாந்தி யடையும்படி உணர்த்துகிறது.

இப்போலிகளுக்கும் உண்மைச் செங்குந்தர்களுக்கும் பொன்னம்பலத்து முதலியார் சம்பந்தமாக நிகழ்ந்த வியாஜ்ஜியத்தில் போலிகளுக்குப் புலை பெயர் நிலையாமை தீர்மானிக்கப்பட்ட சாசனங்கள் ஊற்றுக்குழி என்னும் இடத்துள்ளன. ஆதலின் அவற்றைச் 'செங்குந்தமித்திர' னில் பதிப்பிக்கும்படி இக்கூட்டம் சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை வேண்டிக்கொள்கிறது.

இவ்வூர் பாடசாலை மாணவர்களை ஒன்று கூட்டிச் செங்குந்த இளைஞர் சங்கம் ஒன்று நிறுவ இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

உலகம் பாளையம்.

5-2-28 தேதி மாலை 7-மணிக்குக் கரிச்சிபாளையம் திரு. சீ. மா. வையாபுரி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்ச் சென்னை செங்குந்த வாலிபர் சங்கத்தின் காரியதரிசி திரு. க வச்சிரவேலு முதலியார் 'செங்குந்தர்பண்டைப்புகழ்' என்னும் விஷயத்தைப் பற்றி உபந்நியசித்தார். அநேகர் மித்திரனுக்குச் சந்தாதாரராகச் சேர்ந்தார்கள்.

---

## கோயமுத்தூர் ஜில்லாவில் கிளர்ச்சி.

### ஊற்றுக்குழி உண்மைச் செங்குந்தகுல சங்கம்.

10-2-28 தேதி இரவு 8-மணிக்கு ஊற்றுக்குழியில் திரு. வீ. அலகு செட்டியார் மண்டியில் உண்மைச் செங்குந்த குலப் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அவ்வமயம் இவ்வூர் கைலாசநாதர், கதித்த மலையாண்டவர் தேவஸ்தான தர்மகர்த்தரும் பிரபல வியாபாரியுமான திரு. C. K. சின்னசாமிக் கவுண்டர் அவர்களும், மிராஸ்தாரும் பிரபல வியாபாரிகளுமான அநேக பிரமுகர்களும், திரு. வீ. அலகு செட்டியார் அவர்களும், உண்மைச் செங்குந்த குல பிரமுகர்களும் சேர்ந்து 100 ஜனங்களுக்குமேல் வந்திருந்தனர். அப்போது, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துப் பிரசாரகர் திரு. தி. அ. ஷண்முகமுதலியார் அவர்கள் தலைமை வகித்து, 'உண்மைச் செங்குந்தர்களின் பண்டைப் புகழும் தற்கால நிலையும்' என்பதைப்பற்றி முன்னுரையாக ஒரு மணி நேரம் விஸ்தாரமாகப் பேசினார். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

1. ஊற்றுக்குழி உண்மைச் செங்குந்த குல சங்கம் எனப் பெயரிய ஒரு சங்கம் இங்கு ஸ்தாபிக்கவேண்டுமென்றும், இச்சங்கத்திற்கு ஊற்றுக்குழியிலுள்ள ஒவ்வொரு உண்மைச் செங்குந்த குடும்பமும் மாதம 1-க்குத் தலைக்கட்டுக்கு 1 அணாவீதம் சந்தா செலுத்தவேண்டுமென்றும், இச்சங்கம் பிரதி மாதம் பௌர்ணமி தினத்தில் கூடவேண்டுமென்றும், இச்சங்கத்தைச் சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச்சங்க மாக்கவேண்டுமென்றும், மேற்படி தலைச்சங்கத்திற்கு இச்சங்கத்திலிருந்து பிரதிவருஷம் ஜனவரிமீ 30-ம் தேதிக்குள் 5 ரூபாய் கட்டணமாகச் செலுத்தவேண்டுமென்றும், தீர்மானிக்கப்பெற்றது.

2. கோவைச் சங்கத்தார் தங்களுக்குள்ள பொட்டுக்கட்டும் தொழிலை அறவே ஒழிக்கச் சட்டசபை மெம்பர்கள் முதலியவர்களுக்குச் செய்துகொண்ட மனுவில் தென்னிந்தியாவிலுள்ள 6 லட்சம் தொகையினரான பழைய புகழும் நல்லொழுக்கமுமுடைய உண்மைச் செங்குந்தர்களுக்கும் பெண்களைக் கோயிலுக்கு விடும் வழக்கம் உண்டென்று பொருள்படும்படி அமைத்துள்ள சில வாக்கியங்களைப் பலமாய்க் கண்டிப்பதோடு இதைப் பத்திரிகை மூலமாகவும், கடிதமூலமாகவும் சட்டசபை அங்கத்தினருக்கும் மற்றவர்களுக்கும் தெரிவிக்கும்படித் தலைச் சங்கத்தின் காரியதரிசி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

பிறகு திரு. மொ. க. குழந்தையப்ப முதலியார் அவர்கள் 'கைக்கோளர் குல வரலாறு' என்பதைப்பற்றி ஸ்காந்தபுராணத்திலுள்ள சில குறிப்புக்களை எடுத்து விவரித்துத் தம்மால் 1912—13 வருஷங்களில் போலிச் செங்குந்தருக்கும் உண்மைச் செங்குந்தராகிய தன் வகையாருக்கும் நடந்த வியாச்சியத்திற்கு முன் இப்போலிகளுக்குச் 'செங்குந்தர்' என்று பெயர் வைத்துக்கொள்ளவேண்டுமென்று உணர்ச்சியே கிடையாது. இக்கேசில் அவர்கள் தோல்வியடைந்த பிறகு தாங்களும் செங்குந்தரென்று வாய்ப்பறை அடித்துக் கோயமுத்தூரில் ஒரு சங்கம் நிறுவி இருக்கிறார்கள். ஆகையால் செங்குந்தரென்ற பெயர் இப்போலிகளுக்கு எவ்வாறு பொருந்தும்? அப்போலிகளுடன் வியாச்சியம் செய்து வெற்றியடைந்த ரிக்கார்டுகளை யெல்லாம் சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் வெளியீடாகச் செங்குந்த மித்திரனில் பிரசுரிக்கவேண்டுமென்று இச்சங்கத்தின் சார்பாக மித்திரன் பத்திராதிபரைக் கேட்டுக்கொள்ளுகிறோம் என்று வெகு ஊக்கத்துடன் உபந்நியாசித்தார்கள்.

தலைவர் முடிவுரையில் 'ஜீவகாருண்யம்' என்பதை மிகவிரிவாக உபந்நியசித்தார். இரவு 1-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது. மித்திரனுக்கு 17 சந்தாதாரர்கள் சேர்ந்தனர் என மேற்படி சங்க காரியதரிசி திரு. M. C. இராமசாமி முதலியார் எழுதுகிறார்.

### மூராட்டுப்பாளையம் உண்மைச் செங்குந்தர் சங்கம்.

11-2-28 தேதியன்று ஸ்ரீ காமாக்ஷியம்மன் கோயில் மண்டபத்தில் உண்மைச் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. சுமார் 200 ஜனங்களுக்குமேல் வந்திருந்தனர். திரு. அ. பழனியப்ப முதலியார் அவர்கள் தலைமை வகிக்கத் தலைச்சங்க பிரசாரகராகிய திரு. தி. அ. ஷண்முக முதலியார் 'செங்குந்தர் சீர்திருத்தம்' 'சங்கம்' 'பத்திரிகை' என்னும் விஷயங்களைப்பற்றிச் சுமார் 2 மணிநேரம் மிக விரிவாகப் பேசினார். அதன் பயனாக சங்கம் ஒன்று அப்போதே நிறுவப்பெற்று உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பெற்றனர்.

இக்கூட்டத்தில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இச்சங்கத்துக்கு மூராட்டுப் பாளையம் உண்மைச் செங்குந்தகுல சங்கம் என்று பெயர் வைக்க வேண்டும்.

2. பிரதி மாதம் தவறாமல் தலைக்கட்டு ஒன்றுக்கு ஒரு அணா வீதம் சந்தா கொடுக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

3. இச்சங்கத்தைச் சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துக்குக் கிளைச்சங்கமாக்கவேண்டும்.

4. பிரதி வருஷம் ஜனவரி 30 உக்குள் சென்னை தலைச் சங்கத்துக்கு 5 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும்.

5. பிரதிமாதம் இச்சங்கம் அமாவாசை தினம் கூடுவதாகத் தீர்மானிக்கிறது.

6. கோவைச் சங்கத்தார் சென்னையிலுள்ள தேவஸ்தான போர்டார் அவர்களுக்கும் சட்டசபை மெம்பர்களுக்கும் 16-8-27ல் கொடுத்த மனுவில் தென்னிந்தியாவிலுள்ள பண்டைப்புகழும் பெருமையும் நல்லொழுக்கமும் பெற்ற ஒவ்வொரு உண்மைச் செங்குந்த குடும்பத்தலையும் தங்கள் பெண்களைக் கோவிலுக்குப் பொட்டுக்கட்டி விடுகின்ற வழக்கம் உண்டென்று குறித்துள்ள சொற்களை இச்சங்கமானது பலமாகக் கண்டிப்பதோடு, இதைச் சென்னையிலுள்ள நமது தலைச் சங்கக் காரியதரிசியவர்களை ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி அவர்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறது. இரவு 12-30-மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது என திரு. M. ராமசாமி முதலியார் எழுதுகிறார்.

### திருப்பூர் செங்குந்தர் சங்கம்.

1928ஞூ பிப்ரவரிமீ 13உ காலை 10-மணிக்கு தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கப் பிரசாரகர் தி. அ. சண்முக முதலியார் அவர்கள் திருப்பூருக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களை வரவேற்று உபசரித்து இரவு 8-மணிக்கு ஈஸ்வரன்கோயில் வீதி சாக்கு மண்டியில் உண்மைச் செங்குந்தகுல பிரமுகர்களும் உள்ளூரிலுள்ள உண்மைச் செங்குந்தகுல பிரபல வியாபாரிகளும் சுமார் 200 பேர் கூடி இருந்தார்கள். அக்கூட்டத்திற்குத் திரு. அ. சின்னைய முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். அப்போது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பிரசாரகர் திரு. தி. அ. சண்முக முதலியார் நமது பண்டையபுகழும் தற்கால வாழ்க்கையும் என்ற விஷயத்தை $1\frac{1}{2}$ மணி நேரம் யாவருடைய மனதிலும் பசுமரத்தாணிபோல் பதியும்படிப் பேசி முடித்தார்.

அதன் பயனாக இவ்வூரில் சென்னைத்தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்திற்குக் கிளைச்சங்கம் ஒன்று இருக்கவேண்டுமென்ற திரு. மு. அருணப்ப முதலியார் அவர்கள் பிரேரேபிக்க அங்குள்ள உண்மை செங்குந்த நிலகர்கள் யாவரும் அதற்கிசைந்து அச் சங்கத்திற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். பின்பு இச்சங்கத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதோடு நிறைவேற்றப் பெற்றன:—

(1) இங்கு கூடிய இச்சங்கத்தைச் சென்னைத் தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்திற்குக் கிளைச் சங்கமாக்கத் தீர்மானிக்கிறது.

(2) கோவையிலுள்ள ஒரு சங்கத்தார் 16-8-27-ல் சென்னை சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுத்துள்ள மனுவில், தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு கைக்கோள குடும்பத்திலும் தங்கள் பெண்களைக் கோவிலுக்குப் பொட்டுக்கட்டித் தாசிகளாக்கும் வழக்கம் உண்டென்று குறித்துள்ள சில வாக்கியங்களை இச்சங்கமானது பலமாகக் கண்டிக்கிறது.

(3) இச்சங்கம் பிரதி தமிழ் மாதந்தோறும் 21-ம் தேதி கூடவேண்டுமெனத் தீர்மானிக்கிறது.

(4) இச்சங்கத்துக்கு இவ்வூரிலுள்ள ஒவ்வொரு உண்மைச் செங்குந்த குலத்தவரிடமிருந்தும் மாதம் ஒன்றுக்கு 0-4-0 அணாவாகப் பிரதிமாதம் 21-ந் தேதியில் இச்சங்கத்து உபதலைவரே வசூலிக்கும்படி தீர்மானிக்கிறது.

இரவு 11-மணிக்குச் சபை தலைவர் அவர்களுக்கும் உபந்யாசகருக்கும் வந்தனோபசாரம் கூறிக் கூட்டம் இனிது கலைந்தது எனத் திருவாளர் திருப்பூர் சாக்கு மண்டி அ. ஷண்முக முதலியார் எழுதுகிறார்.

### வையாபுரிநாட்டு இடும்பன்பாளையம் செங்குந்த வாலிபர் சங்கம்.

13—2—28 தேதியில் இடும்பன்பாளையத்தில் வையாபுரிநாட்டுப் பட்டக்காரர் திரு. வை. முருகப்ப முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் :—

1. இவ்வூரில் செங்குந்த வாலிபர் சங்கமொன்று ஸ்தாபித்து அதைச் சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச்சங்கமாகச் சேர்க்கவேண்டும்.

2. இச்சங்கத்து அங்கத்தினர் மாதம் ஒன்றுக்கு ஒரு அணா வீதம் சந்தா செலுத்தவேண்டும் என்றும், பிரதி தமிழ்மாதம் 4-ல் கூட்டம் கூடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றது.

3. கோயம்புத்தூர் போலிச்செங்குந்தர்கள், புகழும் ஈட்டியெழுபது சிறப்பும் பெற்ற கைக்கோள குடும்பங்களில் பெண்களைப் பொட்டுக்கட்டித் தேவதாசிகளாக்கும் சீர்கேடான வழக்கம் உண்டென்று செய்யும் பிரசாரத்தை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது.

---

## இலங்கையில் கிளர்ச்சி.

### காரவைச் செங்குந்தர் சங்கம்.

இச்சங்க சார்பான கூட்டங்கள் ஆங்காங்கு பலவிடங்களில் இதுகாறும் கூட்டிவந்தபடியால் பல இடையூறுகள் நிகழ்ந்தன. ஆனதுபற்றி இச்சங்கத்தார் இதற்கென ஒரு மண்டபம் அமைத்துக்கொள்ள வேண்டுமெனத்தீர்மானித்து, மண்டபம கட்டுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். இத்திருப்பணி இனிது முடியுமாறு குலாபிமானிகளாகிய திருவாளர்கள் சி. சரவண முதலியாரவர்களும், சி. சின்னையா முதலியார் அவர்களும் சில பணமாங்களுதவினர். ஏனைய குலாபிமானிகளும் தங்களாலியன்ற பொருளுதவி செய்தனர். இச்சங்கத்தார் தற்போது குலசம்பந்தமான சரித்திர ஆராய்ச்சி செய்து வருவதன்றி, மண்டபம் கட்டி முடிந்தவுடன், அதில் செங்குந்த மாணவர்களுக்கு இரவில் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர் என ஷை சங்க மானேஜர் V. K. சின்னதம்பி முதலியார் எழுதுகிறார்.

---

## சென்னையில் கிளர்ச்சி

### திருமயிலாப்பூர் செங்குந்த வாலிபர் சங்கம்

### போலிகளுக்கு மறுப்பு

21—2—1928-ல் நடந்த எமது நிருவாக சபை கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது:—

"கோவைச் செங்குந்த சங்கத்தாரென்போர் நியாய வரம்பு மீறி மிகவும் ஒழுங்கீனமான முறையில் செங்குந்த குலத்தையும் அதன் மாகாண சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தையும் தூற்றித் 'தமிழ்நாடு' முதலிய பத்திரிகைகளிலும், பிப்ரவரி 1, 2ல் கொடுவாயில் நடந்த தமது வருடக்கூட்டத்திலும், எழுதியும் பேசியும் இருக்கும் அக்கிரமமான வசை மொழிகளுக்குப் பதிலிறுப்பது ஒருவன் அறிவற்ற முரட்டு வம்பனிடம் வாது செய்வது போலாகுமாயினும், பொது ஜனங்கள் அவர்கள் இழிசொற்களை நம்பி நமது உண்மைச் செங்குந்த குலத்தைப் பற்றிக் கேவலமாக மதிக்காவண்ணம் உண்மையை எடுத்துரைக்க வேண்டியிருப்பது அக்குலத்திற் றோன்றிய எமது கடமையாதலால், கீழ்க்கண்ட எமது அபிப்பிராயத்தைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தத் தீர்மானித்திருக்கின்றோம்:—

(1) பொட்டுக்கட்டும் வழக்கமுள்ள எக்குடும்பமும் எந்த ஜாதிப் பெயராலும் அழைக்கப்படுவதற்கு உரிமையற்றதாகும். தாய்மகள் வழியாக விபசாரஞ்செய்து பலருடன் கலக்கும் மாதர்க்குப் பிறக்கும் பிள்ளைகள் எந்தக் குலத்தைச் சேர்ந்தவரென்பதற்கில்லை.

(2) பல ஜாதிப்பெயர்களாலேயும் அம்மக்கள் தம்மைத் தாம் அழைத்துக் கொண்டாலும், பொது ஜனங்கள் அவர்களைக் கலப்படமானவர்களென்றும், தாசி மக்களென்றுமே அழைக்கின்றனர்.

(3) இதர ஜாதிப் பெயர்களால் தோன்றும் பொட்டுக்கட்டுவார், தாம் ஏற்றுக்கொண்ட பெயர்களையுடைய சாதிகளுக்குத் தாம் தாசிகள் என்று சொல்லுகின்றனரே யொழிய, அச்சாதிகளுக்கும் இவ்வழக்க முண்டென்னும் நன்றியற்ற முரட்டு வார்த்தை பேசுவதில்லை.

(4) பொட்டுக் கட்டும் குடும்பங்களுக்குரிய ஆசாரங்களும், சொத்துரிமைக்கும் ஈமக்கடன்களுக்கும் கைக்கொளளப்பட்டு வரும் விதிகளும் முற்றிலும் வேறு. அங்குப பெண்களுக்கு எவ்வுரிமையும் உண்டே ஒழிய ஆண்களுக்கு இல்லை. இதனாலேயே பொட்டுக் கட்டும் பரம்பரை வேறு என்பது விளங்கும்.

(5) உண்மைச் செங்குந்தர்களின் சாதிக் கட்டுப்பாட்டினையும் ஒழுக்க முறைகளையும் பொட்டுகட்டுபவர்க்குரியவை யெனச் சொல்ல அறிவுள்ளவர்கள் முன்வரார்.

(6) ஒரு குலத்தின் ஆசாரத்தை, அக்குலத்தவர் ஒழுகும் முறைகளையும், அவர்கள் கர்ண



பரம்பரைகளையும், இன்னும் அவர்கள் பண்டை நூல்களில் கூறிய உண்மைகளையும் கொண்டே அறியவேண்டுமே ஒழிய, நுனிப்புல் மேய்ச்சலாகக் கேட்டுப் போகும் வெளிநாட்டுப் பிரயாணிகர்கள் எழுதி வைத்ததிலிருந்தோ, அல்லது அவரவர் சொன்னதை அவ்வண்ணமே பதிவுசெய்யும் சென்ஸஸ் ரிபோர்ட்டர்களின் முடிவுகளி லிருந்தோ துணிவது சரியான முறை யன்று. உண்மை ஆசாரமும், கர்ண பரம்பரையும், ஒட்டக்கூத்தர் ஆதாரமும் புறக்கணிக்கப்பட்டு, வெள்ளையர் நுனிப்புல் மேய்ச்சலாகவும், கேள்விக் குறைவினாலும், அனுபவமின்மையாலும், இந்தியர் நாகரீகத்தைத் தூற்றித் தாழ்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடும் எழுதிவரும் ஆதாரமற்ற பொய்க்கூற்றுகளே இக்காலம் அரங்கமேறு கின்றது. இது செங்குந்தர்களின் துர்ப்பாக்கியமே. மிஸ் மேயோ கூற்றுக்களுக்கு ஆதரவான துராசாரத்தை மேற்கொண்டிருக்கும் ஒரு சிறு கூட்டத்தாருள் அதைக் களைந்து போடவேண்டு மென்னும் நல்ல முயற்சி செய்யும் தோரணையில் அம்முயற்சி செய்துவரும் சீர்திருத்தக்காரரே இவ்வாசாரம் ஒரு பெரிய சாதியாருக்குண்டெனச் சொல்லுவது, இப்பொழுது உலகத்தில்பேச்சுக்கும் செயலுக்கும் காணப்படும் பல முரண்களுள் ஒரு விந்தையான முரணாகும்.

(7) தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் செங்குந்த வகுப்பாரின் மாகாண சங்கமாகும். அதற்கு ஏறக்குறைய நூறு செங்குந்த சங்கங்கள் கிளைகளாக இருக்கின்றன. மேலும் மேலும் கிளைச்சங்கங்கள் தோன்றி அதன் குலத்தொண்டையும், அபிப்பிராயங்களையும், வேலைசெய்யும் முறைகளையும் அதன் பத்திரிகையாகிய 'செங்குந்த மித்திர'னையும் ஆதரித்துப் போற்றுகின்றன. அதைப் புறக்கணித்துப் பேசுவது குலாபிமானிகளுள் செயலாகாது. உண்மைச் செங்குந்த குலாபிமானிகளுள் எவரும் கோவையாரைப்போல் அதைத் தூற்ற முன்வரார். மேலும், கோவையார் கூற்றுக்களை ஆதரித்துப் பேச இது வரைக்கும் ஒரு உண்மைச் செங்குந்த சங்கமும் வெளிவராததே அவர்கள் கூற்று உண்மைக்கு மாறாக எழுதும் சிலரின் வம்புப் பேச்சென நிரூபிக்கின்றது."

மு. சரவண முதலியார்,
ம து. பாலசுந்தர முதலியார்,
காரியதரிசிகள்.

## சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கம்

### I

இச்சங்கத்தின் சார்பில் சென்னைச்செங்குந்த வாலிபர்களின் பொதுக்கூட்டமொன்று தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க காரியாலயத்தில் 17-2-28 மாலை 5-மணிக்குத் திருவாளர் ம. கனகசபை முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிற்று.

அது போழ்து 'ஜாதீய சங்க ஸ்தாபனங்கள் அவசியமா?' என்பதைக் குறித்து ஒரு சொற்போர் நிகழ்ந்தது.

சென்னை ராஜதானிக் கல்லூரி மாணவர் திரு. தங்கவேலு முதலியார் அவர்கள் அவசியமென்று விளக்கி வாதித்தார். அவர் சங்கங்களால் பொதுவாக உண்டாகும்நன்மைகளையும் ஜாதீய சங்கத் தாபனங்களால் ஜாதீய முன்னேற்ற முண்டாமென்பதையும், ஜாதீய முன்னேற்றத்தாலேயே சமுத்துவ உணர்ச்சி யுண்டாகுமென்பதையும், சமுத்துவ உணர்ச்சியாலேயே உண்மையானதேசீயம் நிலவுமென்பதையும் பற்றி விளக்கித் தமது வாதத்தை மெய்ப்பித்தார்.

பின்னர், பச்சையப்பன் கல்லூரி மாணவர் திரு. குமாரசுவாமி முதலியார் அவர்கள் அவசியமில்லை என்பதைப் பற்றிச் சொற்போரிட்டார்.

பின்னர் மேற்படி பொருள்பற்றிச் சிலர் ஒட்டியும் சிலர் வெட்டியும் உரையாடினர்.

தலைவர் தமது பின்னுரையில் பற்றுள்ளவரையில் எல்லாம் உளவாமென்றும், ஜாதி அறியாமையாலுண்டாயிருப்பினும் அதைப் போக்குதற்கு ஜாதீய சங்கங்கள் அவசியமென்றும், அச்சங்கங்களின் நோக்கங்கள் நல்லனவாயிருப்பின் ஜாதீய சங்கங்களாலேயே உண்மையான தேசியமுண்டாகுமென்றும் கூறினார்.

பின்னர் சங்க அமைச்சர் வந்தனோபசாரங் கூறக் கூட்டம் முடிவுற்றது.

### II

இச்சங்கத்தின் சார்பில் 24-2-28 மாலை 5-30 மணிக்குச் சென்னைச் செங்குந்த வாலிபர்களின் பொதுக் கூட்டமொன்று திருவாளர் மா. பா. சந்தசுவாமி முதலியார் B.A., B.E., அவர்கள் தலைமையின்கீழ்க் கூடியது.

தலைவர் முகவுரைக்குப் பின் "சமுதாய சீர்திருத்தமும் செங்குந்தர் சங்கங்களும்" என்னும் பொருள் பற்றித் திரு. க. வச்சிரவேலு முதலியாரால் ஆங்கிலத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப் பெற்றது. கூட்டத்திற் போந்திருந்த பெரும்பாலர் மேற்படி பொருள் குறித்து உரையாடினர்.

பிறகு கீழ்க்காணும் தீர்மானங்கள் கொண்டு வரப்பெற்று எல்லோராலும் ஏகமனதாக நிறைவேற்றப் பெற்றன:—

**தீர்மானங்கள்:—**

(க) இச்செங்குந்த வாலிபர் சங்கமானது இம்மதி 1, 2 தேதிகளில் கொடுவாயிற் கூடிய கோவைச் செங்குந்த மகாஜனசங்க வருடாந்தரக்கூட்டத்தில் அச்சங்க அங்கத்தவருள்சிலமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தைப் பற்றி நிறைவேற்றப் பெற்ற இழி சொற்களாலாய அவதூறான தீர்மானத்தையும், வரவேற்புத் தலைவர் கூற்றில் பொதிந்து கிடக்கும் வரம்பு மீறிய வசைமொழிகளையும், பின்னர் அச்சங்கத்தின் அமைச்சரால் சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கும் அது குறிக்கும் செங்குந்த சமூகத்திற்கும் இழிவு உண்டாக்கும் நோக்கத்தோடு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு விரோதமாகப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விஷயங்களையும் ஒழுங்கற்ற பொய்க் கூற்றுக்களென வன்மையாகக் கண்டிக்கின்றது.

(உ) கோவில்கட்கு மகளிரைவிடும் ஒரு வகுப்பினரையும் செங்குந்தர்களையும் ஒன்றென மயங்குமாறு கோவைச் சங்கத்தாரால் செய்யப்படும் சூழ்ச்சிகளால் பொதுமக்கள் ஒருகாலும் ஏமாற்றமுறார் என்று இச்சங்கம் உறுதிகொண்டுள்ளது.

(ங) இத்துடன், கோவைச் செங்குந்தர் சங்கமானது எக்காலத்தும் அகில செங்குந்த சமூகத்திற்கென நின்று வினையாற்றியதில்லை என்பதையும், அது கோயமுத்தூர் ஜில்லாவில் தங்களைச் செங்குந்தர்கள் என்று சொல்லிக்கொள்ளுகின்ற ஒரு சில குடும்பத்தினர்க்காகவே நின்று வினையாற்றி வருகிறதென்பதையும், ஆனால் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் அவ்வாறின்றி மூவாயிரம் சந்தாதாரர்களை உடைய 'செங்குந்த மித்திரன்' என்னும் ஒரு சமூகப் பத்திரிகையையும், 80-க்கு மேற்பட்ட கிளைச் சங்கங்களையும் உடையதாய், இம்மாகாணத்திலுள்ள அகில செங்குந்த சமூகத்தவரால் அமைக்கப்பெற்ற மாகாண அமைப்பாகுமென்பதையும் பொதுமக்கள் உணர்ந்து கொள்ளுமாறு இச்சங்கம் விரும்புகின்றது என டை சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

**குறிப்பு:**—இம்மாதத்திய பத்திரிகையில் இடமில்லாததினாலும், பல கண்டன கூட்டங்களின் அறிக்கைகளும் அவைசம்பந்தமான நிருபங்களும் காட்கழித்து வந்ததினாலும், சிலவற்றைக் குறைக்கவும் பலவற்றை அடுத்த மாத பத்திரிகைக்கு நிறுத்திவைக்கவும் நேர்ந்தது. இதற்காக அந்நிருபர்கள் எம்மை மன்னிக்கவேண்டுகின்றோம்.

ப-ர்.

---

நிருபர் கடிதங்கள்.

## உண்மைக் கைக்கோளரும் போலியரும்

திருவளர்ந் தோங்கும் தென்னாட்டின்கண் பண்டைக் காலத்தில் கைக்கோளக் குடியினர் ஒரேவகையினராக விளங்கினர். இக்காலத்தில் உண்மைக் கைக்கோளர்களுக்குப் போலியாக மற்றொரு குடியினர் தோன்றியிருப்பது பெரியதொரு விந்தையாகும். இவர்களுள் உண்மைக் கைக்கோளராவார் பரம்பரையாக வந்த உண்மைக் கைக்கோளரே; போலியரென்பார் சேக்கிழாரடிகளால், 'பதியிலார் குலம்' எனப் புகழ் கொண்ட தேவரடிமை (கணிகையர்) களுடன் இனத்தொடர்புடையவர்களேயாம்.

உண்மைக் கைக்கோளர் குடித்தொழிலாகச் சிறப்பாய்க் கொண்டது நெசவு; பெரும்பான்மையோர் இத்தொழிலையே இன்னும் நடத்துகின்றனர். பெண்கள் வீட்டு வேலைகளுடன் சிறிய வருவாய் கிடைக்கிற நூலிழைத்தல், பசைக்காய்ச்சுதல், பாவோடுதல் முதலியவைகளை நெய்தற்றொழிலுக்குதவியாக அவரவர் உடல் வலிமைக்கும் அறிவிற்கும் ஏற்பச்செய்து வருகிறார்கள். சில இடங்களில் நெசவும் நெய்கிறார்கள். பெரும்பாலும் பெண்கள் ஆரம்பக் கல்வியும் இல்லாதவர்களே.

தேவரடிமைகளைச் சார்ந்த குடியினரின் பெண்கள், தம் குடித்தொழிலாகக் கொண்டது கோயில்களில் ஆடல்பாடல்; ஆண்கள் நாகசுரம், டவுல், ஒத்து, மத்தளம் முதலிய இசைக்கருவிகளை வாசித்தல்* பெரும் பகுதியினர் இன்னும் இத்தொழில்களைச் செய்கின்றனர். பெண்களிற் சிலர் திருமணஞ்செய்து கொண்டவர்களாயும், பலர் இறைவன் திருப்பெயரைச் சொல்லி 'பொட்டுக் கட்டுதல்' என்ற ஒரு சடங்கு செய்து கொண்டு இறைவன் திருக்கோயில்களில் பாடுதல், மேனாட்டு ஆடவர்களைப்போல் காலுடை (Trousers) யணிந்து அதற்குமேல் சீலையை பாங்குபட உடுத்து, கோலாட்டமாடுதல், சதிராடுதல் கழைக்கூத்திபோல்§ இராட்டினத்திலேறிக் கரணம் போடுதல் முதலியன செய்தும், இசைக் கருவிகளைக்கொண்டு பிறருடைய இல்லங்களிலோ அவைகளிலோ நடக்கும் சிறப்புக் காரியங்களுக்கு இசையின் வன்மையைக் காட்டிப் பெரும்பொருள் பெற்றும்வாழ்கிறார்கள். சிலர் நாடகக் கொட்டகையில் ஆடுகிறவர்களாயும், இன்னுஞ் சிறு பான்மையோர் பாகவதர்களைப் போல் பக்க மேளங்களுடன் 'கதை' செய்கிறவர்களாயும் இருக்கின்றனர். இத்தகைய தொழில்களைச் செய்கின்ற தேவரடிமைகளில் பலர் பரத்தையராகவும் சிலர் காமக் கிழத்தியராகவும் இன்றளவும் வாழ்கிறார்கள். இதைக் கண்கூடாகக் காணாதவர்கள் நம் நாட்டில் உளரோ?

(காமக் கிழத்தியர்)

'ஒருவன் தனக்கே யுரிமை பூண்டு
வருகுலப் பரத்தையர் மகளிராகி
காமக்கு வரைந்தோர் காமக் கிழத்தியர்.'

(க. அகப்பொருள் ககஉ).

(காமக்கிழத்தியர்க் குரிய தொழில்)

'குடிபிறந்தோரை வகுப்படுத் துரைத்தலும்
மனைவியைப் பழித்தலும் வாடா வூடலுட்
டலைவற்கிழறலு மனைவிக் கமைந்த
ஒழுக்கமும் காமக் கிழத்தியர்க் குரிய.'

(க. அ. ௧0௪)

(பரத்தையர்க் குரிய தொழில்)

'கிழவோன் றன்னையுங் கிழத்தி தன்னையும்
இகழ்தலுந் தம்மைப் புகழ்தலு நிகழ்பொருள்
காத்தலும் பரத்தையர் கடனென மொழிப.

தேவரடிமைகள் பெரும்பாலும் இத்தகைய பரத்தையர் தொழிலை மேற்கொண்டொழுகுவதால், 'கலம்பகம்' என்ற நூலில் பலவகைப் பாக்களும் கலந்து மிளிர்வதுபோல, இவர்கள் குடியில் பலவகையினருடைய குருதிக் கலப்பிருக்கு மென்பது தேற்றம். உண்மைக் கைக்கோளர்களில் இறப்ப இழிந்த இச்செய்கை எக்காலத்திலும் கிடையாது. கைக்கோளரைப் பற்றிக் கூறுகிற 'ஈட்டி யெழுபது' 'கந்தபுராணம்' முதலிய எந்நூலிலும் கைக்கோளரைக் கணிகையரோடு தொடர்புடையார் என்பதற்குச் சிறிது கூட ஆதாரமில்லை. ஒட்டக்கூத்தர் முதலிய பெரியார்கள் இத்தகைய இழிகுடியினரோடு தொடர்புடையாராக இருந்திருந்தால், சோழமன்னர் ஆசிரியராக்கொண்டு, 'பாடுங் கவிப் பெருமானொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச் —சூடுங்குலோத்துங்க சோழனென்றே யெனைச் சொல்லுவரே' என்று புகழ்ந்திருப்பார்களா?

"வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான்யா றன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந் தன்ன நலம்பட ரொழுக்கமும்
திங்க ளன்ன கல்வியும்,"

என்ற இவ்வடிகளைக் கொண்டு நீளக் கூறிய பொதுப்பாயிரத்தின் முதலில் குடிபிறப்பைத்தான் வைத்துளார்.

'குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே'

என்று பவணந்தியாரும் குலத்தை முதலில் வைத்திருப்பது கவனிக்கத்தக்கது. உண்மைக் கைக்கோளரில், ஏதாவதொரு பெண் வேறு குடியினரோடுதொடர்புடையளாகக் கண்டால், உடனே அவைகூட்டிக் குடியிலிருந்து ஒதுக்கிவிடுவார்கள். இச்செய்கை தொன்றுதொட்டு வருகிற பழக்கமல்லாது இப்பொழுது கற்பிக்

---

*இக்காலத்தில் பல துறைகளிலும் பேர்போனவர்களாய் இருக்கும் தமிழ்நாட்டு ஆரியர்கள் இசையிலும் சிறந்தவர்களாகத் தான் விளங்குகிறார்கள். சிறிது கவனியுங்கள், புல்லாங்குழல்:—திரு. சஞ்சீவிராவ், பல்லடம். பிடில்:—திரு. கோபாலகிருஷ்ணய்யர், கருங்காபுரி. வீணை.—திரு. சுப்பிரமணிய சாஸ்திரியார், சேர்மாதேவி. வாய்ப்பாட்டு:—திரு. வைத்தியநாத பாகவதா, சம்பை; கொன்னக்கோல் திரு. கோபால ஐயங்கார், மோர்சிங்கு:—திரு. சீதாராமய்யர் ஆகிய இவர்களைப்போன்ற எத்தனையோ ஆரியர்களுடைய பெயர்களைக் கேள்விப்படுகிறோம்; பார்க்கிறோம். ஆனால் ஒருஐயராவது ஐயங்காராவது இராயராவது நாகசுரம் ஊதினர். ஒத்து ஊதினர்; தவுல் அடித்தாரென்று, பார்த்தவராவது கேள்விப்பட்டவராவது உண்டோ?

§கழைக் கூத்திபோல் கடித்தல் ஐயாற்றில் ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் நடக்கும் விழாக்களில் காணலாம்.

கப்பட்டதல்ல. இதில் ஐயமுள்ளவர்கள் உண்மைச் செங்குந்தருள்ள ஊர்களுக்குச் சென்று, கண்டு, கேட்டு ஆராய்ந்துணர்க.

உண்மை இஃதாக இருக்க, விசுவாமித்திரன் அரிச்சந்திர மன்னனைத் தேவ அவையில் கூறியதுபோல 'தமிழ்நாடு' பத்திரிகையில் 8—1—28ல் 'செங்குந்த சங்கங்கள்' என்ற தலைப்பிட்டு 'ஜாதி இறுமாப்புத்தொலைய வேண்டும். சமூகம் முன்னேற்றமடைய வேண்டும்' என்ற கட்டுரை எழுதி திரு. என். பழனியப்ப முதலியார் உண்மைக் கைக்கோளர்களுக்கு ஊனத்தைக் கற்பிக்க முயலுதல் ஆச்சரியமாக இருக்கிறது. பிறப்பில் இழிவு காணாத எவரும் சாதியபிமானத்தை புறக்கணித்துப் பேசார்.

உண்மைக் கைக்கோளருக்கும் தேவரடிமைகளுக்கும் உள்ள வேறுபாடுகளை அறியாமலும் ஆராயாமலும் எழுதுவார் கற்பனை சாலவும் நன்றாயிருந்தது! கொங்குநாட்டிலுள்ள தேவரடிமையைச் சார்ந்தார் ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்குமுன் செங்குந்தர் என்ற பெயரைத்தங் குடியினருக்குப் புதிதாகப் புனைந்தார்கள், இதனாலுண்டான பொருட்செலவு உண்மைக் கைக்கோளர்களுக்கும் போலியருக்கும் இவ்வளவு என்று குறிக்சலாகுமா! இதைக்கண்ட சோணாட்டு இசைக் குடியினர், எவருக்கும் தீங்கில்லாததும் சிறப்புடையதுமாக, தங்குடித்தொழிலாகிய இசையினைச் சேர்த்து, 'இசைவேளாளர்' என்று பெயரிட்டுக் கொண்டனர். இதைச் சோணாட்டிலுள்ள யாவரும் அறிவர்.

நம் இந்து மக்களின் நற்காலத்தால் உயர்திரு காந்தியடிகள், திருமிகு டாக்டர் முத்து லக்ஷ்மி அம்மாள் போன்ற அறிவாளர்களால்பொட்டுக் கட்டுதல் என்னும் தீங்கு ஒழிந்து இவர்கள்தூய்மை யுடையவர்களாய்த் திகழ்ந்தாலும், அவர்களோடு உண்மைக் கைக்கோளர் உறவுகொள்ள மாட்டார்கள் என்பது திண்ணம். பரதகண்டத்தில் பார்ப்பனர் முதல் ஆதித்திராவிடர் வரைச் சொல்லப்படுகிற எல்லோரும் சாதிப்பட்டங்களையும், சாதிப் பெயர்களையும், தீண்டாமையையும் அறவே விடுத்து, இந்தியர் என்னும் ஒரே பெயருடன் எப்பொழுது விளங்குவார்களோ அப்பொழுதுதான் சாதி யிறுமாப்புத் தொலையுமே ஒழியப் போலி வேடம் பூண்டு நடித்துப் பழிததுப் பேசி விடுவதால்இறுமாப்பு ஒழியும் என்பது 'பாச்சி, பாச்சி' என்றழும் பாலர்களுக்குப் 'பூச்சி பூச்சி' என்பதைப் போலாகும் என்பது திண்ணம்.

இம்முடி தமாரசாமி, திருவையாறு,

## கோவை பழனியப்ப முதலியார் பிதற்றல்.

நாளது பிப்ரவரிமீ 16வ 'தமிழ்நாடு' தினசரி பத்திரிகையில் கோயம்பத்தூர் செங்குந்தர் சங்கம் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு கூட்டத்தின் காரியதரிசி ஸ்ரீமான்பழனியப்ப முதலியாரின் வியாசம் ஒன்று கண்டோம். அவர் உண்மைச் செங்குந்தர்மீது தோஷம் கற்பிக்க ஏனோ இவ்வளவு புரட்டான சங்கதிகளை எழுதுகிறாரென்று தெரியவில்லை. தர்ஸ்டன், புக்கானன், ஸ்டுவர்ட் முதலானோர் எழுதிய புஸ்தகங்களை இவர் ஆதாரம் காட்டுகிறார். இப்பொழுது மிஸ் மேயோ எழுதிய புஸ்தகத்துக்கும் அவள் இந்தியாவில சிலருடைய உதவியிருந்து எழுதினாளேயொழிய அவளாக எழுதிவிடவில்லை. அதுபோல அவர்களும் நமது பழனியப்பமுதலியார் போன்ற குலந் தெரியாதார்க்கு ஜாதிகற்பிக்க முன்வந்தவர்களின் ஆதரவைக்கொண்டு எழுதிவிட்டிருக்கலாம். இதை ஒரு ஆதாரமாக எடுத்தாள்வது புல்லெடுத்து போர் செய்யப்போனவன் கதையையே ஒக்கும். இதல்லாமல் அவதாரணிய தகனத்தில் பூர்வம் உத்தம குலத்தோராயுள்ளோர் தலைப்பெண்டிரைச் சிவார்ப்பிதம் செய்தே வந்தனர் என எழுதியிருப்பதாகக் கூறுகிறார். அவ்வாறானால் எல்லா உயர்குலத்தவருமே பொட்டுக்கட்டுபவரா யிருந்திருக்க வேண்டும். அவ்வாறு பொட்டுக்கட்டிப் பிற்காலத்தில் இழி தொழிலுக்கு ஈடுபட்டவர்களே இப்பொழுதுள்ள தாசி வகுப்பினர் என்பதைப் பழனியப்ப முதலியார் அவருடைய வாதத்திலிருந்தே ஒப்புக்கொள்ளவேண்டும். ஒரு பெண்ணும் பல ஆணும் கலந்து பிறக்கும் வம்சத்துக்குச் செங்குந்தர் என்று பெயரிட்டு அழைக்கவேண்டு மென்று பழனியப்ப முதலியார் சொல்லும் வாதந்தானெமக்கும் விளங்கவில்லை. அநேக இடங்களில் தாசி வகுப்பினர் பெண்கள் விபசாரம் புரிவதும், ஆண்கள் வாத்தியம் முதலிய வாசிப்பதும் கண்கூடாகக் காண்கிறோம். பழனியப்ப முதலியாரின் ஜில்லாவாகிய கோயம்புத்தூரிலேயே சீரிய செங்குந்த மேன்மக்கள் பலர் இருக்கின்றனர். அவர்களெல்லாம் இந்தத் தாசி வகுப்பினரை நட்டுவன், தேவடியாள் என்று அழைத்து வருவதுடன் அதற்கு வேண்டிய ஆதாரங்கள் எவ்வளவோ இருப்பதாகவும் கூறுகிறார்கள். தாசித் தொழிலை மேற்கொண்ட வம்சத்தில் வந்தவர்களுக்கு எந்த ஜாதியின் பெயரையும் குறிக்க முடியாதென்பதை நமது பழனியப்ப முதலியார்



யாராயின் அவருடைய அறியாமையை யாரே துலக்கமுடியும்? தாசிபொன்னி மகன் ரெங்கன் செங்குந்தகுலம் பிராசு, என்றால் செங்குந்த குலம் என்பது எவ்வாறு பொருந்தும் என்பதை வாசகர்களே யோசித்துக் கொள்ளட்டும். எங்களுக்கு ரிஜிஸ்டர் தஸ்தாவேஜுகள் அனேகம் இருக்கின்றன என்றால், பத்திரப்பதிவு இலாகாவில் இதைத்தள்ளிவிடவேண்டு மென்றாசட்டம் செய்திருக்கிறார்கள்? இவர்கள் உயரப்பறந்துவிடவேண்டு மென்பதற்காகப் புராதனமான சீரும் சிறப்பும் வாய்ந்த ஓர் உத்தம குலத்துக்குத் தோஷம் கற்பிக்க முன்வந்த நமது முதலியாரின் பேதமைக்கு நாம் வருந்தாமலிருக்க முடியவில்லை.

சீரிய செங்குந்த குலப் பிரமுகர்களே! இனியும் உறங்காதீர்கள். செங்குந்தரின் உற்பத்தி, வழக்க ஒழுக்கம், மேன்மை முதலியவற்றைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் பிரசாரமூலமும் பத்திரிகை மூலமும் எவ்வளவோ பேசியும் எழுதியும் வரும் பொழுதே, இத்தொழில் புரியும் ஒரு சிறு கூட்டத்தார் நமது சமூகத்தில் வந்து ஒட்டிக் கொள்ள நினைத்து அதற்காக நமது சமூகத்துக்கே ஒரு தோஷத்தைக் கற்பிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இவர்கள் வெகு நாளாகவே இவ்வித சூழ்ச்சி செய்துவந்திருந்தாலும், நாம் விழித்துக்கொண்டு இனியாவது அவர்களுக்குத் தக்க ஆப்பு இறக்கி உண்மைவழி ஓடச் செய்யவேண்டும். சகோதரர்களே இனியும் உறங்காதீர்கள். எழுமின்! எழுமின்!!

தீ. அருணசல முதலியார்.

---

## தலைச்சங்கத்துப் பிரதிநிதிகளின் பிரசாரம்.

நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பிரசாரகராகிய திரு. தி. அ. சண்முக முதலியார் சென்ற ஜனவரிக் கடைசி வாரத்தில் கருங்குழி, புதுப்பட்டு முதலிய பல கிராமங்களுக்குச் சென்று பிரசாரம் செய்து கிளைச்சங்கங்களை ஸ்தாபித்தும், மித்திரனுக்குச் சந்தாநேயர்களைச் சேர்த்துக்கொண்டும் திரும்பிவந்தனர்.

கோயமுத்தூர், சேலம் ஜில்லாக்களிலுள்ள குலாபிமானிகளின் வேண்டு கோளின்படி ?—2—28 தேதி தலைச்சங்கப் பிரதிநிதிகளாகிய திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியார் மா. அ. கனகசபை முதலியார், க. வச்சிரவேலு முதலியார் ஆகிய மூவரும் சென்னையிலிருந்து பிரசாரம் செய்யப் புறப்பட்டனர். திரு மா. அ. கனகசபை முதலியார், க. வச்சிரவேலு முதலியார் ஆகிய இருவரும், ஊற்றுக்குழி, சென்னிமலை, ஈரோடு, திருச்செங்கோடு, உலகப்பன்பாளையம், இளையாம்பாளையம் முதலிய இடங்களுக்குச் சென்று பிரசாரம் செய்து சென்னைக்குத் திரும்பி வந்தனர். திரு. தி. அ. சண்முக முதலியார் சென்னிமலை, ஊற்றுக்குழி, முரட்டுப்பாளையம், திருப்பூர், இடும்பன்பாளையம், கறுப்பகவுண்டன்பாளையம், பெரியாயிபாளையம், தேவராயம்பாளையம் முதலிய இடங்களுக்குச் சென்று பிரசாரம் செய்து கிளைச்சங்கங்கள் ஸ்தாபித்துக்கொண்டும், நம் மித்திரனைப் பரவச் செய்துகொண்டும் வருகிறார். இவர் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாருடன் இனி மலையாளம், கோயம்புத்தூர், சேலம் முதலிய ஜில்லாக்களின் பலவிடங்களிலும் ஒரு மாதம் வரையில் பிரசாரஞ் செய்வார்.

சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் திருச்செங்கோடு, ஈரோடு சூழ்ந்த இடங்களில் வதியும் நம்மவர்கள் மூன்று அல்லது நான்கு வருஷங்களுக் கொருமுறை ஆயிரக்கணக்காக இளையாம்பாளையம், உலகப்பன் பாளையம் முதலிய இடங்களில் ஒன்றுகூடித் தங்கள் தங்கள் குலதேவதைகளுக்குத் தைப்பூச வாரத்தில் வழிபாடு செய்கின்றனர். இதன் கருத்துக் குல தெய்வங்களை வழிபடுதலே யன்றிப் பலவிடங்களில் பரவி நாளடைவில் ஒருவரை யொருவர் தெரிந்துகொள்ளக் கூடாதிருக்கும் பங்காளிகள் ஒற்றுமையுணர்ச்சி பெற்றுத் தங்களுக்குள்ள உறவின்முறையை மறவாதிருக்கச் சந்தர்ப்பம் தருதலுமாம். ஆகையால் இதைப் பங்காளிகளின் மகாநாடென்றே சொல்லலாம்.

நமது பிரதிநிதிகள் செல்லுமிடங்களி லெல்லாம் நங்குலத்தோர் காட்டும் ஊக்கமும், செய்யும் உதவியும், உபகாரமும் மிகவும் பாராட்டத்தக்கன. பங்குனி மாதம் துவக்கத்தில் 'செங்குந்த மித்திரன்' பத்திரிகாசிரியரும் தலைச்சங்கத்து அமைச்சருமாகிய திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், எம்.எ., எல்.டி., புதுவை, கூடலூர், சிதம்பரம், திருவோத்தூர், முதலிய இடங்களுக்குப் பிரசார நிமித்தம் செல்லுகின்றனர். தென்னாட்டிலும் சித்திரை வைகாசி மாதங்களில் பிரசாரஞ் செய்ய உத்தேசித்திருக்கின்றனர்.

## செய்தித் திரட்டு

"கிரேட்பிரிட்டன்" என்னும் இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் சுமார் 26 பெயருக்கு ஒரு மோட்டார் வண்டியும், அமெரிக்காவில் 5 பெயருக்கு ஒரு மோட்டார் வண்டியும் உண்டு.

---

ஜெர்மெனியின் இராஜதானியாயுள்ள பர்லின் என்னும் நகரத்திலிருந்து சுமார் 14,000 மைல் தூரமுள்ள, அமெரிக்காவில் மேற்குக் கரையிலுள்ள சான்பிரான்ஸிஸ்கோ என்னும் நகருக்கு டெலிபோன் சர்வீஸ் (நேரே பேசுவது) ஏற்பட்டுள்ளது. ஒருமுறை, அதாவது பதினொரு நிமிடநேரம், அதன் மூலமாய்ப் பேசுவதற்குச் சுமார் 715 ரூபாய் செலவாகிறதாம்.

---

மெஸ்ர்ஸ் ஸ்வான் ஹன்டர் ரிச்சர்ட்ஸன் கம்பெனியாரால் புதிதாய்க் கட்டிய சிங்கப்பூரின் மிதக்கும் கப்பற்றுறை 50,000 டன் நிறையுள்ளதாம். அதில் 20000 டன் நிறையுள்ள எஃகுச் சாமான்களும் 35 லக்ஷம் ரிவிட் ஆணிகளுமுள்ளனவாம். இது சிங்கப்பூரைப் போய்ச் சேர சுமார் 3, 4 மாதங்களாகும்.

---

அமெரிகா ஐக்கிய ராஜ்யத்தின் இராஜதானியாயுள்ள நியூயார்க்கில் ஒருகோடி ஜனங்களுக்கு மேல் வசிக்கின்றனர். அம்மகாநகர் அமெரிக்காது ஆஸ்தியில் பத்தில் ஒரு பங்கு பெற்றுள்ளது. அதன் மதிப்புச் சுமார் 3800 கோடி டாலர்கள். அந்நகரில் 30,000 யந்திர கைத்தொழிற்சாலைகளுள்ளன. அவைகளில் செய்துவரும் சாமான்களின் வருஷ மதிப்பு 650 கோடி டாலர்களாம்.

---

### ஆசாரியாபிஷேகம்.

காஞ்சிபுரம் ஸ்ரீ கற்பக வள்ளலார் ஆதீன மடாலய குருசாமிகள் ஸ்ரீலஸ்ரீ சட்டநாத தேசிகர் சேட்ட குமாரரும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கௌரவப் பிரசாரகர்களுள் ஒருவருமாகிய ஸ்ரீலஸ்ரீதில் சாமிநாததேசிக குருசுவாமிகள் அவர்களுக்குக் கோடம்பாக்கம் கிராமத்தில் கலி-5029ல்பிரபவ ஆண்டு தைத்திங்கள் 28ம் நாள் சுக்கிரவாரம் அஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினம் காலை மீனலக்கினத்தில் ஸ்ரீ சிரோரத்திபரண மடத்துச் சுவாமிகள் ஸ்ரீ அண்ணுசாமி குருக்கள் அவர்களால் ஆசாரியாபிஷேகம் அவரது ஆதீன சிஷ்ய கோடிகளின் நன்முயற்சியால் மஹாதிருப்திகரமாக நிறைவேறியது.

---

### தை மாதத்து ஐயவினாவுக்கு விடை.

சென்ற தைமீ வெளிவந்த 'செங்குந்தமித்திரன்' இரண்டாந் தொகுதியின் முதற் பகுதியில், திரு. கு. தணிகாசல முதலியாரவர்கள் ஐயவினாவாக "புகையெட்டும் போக்கெட்டும்" என்னும் திருத்தாண்டகத்துக்கு உரைகேட்டிருந்ததைக் கண்ணுற்றேன்.

அதுகாலை, எனக்குத் திருவையாற்று வடமொழிக்கல்லூரித் தமிழ் விரிவுரையாளராய்த் திகழ்கின்ற உயர் திருவாளர் L உலகநாத பிள்ளையவர்கள் குரோதன வருஷம் சித்திரைமீ வெளிவந்த "தமிழ்ப்பொழில்" முதற் சஞ்சிகையில் "ஒரு திருப்பாட்டிற் குறை" என்ற தலைப்பின் கிழ் வெளியிட்டிருந்தது நினைவுக்கு வந்தது. அதை இச் 'செங்குந்த மித்திரன்' வாயிலாகவும் வெளியிடின் இன்னும் பலர் தெரிந்துகொள்வர் என்ற எண்ணத்துடன் ஈண்டுஎழுதுகின்றேன்.

அஃதாவது :—ஈண்டுத் திருப்பாட்டென்றது, திருநாவுக்கரசு நாயனார் அருளிய திருவாரூர்த் திருத்தாண்டகங்களுள் "ஒருவனுயுலகேத்த" என்னுந் தொடக்கத்தினையுடைய பதிகத்துள் "புகையெட்டும்" என்ற பாசுரத்தினை. இதற்குப் பொருள் தெரிதற்கண் எவர்க்கும் வேணவா உண்டு. இத்தகைய அரும் பெறற் பாட்டின் உரையினை 'நீ யாங்குப் பெற்றனை' எனிற் கூறுவேன்.

சில யாண்டுகட்கு முன்னர் பழைய ஏடுகளை ஆராய்ந்தபோது சித்தரந்தாதி என்றொரு சுவடி எனக்குக் கிடைத்தது. அது திருவானைக்காவின்கண் கோயில்கொண்டு வீற்றிருக்கும் அகிலாண்டவம்மை புகழ்ச்சி மாலையாகும். சித்தர் என்பவர் இயற்றிய இருபத்திரண்டு கலித்துறையானமைந்த அந்தாதியாகலின் அந்நூல் இப்பெயர் பெற்றதுபோலும். அதற்கு உரைகண்ட ஆசிரியன்மாருள் ஒருவர், தாம் வகுத்த ஒரு செய்யுள் உரைக்கு இத்தாண்டகத்தினை மேற்கோளாக எடுத்தாண்டிருப்பக் கண்டேன். அவ்வுரை இத்திருப்பாட்டிற்கு விளக்கவுரையாக



இருக்கக் கண்ட பொழுது "நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்" என்னும் மூதுரை என் நினைவில் வர, வியப்பும் மகிழ்வும் எனக்குடன் நிகழ்ந்தன, யான் உரைபெற்ற வரலாறு இதுவேயாகும்.

ஆகவே, அச்செய்யுளின் உரையை எழுதவே இப்பாட்டிற்கு உரை இனிது விளங்குமாகலின் அதனை இங்கு எழுதுவேன்.

"காரண மென்னென் றறிகின் றிலேங்கட லும்மலையு
மாரண மும்மகி லாண்டமு மண்டாண் டம்பொதிந்த
பூரண மும்முக முஞ்சக மும்புற மும்புறத்து
வாரண மும்பெண் பிள்ளைவி ளையாடு மணற்சிற்றிலே"
(சித்தரந்தாதி-மூன்றுஞ்செய்யுள்).

என்றது—எல்லையற்ற அகிலாண்டங்களில் அங்கங்கே தோற்றப்பட்ட இலவணுதி சத்த சமுத்திரங்களும், மேருவாதி அட்டகுல பர்வதங்களும், வேதாகம புராண சாஸ்திரங்களும், அகிலாண்டமான பூமி அந்தரிட்சை சொர்க்கங்களும், இருபத்தெட்டுக்கோடி நாகங்களும், அண்டரண்ட பகிரண்டங்களைப் பொதிந்து சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவிற் பெரும்பாழ் முதலான எழுவகையான பரிபூரணங்களும், முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணுயிரம் இருடிகளும், பதினெண் கணங்களும், நரமிருக பட்சி தாவரங்களும், பிரமபேதம், விஷ்ணுபேதம், உருத்திரபேதம், மகேசுரபேதம், சதாசிவபேதம், விந்துபேதம் நாதபேதம், எல்லையற்ற சத்திபேதம், அறிவின் பேதம், மாயை மகாமாயையின் பேதம், பசுகரண பேதம், சிவகரண பேதம் என......வகையாக எண்ணப்பட்ட சேதனு சேதனங்கள் பொருந்தின பேத ரூபாங்கமும், எழுவகை யுயிர்த்தோற்றத்துக்குக்கருவான குடல், முட்டை, விதை, வேர்வை இவைகளில் தோற்றப்பட்ட நால்வகைச் சகமும், ஆகவநீயம், காருகபத்தி என்னும் போக்கு எட்டும், சத்தாதி பஞ்ச விடயம், தக்கணுக்கினி, காலாக்கினி, மூலாக்கினி, கோபாக்கினி உதராக்கினி, வடவாமுகாக்கினி என்னும் புகை எட்டும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா, யம். மனம் புத்தி, அகங்காரம் என்னும் புலன் எட்டும், அதல விதல சுதல நிராதல தராதல மகாதலபாதால அகிலதல மென்னும்பூதலங்கள் எட்டும், கற்பக தருவைந்தும் சுரபி சங்கநிதி பதுமநிதி என்னும் பொழிகள்எட்டும்,இவையன்றிப், பூலோக புவலோக முதலான ஏழுலகங்களும், சிவலோகமென்றுமேலே தோற்றப்பட்ட உலகமுமாம். இயம நியம ஆதன பிராணுயாம பிரத்தியாகார தாரணுதியான சமாதியென்னும் கலையான யோகங்கள் எட்டும், அட்டமாநாகம் என்னும் காப்பு எட்டும் இந்திரன் முதலான காட்சி எட்டும், காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மார்ச்சரியம்சூனியம் இடும்பை என்னும் சேவடி யணைந்தார் களை எட்டும், வீரம் அச்சம் இழிவு வியப்பு காமம் அவலம் ரவுத்திரம் நகை என்னும் நகை எட்டும், வாரம் நாள் பக்கம் ராசி யோகம் கரணம் காலஓரை பஞ்சபட்சி என்னும் நாள் எட்டும், சமயம் விசேடம் நிருவாணம் சாம்பவம் அபிடேகம் ஆதாரம் நிராதாரம் மீதானம் என்னும் நன்மை எட்டும், ஆன்மஞானம் பரமஞானம் சிவஞானம் உண்மைஞானம் மெஞ்ஞானம் திருஞானம் சத்தியஞானம் ஆனந்தஞானம்என்னும் மலர்கள் எட்டும், கிழக்கு முதலான திசை எட்டும், என்று எண்ணப்பட்ட இதற்கு உதாரணம் திருப்பாட்டு :

புகையெட்டும் போக்கெட்டும் புலன்களெட்டும்
பூதலங்க ளவையெட்டும் பொழிகளெட்டும்
கலையெட்டும் காப்பெட்டும் காட்சியெட்டுங்
கழற்சே வடியணைந்தார் களைகளெட்டும்
நகையெட்டு நாளெட்டு நன்மையெட்டு
நலஞ்சிறந்தார் மனத்தகத்துண் மலர்களெட்டும்
திசையெட்டுந் திரிப்பதற்கு முன்னே பின்னே
திருவாரூர்க் கோயிலாக் கொண்ட நாளே.

இந்தத் திருப்பாட்டின்படியுள்ள புறப்பொருளும், புறமாய அண்ட கோடிகளை இடைவிடாமற் றுங்கிநிற்கும் வேழக்குழாங்களும் இவையெல்லா மொரு பெண்பிள்ளையாகிய தேவிசிற்றில் இழைத்து விளையாடுந் திறமேது காரணமென்னென்றறிகின்றிலே மென்று தம்மிலே அதிசயித்து ஆறி யெழுந்தருளி இருந்தார். எ-று"

என்னுடைய வேண்டுகோடற்கிரங்கி எழுதும்படி அருளிய எனது ஆசிரியரவர்கட்கும், ஒன்றுக்கும பற்றுத என்னை இம்மாதிரி எழுதத் தூண்டிய திருவாளர் முதலியாரவர்கட்கும் எனது அன்பார்ந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

அ. தண்டபாணி முதலியார்,
வித்வான் வகுப்பு வடமொழிக் கல்லூரி,
திருவையாறு.

## பாமாலைப் பகுதி

வாழ்த்து.

செங்குந்த ராகெவரும் செங்குந்த மித்திரனைத்
தங்குந் தம்பெருமை சார்ந்துறவே—பொங்குந்தம்
பொற்பாற் பொருளவற்றின் போற்றிப் பலமிலங்க
நற்பார்க்கண் வாழ்க நெடுநாள்.

பிள்ளையார்பாளயம், ஸ்ரீ சிவசாமி தேசிகர்.

வினா.

எழுத்துமாறிய வெண்பா.

சங்கு நியகானம் சந்தமெதென் செங்கனி
இங்கே முதலடியெழுத்தொழுங்காய்த் திங்களிலே
காலாகா னீய்ந்து நமக்குநல வல்குநண் பன்
பாலாசச் சொல்வீர் பதில்.

கடைமுடி நடுவெழுத்தலங்காரம்.

சயிறிலாத் தக்கதன்பு கார்தாரன் காடோடோனுன்
செயிரற மூன்றெழுத்திற் செந்தில்வேள் துவசம
[நாட்பண்
தயிரெனக் கணவன் ஊரி சாதமும் முல்லை மாதர்
உயரிய பெயருமுகனபின் னேர்ந்திலையுரைசெய்வீரே

து. பெ. கந்தசாமி முதலியார்,
சற்போதன சங்கம் காரியதரிசி, உள்ளியூர்.

ஒரு விடுகவி வினா.

ஆதிபராசத்திபலபேரிலொன்றும்
அரியவருடத்தோர்பேர்கணத்தோர்பேர்
மாதவத்தின் புத்திரியின்பேரிலொன்றும்
வாயவரிசானசிவதலத்திலொர்பேர்
வீதிசிறுர்விளையாடுங்கருவியோர்பேர்
விளம்பரியலோர்பூவுங்கூடுமிச்சொல்
எதமிலாநடுவெழுத்தினுமங்கேட்டா
ரிதங்குளிர்வாரியாவரெனவியம்புவீரே.

S. பாலசுப்பிரமணிய அய்யர்,
1-வது உதவி உபாத்தியாயர், போர்டு
எலிமெண்டரி ஆண்பாடசாலை, கல்லாத்தூர்.

### செங்குந்தமித்திரன் தை மாதத்திய விடுகவி வினுவுக்கு விடை.

| | |
|---|---|
| சேரறு பெருமைதிகழ் செய்யமொழி மாசெறி | மாசெறி = சே |
| சேர்மரப் பேர் கோங்கதாம் | கோங்கு = ங் |
| செசசால வித்தைபேர் மருடியாந் துர்க்கைபேர் | மருடி = கு |
| செப்பிடில் விந்தையாகும் | விந்தை = ந் |
| பேரேறுமறுகின் பேர்பதம் விதலைகெக்கத்தின் | பதம் விதலை = த |
| பேர்திருவின் பேர்பூமினும் | பூமின் = மி |
| பேசறுவிலங்குபே ரத்தியாங்கதிரிரவி | அத்தி = த் |
| பேர்சிவனரன்பேரதாம் | கதிர் = தி |
| எரேறுபெருசத்திமா நீலிவடுகியே | அரன் = ர |
| எழில்காடு கான்பேரதாம் | மாநீலி = னி |
| எய்திடும் நீதியொடு வஞ்சபேர் காவாலி | வடுகி = டு |
| இசைவாசமே புழுகதாம் | காவாலி = வா |
| தாரேறு ஞானத்தின்பேர் தகவு புலமையீர் | புழுகு = ழ் |
| சாற்றும்ச் சொற்சன் நடுவில் | தகவு = க |
| சார்ந்திடுஞ் செங்குந்த மித்திரன்றாணியிற் | |
| றுனீடு வாழ்கவருமே. | |

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம்
கண்டாச்சிபுரம்.



## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துக்கு வியாபாரிகள் அளித்த நன்கொடை வரவு

### பிரபவஹு கார்த்திகை மாதத்துக்கு சைதாப்பேட்டை மகமை வசூல்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பெரிய பாளையகாட் கம்பெனியார் | 17 | 4 | 6 |
| ரியல் ,, ,, | 10 | 0 | 0 |
| சுபீரியர் ,, ,, | 9 | 12 | 3 |

காஞ்சிபுரம் உண்டியல் வசூல்.

| | | | |
|---|---|---|---|
| தி. அரு அருணசல முதலியார் மூலம் | 55 | 0 | 0 |

### பிரபவஹு மார்கழி மாதத்துக்கு சைதாப்பேட்டை மகமை வசூல்.

| | | | |
|---|---|---|---|
| பெரிய பழயகாட் கம்பெனியார் | 11 | 4 | 6 |
| பெஸ்டு ,, ,, | 21 | 12 | 6 |
| ரியல் ,, ,, | 6 | 14 | 9 |
| சுபீரியர் ,, ,, | 11 | 3 | 9 |

சென்னை உண்டியல் வசூல்.

| | | | |
|---|---|---|---|
| தி. ச. ரா. ராமசாமி முதலியார் மூலம் | 10 | 0 | 0 |
| K.S.S. பழனியாண்டி முதலியார் ,, | 5 | 1 | 9 |

### பிரபவஹு தை மாதத்துக்கு. சைதாப்பேட்டை மகமை வசூல்.

| | | | |
|---|---|---|---|
| ரியல் பழயகாட் கம்பெனியார் (ஒரு பாகம்) | 3 | 1 | 3 |
| அ. ரா. இராமசாமி முதலியார் | 5 | 3 | 3 |
| உ. அரு. அருணசல முதலியார் | 5 | 0 | 0 |
| பெஸ்ட் பாளையகாட் கம்பெனியார் | 14 | 3 | 6 |
| V. S. வேலாயுதம் கம்பெனியார் | 3 | 0 | 0 |

சென்னை உண்டியல் வசூல்.

| | | | |
|---|---|---|---|
| தி. ச. ராம. ராமசாமி முதலியார் மூலம் | 7 | 8 | 0 |

இதர நன்கொடைகள்.

| | | | |
|---|---|---|---|
| மாணும்பதி, சு. அருணசல முதலியார் | 1 | 0 | 0 |
| ,, P. S. தீர்த்தகிரிமுதலியார் | 1 | 0 | 0 |
| தென் ஆபிரிகா, ஜோஹானஸ்பர்க்கிலுள்ள திருவாளர் க. முருகைய்ய முதலியார், மூலம் | 36 | 15 | 0 |
| மதராஸ் பழயகாட் கம்பெனியார் மூலம் | 33 | 8 | 0 |

### மதருஸ் பழயகாட் கம்பெனியார் மூலம் மார்கழி தை மாதத்து மகமை வசூல்.

| | | | |
|---|---|---|---|
| **ஆனக்காபுத்தூர்.** | | | |
| ஆ. கு. முனுசாமி முதலியார் | 0 | 15 | 5 |
| ர. மு. முருகேச முதலியார் | 0 | 13 | 6 |
| **குண்ணத்தூர்.** | | | |
| கி. ஜெகநாத முதலியார் | 2 | 14 | 0 |
| **சைதாப்பேட்டை** | | | |
| நா. சுப்பராய முதலியார் | 0 | 10 | 9 |
| சே. பழனி முதலியார் | 1 | 6 | 6 |
| அ. கு. முருகப்ப முதலியார் | 1 | 3 | 6 |
| செ. மாசிலாமணி முதலியார் | 0 | 2 | 3 |
| நெ. குப்புசாமி முதலியார் | 0 | 7 | 0 |
| ப. மாணிக்க முதலியார் | 1 | 7 | 0 |
| ந. தங்கவேலு முதலியார் | 0 | 10 | 9 |
| ஆ. த. வைத்திலிங்க முதலியார் | 1 | 4 | 6 |
| ம. கு. மாணிக்க முதலியார் | 0 | 12 | 0 |
| தி. அ. கந்தசாமி முதலியார் | 1 | 8 | 3 |
| நெ. போரூரா முதலியார் | 0 | 13 | 3 |
| கொ. செ. முனுசாமி முதலியார் | 0 | 7 | 0 |
| **சேம்பாக்கம்.** | | | |
| தி. சிற்றம்பல முதலியார் | 5 | 10 | 0 |
| அ. வேதாசல முதலியார் | 2 | 0 | 6 |
| ம. கி. மலைக்கொழுந்து முதலியார் கம்பெனி | 9 | 13 | 0 |
| பொ. கி. நடேச முதலியார் | 1 | 7 | 3 |
| **திருமழிசை.** | | | |
| ஐயா முனுசாமி முதலியார் | 0 | 8 | 9 |
| **பரங்கிமலை.** | | | |
| வே. மு. கண்ணப்ப முதலியார் | 4 | 12 | 0 |
| ஆ. பொன்னுசாமி முதலியார் | 0 | 10 | 9 |
| **படப்பை.** | | | |
| தொ. மு. திருமலை முதலியார் | 0 | 7 | 3 |
| **மோபூர்.** | | | |
| கா. சிவானந்த முதலியார் | 3 | 0 | 0 |
| பொ. நடேச முதலியார் | 0 | 12 | 9 |
| சோலை. முருகப்ப முதலியார் | 0 | 10 | 9 |
| **வேளச்சேரி.** | | | |
| க. துரைசாமி முதலியார் | 0 | 12 | 6 |
| மதராஸ் பழயகாட் கம்பெனியாரால் வசூலிக்கப்பட்ட மார்கழி தைமாதத்திய இதர உண்டியல் வசூல் | 86 | 8 | 0 |

தி. நா. சபாபதி முதலியார்,
ம. சண்முகசுந்தர முதலியார்,
அமைச்சர்கள்.

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

ஸ்ரீலஸ்ரீ கா. ச. ஸ்வாமிநாத தேசிகரால் கணிக்கப்பட்டது.

பிரபவஹு மாசிமீ, பங்குனி மீ (1928ஹு மார்ச்சுமீ)

உத்தராயணம், சசிருது, கலி-5029, பசலி-1337, சாலி-1850,

| மார்ச். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷ நாட்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 18 | வியா | தச, 27-26 | திரு, 36-28 | ம, 36-28 அ | |
| 2 | 19 | வெ | ஏகா, 25-24 | புனர், 36-18 | சி, 36-18 ம | |
| 3 | 20 | சனி | துவா, 24-10 | பூசம், 36-50 | சி, 36-50 ம | |
| 4 | 21 | ஞா | திர, 24 | ஆயில்லியம், 38-17 | சி, 38-17 ம | |
| 5 | 22 | திங் | சது, 24-34 | மகம், 40-40 | ம, 40-40 சி | |
| 6 | 23 | செவ் | O 26-24 | பூரம், 44-2 | சி, 44-2 அ | |
| 7 | 24 | புத | பிர, 29-5 | உத்திரம், 48-34 | அ, 48-34 ம | |
| 8 | 25 | வியா | துவி, 33-6 | ஹஸ்தம், 54-10 | சி, 60 | |
| 9 | 26 | வெ | திரி, 38-15 | சித்திரை, 60 | சி, 60 | |
| 10 | 27 | சனி | சது, 44-17 | சித்திரை, 0-50 | ம, 0-50 அ | தானியம் செலவிட |
| 11 | 28 | ஞா | பஞ், 50-51 | ஸ்வாதி, 8-24 | சி, 8-24 ம | விதை விதைக்க |
| 12 | 29 | திங் | ஷஷ், 57-26 | விசாகம், 16-13 | ம, 16-13 சி | மாடு வாங்க |
| 13 | 1 | செவ் | ஸப், 60 | அனுஷம், 23-50 | சி, 23-50 ம | மீனரவி 29-50 |
| 14 | 2 | புத | ஸப், 3-30 | கேட்டை, 30-40 | சி, 30-40 ம | கௌரிவிரதம் |
| 15 | 3 | வியா | அஷ், 8-18 | மூலம், 36-50 | சி, 60 | மாடுவாங்க |
| 16 | 4 | வெ | நவ, 11-30 | பூராடம், 39-50 | பி, 39-50 சி | மாடுவாங்க, கடன் தீர்க்க |
| 17 | 5 | சனி | தச, 12-30 | உத்திரா, 41-30 | சி, 60 | யாத்திரை செய்ய |
| 18 | 6 | ஞா | ஏகா, 11-25 | திருவோ, 41-5 | அ, 41-5 ம | மத்வ ஏகாதசி |
| 19 | 7 | திங் | துவா, 8-10 | அவிட்டம், 38-30 | அ, 60 | மாடுவாங்க |
| 20 | 8 | செவ் | திர, 3-10<br>சது, 56-18 | சதயம், 34-33 | ம, 60 | தண்டியடிகள் |
| 21 | 9 | புத | ●, 49-18 | பூரட்டாதி, 29-20 | அ, 29-20 சி | அமாவாசை |
| 22 | 10 | வியா | பிர, 41-3 | உத், 23-4 | சி, 60 | கணபதி விரதம் |
| 23 | 11 | வெ | துவி, 32-35 | ரேவதி, 16-30 | அ, 60 | சந்திர தரிசனம் |
| 24 | 12 | சனி | திரி, 24-29 | அஸ்வனி, 10-12 | சி, 60 | அடுப்பில் தீயிட |
| 25 | 13 | ஞா | சது, 16-43 | பரணி, 4-18<br>*கிருத்திகை, 59-8 | சி, 60 | கிருத்திகை |
| 26 | 14 | திங் | பஞ், 10-0 | ரோகணி, 55-5 | அ, 60 | நேச நாயனார் |
| 27 | 15 | செவ் | ஷஷ், 4-22<br>ஸப், 59-55 | மிருக, 52-18 | சி, 52-18 ம | கங்கோற்பத்தி |
| 28 | 16 | புத | அஷ், 56-40 | திரு, 50-40 | சி, 60 | கணநாத நாயனார் |
| 29 | 17 | வியா | நவ, 54-57 | புன, 50-29 | அ, 60 | ஸ்ரீராமநவமி |
| 30 | 18 | வெ | தச, 54-58 | பூச, 51-30 | ம, 60 | முனையடுவார் |
| 31 | 19 | சனி | ஏகா, 54-51 | ஆயி, 53-40 | ம, 53-40 அ | நவக்ரஹசாந்தி |

| | | | |
|---|---|---|---|
| ரவி<br>குரு | | ராகு | |
| புத<br>சுக் | பங்குனி<br>17கும் குஜ<br>24மீன.சுக்<br>28மீன புத | | |
| குஜ | | | |
| | சனி<br>கேது | | |




# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - உ | பிரபவஹு - பங்குனிமீ | பகுதி - ௩ |
|---|---|---|


முருகன் துணை.

நாளென்செயும் வினைதானென்செயு மெனைநாடிவந்த
கோளென்செயுங் கொடுங்கூற்றென்செயுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங்கடம்பு மெனக்குமுன்னே வந்து தோன்றிடினே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### கிளர்ச்சியும் பிரசாரமும்.

செங்குந்தரிடையே கிளர்ச்சியும் ஊக்கமும் நாளுக்குநாள் பெருகி வருவதை உணர்ந்து பெரிதும் மகிழ்கின்றோம்.' நமது தலைச்சங்கத்தின் சுற்றுப் பிரசாரத்தின் பயனாக ஆங்காங்கே முன்னேற்ற உணர்ச்சி யேற்பட்டுக் கிளைச் சங்கங்கள் தோன்றுவதோடு, அவ்வவ்விடங்களிலுள்ள நம் குலப்பிரமுகர்கள் குலாபிமான சிந்தையோடு தமது சொந்த ஊக்கத்தினாலும் முயற்சியினாலும் சில கிளைச்சங்கங்களை ஏற்படுத்திக் குதூகுலத்துடன் எமக்குத் தெரியப்படுத்தி யெழுதும் நிரூபங்கள் மாதம் மாதம் அதிகரித்து எமக்கு மட்டிலடங்கா உற்சாகத்தை உண்டாக்குகின்றன. இந் நிரூபங்களோடு, எமது சங்கத்துப் பிரசாரகர்களைத் தம் தம் ஊர்களுக்கு அனுப்பவேண்டுமென்றும், நாமும் அவர்களோடு வரவேண்டுமென்றும் மிகவும் விநயமாக எழுதப்படும் அழைப்புக் கடிதங்கள் எம்மைக் குலத் தொண்டில் மேலும் மேலும் ஈடுபடத் தூண்டுகின்றன.

சிலர் தமது ஊர்களுக்கு வந்து பிரசாரஞ் செய்யாமல் அவர்களைப் புறக்கணிப்பதாகவும் எம்மீது குற்றஞ் சாட்டுகின்றனர். இக்குற்றஞ் சாட்டுவோரது குலாபிமானம் மிகவும் பாராட்டத் தக்கதே. அவர்களுக்கு, நாம் இதுவரையில் எந்த இடத்தையும் புறக்கணித்ததில்லையென்பதை மிகவும் வணக்கமாகத் தெரியப்படுத்துகின்றோம். எமது தலைச் சங்கத்தின் சுற்றுப் பிரசாரகர்கள் ஒரு முறைப்படி அவ்வப்போது சில ஜில்லாக்களில் பிரசாரஞ்செய்ய அனுப்பப்படுகின்றனர். ஆகவே அவர்கள் அந்த ஜில்லாக்களில் தமது பிரசார வேலையை ஒருவாறு முடித்துக்கொண்ட பிறகுதான் மற்ற பாகங்களுக்குச் செல்ல இயலும். நாலா பக்கங்களிலும் நமது பிரசாரகர்களை யனுப்பி ஒரே சமயத்தில் எங்கும் பிரசாரம் நடத்துவதற்குப் பிரயாணச் செலவு அபரிமிதமாகும். நமது தலைச்சங்கம் அதைத் தாங்கக்கூடிய அவ்வளவு செல்வத்திலில்லை என்பதை நமது அன்பர்கள் அறிவார்களாக. தமது சொந்த செலவில் தேக சிரமத்தையும் மற்ற அசௌகரியங்களையும் பொருட்படுத்தாது பிரசாரஞ் செய்யக் கூடியவர்கள் நமது சமூகத்தில் இன்னும் பலர்

தோன்றவில்லை. எமக்கோ, குலத்தொண்டில் ஆர்வமிக்கிருந்தும், எமது உத்தியோக சம்பந்தமான வேலை நிர்ப்பந்தங்கள் அதிகமிருப்பதாலும், சங்கம் பத்திரிகை சம்பந்தமான சகல பொறுப்புக்களையும் நாம் வகிக்கவேண்டியதாலும், விடுமுறை நாட்களிலும் சென்னையை விட்டு வெளிப்போக இயலாதவாறு இடர்ப்பாடுகள் மிக்கிருக்கின்றன. இருந்தும், எம்மாலான குலத்தொண்டைச் சென்னையிலும் வெளியூர்களிலும் செய்துகொண்டு வருகின்றோம். கூடிய சீக்கிரம் நமது தலைச்சங்கத்தின் பொருள் வருவாய் அதிகப்படுமாயின் எமது பிரசாரத்தை இன்னும் விஸ்தாரமாகச் செய்ய உத்தேசிக்கின்றோம். இறைவன் இம்முயற்சியில் எமக்குத் துணைநிற்பாராக. தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சென்ற சித்திரை மாதம் ஏற்படுவதற்குமுன் தென்னிந்தியா முழுவதிலும் ஆறு அல்லது ஏழு உண்மைச் செங்குந்தர் சங்கங்களேயிருந்தன. இப்பொழுதோ அதன் தீவிர முயற்சியாலும் கடவுள் கடாக்ஷத்தாலும் நூற்றுக்குக் குறையாத உண்மைச் செங்குந்தர் சங்கங்கள் இருக்கின்றன. ஆகவே, நம் முயற்சிக்கு இறைவன் திருவருள் இனியும் துணை நிற்குமென உறுதியாக நம்புகின்றோம்.

### தேர்தல்களில் நம்மவர் வெற்றி

இறைவன் திருவருளின் கடாக்ஷம் நமது குல முன்னேற்ற விஷயமாகப் பெரிதும் புலப்பட்டிருப்பதற்கு ஒரு சிறந்த அறிகுறி, நம்குலப் பிரமுகர் சிலர் இம்மாதம் சில இடங்களில் நடந்த ஸ்தலஸ்தாபன தேர்தல்களில் வெற்றி பெற்றமையேயாகும். அவர்களின் வெற்றிக்கு மகிழ்ந்து நமது தலைச்சங்கம் ஒரு சந்தோஷ தீர்மானஞ் செய்து பத்திரிகைகளில் பிரசுரித்திருப்பதோடு (இதை மற்றோரிடத்தில் காண்க). அவரவர்களுக்கும் தனித்தனியே, சந்தோஷ அறிக்கை யனுப்பியிருக்கின்றது. சில இடங்களிலிருந்து அங்குத்தேர்தலில் வெற்றிபெற்ற செங்குந்தர்களின் விவரம் இன்னும் எமக்குக்கிடைக்கவில்லை. எனினும், அவர்களுக்கெல்லாம் இப்பொழுது எமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மேலும், அவர்களைத் தேர்ந்து அனுப்பிய வோட்டர்களுக்கும், அவர்கள் வெற்றிக்குக் காரணமாய் இதர அன்பர்களுக்கும் எமது வந்தனத்தைச் செங்குந்தகுலத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வெற்றிபெற்ற கனவான்கள் தத்தம் ஸ்தலஸ்தாபனங்களில் பொதுஜன நன்மைக்கு நடுநிலைமையாக நின்று உழைப்பதோடு, நமது செங்குந்தகுல முன்னேற்ற விஷயமாக அங்கங்கே கண்ணுங் கருத்துமா யிருக்குமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

### சில பிரதிகூலங்கள்.

தேர்தலில் நம்மவர்கள் வெற்றிபெற்று வரக்கூடிய இடங்கள் சிலவே என்பதையும் நாம் உணர்கின்றோம். இராஜீய கட்சி பேதங்களால் ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் ஒருபுறமிருக்க, அவ்வவ்விடங்களில் சாதிக்குச் சாதியுள்ள வித்தியாசங்களோடு, நம்மவரிடையே குலத்தைக் கெடுக்கவரும் கோடரிக் காம்புபோன்ற கட்சிப் பிளவுகளும் பொறாமை உணர்ச்சிகளும் மற்றொருபுறம் மிகுந்திருந்திருக்கின்றன. இதனால் தேர்தல் சமயங்களில் நம்மவரிடையே அநாவசியமான போட்டிகள் ஏற்படுகின்றன. இந்நிலையில் நம்மவர் தேர்தலில் வெற்றியடைவது வெகு சிரமமாகின்றது. மேலும், நம்மவருள் ஓட்டர்களின் தொகை வெகு சொற்பம். இதற்கு ஒரு காரணம் நம்மவருள் பெரும்பான்மையோரின் ஏழ்மை நிலையே; மற்றொன்று, நம்மவருள் ஓட்டராக உரிமையுள்ளவர்களும் தாம் ஓட்டராக எடுக்கப்பட்டிருக்கின்றனரா என்னும் விஷயமாக மிகுந்த அசிரத்தையாயிருப்பதாகும். இத்தனை பிரதிகூலங்களிடையிலும் நம்மவர் இரண்டொருவர் போட்டியில்லாது ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தமை மிகவும் பாராட்டத்தக்கதேயாம்.

### நாமினேஷனில் நம்மவர்க்குப் பிரதிநிதித்துவம்.

அநேக இடங்களில் தேர்தல் வாயிலாக நம்மவர் ஸ்தலஸ்தாபனங்களுல் நுழைய அனுகூலங்களில்லாமலிருக்கின்றன. நம்மவர் தொகையதிகமாயிருந்தும், நம்மவர் செய்யும் நெய்தற்றொழில் முக்கியமானதாயினும், பெரும்பான்மையோர் பல பிர்க்காக்களிலும், சிறு சிறு கூட்டங்களாகச் சிதறிக் கிடப்பதாலும், ஏழ்மை நிலையிலிருப்பதாலும், நம் குலத்து அபேக்ஷகர்கள் தேர்தலில் வென்றுவருவது துர்லபம். இதை உத்தேசித்தே சென்ற மார்ச்சு மாதம் 10 தேதி நம்மினத்துப் பிரதிநிதி ஒருவரேனும் ஜில்லா போர்டு, தாலூகா போர்டு, முனிசிபாலிடி, யூனியன் போர்டு, பஞ்சாயத்து கோர்ட்டு, ஹிந்து தேவஸ்தான பரிபாலன சபை, ஜில்லா கல்விச் சபை முதலிய எல்லா ஸ்தலஸ்தாபனங்களிலும் சர்க்கார் நாமினேஷனில் அமர்த்தப்படவேண்டுமென்ற ஒரு விண்ணப்பத்தை உரிய அதிகாரிகளுக்கு நமது தென்



னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் அனுப்பியிருக்கின்றனர். சில அதிகாரிகளிடமிருந்து அனுகூலமான பதிலையும் பெற்றிருக்கின்றனர்.

### நாமினேஷனுக்காகத் தலைச்சங்கத்தின் மனு.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் ஸ்தலஸ்தாபனங்களில் நம்மவர் பிரதிநிதித்துவத்தைப்பற்றி அனுப்பிய விண்ணப்பத்தின் பிரதி கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது :—

**The South Indian Senguntha Mahajana Sangam.**

*Madras, 10th March 1928.*

AN APPEAL REGARDING THE REPRESENTATION OF SENGUNTHARS ON LOCAL BODIES.

To

The Ministers, District Collectors, Presidents of District and Taluq Boards, and the Hindu Religious Endowment Board, etc.,

Dear Sirs,

We have the honour to represent to you on behalf of the six lakhs of Tamil weavers known as Kaikolars or Sengunthars who live scattered all over the Tamil Districts and who have this Sangam as their Central Provincial Organisation with a hundred and odd affiliated branch associations of the community in different localities, that the Kaikolar or Sengunthar community of weavers forms an important unrepresented minority with considerable industrial stake in the Tamilnadu, and that it is our long-felt grievance that we have had till now little or no representation on local bodies like the District and Taluq Boards, Municipal Councils Village Unions and Panchayats, Devasthanam Committees and District Educational Councils.

It is, therefore, our earnest prayer that you will be pleased to nominate at least one member of our community on every one of the local bodies in your jurisdiction.

Soliciting, your sympathetic and immediate attention to this matter and a line in acknowledgment. and thanking you in anticipation.

We have the honour to be,
Dear Sirs.
Your most obedient servants,
M. SHUNMUKHASUNDARA MUDALIAR,
*Joint Secretary.*

### நம்மவர் மகாநாடு சீக்கிரம் கூட்டவேண்டும்.

இது விஷயமாகச் சில அதிகாரிகள் பராமுகமாகவும் இருக்கலாம். அவர்கள் அசிரத்தையையும், இன்னும் நம்மவர் முன்னேற்றத்துக்கு ஏற்படக்கூடிய சில இடையூறுகளையும் விலக்க நம்மவர் மகாநாட்டைக் கூடிய சீக்கிரத்தில் கூட்டிவைக்க நமது தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் முயன்று வருகின்றது. இம் மகாநாடு கூட்டுவதில் நம்மவர் அதிக ஊக்கங் காட்டுவார்களென்றே நம்புகின்றோம்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
பத்திரிகாசிரியர்.

## விரதப் பகுதி

### பிரதோஷம்

மனித சஞ்சாரமற்ற ஒரு பெருங் காட்டின் வழியாகக் கால்கள் சோர்ந்து, கண்கள் இருண்டு, மனம் வருந்தி, ஒரு வயதுள்ள தன் அரும் பெறற் புதல்வனைக் கையிலேந்திக் கொண்டு, ஒரு பெரும் பாரத்தைத் தாங்க முடியாது தாங்கிச் செல்லுவாள்போல், 'கங்காதரா! பார்வதி பாகா! அடியார்க்கெளியாய்! ஆதி நாயகா! நச்சினார்க்கினிய! என்னைத் தொடர்ந்த துன்பம் ஒழிவதெக்காலம்" எனப் பலவாறு சொல்லிக் கொண்டு நடந்து சென்ற உமை என்னும் ஓர் அந்தண மாது, ஒரு சிறு குழந்தையின் அழுகுரலைக் கேட்டு அது வருந்திசை நோக்கிச் சென்றாள். ஒரு சிறு குழந்தை ஒரு புதரின் நிழலில் தன்னந்தனியாய் ஆதரிப்பாரின்றி விரித்த பட்டாடையின் மேல் கிடந்து அழுதுக் கொண்டிருந்தது. இளஞ் சூரியனைப் போல் விளங்கிக் கொண்டிருந்த அம்மகவை உமை என்பாள் கண்டு, 'இதன் பெற்றோர் யாரோ? ஈண்டு எவ்வாறு வந்ததோ? இக்காட்டில் வசிக்கும் கானவர் குழந்தையாகவும் தோன்ற

வில்லையே? கொப்பூழ்க் கொடியும் இன்னும் அறுக்கப் படவில்லையே; அதற்குள் இதன் தாய்க்கு என்ன நேர்ந்ததோ? உயர்குலத்திற் றோன்றியதாகவுங் காணப்படுகிறது' எனப் பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தாள். அப்போது ஒரு பெரியார் அங்கு வந்து, தரையிற் கிடக்கும் குழந்தையையும் அதனருகில் நிற்கும் உமை என்பாளையும் கண்டு, தமது நுண்ணறிவால் அங்குள்ள அடிச்சுவடு பட்டு வஸ்திரம் முதலியவற்றை நன்கு பரிசோதித்து, அவ்வாரண்யத்தை அடுத்த நாடுகளில் நிகழும் விஷயங்களை நன்கறிந்தவராகையால், உண்மை இன்னதெனவுணர்ந்து, உமை என்பாளை நோக்கி, அம்மணி! இக்குழந்தையைக் குறித்து நீ 'யாதொரு சந்தேகமுங் கொள்ள வேண்டாம். உத்தம குலத்துதித்த தென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இதன் வரலாற்றை இப்போது சொல்லுவது உசிதமல்ல. பின்னர் அறிவாய், பால சூரியனைப் போன்ற இக்குழந்தையையும் உன் புத்திரனோடு வளர்த்து வருவாயாக' என்று ஆஞ்ஞாபித்துப் போயினர். உமையம்மையும் பெரியார் ஆணையைச் சிரமேற்றாங்கி, ஏகசக்கிரபுரி என்னும் நகரத்தை யடைந்து பிச்சை எடுத்துப் பிள்ளைகளை வளர்த்து, அவ்வூர்ப் பிள்ளைகளோடு இவர்களையும் பள்ளிக் கனுப்பிவந்தாள். சிறுவர்களும் மிகுந்த ஊக்கத்துடன் நான்கு வேதம் ஆறு அங்கம், அறுபத்து நான்கு கலைகள் முதலிய யாவும் கற்று வல்லவராயினர்.

உமை என்பாள் தினந்தோறும் தன் புத்திரர்களோடு ஆலயஞ்சென்று சிவ பெருமானை வழிபடுவது வழக்கம். ஒரு நாள் அங்கு தரிசனார்த்தம் வந்திருந்த சைவாகமங்களைப் பழுதற உணர்ந்த சாண்டில்யர் என்னும் ஒரு முனிவர் உமை என்பாளை நோக்கி, மாதர் சிரோமணி! பரமசிவனுடைய அற்புதத் திருவிளையாடலைத் தேவர்களும் உணரமாட்டார்கள். இவ்விளைஞர்களில் இளையவன் உனக்குப் புத்திரனான வரலாற்றை அறிவையோ' வெனக் கேட்க, உமை என்பாள், 'முனிபுங்கவரே! நான் அறியேன். தாங்கள் அறிவீர்களாயின் தெரிவித்தருளல் வேண்டு' மெனப் பிரார்த்தித்தாள். முனிவரும் முகமலர்ந்து பின் வருமாறு சொல்லத்தொடங்கினர் :—

கற்பில் அருந்ததியை யொத்தவளே! விதர்ப்ப நாடென ஒரு வளப்பம் பொருந்திய நாடுண்டு. அந்நாட்டைச் சத்தியாசனன் என்னும் ஓர் அரசன்

மானிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னால் தன்பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்து அறங்காப்பான் அல்லனோ

என்ற முதுமொழிப்படி குடிகளுக்கு ஐவகைப் பயமும் தீர்த்து நீதி தவறாது காத்து வந்தான். அவனிடத்துப் பகைமை கொண்ட சாளுவ நாட்டரசன், படைசேர்த்து வந்து அமராடி வெற்றியுற்றுச் சத்தியாசனனை முனைமுகத்திற் சாய்த்து நாட்டைக் கைக்கொண்டதன்றிப் பட்டணத்தையும் கொள்ளையடிக்கும்படி தன் சேனைகளுக்கு உத்தரவு கொடுத்தான். இதை யறிந்த சத்தியாசனன் மனைவியாகிய சதி என்பாள், ஆறாத்துயருழந்து வயிற்றிலெற்றிக்கொண்டு அழுது, பகைவர்க்குப் பயந்து அன்றிரவே யாருமறியாவண்ணம் மேற்குத் திசை நோக்கிப் போய்ப் பெரிய கானகத்தை யடைந்தாள். அவ்வாறு தனியளாய்ச் சென்ற சதிதேவி கொழுநனிறந்தானென்று கேட்டு மோதி வருந்திய வருத்தத்தாலும், அதுகாறும் நடந்தறியாத தாமரை மலர்போன்ற மெலிய பாதங்கள் சிவக்க வழிநடந்த வருத்தத்தாலும், முதிர்ந்த கருப்பமானது அதிவேதனையைக் காட்ட இளஞ்சூரியனை யொத்த ஒரு புத்திரனைப் பெற்றாள். சிறிது நேரத்தில் நீர் வேட்கை கொண்டவளாய் அருகே இருந்த ஓடையில் நீருண்ண இறங்கினாள். இறங்கினவுடனே ஒரு முதலையானது அவளை விழுங்கிவிட்டது. பிறந்தவுடனே தாயையிழந்து ஆதரிப்பாரின்றி அழுது கொண்டிருந்த இளங்குழவியை அக்காட்டின் வழிப்போந்த நீ எடுத்து வளர்க்கின்றனை."

இவையாவும் கேட்ட உமை, ஆச்சரியமும் சந்தோஷமுங் கொண்டு, ஐயரே! பராக்கிரமமுடையவனும் நீதி தவறாதவனுமாகிய சத்தியாசனன் போர்க்களத்திறந்துபட்டதற்கும், உத்தமியாகிய அவன் மனைவி முதலைவாய்ப்பட்டிறந்ததற்கும் காரணம் யாதெனத் தெரிவிக்க வேண்டு' மென்று வினவ, முனிசிரேஷ்டரும் அன்புகூர்ந்து, "அம்மணி! சத்தியாசனன் முன் பிறப்பில் செந்தமிழ் மணக்கும் மதுரைமாநகரில் பாண்டியனாய்ப் பிறந்து தருமநெறிப்படி அரசாண்டு குடிகளைக் குறைபாடின்றிக் காத்து வந்ததன்றிச் சோமசுந்தரப் பெருமானிடத்து மெய்யன்பு பூண்டொழுகும் சிவனடியனாகவும் விளங்கினன். பிரதோஷகாலங் கூடிய ஒரு நாள் அப்பாண்டியன் ஆலயத்தையடைந்து சொக்கநாதரை அருச்சித்துக்கொண்



டிருக்கும்போது, பாண்டியர்க்குக் கடும்பகைவனாகிய சோழன் மதுராபுரியை நோக்கிப் படையெடுத்து வருகிறானென்று கேள்விப்பட்டுச் சிவபூசையைப் பூர்த்தி செய்யாமல் யுத்தத்திற்குச் சென்று வெற்றி பெற்றுத் திரும்பி, வெற்றிச் செருக்கினால், சிவபூசையைக் குறையாக விடுத்ததை மறந்து அன்றிரவு புசித்து உறங்கினன். அவனுக்கு மனைவியாக விருந்த இவ்விளவலின் தாயாகிய சதிதேவியும் அரசனது மற்ற மனைவியரை வருத்தி விஷமிட்டுக் கொன்றாள். ஆகையாற்றான் இவ்விருவரும் அகால மரணத்தை யடைந்தார்கள். அன்னோர் புத்திரனாயிருந்த இவ்விளவலும் வெற்றி இறுமாப்பினால் சிவபூஜை முற்றுப்பெறாமையை மறந்து தன் தகப்பனுடன் உண்டுறங்கினனாகையால் இப்பிறப்பில் பிச்சை யெடுத்துழலுகிறான்.

"நிறைந்த செல்வமும், வளப்பமும், புத்திரர்களும், மிகுந்த சுற்றத்தாரும் செறிந்திருக்கும்படி வாழ்கின்றவர்கள் முதல்வனாகிய சிவபெருமானைப் பூசித்துத் துதிசெய்தவர்களாவார்கள். எல்லாவித பூசைகளிலும் பிரதோஷ காலத்தில் செய்யும் பூசை மிகச் சிறந்ததாகும். இப்பூசையை முட்டின்றிச் செய்வோர் இம்மையில் அரசராகப் பிறந்து விரும்பிய போகங்களை யனுபவித்து மறுமையில் அந்தமில் இன்பத்து அழிவில் வீடாகிய மோக்ஷத்தை யடைவர்.

"உன்னிடத்துதித்த இப்பிராமணப்பிள்ளை, பிறப்பில் பிராமண குலத்தில் மிகுந்த செல்வமுடையவனாயிருந்தும், பெரிய லோபியாய்த் தன் செல்வத்தைத் தானுமனுபவியாமல், எவர் கொடுத்தாலும் கைவிரித்துத் தானமாக வாங்கிக்கொள்ளும் பொருளுடனே பாவத்தையும் சேர்த்துத் தன் வீட்டிற்குவரும் யாசகருக்கு ஒரு நாளேனும் பிச்சையிட்டுண்ணாத குற்றத்தினால், இப்பிறப்பில் இவ்விதவருத்தமடைகிறான், ஆயினும் இவ்விருவரும் பிரதோஷ காலத்தில் விதிப்படி பரமசிவனைப் பூசிப்பாராயின் மூத்தவன் நல்குரவு நீங்கி மேம்பட்டு விளங்குவன். இளையவன் பகைமன்னரும் வணங்க உலகங்காக்கும் அரசனாவான்" என்று முனிவர் சொல்லியதைக் கேட்டு உமை என்பாள், அவர் பாதங்களில் வீழ்ந்து சுவாமிகளே! பிரதோஷமென்பது என்ன? அது ஏன் விசேஷமானது? அவ்விரதத்தை அனுஷ்டிக்கும் முறை யாது? விவரமாக யாங்கள் உய்யுமாறு உபதேசித்தருளல் வேண்டும்" எனப் பிரார்த்தித்தாள்.

முனிபுங்கவர் புன்னகை செய்து, "கற்புக்கரசி! யான்சொல்லுவதை கவனித்துக் கேட்பாயாக; உலகத்திற்கு ஆதிகாரணனாக விளங்கும் இறைவனைக் காலை உச்சி அந்தியாகிய முக்காலங்களிலும் தரிசனம் செய்யலாமாயினும், அந்திப்பொழுதே அம்மூன்றினுள் விசேஷமானது. அதுவே பிரதோஷகால மெனப்பெறும். பிரதோஷம் என்னும் பதத்திற்கு இராத்திரியின் முன் என்பது பொருள். பகலில் இருபத்தாறே கால் நாழிகைக்கு மேற்பட்ட மூன்றேமுக்கால் நாழிகையும், சூரியன் அமர்ந்தபின் மூன்றே முக்கால் நாழிகையும் ஆக, சூரியன் அமர்வதற்கு முன்னும் பின்னுமாகவுள்ள ஏழரை நாழிகை (மூன்றுமணி நேரம்) பிரதோஷ காலமாம். அதுவும் அமரபக்ஷம் பூர்வபக்ஷம் ஆகிய இருபக்ஷங்களிலும் வருகிற தரயோதசி திதியில் மிக விசேஷமானது. பிரதோஷ விரதம் இந்தத் திதியிலேதான் அனுஷ்டிக்கவேண்டும்.

"பிரதோஷம் திரயோதசி திதியில் சிறந்ததென்பதற்குக் காரணம் என்னையோவெனில், கங்காதர மூர்த்தியாகியபரமசிவன் ஆலகாலவிஷமுண்டருளியபோது ஒரு க்ஷணநேரம் சும்மாவிருந்தார். ஏகாதசி திதியாகிய அன்று தேவர்கள் பரமசிவனை அருச்சித்துக் கொண்டிருந்து மறுநாள் துவாதசி திதியில் பாரணஞ் செய்தார்கள். அடுத்த நாளாகிய திரயோதசி திதியில் பிரதோஷ காலத்தில் கயிலாயத்தில் பராசக்தி எதிரில் தேவர்கள் குடமுழா, வீணை, ஒத்து முதலிய பலஇசைக் கருவிகளைக்கொண்டு பாடித்துதிக்க சூலஞ் சுழற்றிக்கொண்டு ஒரு சாமநேரம் நடனஞ் செய்தருளினர். இக்காரணத்தினால்தான் திரயோதசிப் பிரதோஷகாலஞ் சிறந்தது. இப்பிரதோஷ காலத்தில சிவதரிசனஞ் செய்வோர் நந்திதேவரது பீஜத்தைப்பரிசித்து அவரது இரண்டு கொம்புகளின் மத்தியில் பிரணவசகிதமாய் ஹர ஹர வென்று சொல்லிக்கொண்டு சிவதரிசனஞ் செய்யவேண்டும். இவ்வாறு தரிசிக்கும் சிவனடியார் சிவ சாரூபம் பெறுவர். சனிப்பிரதோஷம் மிகச் சிறந்ததென ஆகமங்கள் கூறுகின்றன.

"இனிப் பிரதோஷ விரதம் அனுஷ்டிக்கும் முறையைக் கூறுகிறேன் கேள். திரயோதசி திதியன்று சுத்தநீரில் ஸ்நானஞ்செய்து பகற்பொழுதில் ஆகாரங் கொள்ளாமல், பிரதோஷ காலமாகிய மாலையில் கம்பளத்தினால் விதானங் கட்டிய பந்தரிற் சென்று, கும்பங்களுக்கு நூல் சுற்றி மண்டலங்கள் முறைப்படி ஏற்படுத்தி ஐம்புலன்களையும் ஒரு வழிப்படுத்திக் காமவெ

துளி மயக்கங்களை நீக்கிச் சித்தத்தில் பாவித்து வாயினால் பஞ்சாக்ஷரத்தைச் சொல்லிக் கைக ளால் மலர்சாத்தல் முதலிய உபசாரங்கள் செய்து, கூதமும் மலரும்போல அபேதமான கருத்தையுடையவளாய் உலகமாதாவாகிய பார் வதி தேவியாரையும் எம்மையாளுடைய சிவ பெருமானையும் எழுந்தருளப்பண்ணிச் சிவாகம விதிப்படித் தூபதீப நைவேத்திய முதலிய உப சாரங்கள் செய்து திருவடிகளை வணங்கிய பின் னர் சிவாலயஞ் சென்று சிவதரிசனஞ் செய்து, பின்புச் சிவனடியார்க்கு அமுதுபடை-த்துப் போஜனஞ் செய்யவேண்டும்.

"உச்சினி மாகாளமென்னும் நகரத்தரசனாகிய சந்திரசேனனென்பான் சனிப்பிரதோஷ விர தத்தை அனுஷ்டித்து இம்மையில் அரசர்க ளெல்லாம் தன்னை வணங்கும்படிச் செங்கோல் செலுத்திச் சிவபதம் பெற்றான். இவ்வரசன் பூசை செய்ததைப் பார்த்த ஒரு இடைப் பிள் ளைக்குப் பக்தியுண்டாக, அவன் வீதியில் மண யினால் ஆலய முதலானவை அமைத்து ஒரு கல்லை நாட்டிச் சிவலிங்கமாகப் பாவித்துப் பூசைசெய்து பேறு பெற்றான்.

"மேற்கூறியவாறு இவ்விளவல்கள் பிரதோ ஷ விரதத்தை அனுஷ்டித்து வருவார்களாயின், மூத்தவன் தரித்திரம் நீங்கிச் செல்வந்தனாவான், இளையவன் அரசனாகி ஒரு குடையின்கீழ் உல கத்தைக் காப்பான்" எனக்கூறி யருளினார்.

தவசிரேஷ்டரது அரிய உபதேசத்தைக் கேட்டு அவரை வணங்கி, 'எங்கள் புண்ணியப் பேறே! உம்மால் யாங்கள் இன்றே வினையி னின்று பிழைத்துப் புனிதரானோம்' என்று சொல்லி உமையும் அவள் மக்களும் ஆனந்தக் கூத்தாடி வாழ்த்தினார்கள். முனிவர் அவர்களை ஆசீர்வதித்துத் திருவடிதீக்ஷை செய்து மூலமந் திரோபதேசமுஞ் செய்து சென்றார்.

அவ்விரண்டு பிள்ளைகளும் அதுமுதல் பிர தோஷந்தோறும் தவறாது விரதத்தை முறைப் படி அனுஷ்டித்துவர, மூத்தவன் சின்னாட் களில் நல்குரவு நீங்கிப் பெருஞ்செல்வம் பெற்று வாழ்ந்து வந்தான். இளையவன் சிவபெருமான் அருளால் கயிலாயத்திற்குத் தென்புறத்தி லுள்ள சேதிநகரத்தரசனாகிய கிரமிஷன் என் னும் காந்தர்வனது மகளாகிய அஞ்சுமதி என்பாளை மணஞ் செய்துகொண்டு, தன் தகப் பனைக் கொன்று நாட்டைக் கைப்பற்றிய பகை வனைப் போரில் வென்று விதர்ப்பநாட்டிற் கதி பதியாய் நீதிமன்னனாய் நெடுநாள் அரசாண் டிருந்து, இறுதியில் சிவத்தோடு இரண்டறக் கலத்தலாகிய பேரின்ப நிலையை அடைந்தான்.

மா. அ. கனகசபை முதலியார்.

## குலதிலகர் பகுதி

### கணபதி பிடாரர்* சரித்திரம்

#### காப்பு.

அத்திமாமுகனடியிணைமுடியுறவணங்கிப்
பத்தரானவர்க்கெளியராய்ப்பழநிமாமலைவாழ்
கத்தனார்தமக்கன்பராங்கணபதிப்பிடாரர்
முத்தனார்திருச்சரிதையைத்தமிழினான்மொழிவாம். (1)

#### வேறு.

பொன்னிசூழ்ந்தணியச்சென்னெல்கள்கொழிக்கும்புலங்களோடிறையவனடிக்கும்
நன்னிலமகட்குத்திலகமாஞ்சோழநாட்டினில்வளனெலாநிறைந்த
சென்னியினன்வனமாஞ்சேத்திரமதனிற்செங்குந்தர்மரபிலோரன்பன்
நன்னெறியுடையான்கணபதிப்பிடாரநாமமேதரித்துவாழ்ந்திருப்போன். (2)

குறிப்பு:—பிடாரன் ஒருவனை வென்றமையால் இவர் பரம்பரையினர்க்கே பிடாரரென்னும் காரணப் பெயர் விளங்கி வழங்கிவருகிறது.



ஆயுநூல்மணிமந்திரமெலாமறிந்தவறிவினனளப்பரிதாய
தூயநற்கலைகளியாவையுமுணர்ந்தோன்சுடர்வடிவேலனைமெமது
நாயகன்பழநியாண்டவனடியைநண்பினால்வணங்குமன்புள்ள
நேயவைராக்கியசீலனாய்ப்பத்திநிலையினிற்றலைமைபூண்டுள்ளோன்

ஆயவன்பதினாறுண்டுதொட்டினிதுவன்பினாற்காவடிகொடுபோய்
மாயவன்மருகன்பழநியாண்டவற்கேவகையுடன்செலுத்துமாண்புடையோன்
தூயவனெண்பதாண்டுசென்றதனாற்சோர்வுறச்செயலெலாமொடுங்கிக்
காயமேதளர்ந்துநடந்திடமுடியாக்கவலைமேலுடையவனானான்.

#### வேறு.

என்னவேகவலைமேலுற்றிரங்கியவன்பன்மீது
மன்னனம்பழநிமேவுமாண்டவன்கருணைகூர்ந்தே
அன்னவன்கனவிற்றோன்றியருளியல்வடிவங்காட்டி
இன்னமுதனையசொல்லாலன்பனுக்கியம்புவானால்.

உன்மனக்கவலையாவுமொழித்திடாயெனவுரைது
நின்னகத்தினுக்கீசானத்திசையினிநிறைந்தசோதி
மன்னியதங்கவேலாய்வந்துயாமிருப்போமாங்கே
கண்ணினாற்றரிசித்தன்றன்காவடிசெலுத்துகென்றான்.

காவடியபிஷேகிப்பாய்கருதிருவினையுநீத்துச்
சேவடிதருவோமென்னச்செப்பிநம்பழநிவேலன்
மேவியேமறைந்தானன்பன்விழித்தனன்புளகமார்ப்ப
ஓவியம்போலநின்றானுணர்வுபெற்றதிசயித்தே

உள்ளதாய்க்கனவில்வேலனுரைத்தசொல்லுணரவேண்டிக்
கள்ளமற்றோடியாங்கேகண்களாற்றங்கவேலை
உள்ளமேகளிக்கக்கண்டானுவகைவாரிதியின்மூழ்கி
வள்ளலாம்பழநிவேலன்மலரடிவணங்கிநின்றே

பழமறைப்பொருளேபோற்றிபரமசற்குருவேபோற்றி
பழநியாண்டவனேபோற்றிபத்தருக்கெளியாய்போற்றி
குழகனேகுகனேபோற்றிகுருபராபோற்றியென்றே
அழலிடைமெழுகாமென்னவகங்குழைந்தருகேசென்று

நாடினான்கண்களாரநண்பினால்வணங்கிநின்று
சூடினான்முடிமேற்செங்கைதுதித்தனனிறைந்தபாவாற்
பாடினான்வேலாவென்றுபத்தியாலுருகியுள்ளம்
ஆடினான்பரமானந்தவாரியிலழுந்தினானே

எல்லையில்லாதவின்பமெய்தியேயிறைஞ்சிநின்றான்
அல்லலாம்பிறவிமாற்றஅடியனேற்கருளினின்பம்
நல்கியபரனேயாண்டநம்பனேமுருகாவென்று
சொல்லியேநடித்தான்வேலின்தோற்றமேபலருங்கண்டார்

முருகவேள்கனவிற்றோன்றிமொழிந்தசொற்படியேமிக்க
அறிஞனம்பிடாரனானோன்காவடிகொடிபோந்தந்த
குருபரற்கபிஷேகித்துக்குறையெலாமகன்றோனாகித்
திருமனையதனில்வைகியிருந்தனன்சின்னாட்செல்ல

ஆத்துமநாதனென்னுமருட்பெருங்கடவுள்வாழுஞ்
சேத்திரமதற்குமுன்னேயாலயமெமக்குச்செய்து

ஏத்தியேவணங்குகென்னஇனியவன்றன்கனவிற்றோன்றி
தீர்த்தனும்பழநிவேலன்செப்பியேமறைந்தானம்ம (13)

தன்மையாயாலயத்தைச்சமைத்துமேபூசைசெய்து
மன்னியேவருமந்நாளின்மன்னனம்பழநிவேலன்
தன்னருமூர்த்தமொன்றுசமைத்திடப்பலருங்கூடி
எண்ணியிர்தடவைவார்த்துமிறையவனுருவங்காணர் (14)

பின்புமேதுயர்மீக்கொண்டுபிஞ்ஞகன்குமரன்பாதம்
நண்பினேற்றுதிசெய்தார்நாயகனவிண்ணினூடே
அன்பனேடைமையுஞ்சேர்த்துவார்த்திடிலியாமுமன்றே
இன்புருவாகவந்துதோன்றுவோமெனவுரைத்தான் (15)

அவ்வுரையதனைக்கேட்டுவதிசயித்தவராய்வேலன்
செவ்வடிக்கன்புபூண்டசீலனும்பிடாரன்காதிற்
கவ்வையிலாதணிந்தகனகமாங்கடுக்கனோடு
செவ்விதினவற்காய்முன்னந்தோன்றியவேலைச்சேர்த்தார் (16)

சேர்த்துவார்த்திட்டகாலைதிவ்வியசொரூபமான
மூர்த்தியின்வடிவமாகமுருகவேள்பிரகாசித்தான்
பார்த்தவர்களித்தானந்தபரவையிற்படிந்தோராகிப்
போற்றியேவணங்கிநாளும்பூசனைபுரியலுற்றார். (17)

இன்றுமெய்யடியரெல்லாமிறைஞ்சியேயிருமையின்பம்
நன்கடைந்திடுவாரந்தநாதனும்பழநிவேலர்க்
கன்பராம்பிடாரனுமன்பினாலருச்சித்தேத்தி
இன்பமாமுருகவேளினிணையடைந்தான்மன்னோ. (18)

இது திருநாகேச்சுரம் சிவஞான விருப்பம் பொருந்திய கா. வ. சோமசுந்தர முதலியார் மாணக்கர் ஐவர்பாடி சோதிடம் ப. சிதம்பரநாத முதலியார் இயற்றியது.

## கணபதி பிடாரர் சரித்திர விபரம்

காவிரி நதியினாற் சூழப்பெற்றுச் செந்நெல் முதலிய தானியங்களை விளைக்கும் அழகிய நிலவளங்களையுடையதும், சிவபெருமான் பற்பல அற்புதத் திருவிளையாடல்களைப் புரியாநின்ற புண்ணிய க்ஷேத்திரங்களை யுடையதும், பூமிதேவிக்குத் திலகம் போன்றதுமான சோழவளநாட்டிலே திருத்துறைப்பூண்டியென்னும் நகரத்திற்குச்சமீபத்திலே,சகலசிறப்புக்களும் பொருந்திய சென்னிவனமென்றுந் தலைக்காடென்றுந் திருநாமம் பெற்று விளங்கிவருகிற திவ்விய க்ஷேத்திரத்தில், இந்த கலியுகத்திலே சில நாளைக்கு முன்பாகச் செங்குந்தர் மரபிலே சகல கலைகளையுமுணர்ந்து நற்குண நற்செய்கைகளிற் சிரேட்டராய்க் கணபதிப் பிடாரரென்னும் திருநாமம்பெற்ற ஓர் புண்ணிய புருடரிருந்தனர். அவர் மணிமந்திர வைத்திய நூற்களிற் பயிற்சியுள்ளவராயும், சர்வ சாஸ்திரங்களையுமுணர்ந்த அறிஞராயும், உபாதி வைராக்கியபரிசுத்த மனமுடைய தீரராயும், பழனிமலையிலெழுந்தருளியிராநின்ற ஸ்ரீ பழநியாண்டவமூர்த்தியைச்சதா காலமும் பக்தியினால் உள்ளத்தில் தியானிக்குந் திடசித்தமுள்ளவராயுமிருந்து, தமது பதினாறு வயதுமுதல் உத்திராயண புண்ணிய காலமாகிய தைமாதம் பூசநக்ஷத்திர உற்சவ அபிஷேகத்திற்காகத் தலைக்காட்டிலிருந்து காவடி கட்டி ஒரு வருஷமுந் தவறாமல் அறுபத்துநான்கு வருஷம் பழனியம்பதியிலெழுந்தருளி யிராநின்ற ஸ்ரீபழநியாண்டவமூர்த்திக்குக் காவடிகொண்டு செலுத்தி வந்தனர். அந்தக் காலம் அவருக்கு வயது எண்பதாகிவிட்டபடியால், சரீரந் தளர்ந்து நடக்கச் சக்தியற்றவராய்,மனதில் மிகவும் கவலைகொண்டு, ஸ்ரீபழநியாண்டவமூர்த்தியைத் தியானித்து, 'யானென்ன செய்வேன்? சரீரந்தளர்ந்துவிட்டதே. நடக்கமுடியவில்லையே? என்னுடைய பக்திக்கு குறைவு நேரிடும்போலிருக்கிறதே. ஆண்டவனே! ஆண்டவனே!' யென்று கவலையுற்றிருந்தார். அன்பர்கள் உள்ளத்தை விட்டகலாதவராயும் உயிருக்குயிராயும் சர்வஞாபக வல்லப சொரூபியாயும் விளங்காநின்ற ஸ்ரீ பழநியாண்டவமூர்த்தியானவர் தலைக்காட்டிலிருந்து வருந்துகின்ற தமது அன்பனாகிய கணபதிப் பிடாரர்மீது கருணைகூர்ந்து அவருடைய சொற்பனத்திலே தோன்றி அடா அன்பனே நீ கவலை அடைய வேண்டாம். உன்னுடைய வாசஸ்தலமாகிய தலைக்காட்டிலே உன்கிருகத்திற்கு ஈசானிய பாகத்திலே தங்கவேலாக முளைத்தெழுந்தருளுகிறோம் அதைப் பரிக்ஷித்துப்பார்த்து உன்னுடைய காவடியைக் கொண்டுவந்து அபிஷேகஞ் செய்வையானால் உனது இருவினையையும் அகற்றி எம்முடைய திருவடியையுந்தந்தருளுகிறோம் பயப்படாதே எம்முடைய வாசஸ்தலமாகிய பழநிமலைவரைக்கும் நடந்து வருந்த வேண்டாம் உன்னுடைய ஸ்தலத்திலேயே என்னை வைத்து பூஜை, நைவேத்தியம், தைமாதம் பூசநக்ஷத்திர உற்சவ முதலியதும் காவடிகட்டி அபிஷேகம் செய்யென்று ஆக்ஞாபித்து மறைந்தருளினார். அந்தப்பிரகாரம் அந்தப் பிடாரர் விழித்தெழுந்து பரவசமாகி தமக்கு ஸ்ரீ பழநியாண்டவமூர்த்திசொற்பனத்திற்சொல்லியவிபரப்படிப் போய்ப்பார்க்க ஸ்ரீ பழநியாண்டவர் ஆக்ஞாபித்தபடியே தங்கவேலாக முளைத்தெழுந்தருளியிருப்பதைத் தெரிசித்துப் பிரதக்ஷண நமஸ்காரம் செய்து அஞ்சலியஸ்தராய் ஆனந்தக் கண்ணீர் சொரிய சிரசின்மேற் கைகுவித்துத் தோத்திரம் செய்து கூத்தாடினார். உடனே யாவருங் கண்டு சந்தோஷ சாகரத்தில் மூழ்கி யிருந்தார்கள். பிறகு பிடாரர் தமது கிருகத்தினின்று காவடிகட்டிக்கொண்டுவந்து தங்கவேலாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபழநியாண்டவமூர்த்திக்கு அபிஷேக நைவேத்தியம் செய்து சந்தோஷசித்தராய்த் தமது கிருகத்திலெய்தி யிருந்தனர். அன்றுமுதற் பூஜை நைவேத்தியம் தைமாதம் பூச நக்ஷத்திர உற்சவ முதலியதும் நடத்தி வருவாராயினர். இவ்வாறு நடந்தேறி வருங்காலத்தில் ஒருநாள் ஸ்ரீ பழநியாண்டவமூர்த்தி பிடாரருடைய கனவிற்றோன்றி அத்தலத்திற்குக்கன்னிமூலையில் விளங்கிவராநின்ற ஆத்துமநாத ஸ்வாமி சன்னிதிக்கெதிரில் எமக்கு ஆலயங் கட்டென்றுதிருவாய்மலர்ந்துமறைந்தருளினார். அவ்வண்ணமே அவ்விடத்தில் ஆலயப்பிரதிஷ்டை செய்து பழநியாண்டவமூர்த்தியை ஸ்தாபித்து பூஜை நைவேத்தியங்களும் நடத்தி வருவாராயினர். அப்படி நடந்து வருங்காலத்தில் பிடாரர் வகையராக்களும் ஊரிலுள்ள பிரபுக்களும் உற்சவமூர்த்தி வார்ப்பிக்கும்படி முயற்சி செய்து எத்தனம் பண்ணினார்கள். அப்படி வார்ப்பிக்குங்காலத்தில் இரண்டு தடவைவார்ப்பித்தும் உருப்பாயவில்லை. அப்போது ஸ்ரீ பழநியாண்டவ ரசரீரியாய் உன்னையும் எம்மையுஞ் சேர்த்து வார்ப்பிப்பாய். நான் திவ்விய சொரூபமாக வெளிப்படுகிறேனென்றார். பிடாரர் பரம்பரையிலுள்ள அன்பர்கள் அசரீரியாய் எதைச் சொன்னாலும் நம்பிக்கை யுடையவர்களானபடியால் பிடாரர் காதி லணிந்திருந்த பெரிய கடுக்கனையும் ஆதியில் முளைத்தெழுந்த தங்கவேலையுஞ் சேர்த்து உருக்கி வார்ப்பித்தார்கள். உடனே ஸ்ரீபழனியாண்டவமூர்த்தி உருக்கொண்டமைந்தனர். அந்த அதிசயத்தைக் கண்டு எல்லோரும் சந்தோஷமடைந்தார்கள். நாளதுவரைக்கும் அந்த உற்சவமூர்த்தியை வைத்துத் தான் பூஜை நைவேத்தியங்களும் தைமாதம் பூச நக்ஷத்திர உற்சவமும் நடத்திவருகிறார்கள். அன்பர்களெல்லாம் அந்தப் பழநியாண்டவமூர்த்தியை இறைஞ்சியேத்திப் பூசித்து மனோபீஷ்டங்களைப் பெற்று இருமை யின்ப நலத்தையுமடைந்து வருகின்றார்கள். ஸ்ரீபழநியாண்டவர் அன்பராகிய கணபதிப்பிடாரர் ஸ்ரீ பழனியாண்டவமூர்த்தியை அன்பு மிகுதியினால் மனவாக்குக் காயங்களினால் வழிபட்டு அவரது திருவுருவத்தையே அநவரதமும் உள்ளத்திற் தியானித்து அர்ச்சித்திருந்து ஸ்ரீபழநியாண்டவமூர்த்தியின் திருவடிநிழலை யடைந்தருளினார்.

சி. பரிமேலழக முதலியார் குமாரர்
சோதிடம் ப. சிதம்பரநாத முதலியார்,
ஐவர்பாடி.

கல்வி, படிப்பு, வாசிப்பு முதலியன ஒரு பொருளைச் காட்டுவன. கல்வி=கற்பது; கல்போன்று (அறிவைத்) திண்ணிய தாக்குவதெனினும் அமையும். படிப்பு=உருவைமத்தல்; படி=உருவம் வாசிப்பு=வழக்கம் ஆகவே, கல்வி முதலியன மக்களின் அறிவைப் பெரிதும் விசேடிக்கச் செய்வதாதலால், இவை மூன்றும் முறையே அறிவை ஆளும் முறையினைக் ற்பது; மழுங்கி உருவிழந்து கிடக்கும் அறிவைத் தெளிவுபடுத்தி உருவமாக்குவது; அறிவை நல்வழியிற் பயிற்சிப்பது எனப்பொருள் தருகின்றன.

ஆகையால், கல்வி யென்னுஞ் செவிலித் தாயானது அறிவென்னுங் குழவியை மென்மேலும் வளர்க்கின்றது. அறிவுஎன்னும் விதை கல்வியென்னும் நிலத்தில் ஆசிரியனாகிய உழவன் உதவியால் முளைத்து வளர்ந்து வீடு என்னும் பெரும்பயனை அளிக்க வல்லதாயுள்ளது; அறிவென்னுங் கதிரவன் கிரணக்கற்றையாகிய கல்வியால் அறியாமையென்னும் இருளைக் கடிகின்றனன்; கல்வி யென்னுந் துடைக்குங் கருவியால் அறிவென்னுங் கதிர்மணியிலுள்ள அறியாமையாகிய தூசு துடைக்கப்படுகிறது. அறிவு மக்கட்குக் கண்போன்றதாகையால், அந்த அறிமைக் கல்வியால் துலக்கிக் கொள்ளாதோர் கண்ணிருந்தும் அதனைக் கட்டிக்கொண்டு வழி நடக்கும் அறிவிலிகள் ஆவார். ஆகவே,

"ஆற்றவுங் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை அந்நாடு
வேற்றுநாடாகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவதில்."

என நம் முன்னோர் கூறலாயினர். கல்வியென்னுங் கருவியைத் துணைகொண் டவனுக்குத் துக்ககரமான இவ்வுலகு மிக்க இன்பகரமாகிவிடும். கல்வித் துணையோனுக்கு வேறு துணை வேண்டுவதில்லை. எதைச் செய்வான் புகினும் மிகக் களிப்புடனேயே அதைச் செய்து முடிப்பவன் கற்றவனேயாம். மிகச் சிறந்தபிறவியாகிய மக்கட் பிறவியில், கல்வியென்னும் பயனை யெய்தியவனே மேலும்மேலும் உன்னத வாழ்க்கையுடையவனாகின்றான்.

"ஒருமைக்கண் தாம் கற்ற கல்வியொருவற்(கு)
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்பது பொய்யாமொழியன்றோ? ஆகையால் கல்வியறிவு இல்லாதவன் மேற்சொல்லியபயன்களை யிழக்கின்றனன். அறிவென்னுங் கண்ணை யளிப்பது கல்வியாகையால், கல்லாதவன் குருடனாகின்றான்; அறிவென்னுங் கண் இல்லாதவன், மற்றைய கண்களால்நற் பயனை யெய்தாமல், துக்கத்திற்கு இடமான தீய காட்சிகளை விரும்பித் தீய பயனை யடைகின்றனன். கல்லாதவன் இவ்வுலகில் மற்றெல்லாப் பேறுகளை யடைந்தாலும் அதையனுபவிக்கும் வகையறியாதவனாவான்; ஆகவே அப்பேறுகளினாற் பயனில்லை; பயனில்லாமை மட்டும் அல்ல, கேடும் அன்றோ உண்டாகிறது! கல்லாதவன் உலகிற்கு வீண் பொறையாகின்றனன்

"கல்லாதான் சொற்காமுறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று"

"கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைபுக்கு—மெல்ல
இருப்பினும் நாயிருந்தற் றேயில்லா
துரைப்பினும் நாயுரைத்தற்று."

என்பன அமுத மொழிகள். ஆகவே, கல்லாதவன் ஒரு சபையிற் செல்லவும் யோக்கியதையில்லாதவனாகின்றான்

கற்றவன் உலகை நாடகமேடையென நன்கு அறிகின்றான் இந்த நாடகமேடையில் எவரும் வியக்கத்தக்கதாக நடிப்பவன் கற்றவனே. கற்றவன் உலகவாழ்க்கையாம் பெருங்கடலில் அறிவென்னும் மரக்கலத்தைக் கொண்டு ஒருவித துயரமும் இன்றிச் சஞ்சரிக்கின்றான். இவன் தன் மரக்கலத்திற்குக் கேடு செய்வனவற்றை நன்கு முன் தெரிந்து அவற்றை யெதிர்த்துச் சுலபமாக வெல்கிறான். பிறவியாகிய அலையில் இவன் முழுகி வருந்துவதில்லை. தன் மரக்கலத்திற்கு கேடு செய்யவரும் மரக்கலம் ஆதியமீன்களைத் தூரத்திலேயே கண்டு நகைக்கிறான். தன் மரக்கலத்தை கடலினுள் இருக்கும் குன்றுகளில் அடிபட விடுவதில்லை. காலமாகிய பிரசண்டமாருதம் மழையுடன் வருமுன்னரே தன் மரக்கலத்தைச் செவ்வனே ஓர் கரையிற் சேர்ப்பதற்குக் கற்றவனாலன்றி மற்றியாவராலும் ஆகாது.

கற்றவன் உலகைப்பெரியஉத்தியானவனமாக நினைக்கிறான். முள் நிறைந்த காடாக இவன் நினைப்பதில்லை. அங்ஙனம் காடுகளாகக் காணப்படினும் அவற்றைப் பூந்தோட்டமாகவே ஆக்கும் ஆற்றல் இவனுக்கு உண்டு. இவன் உலகப் பூந்தோட்டத்தில் நல்ல பயன்பெறக்கூடிய கனி மரங்களையும், நறுமலர்ச்செடி, கொடி,



மரங்களையும் வைத்துப செழிப்பிக்கிறான், கற்றவன் இவ்வுலகிற்குச் செய்யும் பயன்கள் என்றும் இறவாதன; வியக்கத்தக்கன. நம் முன்னோர்களால் உலகப் பூந்தோட்டத்திற்கு தலைப்பட்ட திருக்குறள், நாலடியார் போன்ற கனித்தருக்களும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், உதயணன் கதை, இராமயணம் பாரதம்போன்ற பூமரங்களும் என்றும் இறவாதனவும் வியக்கத்தக்கனவும் ஆகியவையன்றோ? ஆகவே, கற்றவனே பயனுடையவனாவான்.

இனியும் விரிக்கின் மற்றவற்றை ஆராய இயலாதுபோம். ஆகையால், இத்துடன் நிறுத்தி இனி கற்கும் முறையைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

(தொடரும்)

ஐ. இராஜு முதலியார்,
தமிழாசிரியர்.

## தொழிற் பகுதி

### தொழிற் கல்வி

(௫௫-ம் பக்கத் தொடர்ச்சி)

### நெய்தற் றொழில்

பாரம்பரைத் தொழிலாக வேறு சில சாதியார்கள் இத்தொழிலை நடத்தினாலும் இப்போழுதைக்கு அநேக சாதியார்கள் இத்தொழிலைக் கையாண்டு வருகிறார்கள். ஆயினும் நம் நாட்டு நெய்தல் தொழிலுக்கும் மேல் நாட்டாரின் தொழிலுக்கும் எத்துணையோ வித்தியாசமிருப்பதாகக் காணப்படுகிறது.

நாகரீகமற்றிருந்த காலத்து மனிதர்கள் ஆடையேயில்லாமலிருந்தார்கள். பிறகு கொஞ்சம் அறிவு தெளிவடைந்த பிறகு மிருகங்களின் சருமங்களாலும் இலை தழைகளாலும் தேகத்தை மூடி வந்தார்கள். அதற்குதாரணமாக இன்றும் ஒரு சில இடங்களில் நிருவாணமாக இருப்பவர்களையும் சருமங்களால் தேகத்தைபோர்த்திக்கொண்டிருப்பவர்களையும் காணலாம். அன்னோர் அறிவோடு வாழும் நாகரீகமடைந்தவர்களாக மற்றையரால் கருதப்படுகிறவர்களல்லர். ஆகையால் நாகரீகத்திற்கு அடிப்படையானது மானத்தைக் காப்பாற்று நிமித்தம் தேகத்தை மூடிக்கொள்வதே. ஆகவே இத்தொழில் நாகரீகமடைந்த எந்நாட்டினர்க்கும் முதற்றொழிலாகும். நம் நாடு பண்டைக் காலத்தில் எந்நாட்டினும் நாகரீகத்தில் முதன்மை பெற்றிருந்ததென்று ஆராய்ச்சி வல்லுனர் தெரிவிக்கின்றனர். ஆகவே இத்தொழில் சிறப்புற்றிருக்கவேண்டியது நந்நாயகமேயாம் ஆனால் இக்காலத்தில் அத்துறையில் இந்நாடு மேல்நாட்டைக் காட்டிலும் எத்துணையோ பிந்தியிருக்கிறது. முதன் முதல் நெய்தற்றொழில் உண்டான இடம் நம் நாடாகவே யிருக்கவேண்டும். ஏனெனில் இந்நாட்டிலிருந்தே முற்காலம் ஆடையானது அநேக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாக்கப்பட்டது என முன் குறிப்பிட்டிருக்கிறேன். முற்காலத்தில் முகலாயச் சக்கிரவர்த்தி யொருவர் தம் மகளைக் காணுங்கால் அவளை நோக்கி ஏன் ஆடையற்றிருக்கிறாயென்று கேட்டனராம். ஆயினும் அப்பெண்மணி நம் நாட்டில் நெய்த பத்துப் பதினைந்து மஸ்லின் ஆடைகளை உடுத்தியிருந்தனளாம். அப்படியாயின் அவ்வஸ்திரம் எத்துணை நுண்ணியதாக இருந்திருக்கவேண்டும். அத்துணை நுண்ணிய வஸ்திரங்களையும் நம் நாட்டு மக்களே செய்துவந்தனர்.

இப்பொழுதைய நெய்தற்றொழிலைக் கவனிப்பாம். மேல்நாட்டாரில் ஆரம்பக் கல்வியாவது இல்லாதவரே கிடையாது. ஆகையால் எத்தொழிலைச் செய்வோரும் கல்வியறிவுடையவராகவே யிருப்பர். ஆகவே, அவர்கள் செய்யுந் தொழிலைப்பற்றிக் கற்கவேண்டியவற்றைச் சிறப்பாகக் கற்று திறமையுடனும் லாபங்கிடைக்குமாறும் செய்கின்றனர். நம் நாட்டிலோ கைத்தொழிலாளிகளுக்குக் கல்வி யவசியமில்லை என்னும் கொள்கை கொண்டிருக்கின்றனர். நெய்யுந் தொழிலைக் கையாள்வோரும் முற்சொன்ன விவசாயத்தைக் கையாள்வோருக்கு சமானமானவரே. தவிர கண்ணால் பார்த்துச் செய்யவேண்டிய தொழிலுக்குக் கல்வி ஏன் என்கிறார்கள். என்னே, இவர்கள் கூற்று! பார்த்தவர்கள் எல்லாம் அத்தொழிலைச் செய்துவிடமுடியுமானால் வேலை கற்றுக்கொள்வதற்காக கொஞ்சகாலம் செலவழிக்கவேண்டிய நிமித்தமே இல்லை. எத்தொழிலைக் கற்கவேண்டுமானாலும், அத்தொழிலைத் திறமையாய்ச் செய்பவனிடம் அவ்வேலை நுட்பங்களையெல்

லாம் கற்றுலொழிய செய்யச் சாத்தியமாகாது. அவ்வித தொழில்வல்லோன் கல்வி நிறம்பியவனுயின் அத்தொழிலின் அதிநுட்பமான விஷயங்களை ஆராய்ச்சி செய்தும், மற்ருேர் கையாளும் சிறப்பு முறைகளைப் பத்திரிகை வாயிலாகவோ நூல்களின் மூலமாகவோ கற்று அவைகளின் குற்றம் நீக்கி குணத்தைக்கொண்டு அதன் வழி தன் அறிவினுல் இன்னும் சிறந்தவைகளைக் கண்டுபிடித்துத் தானும் மற்றவர்களும் பயன் பெறும்படிச் செய்வான். தற்காலம் இத்தொழிலைக் கையாடிவருபவர்கள் கல்வியின்மையால் இதைத் திருத்தமான முறையில்செய்யாமலும் அவைகளைக் கற்காமலும் தாம் கையாடிவந்த பழைய முறைகளையே கொண்டு ஒரேவிதத் துணிகளை நெய்வதால் அவர்களுக்குப் போதிய ஊதியங் கிடைப்பதில்லை. அன்னவர்கள் தம் மக்களையும் கல்விகற்கச் செய்யாமல் அவர்கள் வேலை செய்யும் பருவம் வருவதற்கு முன்னமே அவர்களைத் தொழிலில் புகுத்தி அவர்கள் தேக வளர்ச்சியைக் குறைத்து தொழிலிலும் விருத்தியடையாதபடிச் செய்து விடுகின்றனர்.

ஜனங்களுக்கு புதியவைகளிலேயே விருப்பமுண்டாகையால் நம் அறிவினுல் புதுமை புதுமையான வஸ்திரங்களை உண்டாக்குவோமானுல் எப்படியும் அவைகள் ஜனங்களால்விரும்பப்பட்டு நல்ல ஊதியத்தையே கொடுக்கும். அங்ஙனமின்றி ஒரூரில் உள்ள எல்லோரும் ஒரே வகையான பழையமாதிரித் துணிகளையே நெய்து வருவதால் தொழில் பிரயோஜனமற்றதாய் விடுகிறது.

நம் தொழில் முறையைச் சீர்திருத்த எண்ணும் நம்மவர்கள் தம் மக்கள் கல்வி கற்றுனதும் சென்னையிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலை (Government Textile Institute) க்கு அனுப்பித் தொழில் முறைகளைக் கற்கச் செய்து தொழிலைச் சீர்படுத்தவேண்டும்.

இனி நெய்தற்ருெழிலுக்கு வேண்டிய சில விஷயங்களைக் குறிப்பிடுகிறேன். துணி நெய்வதற்கு உபயோகப்படுத்தும் நூல் பலவகையாயிருக்கிறது. அவை சில ஜீவவர்க்கங்களினின்றும் சில தாவரவர்க்கங்களினின்றும் கிடைக்கின்றன. ஜீவவர்க்கங்களினின்றும் கிடைப்பவை பட்டும் கம்பளமுமாகும். பட்டு ஒருவித பூச்சியால் உண்டாக்கப்படுகிறது. கம்பளம் ஆட்டு ரோமத்தினின்றும் நூற்கப்படுகிறது. முற்காலத்தில் நம் நாட்டில் எலிமயிராலும் நுண்ணிய ஆடைகள் நெய்யப்பட்டு வந்தன என்று பண்டைய நூல்கள் சிலவற்றால் தெரிகிறது. தாவரவர்க்கங்களினின்றும் கிடைப்பவை பருத்திநூலும் நார்ப்பட்டும். பருத்திநூலே அதிகமாக உபயோகப் படுகின்றமையால் அதைப்பற்றியே மிகுதியும் கவனிப்போம். பருத்திநூலானது வெகு காலமாக நம் நாட்டில் கைராட்டினங்களில் நூற்கப்பட்டு வந்தது. இத்தொழில் முற்காலம் சாதாரணமாக எல்லா இந்திய குடும்பங்களிலும் பெண் மக்களின் தொழிலாயிருந்திருந்தது. உதாரணமாக இன்றும் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணம் என்று குறிப்பிடும் வகையில் 'கொட்டை நூற்று சம்பாதித்ததோ' என்னும் வசனம் நம்மவரிடம் வழங்கி வருகிறது. தவிரவும் முன்னம் மணமகளுக்குச் சீதனமாகக் கைராட்டினம், பருத்திவேறு கொட்டை வேருகப் பிரிக்கும் பருத்தியணை முதலியவை கொடுத்து வந்தார்கள். நான் பழைய ராட்டினம், மணை முதலியவைகளைத் தென்னுட்டில் சில குடும்பங்களில் இப்பொழுதும் பார்த்திருக்கிறேன். கால தேச வர்த்தமானங்களாலும் நம்மவரின் அசிரத்தையாலும் மற்றும், வேறு அநேக காரணங்களாலும் மத்தியில் அத்தொழில் கைசோரவிடப்பட்டு சீர்பெற நடக்காதுபோயிற்று. தவிர யந்திரங்களால் நூற்கப்பட்டு ஏராளமானவை கிடைக்கவே அத்தொழில் அடியோடு நம் நாட்டைவிட்டுச் சென்றுவிட்டது.

இனி நூல்களின் கவுண்ட் (count) அல்லது நம்பர் என்பது எப்படிக் கணக்கிடப்படுகிறது எனப் பார்ப்போம். அதையறிய நூல்களின் அளவைத் தெரிந்துகொள்வது அவசியமாகையால் அவற்றைக் குறிப்பிடுகிறேன். யந்திரங்களில் நூற்கப்படும் நூல் விற்பனைக்குக் கட்டுகளாகக் கிடைக்கிறது. கட்டுகளில் அநேக பொந்துகளான சுருணைகள் இருக்கின்றன. ஒரு பொந்துக்கு பத்து பூட்டு அல்லது சிலுப்பை (hank) கள் இருக்கும். ஒவ்வொரு சிலுப்பையிலும் ஏழு கண்ணி அல்லது குஞ்சங்கள் (lea) இருக்கும். ஒரு குஞ்சம் 120 கெஜம் நீளமும், சிலுப்பை 840 கெஜம் நீளமும் இருக்கவேண்டும். இதைப் பரீக்ஷிக்க சிலுப்பையின் சுற்றளவை அளந்து அதில் எத்தனை சுற்று நூல் சுற்றப்பட்டிருக்கிறதென்பதை பார்த்துத் தொகுத்துவிடலாம். எல்லா யந்திரக்காரரும் சிலுப்பையை ஒரே அளவாகச் சுற்றும்படி ஏற்பாடு செய்திருக்கிருர்கள். அதாவது ஒன்றரை



கெஜம் இருக்கும். ஆகவே அதில் 560 சுற்றுயிருக்கவேண்டும்.

இனி கவுண்ட் அல்லது நூல் என்பதைப் பற்றிக் கூறுவோம். யாவரும் ஒரு நூலை பார்த்து சுமாராக இந்த நம்பர் இருக்குமெனச் சொல்லலாகுமே தவிர உண்மையான அதன் நம்பரைக் கண் அளவாகச் சொல்ல வியலாது.

(தொடரும்.)

S. பாலகந்தர முதலியார்,
நெய்தற்ருெழிலாசிரியர்,
போர்டு உயர்தர பாடசாலை, பூவிருந்தவல்லி.

## சுகாதாரப் பகுதி

### சருமமும் அதன் பயனும்.

நமது உடம்பின் மேலுள்ள தோலானது சாதாரணமாய் மேல் பார்வைக்கு உடம்பை மூடிக்கொண்டிருக்கும் ஒரு அங்கியைப் போல் தோன்றினுலும் ஊன்றிப் பார்க்குமிடத்து அதன் அமைப்பும் அது செய்யும் வேலையும் விசித்திரமாகவே இருக்கின்றன. இதை உடற்கூற்று நூல் வலலோர், வெகு இலேசாக ஒன்றன்மேலொன்ருய் அமைக்கப்பட்டு ஒன்றற்கொன்று அதிக வேறுபாட்டையுடைய இரண்டு தோல்களாகப் பிரித்துக் காட்டுவர். இவ்விருவிதத் தோள்களுள் மேல்புறத்துள்ள 'மீததோல' இரத்தக் குழாய், நரம்பு முதலியவையன்றி மெலலியதாயும், சொரசொரப்பாயும், கண்ணுடிபோல ஒளி ஊடுருவிச் செல்லக் கூடியதாயுமருக்கிறது. அதனுறருன் இம்மீத் தோல தேயவுறறுலும, காயம பட்டாலும இரத்தமாவது நோக்காடாவது உண்டாவதில்லை. உதாரணமாக ஒரு ஊசியை எடுத்து உள்ளங்கையில் குத்தினுல இரத்தமும் வருவதில்லை நோக்காடும உண்டாவதில்லை. ஊசிமுனை இரத்தக்குழாவில் படுமானுல் இரத்தம தோன்றும். நரம்பில் படுமானுல் நோககாடுண்டாகும், குத்துப்பட்ட மீததோலில் இரததமும் நோயும் உண்டாகாததனுல் அதில் இரதத்க் குழாய் களும் நரமபுகளும் இலலையென்று விளங்குகிறது.

ஆனுல் உண்மையான தோல் மீத்தோலின் கீழே இருக்கிறது. ஊசியை மீததோலோடு நிறுத்தாமல உடம்பின் எந்த பாகததிலாவது இன்னும் கொஞசம் அழுத்திக் குததுவோமானுல் இரத்தமும நோக்காடும் கட்டாயம் உண்டாகக காண்கிருேம். ஆகையால் கீழ்த்தோல் குறுக்கிலும் நெடுக்கிலும் இரத்தக் குழாய்களினுலும்,நரம்புகளினுலும் பின்னல்போல பிணிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. இருவகைத்தோலும் ஒன்ருேடொன்று நெருக்கமாய்ப் பிணிக்கப்பட்டிருப்பதால் தான் மீத்தோலைக் கிள்ளினுல் கீழ்த்தோலும் அதனுடன் வருகிறது. தோல் சூடுண்டால் மீத்தோல் எழும்பி கொப்பளமாகிறது. சுட்ட அதிர்ச்சியினுல் மீத்தோலின் கீழிருந்து கசியும் நீர் வெளியே போக இடமில்லாமல் மத்தியில் நின்று இரண்டு தோலையும் பிரித்துக் கொப்பள முண்டாக்குகிறது. இதனுல் நமது உடம்பு சட்டை போன்ற இரண்டுவிதத் தோல்களால் காக்கப்பட்டு வருகிறதென்று தெரிந்துகொண்டோம்.

இனி தோலைப்பற்றி மற்ருெருவகையில் ஆராய்வோம். நாம் கஷ்டப்பட்டு வேலை செய்யும் போதாவது அல்லது ஒரு உஷ்ணமான அறைக்குள் இருக்கும் போதாவது நமது தேக முழுதும வியர்வை என்றும் நீர்த்துளிகளால் மூடப்பட்டிருப்பதைப் பிரத்தியக்ஷத்தில் காண்கிருேம். அவவியர்வை, உள்ளிருந்து தோலின் வழியாகக் கசிந்து வருகிறதென்று நாம் ஒரு வாறு தெரிந்து கொள்ளுகிருேம். அப்படியானுல் வியர்வை என்பது என்ன? அது ஏன் வெளியே வருகிறது? எப்படி வருகிறது? என்பவற்றைப்பற்றி சிறிது கவனிப்போம்.

நம் தேகத்திலுள்ள தோலை நாம் பூதக்கண்ணுடி கொணடு சோதிப்போமானுல், அது அநேக துவாரங்களாகத் துளைக்கப்பட்டிருக்கிறதென்று தெரியும். நமது உள்ளங்கையில் ஒரு சதுர அங்குல அளவுள்ள தோலில் 2500 துவாரங்கள் இருக்கின்றன. ஒரு மனிதனுடைய தேக முழுவதிலும் சுமார் முப்பதிலிருந்து அறுபது லக்ஷம் துவாரங்கள் வரையில் இருக்கின்றன. இவை, காலங்குல நீளம் நீண்டு உளளே செல்லுகிற சிறு குழாய்களின் வெளி வாய்களாகும். அக்குழாய்களின் மற்றைய முனைகள் அஃதாவது உட்பக்கத்திலுள்ள முனை

கள் பந்துபோல் சுருண்டிருக்கும். அவை வியர்வைக் கோளங்கள் எனப்படும். தேகத்திற்குக் கெடுதி செய்யக்கூடிய விஷத்தன்மையான நீரை இரத்தத்தினின்றும் பிரித்துவெளிப்படுத்துவதே இவ்வியர்வைக் கோளங்களின் தொழிலாம். ஒரு மனிததேகத்திலுள்ள எல்லா வியர்வைக் கோளங்களையும் ஒன்றன் முனையோடு மற்றொன்றன் முனையை வைத்துக் கூட்டி நீளமாய் வைப்போமானால் அவற்றின் மொத்த நீளம் இருபத்தெட்டிலிருந்து முப்பது மைல் வரையில் ஆகும். ஆகையால் இரத்தத்திலுள்ள அசுத்தங்களை வெளியாக்குவதற்கென அமைக்கப்பட்டிருக்கும் 30 மைல் நீளமுள்ள சாக்கடைக்குழாய்கள் நம் ஒவ்வொருவர் உடம்பிலும் இருக்கின்றன.

இது வரையில், வியர்வை என்பது இரத்தத்தினின்றும் கழிக்கப்படும் அசுத்தமான வஸ்துவென்றும், இரத்தம் தேகாரோக்கியத்தின் பொருட்டு சுத்தமாக இருக்கவேண்டியது அவசியமாதலால் கழிக்கப்படுகிறதென்றும் தெரிந்து கொண்டோம். இனி அசுத்தமான வியர்வை நீரானது இரத்தத்திலிருந்து வியர்வைக்குழாய்களுக்கும் அவற்றிலிருந்து தோலின் வெளிப்பக்கத்திற்கும் எவ்வாறு வருகிறது என்பதைப் பற்றிக் கவனிப்போம். ஒவ்வொரு வியர்வைக் குழாயின் உள் பக்கத்திலுள்ள முனை ஒரு பந்து போல் சுருண்டிருக்கிறது என்று முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. சுருண்டுள்ள ஒவ்வொரு வியர்வைக் கோளமும் மயிரிழை போன்ற சிறிய இரத்தக் குழாய்களால் நெருக்கமாய்ச் சூழப்பட்டிருக்கிறது. இரத்தக் குழாயின் மேற்பரப்பாகிய ஜவ்வும் வியர்வைக் குழாயின் மேற்பரப்பாகிய ஜவ்வும் நீர் கசியக்கூடிய அவ்வளவு மெல்லியவைகளாயிருக்கின்றன. ஜவ்வின் வழியாய் நீர் எவ்வாறு கசியக்கூடும் என்பது கீழ்க்காட்டுவது போல் சோதித்துப் பார்த்தால் நன்கு விளங்கும்.

நீண்டு ஒடுங்கிய குழாயோடு கூடிய ஒரு புனலை எடுத்து நீர் நுழையாதபடி ஒரு மெல்லிய ஜவ்வுத் துண்டினால் (a piece of bladder) அதன் வாயை இறுகக் கட்டிவிட்டு, நீலம் கரைத்த நீரை அதில் வார்த்து ஒரு தொட்டியில் சாதாரண நீரை நிரப்பி புனல் நீரும் தொட்டி நீரும் ஓரே மட்டத்திற்கு வரும்படிப் புனலின் வாய்ப்பக்கத்தைத் தொட்டியில் அமிழ்த்தினால் ஒரே காலத்தில் புனற் குழாயிலுள்ள நீர் மேலேறுவதையும் தொட்டி நீர் கொஞ்சங் கொஞ்சமாய் நீலநிறமடைவதையும் காண்போம். ஏனெனில் தொட்டி நீரில் கொஞ்சம் புனலிலேறுகிறது. புனலிலுள்ள நீலச் சாய நீர் கொஞ்சம் தொட்டியிலிறங்குகிறது. இப்பரிவர்த்தனம் ஜவ்வின் மூலமாகத்தான் நடக்கிறது. இதே மாதிரியாகத்தான் மயிரிழைபோன்ற குழாக்களிலோடும் இரத்தத்திலிருந்து வியர்வையும் அதிலுள்ள அசுத்தங்களும் கசிந்து வியர்வைக் கோளங்களுக்குள் வர வியர்வைக் கோளங்கள் துவாரங்கள் மூலமாக வெளியாக்குகின்றன.

வெளிவந்த வியர்வைநீர் உடனே நீராவியாக மாறித் தேகத்தின் உஷ்ணத்தைத் தணிக்கிறது. நீர் அதிக சூடானால் நீராவியாக மாறுவதை யாவரும் அநுபவ முறையிற் காண்கிறோம். வியர்வை ஆவியாவதற்கு வேண்டிய உஷ்ணம் நம் உடம்பிலிருக்கிறது. உடம்பு முழுவதும் வியாபித்துள்ள இச்சாக்கடைக் கால்கள் (வியர்வைக் குழாய்கள்) இத்தகைய மிக முக்கியமான வேலையைச் செய்கிறபடியால், நம்முடைய தேகத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கும் பொருட்டு நம்மால் கூடிய வரையில் ஒவ்வொரு நாளும் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை குளித்து கருணைக்கடலாகிய இறைவனது ஆணையால் நடைபெறும் சுகாதார வேலையில் சிறிதும் அசட்டை செய்யாது ஒத்தாசை செய்யவேண்டியது மிகவும் அவசியமானது. இல்லையானால் அருவருப்பைத் தரத்தக்க பலவிதமான சரும வியாதி முதலியவற்றால் பீடிக்கப்படுவோம் என்பதில் ஐயமில்லை. அடிக்கடி நன்றாய்த் தேய்த்துக் குளிப்போமானால் வியர்வைத் துவாரங்கள் அடைபடாது உள்ளிருந்துவரும் அசுத்தங்கள் சுலபமாய் வெளியாக்கி உடம்பில் சருமநோய்கள் உண்டாகாதிருக்கும். 'பக்திக் கடுத்தது பரிசுத்தம்' என்பதை ஈண்டு கவன மூட்டுவது மிகையாகாது.

மா. அ. கனகசபை முதலியார்.



# மாணவர் பகுதி

## அமெரிகாவில் மாணவரின் நிலைமையும் அவர் கற்கும் முறைமையும்

அமெரிகாவின் ஐக்கிய ராஜ்யங்களில் உள்ள உயர்தரப் பாடசாலைகளில் படிக்கும் மாணவரின் தொகை 5 லக்ஷத்திற்கு மேற்பட்டிருக்கிறது. அஃதாவது அங்குள்ள ஜனத்தொகையில் 220 பேருக்கு ஒரு மாணவனாக இருக்கிறார்கள். இவர்களுள் மூன்றிலோரொரு பங்கினர் வரிப்பணத்தால் நடைபெறும் பாடசாலைகளில் படிக்கிறார்கள். பெரும்பான்மையோரவர்களுக்குச் சம்பளமில்லாமலே படிக்கிறார்களாயினும் மற்றச்செலவுகளைத் தாங்களே தாங்கவேண்டியவர்களாயிருப்பதால், அவர்கள் பெற்றோர் அன்றாடம் கூலிக்கு வேலைசெய்து ஜீவனம் செய்யவேண்டியவர்களாயிருக்காலும், தங்கள் செலவில் நெருக்கித் தங்கள் பிள்ளைகளை 'அவையத்து முந்தியிருப்பச் செயல்' கடமை என்பதை யுணர்ந்து, அவர்கள் செலவின் ஒரு பகுதியையாவது தாங்குகிறார்கள். அநேக தபாற்காரர்களும் தினக்கூலி வாங்கிவயிறுவளர்க்கும் வண்ணாத்திகளும் தங்கள் பிள்ளைகளை உயர்தரப்பாடசாலைகளில் படிக்கவிட்டிருக்கிறார்கள். இத்தகைய ஏழை மாணவர்களில் பெரும்பாலார் தங்கள் உயர்தரப் படிப்பின் நிமித்தம் செலவுக்கு வேண்டியபணத்தை நாளுக்கு நாள் தாங்களே சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். சொற்ப வருமானத்தைக் கொண்டே அதிகச் செலவுள்ள பிரயாணங்களைச் செய்வதன்றி இதர சௌகரியங்களையும் செய்துகொள்ளுகிறார்கள். அங்கு ஒவ்வொருவரும் எதிர்காலத்தையே முன்னோக்குகிறார்கள்.

இவ்வேழை மாணவர்கள் தங்கள் கல்விக்கு வேண்டியபணத்தை 'அறம்பொருள் இன்பமான அறநெறி வழாமற்பற்றி' என்றபடி அறநெறியிலேயே, அதாவது யோக்கியமும் நியாயமுமான வழியிலேயே சம்பாதிக்கிறார்கள். பிள்ளைகள் வேனில் விடுமுறைக் காலங்களில் வயல்களிலேதான் வேலைசெய்கிறார்கள். வேனிற் காலத்தில் சிறு பிள்ளைகளைக் கூட்டி அவர்கள் நடந்துகொள்ள வேண்டியமுறைகளைக் கற்பித்தும் மற்றும் அநேக அனுகூலங்களைச் செய்தும், வீடுவீடாய்ச் சென்று பெண்களுக்குப் பத்திரிகைகள் விற்றும், சந்தா தொகைகளை வசூலித்தும், தனவந்தரிடம் காவல் வேலைசெய்தும், தங்களுக்கு வேண்டிய பணத்தைச் சம்பாதிக்கிறார்கள். இஞ்சினீர் பரீக்ஷைக்குப் படிப்பவர்கள் தொழிற்சாலைகளில் கூலிக்கு வேலைசெய்து வேலையில் தேர்ச்சியடைவதன்றிப் பணமும் சம்பாதிக்கிறார்கள். 'கற்கைநன்றே கற்கைநன்றே' என்னும் அரிய அடிக்குத்தொடரை மனதிலிறுத்தி, இதனோடு நில்லாது, நம்நாட்டு மாணவர்களால் இழிந்ததெனக் கருதப்படுவதாகிய கடிதங்களைப் பிரித்தடுக்குதல், புத்தகசாலைகளில் கையாள் வேலை செய்தல், சாப்பாடு பரிமாறுதல், கோயில்களில் ஓதுதல், கூட்டுதல், காய்கறிகள் விற்றல், ரிக்ஷா வண்டிகளை வாடகைக்கு (தங்களுக்கொழிந்த நேரத்தில்) வாங்கிச் சத்தத்திற்கு இழுத்துக் கொண்டுபோதல் முதலிய தொழில்களையும் செய்து வருகின்றனர். ஒவ்வொருவரும் நியாயமான வழியில் தமக்கடுத்ததும் தம்மால் கூடியதுமான தொழிலைக் கல்வியின் பொருட்டுச்செய்தல் இழிவானதல்லவென்றும் எதிர்காலத்தில்கிடைக்கும்பயனேபிரதானமானதென்றும், 'இவன் தந்தை என்னோற்றான்கொல்'லென்னும் சொல்லைப் பிறப்பித்தலே தாம் பெற்றோர்க்குச் செய்ய விருக்கும் கடமையென்றும் நன்குணர்வார்கள். மாணவர்கள் வெளிப் பிரயாணம்போய் உலகாநுபவம் பெற்றாலன்றித் தங்கள் கல்வி முற்றுப் பெற்றதாகத் திருப்தி யடைவதில்லை. ஆதலால் பெரிய மரக்கலங்களில் தாழ்ந்த வகுப்பில் ஏறிப்பலவித கஷ்டநஷ்டங்களுக்கு ஈடுபட்டுப்பனுமாகால்வாயைக் கடந்து ஜப்பான், சீனா, ஹாங்காங் முதலிய தேசங்களுக்குச் சென்றும் வருகிறார்கள். அமெரிக்கர்கள் பல துறைகளிலும் சுலபமாகத் தேர்ச்சியடைவது இவ்வாறே.

வெளிநாட்டுமாணவர்கள் இவ்வாறுகஷ்டப்பட்டுக் கற்று உலகத்தில் பல துறைகளிலும் மேம்பாடடைந்துவர, நம்நாட்டு மாணவர்கள் சோம்பித்திரிந்து, கஷ்டம் சிறிதும் படாது, ஒழுங்காயுடுத்திக்கொண்டு உலாவுவதே மாணவரொழுக்கமெனக்கருதியிருப்பது பரிதபிக்கத் தக்கதேயாம்.

மா. பா. கந்தசாமி முதலியார் பி.ஏ., பி.இ.,

## மாதர் பகுதி.

### மாதர்

"ஒரு பெண்ணின் மாட்சிமை தான் யாவர்க்கும் தெரியாதிருப்பதிலும், புகழ் தனது கணவனது மதிப்பிலும், இன்பம் தனது குடும்பத்தின் நன்மையை நாடுவதிலுமேயே இருக்கின்றன" என்றார் ரூசோ (Rousseau) என்னும் பிரென்சுக்காரர்.

"பெறற்கரிய பெருமைசாலும் பெண்ணின் இன்மையேபெண்ணும் நறுநுதலாள் நன்மைத் துணை."

என்பது நாலடியுள் ஈரடி.

"மனைக்காக்கம் மாண்ட மகளிர்"

என்பது நான்மணியுள் ஒரு மணி. குடும்பத்தின் நலனைத் தேடுவதே நமது மாதர் மேற்கொண்ட விரதம். தமக்கு எவ்வளவு அசௌக்கியம் நேரிடினும் தமது கணவரும் மக்களும் சுற்றத்தாரும் ஆரோக்கியமாக இருந்தால், அதே அவர்களுக்கு மருந்துபோலும். கணவரோ மக்களோ நோயுடன் படுத்திருந்தால் அவர்கள் அடையும் மனக்கிலேசம் வரையற்றது. கணவனுக்கு நோய் வந்தால் அது தீர்ந்தவுடன் மனைவி நோயோடு படுத்துக்கொள்வது நமது வீடுகளில் சகஜமே.

"பெண்களின் ஒழுக்கம் நரம்பிட்ட வீணை முதலிய வாத்தியங்களைப் போல் இல்லுள் இனிமையாயிருக்கும். ஆண்மகனின் ஒழுக்கம் வெளியான இடங்களில் இனிமை பயக்கும் துளையிட்ட குழல் முதலியன போன்றது" என்பது ஜீன் பாலின் (Jean Paul) வாக்கு.

"மனைக்கு விளக்கு மடவாள்"
"மனைப்பாழ் வாணுதலின்மை";
"பாழொக்கும் பண்புடையாள் இல்லா மனை"

என்பவை நான்மணிக்கடிகையிலும்,

"மழை திளைக்கும் மாடமாய்
மாண்பமைந்த காப்பாய்
இழை விளக்கு நின்றிமைப்பின்
என்னாம்?—விழைதக்க
மாண்ட மனையாளை
இல்லாதான் இல்லகம்
காண்டற் கரியதோர் காடு."

என்பது நாலடியாரிலும் காண்கின்றோம். 'இல்லாள்,' 'மனைவி,' 'வீட்டுக்காரி' என்பது நமது மாதரின் உரிமைப் பெயர்கள். கணவனைப் பிரிந்த காலத்து அப்பிரிவை யாற்றிக்கொண்டு இருந்து இல்லறத்தைச் செவ்வனே நடத்துதல் முல்லைத் திணையின் உரிப்பொருள் என்பது நமது அகப்பொருள் இலக்கணம். ரஸ்கின் (Ruskin) என்னும் ஆங்கில அறிஞர், "ஓரில்லத்துக்கு மனிதனது வேலை அதைச் சம்ரக்ஷிப்பதிலும், விருத்தி செய்வதிலும், காப்பதிலும் அடங்க, மாதின் வேலை அதை ஒழுங்குபடுத்துவதிலும், 'இன்புறுத்திச் சௌக்கியப் படுத்துவதிலும், அந்தஞ் செய்வதிலும் அடங்கும்" என்றனர். இந்நம்பிக்கையினாலேயே அவர், "பெண் கல்வியின் முக்கிய முடிவு பெண்களை எல்லாவிடங்களிலும தங்களது வீடுகளை நன்றாக விரும்பவும், எப்படி ஓரரசியானவள் தனது நாட்டைவிட்டு வெளியே போகமாட்டாளோ அப்படியே அவ்வீட்டைவிட்டு அடிக்கடிப் போகவொட்டாமலும், வீட்டைக்காட்டிலும் வேறிடங்களில் அதிகமாகச் சுயேச்சை யுணர்ச்சி இல்லாதிருக்கவும் செய்வதுமேயாம்" என்றனர்.

ம. சண்முகசுந்தர முதலியார், M.A., L.T.

### கற்பு

'ஆனைமுக னறுமுக னம்பிகை பொன்னம்பலவன் ஞானகுரு வாணியை யுண்ணுடு.'

சகோதரர்களே! இப்பரந்த வுலகத்திலே மேன்மையுடைத்தாகிய இம்மானிடப் பிறவியைப் பெறுவது அரிதினும் அரிதென அறிவிற்சிறந்துவிளங்கிய அறிஞர் பல்லோரும் பகர்ந்த ஆப்த வாக்கியங்களின்படி, பெறுதற்கரிய இம்மானிட பிறவியைப் பெற்று அடைதற்கரிய ஆண்டவனின் அருளைப் பெற விரும்பும் பற்பல சாதனங்களில் ஒன்றாகி, பிர்மசர்யம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னப்பட்ட நால்வகை ஆச்சிரமங்களில் கிரகஸ்தம் என்னப்பட்டதைத் தொடர்ந்து நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தை ஆராய்வாம். கிரகஸ்தம் என்னப்பட்ட இல்லறத்தின் இயல்பைப்பற்றி எளியேன் எடுத்துரைக்கும் திறனுடையேனில்லையெனினும், ஈண்டு சிறிது இயம்பவேண்டிய தவசியமாகின்றது.



றது. எனவே, இவ்வில்லாத்திற்குக் கீழாகவுள்ள பிரம்மசாரியர்களும், மேலாகவுள்ள வானப்பிரஸ்தர்களும் சந்நியாசிகளும் கிரகஸ்தனுடைய தயவை எதிர்பார்க்க வேண்டியவர்களாய் இருக்கின்றார்களென்பதை நம் நாயனார்,

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை"

என்றார். இதுபோன்ற பிறவும் இதுபற்றி அறிவுறுத்துகின்றனவாகையால் இக்காரணங்கள்பற்றியே ஆன்றோர் இல்வாழ்க்கையே இயல்புடைத்தென இயம்பி இருக்கின்றார்கள்.

எனவே இத்தகைய இல்லறத்தை இனிதே நடத்துவதற்கு வாழ்க்கைத் துணையாய் மாசற்ற மாண்புடைய மனைவி யொருத்தியை மணம்புரியவேண்டும். அவ்வகை வந்த ஒருத்தியே அம்மனைக்கு ஆளாவாள். இதுபற்றியே அவளுக்கு மனையாள், மனையாட்டி, இல்லாள், இல்லத்தி, கிருகினி என்னப்பட்ட நாமங்கள் அமைந்திருக்கின்றன. இக்காரணத்தினாலேயே

"இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்."

என்று வாக்குண்டாமிலும்

"நீரில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ்—மாறில்
உடப்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை."

என்று நல்வழியிலும்,

"மண்ணுறு நன்மணி வேய்ந்து வயங்கிய
வண்ணம் நன் மாடங்களாயினுங் கற்புடைப்
பெண்ணி னல்லவ ரில்லெனிற் பேய்க்கணம்
நண்ணுகின்ற வனமென நாட்டுவார்"

என்று காசி காண்டத்திலும், (அதாவது, கீர்த்தியான நவரத்தினங்களால் அலங்கரித்து ஜொலிக்கின்ற பெருமை பொருந்திய மாளிகைகளானாலும் கற்பினையுடைய பெண்களில்லையானால் அவ்விடத்தைப் பேய்க்கூட்டங்கள் சஞ்சரிக்கும் வனமென்று பெரியோர்கள் புகன்றுளார்கள். மேலும் இக்கருத்திற்கிணங்கத் திருவள்ளுவரும்,

"இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை"

(ஒரு கிரகத்திற்கு ஒன்றுமில்லாமல் மாண்புடைய மாதர் மட்டும் இருந்தால் அக்கிரகத்திற்கு எல்லாமுண்டு; எல்லாமிருந்தும் மாண்புடைய மாதர் மட்டும் இல்லாவிட்டால் அக்கிரகத்தில் ஒன்றுமில்லை என்றல்லவா கூறியிருக்கிறார்கள். ஆகவே, இத்தகைய இல்வாழ்க்கை என்னப்பட்ட இல்லறமானது நல்லறமாக வழுவாத அறவினையோடு அன்புடன் நடத்துவதற்குக் கருத்தொருமித்த காதலர்களாய் இருக்கவேண்டும். அதாவது, இல்லற மென்னப்பட்ட ஒரு வண்டியை இழுத்துச் செல்வதற்கு இன்றியமையாத எருதுகளாக அவர்கள் இருக்கவேண்டும் இன்றேல், ஒன்றுக்கொன்று முரணாய் இழுக்கும் பக்ஷத்தில், வண்டி மேடு பள்ளங்களில் தாக்கி, எருதுகளும் வண்டியும் நஷ்டமாவதோடு, அதிலுள்ள பிரயாணிகளுக்கும் கஷ்டமேற்பட்டுக் குறிப்பிட்டவிடத்தைச் சேரார்களன்றோ? அத்தன்மையைப்போல், இல்லற வாழ்க்கையில் மாறுபட்ட குணமுடைய மாதர்களிருப்பின், இல்லறம் இனிதே நடவாததுமன்றி இல்லறத்தின் பிரயாணிகளாகிய ஜீவாத்மாக்கள் தாம் குறிப்பிட்ட மோக்ஷ வீட்டை அணுகுவதற்கும் பெருத்த இடையூறுகளாய் விடுகின்றனர்.

சகோதர சகோதரிகளே, இதற்குத்திருஷ்டாந்தம் கூறக்கருதின் பல கதைகளைஈண்டு பகரலாம். ஆனால் நம்மித்திர னிடந்தரா தென்றஞ்சி, 'நம்ஞானமூதாட்டியாம் ஔவை பிராட்டியாரின் ஜீவிய காலத்தில் நிகழ்ந்த ஒரு சிறிய சரிதையைமட்டும் வாசகர்களுக்கு ஞாபகமூட்டிவிட்டு மேல் செல்லுவாம்.

இருந்து முகந்திருத்தி யீரொடு பேன் வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப—வருந்திமிக
வாடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தாற்
சாடினாளோ டோடத் தான்.

(தனிப்பாடற்றிரட்டு.)

ஓர் ஊரில் ஔவையார் ஒருநாள் பசிநோயால் மிகவும் வருந்தி ஒரு கிரகஸ்தன்வீட்டுத் தெருத்திண்ணையில் மிகுந்த இளைப்போடு உட்கார்ந்திருந்தனர். அக்கிரகஸ்தன் மிக்க சாந்தகுணசீலன். அவன் மனைவியோ தக்க தமோகுணசீலி. அக்கிரகஸ்தன்வெளியே வந்தபோது, ஔவையார் அவனைப் பார்த்து "அப்பா, எனக்கு மிகவும் பசியாய் இருப்பதால் கொஞ்சம் கூழேனும் வார்த்தால் சாப்பிட்டுப் பசியாறிப் போவேன்" னென்றார். இதைச் செவியுற்ற சாந்தகுணசீலனான அக்கிரகஸ்தன் ஔவையின் பரிதாப வார்த்தைக் கிணங்கித் தன் மனையாட்டியின் அருங்குணங்களைத்தான் அறிந்தவனாதலால், ஔவையைக் கிரகத்திற்குள் அழைத்துக் கொண்டு போகாமல் தெருத்திண்ணையிலேயே இருக்கவைத்துத் 'தான் மாத்திரம் கிரகத்திற்குள்ளே சென்று, மனைவியாருக்குத் தன்னிடம் அன்புண்டாகும்படி இன்சொல் பகர்ந்து மெல்ல முகத்தைத் துடைத்துத் தானொரு

பெண்ணைப்போல அவளுக்குத் தலைசீவி சிக்கறுத்துப் பேன்பார்த்து ஈருருவி, மிகுந்தபய பக்தியுடன் எங்கே கோபித்துக் கொள்ளுகிறளோவென்று பயந்து இது சமயமென அறிந்து மிக நயந்து மெய் நடுக்குற்று நாக்குழறி மெல்ல ஒரு 'பெருத்த கிழவிகொஞ்சம் கூழுக்கு வந்திருக்கிருள்' என்று அவளிடம் இன்சொலால் பகர்ந்தான். உடனே அவள் மிகுந்த சீற்றங்கொண்டு மிதியுண்ட சர்ப்பம்போல் சீறி 'உன் பவுஷுக்கு விருந்து ஒரு கேடா? உன் இழவுக்கு தொலைப்பதல்லால் ஊர் இழவுக்குமா தொலைக்கவேண்டும்? என்று கடுமையான வார்த்தைகளைச் சொல்லிக் கழிநீர் பானையைக் கையிலேந்தி வந்து அவன் தலையில்வீசி, அலகெடுத்து ஆலவட்டம் பரிமாறி, பரிவேட்டை விடுவதுபோல் அவனை வீட்டுக்கும் தெருவுக்குமாகத் துரத்தித் துரத்தி அடித்தாள். திண்ணையின்பேரில் உட்கார்ந்திருந்த ஔவையார் இக்கொடுமையைக் கண்ணுற்ற மேல்கண்ட செய்யுளைப்பாடி இன்னும்சில செய்யுள்களாலும் அவனுக்குப் புத்திபுகட்டிச் சென்றார்.

அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்றால் இத்தன்மைய பெண்களாக அமையின் எவ்வாறு இல்லறமென்ற நல்லறத்தை நடத்துவது? இத்தகைய மாதர்களோடு அநுபவித்துத் துன்புற்று வெறுத்த சிலரும், உலக வாழ்க்கையில் மாதர்களின் மடமைக் குணங்களை அறிந்தவர்களில் சிலரும், 'நூறு வயதாமளவும் பேய் கொண்டாலும் கொள்ளலாம் பெண் கொள்ளலாகா'தென்றும், "பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசம் பிடித்திட்டென்னை" என்றும், "கன்மனைதோறும் பெண்களைப் படைத்த நமனை என் செய்யப் படைத்தாய்" என்றும் 'கூற்றமே இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்' என்றும், அதாவது பேய் என்றும் பிசாசென்றும் எமனென்றுமல்லவா? வாய் கூசாது இயம்பி இருக்கின்றார்கள். மெய்யறிவாளர்களே! நம் ஞானமூதாதையர்கள் நமக்கு அழியுஞ் செல்வமாகிய பொன்னையும் பொருளையும் மண்ணையும் சேமித்து வைக்காது, அழியாச்செல்வமாய்அநுபவவுண்மையால் அறிந்துரைத்த ஆப்தமொழிகளாகிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, நன்னெறி, நாலடியார், திருக்குறள், திருமந்திரம் முதலிய அரிய பெரிய நூல்களை இயற்றி அவற்றைப்போற்றிவாழும்படி திருவாய் மலர்ந்தருளி இருக்கின்றனர். ஆனால் மேற் செப்பிய நூல்களை முற்கால பள்ளியின் பாடமாகப்பல்லோர் உணர்ந்தவர்களேயாயினும், ஒவ்வொருவரும் தந்தம் சொந்த அநுபவங்களிற் றேர்ச்சியடைந்த பின்னர்தான் "மூத்தோர்சொல்வார்த்தையமிர்த"மென நினைக்கின்றோம். வாசகர்களே! இவ்வாறு வரைந்து செல்வோமேயாகில் ஒன்றைப்பற்றி ஒன்று விரியுமாதலால், இனி நாம் மேற்கொண்ட விஷயத்தை எடுத்துக்கொள்வோம்.

(தொடரும்)

சீ. தி. தாண்டவராயமுதலியார்,
காரியதரிசி, ஸ்ரீஷண்முகாநந்த சன்மார்க்க சங்கம்,
திருமருகல்.

## அசரப்பட்ட மரகதம்

கோவிந்தன்—அடி மரகதம்! தயிர் மோரென்றால் நமக்குக் குதிரைக்கொம்பாயிருக்கிறதே. வாங்குவதற்கும் பணமில்லை. இந்த மாதம் கடன்பட்டாவது ஒரு காவலெருமை வாங்கியே தீரவேண்டும். தயிர் மோர் எதேஷ்டமாய்க் கிடக்கும். நாலுபேர் நம் வீட்டைத் தேடி வருவார்கள்.

மரகதம்—ஆமாம், மெய்தான், நானும் அதைத் தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். (வீட்டுப் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டே) அப்போது இதில் என் அம்மாள் வீட்டிற்குத் தயிர் கொடுப்பேன். இதில் என் அத்தை வீட்டிற்குக் கொடுப்பேன். இதில் என் அக்காள் வீட்டிற்குக் கொடுப்பேன். எங்களப்பா வந்தால், இதில் மோர் கொடுப்பேன். இதில்............

கோவி.—உன் புத்திமாத்திரம் போகிறதில்லையே. எல்லாம் உங்கள் மனுஷாளுக்கே தானு? எங்கள் மனுஷாளென்றால் உனக்கு எப்படி யிருக்கிறது?

மா.—ஆமாம்; போதும், போதும், நிறுத்துங்கள். உங்கள் மனுஷாள் சங்கதி தெரியாதா? என் வாயை ஏன் கிளருகிறீர்கள். உங்களாம்மா ஓரவஞ்சனை தெரியாதா? உங்களண்ணன் செய்த மோசம் இதற்குள் மறந்துபோய் விட்டதா? உங்கள் தம்பி அன்றைக்குக் குதி குதியென்று குதித்து, என்னை வாயில் வந்தபடி யெல்லாம் வைதாரே; நான் ஏதாவது வாயைத் திறந்திருப்பேனு? நீங்களும் எதிரிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டு தானே இருந்தீர்கள்? நீங்கள் கொடுக்கிற எளக்காரந்தானே இதெல்லாம்? இவ்வளவுக்கும் உள்ளூரில் வாழ்கிற உங்களக்காள்தானே காரணம்? எவ்வளவு கொடுத்தாலும் அவளுக்கு நன்றியில்லையே. எங்கள் மனுஷாள் நாமென்றால் உயிரை விடுகிறார்களே. அவர்கள் தானு இவர்கள்?



கோ.—இப்படியெல்லாம் பேசினால் எனக்குக் கெட்ட கோபம் வரும் கொஞ்சமாவது உனக்குப் புத்தியில்லை. (இப்படியே இவனென்று சொல்ல அவளொன்று சொல்லச் கடைசியாய்ப் பெருஞ் சண்டையாய்விட்டது.)

அண்டைவீட்டுக்காரன்—(இவற்றை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்து புறக்கடைக்குச் சென்று) இது என்ன அக்கிரமம்? எருமைத்தயிர் குடிக்கிறவர்களுக்கு எங்கே புத்தியிருக்கும்? யார் கொல்லையிலாவது மேய்ந்து வயிறு நிரம்பினால் போதுமென்று நினைக்கிறீர்களே. இது என்ன அநியாயம்? சிசீ, இது ஒரு பிழைப்பா? (என்று பலவாறு சொல்லிப் பெருங் கூச்சலிட்டான். இதைக் கேட்டுச் சுற்றுப்பக்கத்தி லிருந்தவர்களெல்லாம் அங்கு ஓடினார்கள்.)

கோவிந்தனும்-மரகதமும்—(சண்டையை நிறுத்திவிட்டு ஓடிவந்து) யார் மாடு, யார் மாடு? செடிகளையா மேய்ந்துவிட்டது? ஐயோ பாவம்! பச்சைப்பசேலென்று கண்ணிற் கழகாயிருந்ததே நீங்கள் குழந்தைகளைப்போல் வளர்த்துவந்தது எங்களுக்குத் தெரிந்தது தானே. யார் இப்படி மாட்டைக் கட்டாமல் விட்டுவிட்டார்கள்?

அண்டைவீட்டுக்காரன்—எல்லா விஷயமும் தெரிந்தவர்கள் தான் இப்படிச் செய்கிறார்கள். புத்தியிருந்தால் தானே.

கோவிந்தனும்-மரகதமும்.—இது என்ன அநியாயம்! இப்படி மாட்டை விடலாமா? யார் மாடது?

அண்டை.—இன்னமும் தெரியவில்லையா? உங்கள் காவலெருமைதான். அதனால் தான் எனக்கு இவ்வளவு ஆத்திரம் வருகிறது. அண்டை வீட்டுக்காரன் கெட்டுப்போனால் அழகாய்ப் பார்ப்பீர்கள்!

கோவி. மா.—இது என்ன வேடிக்கை? கடைசியில் எங்கள் தலையில்தானு வைத்தீர்கள் எங்கள் மாடா? எங்களுக்கு மாடேது?

அண்டை.—நன்றாயிருக்கிறது! மாடாயில்லை? இன்னேரம் தயிருக்காகச் சண்டை போட்டீர்களே அந்த எருமைதான். எனக்குக் கற்று கொடுக்கிறீர்களா?

மா. அ. க.

# செங்குந்தர் கிளர்ச்சி

கிளைச்சங்கங்களின் நிகழ்ச்சிகளும், புதுச்சங்க ஸ்தாபனங்களும் போலியர்க்கு மறுப்புக்களும்.

## இலங்கையில் கிளர்ச்சி.

### யாழ்ப்பானச் செங்குந்த முதலிமார் சங்கம்.

பிரபவஹு மாசிமீ 20உ (3-3-28) பிற்பகல் $4\frac{1}{2}$மணியளவில் திருநெல்வேலி கிழக்குச் செங்குந்தர் வீதி வாலையம்மன் கோவிலின்முன் ஸ்ரீலஸ்ரீ இ. சி. விநாயக தேசிகர் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு செங்குந்தர் கூட்டம் நடைபெற்றது. அத்தருணம் அபிமானமுற்ற செங்குந்தர்கள் 400-க்கு மேற்பட்ச் சமூகமளித்தனர். காரைச் செங்குந்தப் பிரமுகர்கள் அநேகர் விஜயஞ் செய்திருந்தனர். அப்போது திரு. சி. குட்டி முதலியார் தேவாரம்பாடியானதும் தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கத்தாரால் அனுப்பப்பட்ட மனுக்கள் சபையோர் சம்மதப்படி நிரப்பப்பட்டன. பின் நம் குலமுன்னேற்றத்தின் பொருட்டுச் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றி திரு. பி. க. கணேச முதலியார் முதலிய அநேக அறிஞர்கள் உபந்யாசம் செய்தார்கள்.

அக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்:—

1. இச்சங்கம் ஒருவருடம் வாரமொருமுறையும் பிறகு மாதமொருமுறையும் கூடவேண்டும்.

2. சங்கம் கூட ஒரு தனியிடம் ஏற்படுத்த வேண்டும்.

3. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் மாதா மாதம் 10 சதம் சங்கத்திற்குக் கொடுக்கவேண்டும்.

4. இச்சங்கத்தைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச் சங்கமாக்க வேண்டும்.

5. பிரதிவருஷம் ஜனவரி மாதம் 30உக்குள் தலைச் சங்கத்திற்கு 5 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும்.

6. போலிச் செங்குந்தரின் அக்கிரமச் செயல்களைக் கண்டிக்கும்படி த் தலைச்சங்கத்தை ஊக்கமெடுக்கும்படித் தூண்டுதல் செய்யவேண்டும்.

7. நம்மவரால் ஒரு வித்தியாசாலை ஸ்தாபிக்கப் பெறல்வேண்டும்.

8. நமது வறியமாணவர்களுக்கு மகாஜனசங்கத்தின் உதவி கேட்கவேண்டும்.

9. செங்குந்தமித்திரனைக் கூடிய வரையில் ஆதரிக்கவேண்டும்.

சபைத்தலைவர் முதலியவர்களுக்கு வந்தனோபசாரம் செலுத்திக் கூட்டம் முடிவுபெற்றது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

---

## இராமநாதபுரம் ஜில்லாவில் கிளர்ச்சி.

### மண்டல மாணிக்கம் செங்குந்த மகாஜனக் கூட்டம்.

19-2-28உ மாலை 7-மணிக்கு இவ்வூர் செங்குந்த முதலியார் பாவடிக்கு எதிரேயுள்ள மடத்தில் 2-வது கூட்டம் சமுதி C. S. M. பாடசாலைத் தமிழ் பண்டிதரும் பாகவதருமான ஸ்ரீமான் M. வீராசாமி அவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. கடவுள் வாழ்த்தும் தலைவர் முன்னுரையுமானபின்பு, இவ்வூர் போர்டு பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீமான் இ. முனியப்ப முதலியார் அவர்கள் சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திலிருந்து வரலான லெட்டர்களையும், சட்டதிட்டங்களையும் மனுக்களையும் கிராம நிலையைப்பற்றிய ரிப்போர்டையும், தாலூகாபோர்டு எலக்ஷனுக்கு அனுப்பவேண்டிய ரிப்போர்டையும் தெளிவாக வாசித்துக் காட்டினார். பின்பு இவ்வூர் பொதஜன உபகாரியான ஸ்ரீமான் மு. பாதம்பிரியா முதலியாரவர்கள் இக்கூட்டத்தில் பேசவேண்டிய விஷயங்களையும், சங்கம் ஸ்தாபிக்கவேண்டிய விஷயங்களையும், விரிவாக எடுத்துரைத்தார்கள். கடைசியாக தலைவரவர்கள் எழுந்து தமது முடிவுரையில் சங்கத்தினலாய பயனை செங்குந்தர் மனதில் பசுமரத்தாணிபோல் பதியும்படி சொற்பொழிவு செய்தார்கள். அதன்பின் கீழ்க்கண்ட விஷயங்கள் பேசித் தீர்மானிக்கப்பட்டு இரவு 9-மணிக்குக் கூட்டம் முடிவுபெற்றது.

1. இவ்வூரில் கூடியசீக்கிரம் நாளை வீணுக்காமல் செங்குந்த முதலியார் வாலிபர் அபிவிருத்தி சங்கம் ஒன்று ஸ்தாபித்து, அதைச் சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச்சங்கமாகச் சேர்க்கவேண்டும்.

2. நம் குலமுன்னேற்றமடையும் நம் மரபினர் கல்வியில் அபிவிருத்தி யடையவும் இலவச செங்குந்த இரவு பாடசாலை ஒன்று திறந்து வைக்கவேண்டும்.

3. சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திலிருந்துவரலான மனுவையும் பாரங்களையும் அடுத்த கூட்டத்தில் அவசியம் பூர்த்திசெய்து அனுப்பித் தீரவேண்டும்.

4. கோயம்பத்தூர் போலிச் செங்குந்தர்கள் உண்மைச் செங்குந்தர்களுக்கு அவமானத்தை அனுசாரமான வார்த்தைகளால் உண்டு பண்ணும் விஷயமாய் அடுத்த கூட்டத்தில் கண்டனம் செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

5. அதுவரையில் இக்கூட்டத்தில் நடந்த விஷயங்களை நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துக்குத் தெரிவித்து நமது 'செங்குந்தமித்திரன்' வாயிலாக அவற்றை வெளிபாக்கும்படி கேட்டுக் கொள்ளவேண்டும்.

மேல்கண்ட விஷயங்கள் பேசி முடிந்தவுடன் அன்றைதினம் புண்ணிய காலமான சிவன் ராத்திரியானபடியால் தமிழ்ப் பண்டிதரும் பாகவதருமான ஸ்ரீமான் M. வீராசாமியவர்களைக் கொண்டு இவ்வூர் தர்மசிந்தனையுடையவரும், நற்காரியங்களில் பிரியரும் ஜாதிசகட்சிப் பிரிவினையுடையவர்களைச் சாந்தப்படுத்துபவரும், பிரபல விடாபாரியும், பஞ்சாயத்துக் கோர்ட்டு மெம்பருமான கருணை வள்ளல் மு. ஆ. பாதம்பிரியா முதலியாரவர்கள் ஏராளமான செலவு செய்து பக்திமார்க்கமான நந்தனர் சரித்திர கீர்த்தனம் பாட்டுக்கச்சேரியாக நடத்தினார்கள்.

---

## திருநேல்வேலி ஜில்லாவில் கிளர்ச்சி.

### வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிர்த்தி சங்கம்.

27-2-28 காலை 9-மணிக்கு ஸ்ரீமான் ம. சங்கரலிங்க முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் கூடிய டை சங்கக் கமிடியின் 14-வது கூட்டத்தில் மகமை வசூல் செய்து கணக்குப்பரிசிலனை செய்த பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

1. பகல் பள்ளிக்கூடத்திற்கு இன்னுமொரு ட்ரெயினிங் பாஸ் பண்ணின உபாத்தியாயர் வைக்கவேண்டும்.

2. சங்கக்கூட்டத்தில் ஒரு கெடிகாரமும் சரஸ்வதி படமும் வாங்கி வைக்கவேண்டும்.

3. இச்சங்கத்தைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைசங்கமாகச் சேர்க்கும் விஷயம் வருகிற கூட்டத்தில் யோசிக்கப்படும்.

4. கோவை போலிச் செங்குந்தர் 15-வது மகாநாட்டில் பேசிய சில விஷயங்கள் உண்மைச் செங்குந்தர்களுக்குக் குறைவைத் தரக்கூடியவைகளாகயிருப்பதால் அவற்றை இக்கூட்டம் கண்டிக்கிறது.

11-மணிக்குச் சங்கத்தின் 9-வது பொதுக்கூட்டம் ஸ்ரீமான் ஆவுடைய நாயக முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. கடவுள் வாழ்த்தான பிறகு



திரு. ஆ. மு. ஆறுமுக முதலியார் அவர்களால் "அன்பு" என்னும் விஷயம் வெகு தெளிவாய்ப் பேசப்பெற்றது. பிறகு மாதப்பரீக்ஷையில் தேறிய வெ. தனக்கோடி, சி. சி. பழனிச்சாமி, முத்தையா ஆகிய மூன்றுமாணவர்களும்வழக்கப்படிபரிசளிக்கப் பெற்றனர் என டை சங்க உபதலைவர் திரு. ஆ. மு. ஆறுமுக முதலியார் எழுதுகிறார்.

### வீரவநல்லூர் செங்குந்த வாலிபர் சங்கம்

9-3-28 மாலை 7-மணிக்கு இச்சங்கத்தின் 8-வது கூட்டம் ஸ்ரீமான் ஆ. மு. ஆறுமுகமுதலியாரவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. கடவுள் வாழ்த்துப்பாடிச் சென்ற கூட்டத்தின் ரிப்போர்டு வாசித்துச் சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தில் நமது வாலிபர் சங்கத்தைக் கிளைச்சங்கமாய்ச் சேர்க்கும்படி யெழுதியிருந்த லெட்டரை வாசித்துக்காட்டி அதன் விஷயமாய் இவ்வூர் செங்குந்தர் அபிவிர்த்தி சங்கத்தைக் கேட்டு அதன்படி நடந்து கொள்கிறதென்று தீர்மானிக்கப் பட்டது. பின் திரு. சி. ப. சிவலிங்கமென்பவர் கோவை போலிச்செங்குந்தர் மகாநாட்டில் பேசிய சில விஷயங்கள் நமது உண்மைச் செங்குந்தர்களின் கௌரவத்திற்கும் வழக்கப் பழக்கத்திறகும் மாறுபட்டவையாயும் குறைவுதரக் கூடியவைகளாகவுமிருக்கின்ற வார்த்தைகளை நாம் கண்டிக்க வேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானம் சபையோரால் ஏகமனதுடன் அங்கீகரிக்கப் பெற்றது.

இச்சங்கப் பொக்கிஷதார் வேலையை திரு. பி. மாணிக்க வாசகம் சரியாய் நடத்தவிலையாகையால் அவரை அவ்வுத்தியோகத்திலிருந்து நீக்கிவிட்டு மறு கூட்டத்தில் அந்த ஸ்தானத்தற்கு வேறொருவரை நியமிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப் பெற்றது.

திருவாளர்கள் சி. ப. ஆதிநாராயணபிள்ளையவர்கள், பூ. ஷண்முகம், சி. ப. சிவலிங்கம, T.B. சுப்பிரமணியம், பி. மாணிக்கவாசகம், ஆ. முத்தையா, பி. இராமசாமி, வெ. தனுக்கோடி, க. மாணிக்கவாசகம் ஆகிய 9 பேர் கூடிய நிர்வாகசபை ஏற்படுத்தப்பெற்றது. பிறகு திரு. ஆ. முத்தையா 'ஒற்றுமை'யைப்பற்றியும், T.B. சுப்பிரமணியம் 'உலாவப் போவதின் நன்மை'யைப்பற்றியும் தெளிவுபடப் பேசினார்கள். தலைவர் பின்னுரையில் உபந்யாசகர்கள் பேசிய விஷயங்களை நன்கு விளக்கிக் காட்டினார். அடுத்தபடி கடவுள் வாழ்த்துப்பாடிச் சபை கலையப்பெற்றது எனச் செங்குந்த அபிவிர்த்தி சங்கத்தின் உபதலைவர் திரு. ஆ. மு. ஆறுமுக முதலியார் எழுதுகிறார்.

---

## மதுரைச் ஜில்லாவில் கிளர்ச்சி.

### மதுரைச் செங்குந்த முதலியார் வாலிபர் சங்கம்.

5-3-28 இரவு 7-மணிக்கு மதுரை பாலம்ஸ்டேஷன் ரோட்டு செங்குந்த முதலியார் மடத்தில் திரு. P.V. முத்துக்கறுப்ப முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் கூடிற்று கடவுள் வணக்கமான பிறகு

(1) சென்னை ராஜதானியில் வசித்துவரும் 6 லக்ஷம் செங்குந்தர்களுக்குள் சுமார் 6000 ஜனங்கள் மதுரை ஜில்லாவில் இருக்கிறார்களாயினும் இதுவரையில் தாலூக்கா போர்டுகளில் நம் மரபினர்கள் பிரதிநிதிகளாகச் செல்லவில்லை ஆகையால் டை போர்டிற்குப் புது நியமனம் செய்வதில் நம்மில் ஒருவரும் இராஜ விசுவாசமும் அரசியல் விஷயங்களில் ஊக்கமும் உடையவரும் திரு K. பழனிச்சாமி முதலியார் அவர்களை நம்மரபின் பிரதிநிதியாக நியமிக்கப் பெறல் வேண்டும் என்றும்,

2. சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு இச்சங்கத்தைக் கிளைச்சங்கமாக்கவேண்டுமென்றும்;

3. தலைச்சங்கத்திற்கு நம் சங்கத்திலிருந்து வருஷாவருஷம் ரூ 10 கட்டணமாகக் கொடுக்கவேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

---

## கோவை ஜில்லாவில் கிளர்ச்சி

### சிவகிரி செங்குந்தர் சங்கம்

29-2-28 மாலை 7 மணிக்குச் சிவகிரி காமாக்ஷியம்மன் ஆலயத்தில் உண்மைச் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று பிரபல வியாபாரியும் பெரிய தனக்காரருமான திரு. நா. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிற்று. அச்சமயம் நமது தலைச்சங்க பிரசாரகர் திரு. தி. அ. சண்முக முதலியாருடன் விஜயஞ்செய்திருந்த திரு. நா. குப்புசாமி முதலியார் அவர்கள தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கம் இதுவரையில் செய்துள்ள குலத்தொண்டைப்பற்றி விளக்கிய பின்னர், திரு. தி. அ. சண்முகமுதலியார் அவர்கள் 'சங்கமும் சமூக ஒற்றுமையும்' என்பதைப்பற்றி நீண்டதொரு உபந்யாசஞ் செய்தனர். தலைவரவர்கள் அடுத்த வேனிற்காலத்தில் ஈரோட்டில் கூடும் மகா நாட்டிற்குக் குலாபிமானிகள் அனைவரும் உதவிபுரிந்து அதைச் செவ்வனே நடத்தி வைக்கவேண்டியது அவசியமென்றும் குலமுன்னேற்றத்திற்காகத் தலைச்சங்கத்தோடு சேர்ந்து உழைக்கவேண்டுமென்றும்பேசினார்.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் செய்யப் பெற்றன:—

1. சிவகிரியில் நமது தலைச்சங்கமாகிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு ஒரு கிளைச் சங்கம் ஏற்படுத்தவேண்டும்.

2. ஷை சங்கத்திற்கு இவ்வூரிலுள்ள ஒவ்வொரு உண்மைச் செங்குந்த குடும்பமும் மாதம் ஒன்றுக்கு அணா ஒன்று சந்தாவாகச் செலுத்த வேண்டும்.

3. தலைச்சங்கத்திற்கு வருஷா வருஷம் செலுத்த வேண்டிய கட்டணம் அடுத்த கூட்டத்தில் தீர்மானிக்கப் பெறும்

4, இச்சங்கம் பிரதிமாதம் கடைசி புதன்கிழமை தோறும் கூடவேண்டியது.

5. கோவைச் செங்குந்தர் சங்கமெனப் போலிப் பெயர் கொண்ட ஒரு கூட்டத்தார் உண்மைச் செங்குந்தர்களாகிய நமக்கு இழிவுண்டாகும்படிப் பல விதத்தில் பொது ஜனங்களை மயக்கிச் செய்துவரும் பிரசாரத்தை அடியோடு இக்கூட்டம் கண்டிக்கிறது.

இத்தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறியதன்றிக் கீழ்க்கண்ட கனவான்கள் ஷை சங்கத்தின் உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

தலைவர்

திரு. ஈா. இராமசாமி முதலியார் அவர்கள்
(பெரியதனம்)

உபதலைவர்

திரு. பெ. கு. பொங்கியாணி முதலியார் அவர்கள்

காரியதரிசிகள்.

திரு. அ. தாண்டவராய முதலியார் அவர்கள்,
,, உ. ப. முத்தசாமி ,, ,,

பொக்கிஷதார்.

,, வ. கு. பழனியப்ப ,, ,,

கணக்குப் பரிசோதகர்

,, அ. காச்சிமுத்து முதலியார் ,,

21 நிர்வாக சபை அங்கத்தினர்,

தலைவர் உபந்யாசகர்கள் முதலியோர்க்கு வந்தனோபசாரம் கூறப்பெற்று இரவு 1-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது எனக்காரியதரிசி எழுதுகிறார்.

இச்சங்கத்தின் சார்பில் பிரபவ ௵ பங்குனி௴ திங்கள் 9௳ மாலை 6-30-க்கு திருவாளர் ஈா. இராமசாமி முதலியார் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் கூடியது.

அவ்வமயம் சங்கத்தின் நோக்கமும் நடக்கவேண்டிய ஒழுக்கமும் குலமுன்னேற்றமடைய மார்க்கமும் என்பதைப் பற்றித் திருவாளர் அ. தாண்டவராய முதலியார் சுமார் 2-மணி நேரம் உபந்யசித்தார். 250 ஜனங்களுக்குக் குறையாமல் விஜயம் செய்திருந்தார்கள். 11-மணிக்குச் சபை இனிது முடிவு பெற்றது.

அ. தாண்டவராய முதலியார்,
காரியதரிசி.

கருப்பகவுண்டன் பாளையம் செங்குந்தர் கூட்டம்.

17-2-28 தேதி இரவு 8-மணிக்குக் கருப்பக்கவுண்டன் பாளையத்தில் கூடிய கூட்டத்தில் நமது தலைச் சங்கப் பிரசாரகர் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் 'ஒட்டக்கூத்தரும் செங்குந்த சமூகமும்' என்பதைப்பற்றி வெகு விமரிசையாகப் பேசினார். வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

வாவிப்பாளையம் செங்குந்தர் கூட்டம்.

மறுதினம் ஷை கிராமத்தில் கூடிய ஒரு பெருங் கூட்டத்தில் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் 'மகாநாடும் காஞ்சீபுரமும்,' 'சங்கமும் பத்திரிகையும்' என்னும் விஷயங்களைப்பற்றி யாவருமுணருமாறு விரிவாய்ப் பேசினார். இவ்விரு கிராமங்களிலும் கிளைச்சங்கங்கள் கூடிய சீக்கிரம் நிறுவப்பெறுமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

இடும்பன்பாளையம் செங்குந்தவாலிபர் சங்கம்.

நானது பங்குனி௴ 4௳ இரவு 7-மணிக்கு ஷை சங்கத்தின் பொதுக்கூட்டம் வையாபுரி நாட்டுப் பட்டக்காரரும் சங்கத்தலைவருமாகிய திரு. வை. முருகப்ப முதலியார் அவர்கள் முன்னிலைமையில் திரு. மு. அருணாசல முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்க் கூடிற்று. அப்போது திரு. சி. இராசப்ப முதலியார் 'கல்வி' என்னும் விஷயத்தைப்பற்றி அரிய மேற்கோள்களுடன் 2-மணி நேரம் உபந்யசித்தார். பின், கோவை சங்கக் காரியதரிசி திரு. பழனியப்ப முதலியார், பேரும் புகழும் பெற்ற நமது செங்குந்த குடும்பங்களில் தலைப்பெண்டிரைச் சிவார்ப்பணம் செய்கிற வழக்கம் உண்டென்று அதற்கு ஆதாரமாக தர்ஸ்டன், புக்கானன் முதலிய நுணிப்புல்மேயும் மேல்நாட்டார் கூறியுள்ள சில வாக்கியங்களைக் காட்டுதல், சரியான ஆதாரங்களல்லவென்றும் அவர் கூற்றை இச்சங்கம் கண்டிக்கிறதென்றும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இரவு 11-மணிக்குத் தலைவர் உபந்யாசகர் முதலியவர்களுக்கு வந்தனோபசாரம் கூறப்பெற்றுக் கூட்டம் முடிவுற்றதெனக் காரியதரிசி திரு. கந்தசாமி முதலியார் தெரிவிக்கிறார்.



ஊற்றுக்குழி உண்மைச் செங்குந்தகுல சங்கம்.

இச்சங்கம் இரவு 9-மணிக்குத் திரு. வி. அலகு செட்டியார் மண்டியின் முன் ஹாலில் திரு. மொ. க. குழந்தையப்ப முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்க்கூடியது. அவ்வமயம் எல்லா உண்மைச் செங்குந்தகுல பிரமுகர்களும் வந்திருந்தார்கள். முக்கிய நடவடிக்கைகள்:—1. முன் 10-2-28 தேதிக்கூட்டத்தின் நடவடிக்கைகள் எல்லோருக்கும் காரியதரிசியால் வாசித்துக் காட்டப்பட்டன.

2. முதல் மீட்டிங்கில் தீர்மானித்தபடி சந்தாத் தொகை வசூலிக்கப்பட்டது.

3. பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன :—

1. 8-2-28௳ வெளிவந்த "தமிழ்நாடு" பத்திரிகையில் பிப்ரவரி 1,2 தேதிகளில் கொடுவாயில் 'செங்குந்த மகாஜன மகாநாடு' என்னும் தலைப்பில் 15 வது வருடாந்தரக் கூட்டத்தின் நடவடிக்கைகள் பிரசுரிக்கப்பட்டிருந்ததை நாம் யாவரும் பார்த்தோம். அதில் வரவேற்புத்தலைவர் பேச்சிலும், கூட்டத்தில் நிறைவேறிய ஒரு தீர்மானத்திலும் நமது உண்மைச் செங்குந்தர்களது மரபையும், சங்கத்தையும், பத்திரிகையையும் காலித்தனமாகத் தாக்கியிருப்பதுவுமன்றி, நமது சிரியகுலம் பழமையாகப் பொட்டுக் கட்டிவந்த குலம் என போக்கிரித்தனமாக எழுதியிருப்பதைச் சுவாமியாரையும் குலாபிமானமும் உள்ள உண்மைச் செங்குந்தர்களடங்கிய இச்சங்கம் பலமாகக் கண்டிக்கிறது.

இவ்வூரில் சென்ற 1912-13 வருடங்களில் நம் உண்மைச் செங்குந்தர்களுக்கும் கோவைச் சங்கத்தாரைச் சார்ந்த ஆனந்தவர்களுக்கும் நடந்த வழக்கில், தாங்களும் செங்குந்தர்கள் தானென்று அதை ருசுப்படுத்த விரிஞ்சிபுரம் நாட்டிலிருந்து நாட்டாண்மைப் பட்டம் இழந்த உலகநாத முதலியாரைக் கொண்டுவந்து ஏமாற்றப்பார்த்தனர் எனவும், அது பலியாமையால் பின்னும் தாங்கள் செங்குந்தர்கள் தானென்றும் பொன்னம்பலத்தார்களுக்குக் கொடுத்திருக்கும் செப்பேடு பட்டயம் தங்கள் முன்னோர்களால்தான் கொடுக்கப்பட்டதென்றும், அதைக் காஞ்சிபுரம் மகாநாட்டார், திசைநாட்டார், கிளைநாட்டார் இவர்களைக்கொண்டு ருசுப்படுத்துவதாகவும் 4-11-12 தேதியில் மேற்படி கோவைச் சங்கத்தாரைச் சார்ந்த இவ்வூர் இனத்தார்கள் காடையூர் பட்டக்காரர் திருவாளர் ஆயமுடி குமார காங்கேய மன்றாடியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்க்கூடிய சபையில் எழுதிக் கொடுத்த முச்சலிக்காவிற்குப் பிறகு அவர்கள் எந்த நாட்டாரைக்கொண்டு ஷை பட்டம் தங்கள் முன்னோர்களால்தான் கொடுக்கப்பட்டதென்றும், அதன் மூலம் தாங்கள் செங்குந்தர்கள் தானென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்?' தவிர தங்கள் முன்னோர்கள் என்பவர்களால் ஷை பட்டயம் கொடுக்கப்பட்டதென்கிறார்களே, இவர்கள் முன்னோர்கள் யாவர்? தாசிகளுக்குப் பிறந்தவர்கள் தங்கள் முன்னோர்கள் என்று எவ்வகுப்பாரைச் சுட்டிக்காட்ட முடியும்? இவர்கள் சிலகாலமாய்ச் செங்குந்தர்கள் என்று பட்டம் சூட்டிக்கொண்டதனால்தான் நம்மவர்கள் வகுப்பு வித்தியாசம் காட்டுவதற்காக உண்மைச் செங்குந்தர்கள் என்று சொல்லிக்கொள்ள நேரிட்டதென்பதை பொது ஜனங்கள் அறிவார்கள் என நம்புகிறோம். தவிர கோவைச் சங்கத்தார் பொய்யும் சம்பந்தமுமில்லாதவைகளையும் பத்திரிகையில் பிரசுரித்துப் பொதுஜனங்களை ஏமாற்றப் பார்ப்பதானது இவர்கள் அறியாமையைக் காட்டுகின்றது. அந்தோ! இவர்கள் அறியாமை! "பனங்காட்டு நரி சலசலப்புக் காது" என்னும் பழமொழியை இவர்கள் மறந்தனர் போலும்.

4. இச்சங்கத்தின் 10-2-28 நடவடிக்கைகளைச்சில பத்திரிக்கைகளில் பிரசுரிக்குமாறு அனுப்பியதில், இரண்டொரு பத்திரிகைகளில் பிரசுரமாகாமல் இருப்பதையும், ஒரு பத்திரிகையில் ('தமிழ்நாடு' தினசரியில்) முக்கியமானவற்றை நீக்கிப் பிரசுரித்திருப்பதையும் பார்க்க அப்பத்திரிகையின் பாரபக்ஷத்திற்காக இச்சங்கம் மிகவும் வருந்துகின்றது.

பிறகு 11-30 மணிக்குச் சந்தனம் தாம்பூலம்வழங்கப்பட்டுச் சபை இனிது நிறைவேறியது என்று திரு. ராமசாமி முதலியார், காரியதரிசி, எழுதுகிறார்.

---

தஞ்சை ஜில்லாவில் கிளர்ச்சி.

சிக்கல் பொருள்வைத்தசேரி

செங்குந்த முதலியார் மகாஜன சபை.

1-3-28 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு ஷை சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. சங்கத் தலைவர் திரு. செ. நமசிவாய முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். காரியதரிசி திரு. சொ. ச. கந்தசாமி முதலியார் அவர்கள், இவ்வூருக்குச் சைமன் கமிஷன் வர அவகாசமில்லாமையால் வரவேற்புத் தந்தி கொடுக்கவேண்டுமெனப் பிரேரேபிக்க அது சபையோரால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பெற்றது. நாகை ஜவுளி வியாபாரம் திரு. A. தங்கவேல் முதலியார் அவர்கள் தந்திச் செலவை கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்,

கோவைப் போலிச் செங்குந்தர்கள் உண்மைச் செங்குந்தர்களை இழிவுபடப் பேசியும் எழுதியும் வருகிறபடியால் நமது சீரிய புகழையும் ஒழுக்கத்தையும் சார்ந்தும் பொருட்டு அவர்கள் ஆதாரமற்ற பொய்க் கூற்றை இச்சங்கம் கண்டிப்பதன்றிச் சுற்றுப் பக்கத்துக் கிராமங்களிலும் சங்கங்கள் நிறுவிக் கண்டனங்கள் செய்வது முக்கியமென்றும், 20-3-28க்குள் இவ் வேலையைச் செய்து முடிக்க வேண்டுமென்றும் வாலிபர் சங்க காரியதரிசி திரு. நா. நாகப்ப முதலியார் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறிற்று எனச் சங்கக் காரியதரிசி திரு. சொ.ச. கந்தசாமி முதலியார் எழுதுகிறார்.

1928ஆ மார்ச்சுமீ 6உ மாலை 6-மணிக்கு இச் சங்கத்தின் மற்றொரு பொதுக்கூட்டம் சங்கத்தின் தலைவர் திரு. செ. நமசிவாய முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிற்று. அப்போது திரு. சொ. ச. சந்தசாமி முதலியார் அவர்கள் 'நமது சமூகமும் தற்கால நிலைமையும்' என்பதைப்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின் தலைவர் அவர்களால் காஞ்சிபுரம் கிராம முனிசீப்பு திரு. நாராயணசாமி முதலியார் அவர்கள் குமாரர் நாகப்ப முதலியார் அவர்களைச் சிக்கல் கோவில் டிரஸ்டியாக நியமிக்கும்படி நாகப்பட்டணம் தேவஸ்தானம் போர்டு பிரசிடெண்டவர்களுக்கு மனு செய்து கொள்ள வேண்டுமெனத் தீர்மானம் கொண்டு வரப்பெற்றுச் சபையோரால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பெற்றது. இரவு 8½-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறிற்று எனக் காரியதரிசி திரு. சொ. ச. கந்தசாமி முதலியார் அவர்கள் எழுதுகிறார்.

---

## வடஆற்காடு ஜில்லாவில் கிளர்ச்சி

### பெருமட்டூர் எனவழங்கும் அசனம்மாள்பேட்டைச் செங்குந்தர் சங்கம்.

4-3-28-ல் பெருமட்டூரில் திரு. செங்கல்வராய முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். அப்போது திரு. மாணூர்பதி க. ஆறுமுக முதலியார் அவர்கள் 'நமது தற்கால நிலைமையும் முன்னேறும் வழியும்' என்பதைப்பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள். மித்திரனுக்கு அநேக சந்தாதாரர்கள் சேர்ந்தார்கள். அப்போதே ஒரு கிளைச்சங்கம் நிறுவப்பெற்றுத் திரு. செங்கல்வராய முதலியார் தலைவராகவும், திரு. K. S. குப்புசாமி முதலியார் உபதலைவராகவும், திரு. மெ. தி. பொற்பாத முதலியார் காரியதரிசியாகவும் நியமிக்கப் பெற்றனர். வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## சென்னையில் கிளர்ச்சி.

### சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கம்.

சென்ற 14-3-28-ல் சங்கத் தலைவர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி. அவர்களின் தலைமையின் கீழ்க் கூடிய மேற்படி சங்கத்தின் நிர்வாக சபையில் நிறைவேறிய தீர்மானங்களுள் கீழ்க்கண்ட சில முக்கியமானவையாகும்.

1. இவ்வாலிபர் சங்கத்தைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு அங்கமாகச் சேர்ப்பித்தல் வேண்டும்.

2. முனிசிபல் கவுன்சிலர் ஸ்ரீமான்கள் சைதாப்பேட்டை T. துரைசாமி முதலியார், ஈரோடு V. M. பொட்டையப்ப முதலியார், யூனியன் போர்டு மெம்பர் ஸ்ரீமான் பவானி வீராசாமி முதலியார் இவர்கள் அணிமைக்கண் நிகழ்ந்த தேர்தல்களில் வெற்றியெய்தினமையைக் குறித்துக் காரியதரிசிகள் சந்தோஷ அறிக்கை நிருபங்கள் எழுதியனுப்புதல் வேண்டும்.

3. இவ்வாலிபர் சங்கம், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை அது கூட்ட யோசித்து வருகிற உண்மைச் செங்குந்த மகாஜன மகாநாட்டுடன் உண்மைச் செங்குந்த வாலிபர் மகாநாட்டையும் கூட்டும்படி வேண்டிக்கொள்ளுகிறது.

4. இவ்வாலிபர் சங்கம், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை கிராமாந்தரங்களிலிருந்து உயர்தரக் கல்வியை விரும்பிச் சென்னையிலுள்ள கல்லூரிகளுக்கும் உயர்தர பாடசாலைகளுக்கும் வரும் செங்குந்த மாணவர்களின் நன்மைக்காகச் செங்குந்த மாணவர் ஹாஸ்டல் ஒன்றை அடுத்த வருஷத்திலிருந்தே திறப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

க. வர்சிரவேலு முதலியார்,
காரியதரிசி.

### திருவல்லிக்கேணி செங்குந்தர் சங்கம்.

சென்னை திருவல்லிக்கேணி செங்குந்தர் கோட்டத்தில் 8-3-28-ந் தேதி மாலை 8-மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அவ்வமயம் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரகர் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களும், திரு. மா. பா. கந்தசாமி முதலியார் B.A., B.E., அவர்களும் விஜயம் செய்தனர். சுமார் 50 பேர் கூடியிருந்தார்கள். திரு. மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்த் திரு. கனகசபை முதலியார் அவர்கள் 'சங் மும் பத்திரிகையும்' என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதன் பயனாகக் கிளைச்சங்கம் ஒன்று ஏற்படுத்தினார்கள். அதில் தமிழ்ப் புலவர் திரு. தெய்வநாயக அண்ணுசாமி முதலியார் அவர்கள் தலைவராகவும், திரு. அ. குப்புசாமி முதலியார் அவர்களும், திரு. சோ திருநாவுக்கரசு முதலியார் அவர்களும், மா. பா. கந்தசாமி முதலியார் அவர்களும் உப தலைவர்களாகவும் நியமிக்கப்பட்டனர். திரு. தெய்வநாயக சம்பந்த முதலியார் அவர்களும், திரு. க. பா. பசுபதி முதலியார் அவர்களும் காரியதரிசிகளாக நியமிக்கப் பெற்றனர். திரு. அ. மு. இராமலிங்க முதலியாரைப் பொக்கிஷதாரராகவும் மற்றும் 16 அங்கத்தினரையும் நியமித்தனர். அதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.



1. இச் சங்கத்தைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச்சங்கமாக்க வேண்டும்.

2. நிருவாக சபை பிரதி ஆங்கில மாதம் முதல் தேதியில் கூடவேண்டும்.

3 தலைச்சங்கத்தார் அனுப்பிய பாரங்களைக் காரியதரிசியே நிரப்பி அனுப்ப அனுமதி.

(4) 1, 2-2-1928-ல் கொடுவாயில் கூடிய போலிகள் கூட்டத்தின் வரவேற்புத் தலைவர் நமது தலைச் சங்கத்தையும் அதன் பிரசாரகர்களையும் மற்றும் கிளைச் சங்கங்களையும் பெருவாரியாக உண்மைக்கு மாறுபாடாக வாயில் வந்தபடி தாலிக்கொன்று கூறியிருப்பதை இக்கூட்டம் கண்டிக்கிறது.

5 தமிழ்நாடு முன்னேற்றமடைய வந்துலவும் 'தமிழ்நாடு' என்னும் பத்திரிகைக்கு நமது உண்மைச் செங்குந்தர் அனுப்பும் விஷயங்களை அடியோடே விடுத்தும், சில முக்கியமானவற்றைக் குறைத்தும் கோவைச் சங்கத்தார் நம் உண்மைச் செங்குந்தரைத் தாக்கி எழுதிய கண்டனங்களை முற்றும் வெளியிட்டும் வரும் அப் பத்திரிகையின் ஆசிரியன் செய்கையை நம் சங்கம் பலமாகக் கண்டிப்பதோடு, இவ்விதம் உண்மைச் செங்குந்தர் விஷயங்களில் பாரபக்ஷமாக நடந்து கொள்ளும் நடுநிலைமையற்ற பத்திரிகைகளைச் சுயமரியாதையுள்ள உண்மைச் செங்குந்தர்கள் இனி ஆதரிப்பது தாழ்வமாகுமென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

இரவு 11-மணிக்குத் திரு. க. பா. பசுபதி முதலியார் தலைமை வகித்த திரு. மா பா. கந்தசாமி முதலியாருக்கும் உபந்நியாசகர்களுக்கும் வந்தனோபசாரங்கூறக் கூட்டம் கலைந்தது.

க. ப. பசுபதி முதலியார், காரியதரிசி.

### கோடம்பாக்கம் செங்குந்தர் சங்கம்.

15-3-1928 தேதியில் சென்னைக் கடுத்த கோடம்பாக்கம் விசாலாக்ஷிவிலாசத்தில் மாலை 6 மணிக்குக் காஞ்சிபுரம் கற்பக வள்ளலார் ஆதீனம் ஞானநாட்டுக் குருசுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ கா. ச. ஸ்வாமிநாத தேசிகர் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய கூட்டத்தில் கோடம்பாக்கம் செங்குந்தர் சங்கம் என ஒரு சங்கம் நிறுவப்பெற்று அதற்கு மேற்படி ஸ்ரீ ஸ்வாமிநாத தேசிகர் அவர்கள் தலைவராகவும், திரு தி. தெய்வசிகாமணி முதலியார் உபதலைவராகவும், திரு. மா. அ. கனகசபை முதலியார் காரியதரிசியாகவும், திரு. ப. ச. தீர்த்தகிரி முதலியார் பொருட் காப்பாளராகவும், திருவாளர்கள் மா. அ. முருகேச முதலியார், ப. ச. பாலசுந்தர முதலியார், தெ. மாணிக்க முதலியார் ஆகிய மூவரும் நிர்வாகசபை அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அக்கூட்டத்தில் நிறைவேறிய இதர தீர்மானங்களாவன:—

கோவை ஜில்லாவில் பொட்டுக்கட்டும் வழக்க முள்ளவர்களில் ஒரு சிலர், ஏதோ சுயநலங்கருதி, நவ வீரர்கள் வழித்தோன்றிய (உண்மைச்) செங்குந்தர்கள் முற்காலத்தில் பல துறைகளிலும் உன்னத பதவியடைந்திருந்தும், தற்காலத்தில் காலகெதியால் கல்வி முதலிய துறைகளில் பின்னடைந்து வெளியுலகம் இன்னதென அறியாது, தங்களை யார் எவ்வித மிகழ்ந்துபேசினும் போதிய தைரியத்தோடு முன்வந்து அவற்றை மறுத்துத் தங்களுக்குள்ள ஆதாரங்களைக் காட்டிப் பழைய புகழை நிலைநாட்டச் சக்தியற்றவர்களாயிருப்பதைக் கண்டு, இவர்கள் எக்காலத்தும் இந்நிலையிலேயே இருந்து விடுவார்கள் எனக் கனவு கண்டு, (மேற்கூறிய போலியர்) தங்களையும் செங்குந்தர்களெனச் சொல்லிக் கொண்டதோடு நில்லாது, தங்களுக்குரிய இழி தொழில், இதுவரையில் நன்னெறி தவறாதவர்களாயினும் ஊமைகளாயிருந்த செங்குந்தர்களுக்குப் பொதுவாய் எப்போதும் உண்டென்று பத்திரிகைகளில் எழுதியும், ஒரு சிலரைக் கூட்டி அதற்குச் "செங்குந்த மகாநாடு" எனக் காம்பீரமான பெயருஞ் சூட்டி அரசாங்கத்தாரும் பொதுஜனங்களும் உண்மையை உணராது மயங்கும்படி வாய்ப்பறை யடித்தும் வருகிறார்கள்.

உண்மையறியாத பொதுமக்கள் இதனாற் கொள்ளும் தப்பு அபிப்பிராயத்தை ஒழிக்க முயலுவது உண்மைச் செங்குந்தர்களின் கடமையாயினும், கோவைச் சங்கத்தாரது மகாநாடாகிய வருஷக் கூட்டத்திற்கு நேரே சென்று, அம் மகாநாட்டிற்கு வந்திருந்த டெலிகேட்டுகளின் தொகையையும், சங்

கத்தின் அங்கத்தினர் தொகையையும் பார்த்து, அவர்கள் சங்கத்தின் வருஷாந்திர ரிபோர்ட்டையும் நன்றாய்ப் படித்துணருவோமாயின், நமது தலைச் சங்கமும் கிளைச் சங்கங்களும் அச்சிறு கூட்டத்தார் மேல் இவ்வளவு ஆத்திரம் கொள்வது அவசிய மில்லையென்றே தோன்றும். ஆயினும், இது நமக்கு அருமையான பாடங்களைக் கற்பிக்கிறது. கோலிக் கோலிப் பார்த்தாலும் கோவை ஜில்லாவுக்குள்ளே யே சில ஊர்களில் பொட்டுக்கட்டும் வழக்கமுள்ள கூட்டத்தாருள் சில குடும்பங்களைச் சார்ந்த சிலரே சில வருஷங்களுக்குள் தாங்கள் கொண்ட கருத்துக்குப் பிற்காலத்தில் ஆதாரமாயிருக்கும்படி, உண்மைச் செங்குந்தர்கள் தூங்கிக்கொண்டிருக்கும் காலத்திலேயே, பத்திரிகைகளுக்கு எழுதிவிடுத்து எழுத்து மூலமான சாசனங்களை உண்டாக்கிக் கொள்ளுவதன்றி, பொதுமக்களுக்கு உண்மைக்கு மாறான அபிப்பிராயத்தை உண்டுபண்ணிப் பல்லாயிர வருஷங்கள் தூங்கிப் பத்துநாட்களுக்குமுன் விழித்துக்கொண்டு சிறுது காலம் "திராவிடன்" பத்திராதிபராயிருந்த திரு. ஈ வி. இராமசாமி நாயகரும் தம்மை மறந்து பத்து பதினைந்து வருஷங்களாக அஜாக்கிரதையாயிருந்த நம்மை இப்போது ஆயிர வருஷம் தூங்கிய அரசர் போன்றவர்கள் என்று சொல்லும்படியும் செய்துவிட்டார்கள் என்றால், பாரம்பரியங்களை யுடைய பெருங்கூட்டத்தாராகிய நாம், இனியாவது உறக்கத்தினின்று விழித்தெழுந்து காலப்போக்கை யுணர்ந்து முன்னேற்ற மடைய முயல்வோமாயின், நாம் எதை சாதிக்க முடியாது?

கோவைச் சங்கக் காரியதரிசி நம்மைத் தாக்கி எழுதும் வியாசங்களைக் கவனித்துப் பார்க்கும் பொதுஜனங்களே அவர்கள் வேறு நாம்வேறு என்பதை நன்றாயுணர்வார்கள். கோவைச் சங்கத்தார் தாங்கள் கூறுவது இன்னதென்று அறியாமலும் பலதடவைகளில் உண்மையை வெளியாக்கி இருக்கின்றார்கள். உதாரணமாக ஒரிடத்து அச் சங்கக் காரியதரிசி நமக்குப் "பத்திரிகை செல்வாக்கும் ஒற்றுமையும்" உண்டென்கிறார். இதனால் உண்மைச் செங்குந்தர்கள் ஒற்றுமையுள்ளவர்களென்றும் போலிகள் ஒற்றுமை இல்லாதவர்களென்றும், உண்மைகளும் போலிகளும் வெவ்வேறினத்தவரென்றும் விளங்குகிறது.

ஆகையால், தென்னிந்தியா முழுதும் நூறு (100) கிளைச் சங்கங்களை யுடையதாய் லக்ஷக்கணக்கான செங்குந்தர்களின் நன்மைக்காக உழைத்துவரும் பொறுப்புள்ள நமது தலைச்சங்கம், கோவைச் சங்கத்தாரைச் சமமாக வைத்துக் கண்டிப்பது அதன் கௌரவத்திற்குக் குறைவான தென்றும், அவர்களுக்குத் தக்க பதில், உறங்கிக்கொண்டிருக்கும் நம்மவர்களைத் தட்டி எழுப்பிக் கூடிய சீக்கிரம் மகாநாட்டைக் கூட்டி நம்மவர்கள் முன்னேற்ற மடையும் முறைகளைத் தீர்மானித்து நடவடிக்கைக்குக் கொண்டு வருவதேயாகும் எனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

பொதுஜன நன்மையைக் கருதிவரும் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு நிருபர்கள் எழுதும் விஷயங்களைப் பிரசுரிக்காதிருக்க உரிமை உண்டெனினும், விவாதமான விஷயங்களைக் குறித்து ஒருதிறத்தார் எழுதுவனவற்றைப் பிரசுரிக்கும்போது பொதுநோக்கமுள்ள பத்திராதிபர்கள் மற்றையோர் அவற்றிற்கெழுதும் பதிலையும் கட்டாயம் பிரசுரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். விவாத விஷயங்களுக்கிடந்தரச் சம்மதமில்லாவிட்டால் இருதிறத்தாரது வியாசங்களையும் பிரசுரிக்காதொழிய வேண்டும். அவ்வாறின்றி, பொது நோக்கத்தோடு ஜன ஊழியஞ் செய்வோரென்றும், பாரபக்ஷமற்றவரென்றும் கருதப்படும் டாக்டர் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடவர்களால் நடத்தப்பெறும் "தமிழ்நாடு" பத்திரிகை, கோவை சங்கத்தார் நமது தலைச் சங்கத்தையும் அதன் பிரசாரங்களையும் தாக்கி எழுதியவற்றை மாத்திரம் பிரசுரிக்க, அவற்றிற்கு நம்மவர்கள் எழுதும் விடைகளைப் பெரும்பாலும் பிரசுரியாது விடுத்தும், பிரசுரிக்கும் இரண்டொன்றில் முக்கிய பாகங்களை நீக்கி உண்மையை மறைத்தும் பாரபக்ஷம் காட்டுவதைக் குறித்து இக்கூட்டம் மிகவும் வருந்துகிறது*. இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

---

*குறிப்பு.—இத்தகைய முறையீடுகள் எமக்குப் பல வந்திருக்கின்றன. 'செங்குந்த மித்திர'னுக்கு அனுப்பப்படும் பல சங்கக்கூட்டங்களின் அறிக்கைக்கடி தங்களின் பிரதிகளே 'தமிழ்நாடு,' 'திராவிடன்,' 'சுதேசமித்திரன்' முதலிய தினசரிகளுக்கும் அனுப்பப்பட்டிருந்தும், அவற்றன் 'தமிழ்நாட்டி'ல் வரும் அறிக்கைகள் முக்கியமான அங்கங்கள் சேதிக்கப்பட்டு மொண்டிமுண்டமாக வருவதைக் கவனிக்க, அப்பத்திரிகை மட்டும் உண்மைச் செங்குந்தர் விஷயத்தில் நடுநிலைமையற்றுப் பாரபக்ஷமாக இருப்பதாகத் தோன்றுகிறது. இதற்கு நாம் வருந்துவதோடு, உண்மைச் செங்குந்தர் மனத்தைப் புண்படுத்தும் இவ்வித பாரபக்ஷமான நடத்தை அப்பத்திரிகையின்பால் இனியும் தோன்றுமாயின், அது சுயமரியாதை யுணர்ச்சியுள்ள உண்மைச் செங்குந்தர்களது ஆதரவைப் பெறுவது அரிதாகுமென்பதையும் அப்பத்திரிகையின் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

ப-ர்.



## செங்கற்பட்டு ஜில்லாவில் கிளர்ச்சி.

### காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்கம்.

#### நிர்வாக சபைக்கூட்டம்.

காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் ஒன்று 19-2-28ந்தேதி காலை 8-மணிக்கு ஸ்ரீ திருநாவுக்கரசுசுவாமிகள் மடத்தில் கூடிற்று. 21 அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தனர். பச்சையப்பன் ஹைஸ்கூல் தமிழாசிரியர் திரு. வீ திருஞானசம்பந்த முதலியார் தலைமை வகித்தனர். கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செங்குந்தர் இரவு பாடசாலையின் காஸ்பாண்டென்டாக (நிருபராக) திரு. வீ. திருஞான சம்பந்த முதலியாரவர்கள் நியமிக்கப்பட்டனர்.

கீழ்க்கண்ட 5 தீர்மானங்களும் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரால் கொண்டுவரப்பட்டு நிறைவேறின :—

1. செங்கற்பட்டு தாலூகா போர்டு காஞ்சிபுரம் பிர்காவிற்கு 14-3-28 நடக்கப்போகும் எலக்ஷனில் திரு. டி. பரமசிவ முதலியாரவர்களையே ஆதரித்து வெற்றி பெறும்படிச் செய்யவேண்டுமென அந்த பிர்க்காவில் வசிக்கும் செங்குந்தர்களை இக்கூட்டம் மிகவும் வேண்டிக்கொள்கிறது.

2 சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச்சங்கமாக இவ்வாலிபர் சங்கத்தைச் சேர்க்க வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

3. தலைச் சங்கத்திற்கு இச்சங்கம் வருடாந்தர கட்டண ரூபா 10 செலுத்தவேண்டுமென்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

4. இச்சங்கத்தைத் தனது கிளைச்சங்கமாகச்சேர்த்துக் கொண்டு இதன் கட்டணத்தை அங்கீகாரம் செய்யும்படி தலைச்சங்க நிர்வாகிகளை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

5. தாலூக்கா போர்டு எலக்ஷனுக்கு ஒரு மாதத்திற்கு முன்னால் தலைச் சங்கத்திற்கு இச்சங்கம் அனுப்பவேண்டிய ரிபோர்ட்டையும், 3 மாதத்திற்கொருமுறை இக்காரத்தைப்பற்றித் தலைச் சங்கத்திற்கு அனுப்பவேண்டிய ரிபோர்டையும் காரியதரிசியே அனுப்பவேண்டுமென இக்கூட்டம் அனுமதி தருகிறது.

கீழ்க்கண்ட தீர்மானம் திரு. அ. செ. கந்தசாமி முதலியாரால் பிரேரேபிக்கப்பட்டு நிறைவேறியது :

ஒவ்வொரு மாதத்தின் வரவு செலவு கணக்கையும் அந்தந்த மாதத்திய சாதாரண நிருவாக சபைக் கூட்டத்தில் காரியதரிசி ஆஜர்ப்படுத்த வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

மூன்று மீட்டிங்கிற்குச் சேர்ந்து வராததால் ஏற்பட்ட காலி நிருவாக ஸ்தானங்களுக்கு, திருவாளர்கள் எ. ஆர். வரதராஜ முதலியார், ம. பா. கோபால் முதலியார், மா. சு முருகேச முதலியார், குமாரசாமி முதலியார், சரவண முதலியார், அருணாசல முதலியார் ஆகிய அறுவரும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு, சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திலிருந்து வந்த கடிதங்கள் ரெகார்டு செய்யப்பட்டுக் கூட்டம் 11-மணிக்குக் கலைந்தது.

#### பொதுக்கூட்டம்.

ஷை செங்குந்தர் வாலிபர் சங்க ஆதரவில் 21-2-28 தேதி மாலை 6-மணிக்குப் பிள்ளையார்பாளையம் வெள்ளாளத் தெருவில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. ஏராளமான செங்குந்தர்கள் விஜயம் செய்திருந்தனர். கூட்டத்திற்குத் திருமிகு கணேச முதலியார் தலைமை வகித்தனர். பிறகு கடவுள் வணக்கம் பாடப்பட்டதும், திருவாளர்கள் சி. சிதம்பர முதலியார், இராஜகோபால் முதலியார், முருகேச முதலியார், அ. செ. கந்தசாமி முதலியார், திரு வீ. திருஞான சம்பந்த முதலியார், பி. செ மாணிக்கவாசக முதலியார் முதலியோர் முறையே ஒழுக்கம், சுகாதாரம், பெற்றோர்களும் சிறுவர்களும், செங்குந்தர் கடமை, ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு, சமூக சேவை என்ற விஷயங்களைக் குறித்து நீண்ட சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பின்பு பி. செ. மாணிக்கவாசக முதலியார் கீழ்க்கண்ட தீர்மானங்களைப் பிரேரேபித்து நீண்ட நேரம் பேசினர்.

1. கோயமுத்தூரிலுள்ள தேவதாசி வகுப்பைச் சார்ந்த சிலர், சமூகசீர்திருத்தம் காணப்புகுந்து, தாங்களும் செங்குந்தர்களெனப் போலிப்பெயர் புனைந்து கொண்டு, சில ஆண்டுகளாக இரண்டு சமூகமும் ஒன்றென்று பொது ஜனங்கள் மயங்கும்படிச் செய்து வருவதோடு நிற்காமல், சமீபத்தில் கொடுவாயில்கூடிய பெற்ற தங்களது 15-வது மகாநாட்டில் தென்னிந்திய மகாஜன சங்கத்தைத் தாக்கியும், உண்மைச் செங்குந்தர்களுக்குள் என்றும் இல்லாத பொட்டுக் கட்டும் வழக்கம் சில செங்குந்த குடும்பத்திலேனும் இருக்கிறது என்று அறியாமையினாலோ அல்லது ஜனங்களை மயங்க வைக்கும் பொருட்டோ செய்த தீர்மானங்களை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கின்றது.

2. கோயமுத்தூரிலுள்ள சில போலிச் செங்குந்தர்கட்கு மட்டும் பிரதிநிதியாக இருக்கும் கோவைச்

கேட்டுக் கொள்ளுகிறது என்பனவாம். திரு. சி. சாம்பசிவ முதலியார் அவர்கள் நமது சங்க பிரசாரகருடன் பல பல கிராமங்களுக்குச் சென்று மித்திரனுக்கு அநேக சந்தா தெயர்களைச் சேர்த்துக்கொடுத்து உதவி புரிந்தனர்.

## உத்திரமேரூர்.

26—2—28 மாலை 6 மணிக்கு உத்திரமேரூர் போர்டு ஹைஸ்கூல் தமிழாசிரியர் திருவாளர் கா. உ. பொன்னுசாமி முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் இவ்வூர் செங்குந்த மாணவர் கூட்டம் என ஒரு கழகம் கூட்டப்பட்டு அக்கூட்டத்திற்கு திரு. ப. க. தங்கவேலு முதலியார் தலைவராகவும், திரு. மா. சண்முக முதலியார் உபதலைவராகவும், திரு. வாணக்கை கா. த. முனியப்ப முதலியார், வ. க. மாணிக்க முதலியார், மு. இரத்தின முதலியார், பெ. அண்ணாமலை முதலியார் ஆகிய நால்வரும் கூட்டு அமைச்சர்களாகவும், திரு. ஷ. எல்லப்ப முதலியார் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இக்கூட்டத்திற்கு ஏற்ற திட்டங்களைத் தயாரித்து அந்தக் கூட்டத்தில் கொணர வேணுமாய்த் தலைவர்களுக்கும் அமைச்சர்களுக்கும் அனுமதி கொடுக்கப்பட்டது.

நம்மரபினரின் முன்னேற்றத்தை உத்தேசித்து வாரந்தோறும் கூட்டம் கூடி அவசியமான முறைகளை யனுசரிக்க வேணுமென்கிற நோக்கத்துடன் இச்சங்கம் உழைக்கும்.

இச்சங்கத்தின் நிருவாக அங்கத்தினர்கள்

திரு. கோ. சுந்தர முதலியார்.
„ வீ. வீராகுட்டி முதலியார்.
„ ம. மு. தணிகாசல முதலியார்.
„ க. எ. முனுசாமி முதலியார்.
„ வ. அ. இரத்தினவேலு முதலியார்
„ து. திருவேங்கட முதலியார்.
„ வ. லோ. இராஜு முதலியார்.
„ ல. குருபாத முதலியார்.
„ மு. சுப்பிரமணிய முதலியார்.
„ பொன்னுசாமி முதலியார்.
„ வ. தி. முத்துகுமாரசுவாமி முதலியார்.
„ சி. அண்ணாமலை முதலியார்.
„ தி. இலட்சுமண முதலியார்.
„ கா. எ. மாணிக்க முதலியார்.

என திரு. ப. க. தங்கவேலு முதலியார் எழுதுகிறார்.

---

## சேலம் ஜில்லாவில் கிளர்ச்சி.

### திருச்செங்கோடு செங்குந்தர் மஹாஜனசங்கம் போலியர்க்கு மறுப்பும் பஹிரங்க கடிதமும்.

21-3-28 மாலை 8-மணிக்கு ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமி பக்தஜன பஜனை மடத்தில் ஷை சங்கத்தலைவர் ஸ்ரீமான் T. K. கந்தப்ப முதலியார் தலைமையின்கீழ்க் கூட்டப்பெற்ற கூட்டத்திற்குச் சுமார் 200 பேர் வரை செங்குந்தகுலப் பிரமுகர்கள் வந்திருந்தார்கள். பஜனை கோஷ்டியாரால் தேவாரம் பாடப்பட்டபின் ஷை சங்கக் காரியதரிசியால் கோவை என். பழனியப்ப முதலியாரால் பிப்ரவரி௴ 16௳ 'தமிழ்நாடு' தினசரிப் பத்திரிகையில் 'செங்குந்தர் சங்கம்; திருச்செங்கோடு கூட்டம்' என்னும் தலையங்கமிட்டு வந்த வியாசமும், 'அருணகிரி' மாசி௴ 4௳ பத்திரிகை தலையங்கத்தில் 'செங்குந்தர் மஹாநாடு' என்று வந்த வியாசமும் படிக்கப்பட்டன. பிறகு அடியிற்கண்ட தீர்மானங்களையும் கேள்விகளையும் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளுக்கு அனுப்பும்படி சபையோரால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது :—

### தீர்மானம்.

1. கோவை என். பழனியப்ப முதலியாரென்பார் 'தமிழ்நாடு' தினசரிப் பத்திரிகையில் பிப்ரவரி௴ 16௳ கண்ட வியாசமும், 'அருணகிரி' பத்திரிகை மாசி௴ 4௳ தலையங்கத்தில் கண்ட வியாசமும் பேராசையாலும் ஆழ்ந்த ஆராய்ச்சியில்லாமலும் பொருத்தமில்லாமல் உண்மைக்கு மாறாக எழுதியிருப்பதால், ஷை வியாசங்களையும் அவற்றின் கருத்து வியாக்யானம் முதலியவைகளையும் இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது.

2. 'செங்குந்தர்க'ளென்பது சிவந்த ஈட்டியினையுடைய வீரர்களென்னும் பொருளையுடையது. ஆதியில் வீரவாகுதேவர் முதலியவர்கள் பராசக்தியாரால் ஈட்டியென்னும் படையை ஆசீர்வதித்துக் கொடுக்கப்பெற்று ஸ்ரீஷண்முகக் கடவுள் துணை கொண்டு பகைவரை வென்ற காலத்தில் பகைவரின் உதிரந்தோய்ந்து சிவந்திருந்ததால் அதற்குச் 'செங்குந்தம்' எனப் பெயராகியது. மேலும் அது முசுகுந்த மன்னனுக்கு வீரவாகுதேவர் முதலியவர்களைப் படைத்துணைவராகவும் அமைச்சராகவும் இருக்க முருகபிரான் கட்டளையிட்ட காலையில், 'செங்குந்தர்களென்னும் சிறப்புப் பெயர்களுடன் வாழ்ந்து சந்ததிவிர்த்தி செய்து வரக்கடவீர்க'ளென்று ஆசீர்வதித்துக் கொடுக்கப்பட்ட பெய



ராகும். ஷை பட்டப்பெயரானது ஷையார்களின் வீரத்தைக் குறிகொண்டுளது. ஆனபடியால் ஷை பட்டப்பெயர் ஷை வீரர்களுக்கும், அவ்வீரர்களின் புத்திர பௌத்திராக முறை கொண்டு அவ்வழிவந்த மக்களுக்குப் பிறந்தவர்களுக்குமட்டும் பொருந்துமே யல்லாமல், அதற்கு மாறுபட்ட தாசிமக்களுக்குப் பொருந்தாதென்பதை இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

3. கோவைப் போலிச்செங்குந்தர்கள் முன்னேற்ற மடைவதிலோ அவர்களின் தீய ஒழுக்கங்களை நீக்கிக் கொள்வதிலோ எங்களுக்கு ஆக்ஷேபமில்லை. அதற்காக எங்களை வீண்வம்பு சண்டைக்கு இழுக்குமாதிரி எங்களிடமில்லாத துர்ப்பழக்கம் இருந்ததாகவும் இருப்பதாகவும் பொருள்படும்படிச் சொல்லியும் எழுதியும் வருவதை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது.

கோவை ஸ்ரீமான் என். பழனியப்ப முதலியாரவர்கட்கு :—

ஐயா, தாங்கள் எழுதிய வியாசங்களில் தாங்களும் தங்கள் சங்கத்தவரும் உண்மைத் தத்துவத்தை உணர்ந்தவர்களென்றும், உண்மையை ஒளியாமல் வெளியிடுகிறவர்களென்றும், எழுதியிருக்கிறீர். அதன்படி உண்மையை ஒளியாமல் வெளியிடுவது உண்மையானால், தங்களுக்கும் தங்கள் சங்கத்துக்கும் நன்றாய்த் தெரிந்ததும் தெரியக்கூடியதுமான அடியிற் கண்ட கேள்விகளுக்குத் தக்க முறையில் தமிழ்த் தினசரி பத்திரிகைகளின் வாயிலாகப் பதிலனுப்புமாறு கோரப்படுகிறது.

### கேள்விகளாவன :—

1. தங்கள் சங்கத்தின் தலைவர், காரியதரிசி இவர்களின் ஊரும் பெயரும், தகப்பன் பாட்டன் முதலியவர்களின் பெயர்களும் என்ன?

2. ஊத்துக்குழி யென்னும் கிராமத்தில் 1912-ஷுத்தில் தங்கள் வகையராவுக்கும் எங்கள் வகையராவுக்கும், பொன்னம்பலத்தார் விஷயமாகத் தகரார் ஏற்பட்டதுண்டா? அதற்காக மகா-ள-ள-ஸ்ரீ காடையூர் பட்டக்காரரைத் தலைமையாகக் கொண்ட நியாயசபை ஏற்பட்டதுண்டா?

3. ஷை சபையின் 2-வது 3-வது கூட்டத்தில் தங்களினத்தைச் சேர்ந்தவர்கள் விரிஞ்சிபுரத்திலிருந்து நாட்டாண்மைப் பட்டத்திலிருந்து நீக்கப்பட்ட உலிகநாத முதலியார் என்பவரை ராண்மைப் பட்டம் பெற்றவரென்று ஆசர்ப்படுத்தி அதற்காக ஐகோர்ட்டுத் தீர்ப்பென்று பொய் ரிக்கார்டும் ஒப்புவித்ததுண்டா!

4. பொய் ரிக்கார்டு என்று தெரிந்து கிரிமினல் நடவடிக்கை நடத்தியதில் ஷை உலிகநாத முதலியாருக்கு இரண்டு வருஷம் தண்டனை ஏற்பட்டதுண்டா!

5. ஷையாரைத் தண்டித்த ஜட்ஜுமெண்டில் 'ஊத்துக்குழியில் செங்குந்த முதலிமாருக்கும், மேளக்கார முதலிமாருக்கும் ஏற்பட்ட தகராரில்' என்னும் வாசகம் இருக்கிறதா இல்லையா?

6. ஷை நியாயசபையின் 4-வது கூட்டத்தில் உங்களைச் சேர்ந்தவர்கள் பொன்னம்பலத்தார்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டயம் தங்கள் முன்னோர்களால் கொடுக்கப்பட்டதெனவும், பொன்னம்பலத்து முதலியார்கள் தங்களிடமும் வர்த்தனை வாங்கக்கூடிய வழக்கமுண்டெனவும் காஞ்சிபுரம் மகாநாடு, திசைநாடு, கிளைநாடு முதலியவைகளைக் கொண்டு அடுத்த கூட்டத்தில் ருசுப்படுத்துவதாக முச்சலிக்கா எழுதிக்கொடுத்ததுண்டா இல்லையா? அதன்படி குறிப்பிட்ட மறுகூட்டத்தில் முச்சிலிக்காபடி ருசுபடுத்த முடியாத நிலைமையால் கூட்டத்திற்கே வாராமல் நின்றுவிட்டார்களா இல்லையா?

இந்த 6 பாராக்களிலுமுள்ள கேள்விகளுக்கு உண்மைத் தத்துவத்தை உணர்ந்தவர்களின் விடை எதிர்பார்க்கப்படுகிறது.

'அருணகிரி' பத்திராதிபரவர்கட்கு,

ஐயா,

தங்கள் 16-2-28-ம் தேதி பத்திரிகையின் எடிட்டர் பத்தியின் தலையங்கத்தில் காணும் விஷயங்கட்குச் சில கேள்விகள் பின்வருமாறு கேட்கப்பட்டிருப்பதால், அவற்றிற்குத் தகுந்த முறையில் தக்க சமாதானம் கொடுப்பது உங்கள் கடனாகும் :—

### கேள்விகளாவன :-

1. பண்டுதொட்டுச் செங்குந்த சந்ததியார் அனுஷ்டித்து வந்த உயரிய கொள்கையும் தொழில் முறையும் என்ன? அதற்கு ஆதாரம் என்ன? அது தற்காலம் எந்த விதத்தில் மாறுபட்டிருக்கிறது? அம்மாறுபாட்டால் எப்படி மதிப்பிழந் திருக்கிறது? அதை விர்த்தி செய்ய இயலா திருப்பதென்ன? அது கண்டு வெட்கப்படுபவர் யார்? என்பதற்கும்;

2. உண்மைச் செங்குந்தர்கள் யார்? அவர்கள் இப்பொழுது எவ்வெவ்விடங்களில் வதிகின்றனர்? அவர் பட்டம் விருது முதலியவைகள் என்ன? அவர்கள் ஜாதிப்பிள்ளைகள் யார்? பொது ஜனங்கள் இவர்களைப் பொதுவாய் அழைக்கும் ஜாதிப் பெயரென்ன? என்பவைகட்கும்;

3. போலிச் செங்குந்தர்கள் யார்? அவர்கள் எவ்வெவ்விடங்களில் வதிகின்றனா? அவர்கள் பட்டம் விருதுகள் முதலியவைகள் என்ன? அவர்கள் ஜாதிப்பிள்ளைகள் யார்? பொது ஜனங்கள் இவர்களைப் பொதுவாய் அழைக்கும் ஜாதிப் பெயரென்ன? என்பவைகட்கும்;

4. நாகபாசத்தார் சங்கம், இசை வேளாளர் சங்கம் முதலிய சங்கத்தின் அங்கத்தினர்கள் யார்? அவர்களும் இப்பொழுது "செங்குந்தர்" எனப் புனைப்பெயர் சூட்டிக்கொண்டிருக்கிறார்களா? அப்படிப்பெயர் வைத்துக்கொண்டிருந்தால், அவர்கள் போலிச் செங்குந்தர் கூட்டமா? உண்மைச் செங்குந்தர்கள் கூட்டமா? மேற்கண்ட சங்கங்கள் செங்குந்தர்கள் என்று பெயர் மாற்றிக் கொண்டதையும் கொள்ளப் போவதையும் தங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்து வந்ததுண்டா? என்பதற்கும்;

5. தாங்கள் செங்குந்தர்களின்மேல் சீறி விழுகிற காரணம் யாது? தாங்கள் யார்? பத்திரிகை முகப்பில் 'சி. ராம. ராமனுஜன்' என மகுடமிட்டிருக்கிறது. 'சி' என்பது எதைக் குறிக்கிறது? 'ராம' என்பது எதைக் குறிக்கிறது? தங்கள் தகப்பன் பாட்டன் பெயரென்ன? தாங்கள் பிள்ளை என்றுவது, முதலியார், என்றுவது பெயருடன் சேர்த்துக் கொண்டிருந்ததுண்டா?

என்கிற இந்த 5 பாராக்களிலுமுள்ள ஒவ்வொரு கேள்விகட்கும் கால தாமதமில்லாமல் தமிழ்த் தினசரி பத்திரிகைவாயிலாக விடையளிக்குமாறு கோரப்படுகிறது.

சபைத் தலைவர் முடிவுரைக்குப்பின் கடவுள் வாழ்த்துடன் இரவு 11 மணிக்குச் சபை இனிது நிறைவெய்தியது.

T. R. பெருமாள் முதலியார்,
உபகாரியதரிசி, செங்குந்த மகாஜன சங்கம்,
திருச்செங்கோடு.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்து நிருவாக சபையின் தீர்மானங்கள்

மேற்படி சங்கத்தின் நிருவாக சபைக்கூட்டம் ஒன்று 22-3-28 மாலை 4-மணிக்குச் சங்கக் காரியாலயத்தில் திரு. மு. சரவண முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது. அப்போது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன:—

1. சைதாப்பேட்டை தாலூக்கா போர்டுக்கு மெம்பராக திரு. சை இரத்தினவேல் முதலியாரும், திருப்பத்தூர் தாலூக்கா போர்டுக்கு மெம்பர்களாகத் திரு. க. அ. சண்முக முதலியாரும், M. V. பீமராஜ முதலியாரும், மா. வேலாயுத முதலியாரும், ஈரோடு முனிசிபல் கவுன்சிலராக திரு. வ. மு. மொட்டையப்ப முதலியாரும், சைதாப்பேட்டை முனிசிபாலிடி மெம்பராகத் திரு. தொ. துரைசாமி முதலியாரும், பவானி யூனியன் போர்டு மெம்பராகத் திரு. வி இராமசாமி முதலியாரும் தேர்தல்களில் வெற்றிபெற்று வந்தமைக்காக இச்சங்கம் தனது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு ஷை கனவான்களைத் தங்கள் தங்கள் ஸ்தலஸ்தாபனங்களில் நமது குலத்தவர் முன்னேற்றத்திற்காக முன்னின்று உழைக்குமாறு வேண்டிக் கொள்கிறது.

(2) சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கத்தார் 14-3-28-ல் செய்து அனுப்பிய தீர்மானத்தில் வேண்டிக்கொண்டிருப்பதின் காரணமாகவும், காஞ்சிபுரம், குடியேற்றம், திருப்பத்தூர், திருச்செங்கோடு, ஈரோடு, சென்னிமலை, திருப்பூர், திருவாரூர், திருநாகேச்சுரம், மதுரை, திருநெல்வேலி, வீரவநல்லூர், கொல்லங்கோடு முதலிய இடங்களிலுள்ள செங்குந்த பிரமுகர்களின் தூண்டுதலினாலும் தென்னிந்தியாவிலுள்ள பல பாகங்களிலிருந்தும் சென்னைக்குக் கல்வியை நாடிவரும் செங்குந்த மாணவர்களின் சௌகரியத்திற்குத் தகுந்தவாறு பொறுப்பான மேற்பார்வையில் நியாயமான கட்டணம் பெற்று நம்மினத்தவர்க்கெனத் தனியான சாப்பாட்டு விடுதி யொன்றும் இது வரையில் ஏற்படாத குறையை நிவர்த்திப்பதற்கு அத்தகைய செங்குந்த மாணவர் விடுதி (Sengunthar Students' Hostel) ஒன்றைச் சென்னையில் நிலையாக நமது சங்கத்தின் ஆதரவில் அடுத்த ஜுலை மாத முதல் ஏற்படுத்தி நடத்த வேண்டும்.



(3) இச்செங்குந்த மாணவர் விடுதியையே தற்காலம் சென்னைக்கு வெளியூர்களிலிருந்து வியாபார நிமித்தம் அடிக்கடி வந்து போகும் செங்குந்தர்களுக்கு உணவு இருப்பிடம் முதலிய வசதிகளைத் தேடித் தருவதற்கும் உபயோகப்படுமாறு செய்யவேண்டும்.

(4) நம் குல முன்னேற்றத்துக்கு அடிப்படையானவை உயர்தரக் கல்வியும் தொழிற் கல்வியுமாம் என்னும் உண்மை பலர்க்கும் புலனாயிருந்தும், அவற்றை நாடும் செங்குந்தமாணவர்களின் தொகை மிகவும் சிறிதாக இருப்பதற்குக் காரணம், நம்மினத்தவர்களுள் பெரும்பான்மையோரின் ஏழ்மை நிலையே யாகையால் இது விஷயமாக அதிகமும் ஒத்தாசையளிக்க வேண்டியது அவசியமென்பதை யுணர்ந்து, இச்சங்கம் சென்ற வருஷம் கொடுத்த உபகாரச் சம்பளத்தைவிட இவ்வருஷம் அதிகமாக உதவ முயற்சி செய்யத் தீர்மானிக்கிறது.

(5) மேற்கண்ட 2, 3, 4 தீர்மானங்களை நிறைவேற்றுதற்குச் சங்கத்திற்கு மூலதனம் அதிகமாக வேண்டியதிருப்பதால், அதைத் திரட்டித்தர நமது குலத்துக் கனவான்களை இச்சங்கம் கேட்டுக்கொள்வதோடு, ஒவ்வொரு செங்குந்தரையும் தம்மாலியன்ற நன்கொடையை நமது சங்கத்து அமைச்சர்களுக்கு அன்புகூர்ந்து அனுப்பவேண்டிக்கொள்ளுகிறது.

(6) அடுத்த ஜுலைமாதத்தில் சென்னையில் ஏற்படவிருக்கும் செங்குந்தர் மாணவர் விடுதியில் சேரவிரும்பும் மாணாக்கர்கள் நமது சங்கத்து அமைச்சருக்குத் தமது விருப்பத்தைத் தெரிவித்து ஜுன் மாதம் 15-ம் தேதிக்குள் மனு அனுப்பவேண்டும்.*

(7) அடுத்த ஜுலை மாதம் முதல் உபகாரச் சம்பள உதவியை நமது சங்கத்தினின்றும் எதிர்பார்க்கும் ஏழைச் செங்குந்த மாணாக்கர்கள் சங்க அமைச்சருக்கு ஜுலை மாத முதல் தேதிக்குமுன் தக்க சிபார்சு கடிதங்களுடன் மனு அனுப்பவேண்டும்.*

(8) அடுத்த வேனிற்கால விடுமுறையில் தென்னாட்டிலும் கொங்குநாட்டிலும் பிரசாரம் செய்யவேண்டியது.

(9) நமது குலத்தவரிடையே பெருங் கிளர்ச்சியை உண்டு பண்ணவும், குலமுன்னேற்ற விஷயமாக நம்மவர் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளவும், நமது சங்கத்துச் சட்டப்படி கூடிய சீக்கிரம் ஒரு செங்குந்த மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்யவேண்டியது.

(10) ஷை செங்குந்த மகா நாட்டைக் கூட்டுஞ் சமயம் செங்குந்த வாலிபர் சங்கத்தார் தமது 14-3-28 தேதி தீர்மானத்தில் கேட்டுள்ளபடிச் செங்குந்த வாலிபர் மகாநாட்டையும் கூட்டவேண்டியது.

(11) பலவிடங்களிலுமுள்ள கற்றோரிடையிலும் மாணவரிடையிலும் நமது குலமுன்னேற்ற விஷயமாகத் தீவிர சிந்தனையைத் தூண்டவும், தமிழ் மொழியின் விருத்தியினைத் தேடவும், சில போட்டிப் பரீட்சைகள் நமது சங்கத்தின் ஆதரவில் வைத்து, அவற்றில் தேறியவர்களுக்குத் தக்க பரிசளிக்கவேண்டும். இவ்வருஷம் இப்போட்டிப் பரீட்சைக்கு வேண்டிய விஷயங்களையும் விதிகளையும் வகுத்துப் பரீட்சைக்கு வரும் கட்டுரைகளைப் படித்துப் பரிசுகளுக்குப் பாத்திரமானவர்களைத் தீர்மானிக்கத் திருவாளர்கள் மா. அ. கனகசபை முதலியார், மா. டா. கந்தசாமி முதலியார், பி. ஏ., பி. இ., ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ, எல். டி., ஆகிய மூவர்கொண்ட ஒரு பரிக்ஷாதிகாரசபையை இச்சங்கம் நியமிக்கின்றது. இச்சபையின் தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படல்வேண்டும்.*

* இவை சம்பந்தமான விளம்பரங்கள் சித்திரை மாதத்து 'மித்திர' னில் வெளிவரும்.

---


## விளம்பரம்.

'ஆரம்பாசிரியன்,' 'செங்குந்த மித்திரன்' பத்திரிகாசிரியர்

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., இயற்றிய தமிழ் நூல்கள்.

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| 1. | சிறுவர்க்கான சிறு கதைகள் : முதற்புத்தகம் ... | 0 | 3 | 0 |
| 2. | ,, இரண்டாம் புத்தகம் .. | 0 | 3 | 0 |
| 3. | சிறு பொறி பெருந்தீ ... | 0 | 4 | 0 |
| 4. | பொறாமைப் பேய் ... | 0 | 4 | 0 |
| 5. | செய்யுட் கதைகள் ... | 0 | 12 | 0 |

முதல் நான்கும் வெகு இனிமையாய் மிகவும் எளிய நடையில் பிரைமெரி பாடசாலைகளில் உபபாடமாக வாசகங்களாக உதவுமாறு எழுதப் பெற்றவை. ஐந்தாவது மேல் வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக உதவும். இவை உபாத்தியாயர்களுக்கு நூற்றுக்கு இருபது தள்ளிக் கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம் :

டீசர்ஸ் பப்ளிஷிங் ஹௌஸ்,
200, தம்பு செட்டித் தெரு, சென்னை.

# செங்குந்த சீமான்களுக்கு இரண்டு விண்ணப்பங்கள்.

சென்னை, 1—4—28.

## i. செங்குந்த மாணவர் விடுதி.

பல இடங்களிலிருந்து வந்து சென்னையில் உயர்தரக்கல்வியை நாடும் நமது செங்குந்த மாணாக்கர்கள் தற்போது அவரவர்கள் கல்லூரிமாணவர் விடுதிகளிலோ (College Hostels) பிராமணர் சாப்பாட்டுஹோட்டல்களிலோ தங்கி, அபரிமிதமான பணத்தைச் சாப்பாட்டுக்கும் குடிக்கூலிக்கும் இதர சௌகரியங்களுக்கும் செலவழித்தும், தனித்த அக்கரையுள்ள மேற்பார்வையின்றிச் சுகமும் நலனும் வேண்டிய அளவு பெறாமலிருக்கின்றனர். இக்குறையை நீக்க, நமது சங்கம் தனது ஆதரவில் திரு. ம. சண்முகசுந்தரமுதலியார், எம்.ஏ., எல்.டி., திரு. மா. பா. கந்தசாமிமுதலியார், பி.ஏ., பி.இ., முதலிய அறிவாளிகளின் மேற்பார்வையோடுகூடிய ஒரு செங்குந்த மாணவர் விடுதியை (Senguntha Students' Hostel) சென்னையில் ஏற்படுத்தி, அதில் சேரும் நமது மாணாக்கர்களுக்குக் கிரமமான செலவில் பல சௌகரியங்களையும் செய்துவைக்கத் தீர்மானித்திருக்கிறது.

இது சம்பந்தமான விவரங்களை அடுத்த பத்திரிகையில் வெளியிடுகின்றோம்.

அதற்குள்ளாக, நமது குலச்சீமான்களை, இம்முயற்சிக்கு வேண்டிய மூலப்பொருளுக்காகத் தம்மாலியன்ற நன்கொடையை எமது சங்கத்துக்கு அனுப்ப வேண்டுகின்றோம்.

செல்வத்துள் சீரியசெல்வமாம் கல்விச் செல்வத்தை நம்மவர் அடைவதற்காகச்செய்யப்படும் இச்சிறந்த தருமத்துக்கு நமது குலச்சீமான்கள் தாராள சிந்தையுடன் உதவிசெய்வார்களென்றே நம்புகின்றோம்.

சென்னை, 1—4—28.

## ii. ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளமும் தருமசாப்பாடும்.

உயர்தரக்கல்வியை அவாவும் ஏழைச் செங்குந்த குல மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளமளித்து உண்டி உடை இருப்பிடம் முதலிய வசதிகள் தேடி வைப்பதைத் தனது பெருநோக்கங்களுள் ஒன்றாகக் கொண்டுளது நமது சங்கம். இவ்வருஷம் பல ஜில்லாக்களையும் சேர்ந்த பதினைந்து செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச்சம்பளமளித்துவருகின்றது. அடுத்த வருஷமுதல் இன்னும் பலருக்கு உபகாரச் சம்பள மளிப்பதன்றிக் குறைந்த பக்ஷம் உயர்தரக் கல்வியை நாடும் இருபது மாணாக்கர்களுக்காயினும் சென்னையில் தருமசாப்பாடு போட்டுப் பாதுகாக்க உத்தேசித்திருக்கின்றோம். இதற்கு மூலதனந் திரட்டுவது எமது கடமையாக இருக்கின்றது. திரண்ட மூலதனமின்றி எந்தத் தருமமும் நிலையாக நடைபெறுவது அரிதென்பது எவரும் உணர்ந்ததே. ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கென ஏற்படுத்த இருக்கும் இத்தருமத்தை நீடித்து நிலைக்கச் செய்து நமது குலத்தின் முன்னேற்றத்தை நாடுவதில் செங்குந்த மகாஜனங்கள் எங்களுக்கு ஒத்தாசையாக இருக்கப் பின்வாங்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு, ஒவ்வொரு செங்குந்தரையும் தங்களாலியன்ற நன்கொடையை இதைக் கண்டவுடன் நமது சங்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
தி. கா. சபாபதி முதலியார்,
ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சர்கள்.

# செய்தித்திரட்டு

## இந்திய ராஜாக்களின் விபரீதச் செலவு.

ஒரு பிரபலமான மகாராஜாவுக்கு 300 மனைவிமார் இருக்கின்றார்கள். அவர்கள் எப்போதாவது வெளியே போக நேரிடும். அந்த சமயங்களில் உபயோகப் படுத்துவதற்காக முதல்தரமான மோட்டார் வண்டிகள் ஒவ்வொரு மனைவிக்கும் தனித்தனியாக வாங்கி வைத்திருக்கின்றார். இம்மோட்டார் வண்டிகள் மகாராஜாவுக்கெனச் செய்யப்பட்டனவாம்.

வட இந்தியாவின்ன ஒரு ராஜ்ஜியத்தை ஆளும் மகாராஜா தமது தலை மயிரைக் கத்தரித்துக் கொள்வதற்காக இதுவரையில் உலகத்தில் இவ்வளவு செலவழித்தவர்கள் இல்லை என்று சொல்லும்படி அவ்வளவு தாராளமாகச் செலவு செய்கின்றார். நூற்றுக்கணக்கான மைல் தூரத்திலுள்ள பம்பாய் நகரத்திலிருந்துதான் அவருக்கு மயிர் கத்தரிப்போன் வருகிற வழக்கம். அவன் முதல் வகுப்பு ரெயில் வண்டியில் பிரயாணஞ் செய்வோனகையால் ரெயில் சார்ஜ் சுமார் இருநூறு ரூபாய் ஆகிறது. மயிர் கத்தரிப்போன் வந்திருக்கிறான் என்று மகாராஜாவுக்குத் தெரிவித்தால் 'இன்றைக்கு உடம்பு சரியாயில்லை நாளைக்கு பார்ப்போம்' என்பார். மறுநாள் 'அவசரமான ராஜாங்க வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்' இன்றைக்கு நேரமில்லை என்பார். அடுத்தநாள் வேட்டையாடப் போகிறேன் இன்றைக்கு முடியாது என்பார். இவ்வாறாக ஒவ்வொரு சமயத்திலும் மயிர் கத்தரிப்பதற்காக 3 மாதங்கள்கூட காத்துக்கொண்டிருக்க நேரிடும். இவ்விதமாய் நிமித்தப்பட்ட மயிர் வினைஞனுக்கு நாளொன்றுக்கு சுமார் 80 ரூபாய் படிச்செலவுக்காகக் கொடுக்கப்படுகிறது. இம்மகாராஜாவுக்கு மயிர் கத்தரிப்பதற்குக் கூலி சுமார் 7500 ரூபாய் கொடுக்கப்படுகிறது.

டெல்லி நகரத்தில் அரசாண்ட ஷாஜஹான் என்னும் முகலாய சக்கரவர்த்தி லக்ஷக்கணக்கான திரவியத்தைச் செலவிட்டுத் தமது படுக்கையறையின் சுவர்களில் விலையுயர்ந்த ரத்தினங்களை இழைத்து வைத்திருந்ததன்றித் தமது கட்டழகுவாய்ந்த மனைவியின் உருவத்தைப் பலவாகக் கண்டு மகிழவேண்டுமென்ற ஆசையால் ஆயிரக்கணக்கான சிறு கண்ணாடிகளையும் பதித்து வைத்திருந்தனர்.

கல்கத்தா பம்பாய் முதலிய நகரங்களுக்கு வரும் மகாராஜாக்களின் மோட்டார் வண்டிகளில் செம்பொன்னாற் செய்யமைக்கப்பட்ட அன்னம் முதலியவற்றின் பெரிய உருவங்களைச் சகசமாகக் காணலாம்.

காலஞ்சென்ற ஐதராபாத்து நைசாம் அவர்கள் தாம் கைகழுவும் சமயத்தில் தாம் அணிந்திருந்த 15000 ரூபாய் பெறும்படியான ஒரு வைர மோதிரத்தைக் கழற்றி அருகிலிருந்த வேலைக்காரனிடம் கொடுத்தார். வேலைக்காரன் அதை வாங்கிக்கொண்டு நைசாம் அவர்கள் காலில் வீழ்ந்து 'இம்மோதிரத்தை எனக்குப் பரிசாக அளித்த பாக்ஷா அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனமளிக்கிறேன்' என்றான். நைசாம் அவன் சொல்லுவது இன்னதென்று அறிந்துகொள்ளாது சிறிதுநேரம் திகைத்துப்பிறகு மோதிரத்தைத் தனக்குப் பரிசாகக் கொடுத்துவிட விரும்புகிறான் என அறிந்து அதை 'எடுத்துக்கொண்டு ஓடிப்போ' வென்றார்.

டை நைசாம் அவர்கள் வெளியூருக்குப் புறப்படுவதாயிருந்தால் அவரது ஸ்பெஷல் வண்டி ஐதராபாத்து ரெயில்வே ஸ்டேஷனில் எஞ்சின் பூட்டித் தயாராய் நைசாம் வரவை எதிர்பார்த்த வண்ணமாய் அநேக நாட்கள் காத்துக்கொண்டிருப்பது சகசம். யாராவது போதிய தைரியத்துடன் அவரை அணுகி ஸ்பெஷல் தங்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டு அநேக நாட்களாக நின்றுகொண்டிருக்கிறது என்று சொன்னால், உடனே அவர் சீற்றங்கொண்டு 'வண்டி எனக்காகச் செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது நான் வண்டிக்காகச் செய்யப்பட்டிருக்கிறேனா?' என்று கேட்டார்.

---

## திருவிழா

### சென்னை சைதாப்பேட்டை திருக்காரணி ஸ்ரீசோர்ணம்பாள் சமேத காரணீஸ்வர தேவஸ்தான பிரம்மோற்சவம்.

விபவ ௵ சித்திரை ீ 12௳ (24-4-28) மங்கள வாரம் காலை துவஜாரோகணம். அது முதல் 10 தினங்களிலும் சென்ற வருடத்தை விட அதிவிமரிசையாய் நடைபெறும்.

### விசேஷ உற்சவங்கள்.

24-4-28 மங்களவாரம் காலை துவஜாரோகணம்.

26-4-28 குருவாரம் காலை 6-மணிக்கு அதிகாரநந்தி சேவை, இரவு 10-மணிக்கு பூதவாகன சேவை.

28-4-28 ஸ்திரவாரம் இரவு 12-மணிக்கு வெள்ளி ரிஷபவாகன சேவை.

30-4-28 சோமவாரம் காலை 6-மணிக்கு ரதாரோகணம் (3 ரதங்கள்) இரவு 8-மணிக்குமேல் ரதத்திலிருந்து பரதநாட்டியத்துடன் திருக்கோயிலுக்கு எழுந்தருளுதல்.

1-5-28 மங்களவாரம் மாலை 2-மணிக்குத் திருஞான சம்பந்த பிள்ளையாருக்குத் திருமுலைப்பால் அளித்த ஐதிகம், 2-30-மணிக்கு அறுபத்துமூன்று நாயனமார்களுடன் திருவீதி உற்சவம்.

2-5-28 புதவாரம் மாலை 6-மணிக்கு பிக்ஷாடனர் திருக்கோலம்.

3-5-28 குருவாரம் மாலை 8-மணிக்கு திருக்கல்யாணம், 10-மணிக்கு ராவணமாய்ச் செய்துள்ள கைலாச வாகனம்.

4-5-28 சுக்கிரவாரம் மாலை 10-மணிக்குப் பரமானந்த புஷ்பபல்லாக்கு சேவை.

பத்து தினங்களிலும் இரவு 10-மணிக்குமேல் வேலூர் திருவாளர் தேவாரம் T. V அப்பாதுரை ஆச்சாரியார் அவர்களால் இசைக்கருவிகளுடன் தேவார பாராயணம் நடைபெறும்.

# பாமாலைப் பகுதி

செங்குந்தமித்திரன் மாசி மாதத்திய எழுத்துமாறிய வெண்பா
வினுவுக்கு விடை.

செழித்திடுநஞ் செங்குந்த மித்திரன்மா சித்திங்கள்
திகழ்பாவின் பகுதி யதனுள்
எழுத்துகள்மா றியவெண்பா வினவினுக்கு விடையெழுதி
மித்திரன்பால் விடுத்திட் டேனுல்
வழித்திடுநன் முகவடியை எழுத்தொழுங்கா வகுத்திடமூ
தறிவுடையீர் சென்னை நகரிற்
றழைத்திடுதென் னிந்தியசெங் குந்த மகாஜனசங்கம்
என்பதுவே தக்கபதி லாகுமாதோ.

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 17 | 9 | 4 | 5 | 6 | 13 | 15 | 19 | 14 | 10 | 11 | 12 | 1 | 2 | 7 | 8 | 18 | 3 |
| ச | ங் | கு | ந் | தி | ய | கா | ன | ம் | ச | ந் | த | ம | தெ | ன் | செ | ங் | க | னி |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| தெ | ன் | னி | ந் | தி | ய | செ | ங் | கு | ந் | த | ம | கா | ச | ன | ச | ங் | க | ம் |

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம், கண்டாச்சிபுரம்.

## மாசி மாதத்திய பத்திரிகையின் விடுகவி வினுவுக்கு விடை.

பார்புகழுஞ் சத்திபெயர் விமலை யாகும் — விமலை—ம
பண்பான வருடத்தின் பெயர் விகாரி — விகாரி—கா
சீரான கரணத்தில் பெயரே புத்தி — புத்தி—த்
செய்தவத்தின் புத்திரியே குமாரி யென்ப — குமாரி—மா
ஏரோங்கு சிவதலத்தின் பெயர் சீகாழி — சீகாழி—கா
யின்பமுடன் விளையாடும் கருவி பந்து — பந்து—ந்
பேராரும் மலரின்பேர் பாதிரிப்பூ — பாதிரி—தி
வின் பெயர்மகாத்மா காந்தி யாமே.

'பொதுநலம்பிரியன்',
திருமலைராயன் பட்டணம்

## மித்திரன் வாழ்த்து.

சொல்லோங்குபரகுருவாய்த்துதியோங்குகதிர்வேலோர்
கல்லோங்குகனத்திறையோற்கன்போங்குசெங்குந்தர்க்
கெல்லோங்குமித்திரனுவிலையர்தோங்கும்பத்திரிகை
மல்லோங்குநலமோங்கிமதிப்போங்கிவாழியவே.

புதுவை. வி. துரைசாமி முதலியார்,

சங்கத்தின நன்கொடை வரவு

## மாசி மாதம்வரை மகமை கொடுத்த வியாபாரிகளின் விவரம்.

மதாாஸ் பாளையகாட் கம்பெனியார் மூலம்

| | ரூ | அ | பை |
|---|---|---|---|
| **ஆனக்காபுத்தூர்.** | | | |
| ஆ. கு. முனிசாமி முதலியார் | 0 | 6 | 0 |
| பி. மு. முருகேச முதலியார் | 0 | 6 | 0 |
| **குண்ணத்தூர்.** | | | |
| சி. மு. ஜெகநாத முதலியார் | 1 | 8 | 0 |
| தி. முருகேச முதலியார் | 1 | 1 | 0 |
| மே. கந்தசாமி முதலியார் | 0 | 6 | 0 |
| தி. தெ. தேவராஜ முதலியார் | 0 | 6 | 0 |
| **சைதாப்பேட்டை.** | | | |
| நா. சுப்பராய முதலியார் | 0 | 5 | 9 |
| சே. மு. பழனி முதலியார் | 0 | 10 | 3 |
| அ. கு. முருகப்ப முதலியார் | 0 | 10 | 3 |
| செ. மாசிலாமணி முதலியார் | 0 | 2 | 6 |
| கெ. குப்புசாமி முதலியார் | 0 | 3 | 9 |
| ப. மாணிக்க முதலியார் | 0 | 10 | 0 |
| ந. தங்கவேலு முதலியார் | 0 | 6 | 0 |
| ஆ. த. வைத்தியலிங்க முதலியார் | 0 | 8 | 3 |
| ம. கு. மாணிக்க முதலியார் | 0 | 4 | 6 |
| தி. அ. கந்தசாமி முதலியார் | 0 | 11 | 0 |
| கெ. போனுரும முதலியார் | 0 | 5 | 3 |
| கொ. செ. முனுசாமி முதலியார் | 0 | 3 | 9 |
| **சேம்பாக்கம்.** | | | |
| தி. சிற்றம்பல முதலியார் | 1 | 9 | 9 |
| ம சி. மலைக்கொழுந்து ஸ்ல கம்பெனி | 3 | 13 | 9 |
| பொ. சி. நடேச முதலியார் | 0 | 6 | 9 |
| **கின்னதச்சூர்.** | | | |
| மு. ஆ. நடராஜ முதலியார் | 2 | 3 | 0 |
| **திருமழிசை.** | | | |
| ஐயா முனுசாமி முதலியார் | 0 | 2 | 6 |
| **பரங்கிமலை.** | | | |
| வே. மு. கன்னியப்ப முதலியார் | 1 | 7 | 3 |
| ஆ. பொன்னுசாமி முதலியார் | 0 | 4 | 0 |
| **படப்பை.** | | | |
| மு. திருமலை முதலியார் | 0 | 3 | 9 |
| **மேப்பூர்.** | | | |
| கா. சிவானந்த முதலியார் | 1 | 7 | 3 |
| பொ. நடேச முதலியார் | 0 | 5 | 9 |
| சோலை. முருகப்ப முதலியார் | 0 | 8 | 0 |
| **வேளச்சேரி.** | | | |
| க. துரைசாமி முதலியார் | 0 | 8 | 0 |

| | ரூ | அ | பை |
|---|---|---|---|
| **சென்னை.** | | | |
| மதருஸ் பாளையகாட் கம்பெனியார் மூலம் இதர உண்டியல் வசூல் | 53 | 0 | 0 |
| சி. த. ந. நடேச முதலியார் | 7 | 8 | 0 |
| **சைதாப்பேட்டை.** | | | |
| சைதாப்பேட்டை ரீயல் பாளைய காட் கம்பெனியாரால் தைமீ பாக்கி | 3 | 8 | 0 |
| இதுவும் ஷை மாசிமீ வசூல் | 9 | 11 | 9 |
| சுப்பீரியர் பாளையகாட் கம்பெனி தைமீக்கு | 13 | 6 | 6 |
| மாசிமீ வசூல் | 12 | 10 | 6 |
| ராயல் பாளையகாட் கம்பெனி மார் கழி, தை, மாசிமீ உண்டியல் வசூல் | 36 | 11 | 0 |
| பெஸ்டு பாளையகாட் கம்பெனியா ரால் மாசிமீ உண்டியல் வசூல் | 16 | 7 | 6 |
| நேஷனல் பாளையகாட் கம்பெனி மாசிமீ வசூல் | 13 | 2 | 9 |
| S. சடையப்ப முதலியார் மாசிமீ வசூல் | 7 | 4 | 6 |
| **திருமயிலாப்பூர்.** | | | |
| திருமயிலாப்பூர் ஷண்முகனடியார் சங்கத்தார் வள்ளன்மை மிக்க ளித்த நன்கொடை | 200 | 0 | 0 |
| **காஞ்சிபுரம்.** | | | |
| V. M. கந்தசாமி முதலியார் | 4 | 0 | 0 |
| V. முனுசாமி முதலியார் | 2 | 0 | 0 |
| ஜ. பச்சையப்ப முதலியார் | 2 | 0 | 0 |
| K. முனியப்ப முதலியார் | 0 | 8 | 0 |
| மு. காளத்தி முதலியார் | 1 | 0 | 0 |
| N. சோமசுந்தர முதலியார் | 2 | 0 | 0 |
| P. வேங்கடசாமி முதலியார் | 1 | 8 | 0 |
| தி. அரு. அருணசல முதலியார் | 65 | 0 | 0 |
| **குண்ணத்தூர்.** | | | |
| பொங்கல் உண்டியல் வசூல் | 6 | 4 | 3 |
| **சென்னிமலை.** | | | |
| ஓ. அ. ஆறுமுக முதலியார் | 4 | 0 | 0 |

ம. சண்முகசுந்தர முதலியார்,
அமைச்சர்.

# “ செங்குந்த மித்திரன் ”

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

**ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.**

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்றமடையும் வண்ணம் வெளிவரும் ஒரு பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்பு… குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவை… நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்… தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் …னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தி… சாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் க… ளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்… அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் … னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சி… விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்… வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தே… சிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப் படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் ‘ செங்குந்த மித்திர ’ னை வரவழைக்கவேண்டு மென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானல் நமது ‘ மித்திர ’ னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக் கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்… வருவார்களென நம்புகின்றோம்.

| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ.பை. | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை ஒன்று… |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா ,, | 2—0—0 | 0—2—6. |

## “ செங்குந்தர் பிரபந்தத் திரட்டு ”

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இதனுள் கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய ‘ ஈட்டி எழுபது ’ ‘ எழுப்பெழுபது ’ இவ்விரண்டும், புகழேந்திப்புலவ… செய்தருளிய ‘ திருக்கை வழக்கமும ’ மற்றைய பெருமபுலவர் பலர் செய்தருளிய 12 பிரபந்தங் களும் அடங்கும்.

‘ ஈட்டி யெழுபது ’ கச்சிப் பிரதாபனுர் செய்தருளிய பேருரையுடன் கூடியது. இவ்வுரை செங்குந்தரது வழக்கம், ஒழுக்கம், அறிவு, ஆற்றல், கொடை முதலானவற்றை மிகச் செவ்வையாக எளிய நடையில் விளக்குவது.

இந்நூற்குறுகி, தமிழாசிரியர் திருவாளர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் எழுதிய முன்னுரையும், தமிழாசிரியர் ஸ்ரீ மு. இராகவையங்கார் அவர்கள் எழுதிய ஆராய்ச்சி யுரையும், கல்வெட்டாராய்ச்சியினர் ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகனுர் எழுதிய அரிய கல்வெட்டுரையும், மற்றும் பல நல்லிசைப் புலவர்களின் மதிப்புரைகளும், ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களால் பல ஆராய்ச்சிக் குறிப்புக்களைக் கொண்டு எழுதிய பதிப்புரையும் கொண்டது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத் திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

| | | |
|---|---|---|
| உயர்ந்த பதிப்பு காலிகோபயிண்டில் பொன் கிலிட் செய்தது விலை | ரூ. 3-0-0 | தபாற் கூலி அ. ‘ பிரத்தியேகம். |
| ‘ செங்குந்த மித்திரன் ’ சந்தா நேயர்களுக்கு மட்டும் ,, | ,, 2-8-0 | |

**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சட்டதிட்டங்கள் விலை அணு 2.**

புத்தகம் கிடைக்குமிடம் :—

மானேஜர், ‘செங்குந்த மித்திரன்’ ஆபீஸ்,
நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை

This Journal is published by T. N. ..alapathi Mudaliar for the **South Indian Senguntha Mahajana Sang..** **Madras**, at 31 Armenian Street, Madras, and is printed by T. C. Nataraja Mudaliar at the Cambridge Pr.. **8/19-A, Armenian Street, Madras.**

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு வகுப்பினரும் சீரடையவேண்டிச் சங்கங்கள் நிறுவி வெகு ஊக்கத்துடன் உழைத்து வரும் இக்காலத்தில் பண்டைப் புகழ்பெற்ற செங்குந்த குல மக்கள் மட்டும் இது விஷயத்தில் யாதொரு ஊக்கமுமின்றிக் கிடப்பதையுன்னி, நமது குல முன்னேற்றத்திற்கென உழைக்கச் சென்னையில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கின்றது. இம்மகாஜனசங்கம் நமது குலமக்கள் கல்வி, ஒழுக்கம், செல்வம், அந்தஸ்து முதலியவற்றில் மேன்மை யடையும் வழியைத் தேடிவருகின்றது.

குலத்தொண்டு செய்துவருவதே இம்மகாஜனசங்கத்தின் நோக்கமாதலால் அது நிறைவேறத் தென்னிந்தியாவிலுள்ள செங்குந்தர் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பும் உதவியும் ஆதரவும் அவசியமாகையால், மகாஜன சங்கத்தார் தற்போது செங்குந்தர் வதியும் கிராமங்கள் தோறும் பிரசாரவேலை செய்து வருகின்றனர். பிரசாரகர்களைத் தங்கள் கிராமங்களுக்கு வரவழைக்க விரும்பும் குலாபிமானிகள் சங்க அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுவார்களாக.

---

நமது தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் உபதலைவர்களுள் ஒருவரும்,
வெற்றி வேலாயுதஸ்வாமி பரம்பரை தர்மகர்த்தர்களுள் ஒருவருமான
சைவத்திருவாளர்
**மஞ்சட்கொல்லை அரு. சி. தியாகராய முதலியார் அவர்கள்,**
பிரபவஹூ தைமீ அச்சுச் செலவிற்கு நூறு ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார்.

---

மஞ்சட்கொல்லை செங்குந்தர் ஆதீனத்துள்ள ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில் தர்மகர்த்தரும்,
மதராஸ் பளயகாட்டுக் கம்பெனியின் பாகஸ்தருமாகிய
சைவத்திருவாளர்
**மஞ்சட்கொல்லை சி. மு. அரு. தியாகராஜ முதலியார் அவர்கள்,**
பிரபவஹூ மாசிமீ அச்சுச்செலவுக்காக நூறு ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார்.

---

நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பொருட்காப்பாளரான
திருவாளர் சோ. முருகைய்ய முதலியார் அவர்கள் சகோதரர்
சைவத்திருவாளர்
**திருவாரூர் சொ. காயாரோகண முதலியார் அவர்கள்**
பிரபவஹூ பங்குனிமீ அச்சுச்செலவுக்கு நூறு ரூபாய் நன்கொடை அளித்துள்ளார்.

---

இக்கனவான்களது குலாபிமானத்தின் சீர்த்தியும், வள்ளன்மையின் மாண்பும் செங்குந்த உலகம் அறியாதனவல்ல. இவர்கள் நம் குலமுய்ய மேற்கொண்டுள்ள தொண்டு விரைவில் நற்பயன் தந்து இவர்களது புகழை நிலைநாட்டுமாக. எல்லா வளனும் நிறைந்து இவர்கள் நெடுநாள் நம்மவரிடையே தொண்டியற்றிவர முருகன் இன்னருள் சுரப்பானாக.—ப-ர்.




# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு
[ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - உ | பிரபவஹூ - தைமீ | பகுதி - க |
|---|---|---|


SEP 1928 MADRAS 600 008

வேலுமயிலுந் துணை.

காவாகிய கல்வியுளார் கடைசேன்
றிரவாவகை மெய்ப்பொரு ளீதவையோ
துரவா துமரா துலிசாயுத தஞ்
சரவா சிவயோக தயாபரனே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### நன்றி செலுத்தல்

இறைவனருளால் நமது 'மித்திர' னுக்கு ஓராண்டு நிறைந்து இரண்டாம் ஆண்டு துவக்குகின்றது. கடந்த ஆண்டில் பத்திரிகையை நடத்துவதற்குத் துணையாக நின்று விஷய தானஞ் செய்துதவிய வித்வசிரோமணிகளுக்கும், பொருளாதாரந் தந்த சந்தா நேயர்களுக்கும் செங்குந்த உலகம் கடமைப்பட்டிருக்கின்றதென்பது சொல்லாமலே அமையும். துவக்கும் ஆண்டிலும் அன்னாரது உதவியும் ஆதாரமும் 'மித்திர' னுக்கு லபிக்குமென்றே நம்புகின்றோம். ஆதரவு அதிகமாக, நமது மித்திரன் தான் மேற்கொண்டுள்ள குலத்தொண்டைச் செவ்வனே இயற்றி, நமது சமூகம் கல்வியிலும் அறிவிலும், உலகானுபவத்திலும், கண்ணியத்திலும் செல்வத்திலும் செல்வாக்கிலும் மேலோங்கு நெறியில் சாலச் சிறப்புடன் உழைக்கப் பின்வாங்கான் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. இறைவன் துணைநிற்பாராக.

இதுகாறும் பத்திரிகை பெற்றுக்கொண்டு வந்தவர் பலர் சந்தா தொகையைச் செலுத்தாதிருப்பினும் அவர்களுக்கும் பத்திரிகை நிறுத்தாமல் அனுப்பிக்கொண்டு வந்திருக்கிறோம். இது எமது தோழர் திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்களின் வள்ளன்மையால் சாத்தியமாயதென்க. நம்மவர், சிறப்பாக நம் குல சம்பந்தமான விஷயங்களையும், பொதுவில் அறிவை விசாலிக்கச் செய்யும் விஷயங்களையும் படித்துணர்ந்து மேன்மையடையட்டுமென்னும் பெருந்தன்மையான நோக்கத்தோடு, முதலியார் அவர்கள் இலாபத்தை ஒரு சிறிதும் கருதாது தமது சொந்த செலவில் சென்ற வருஷத்திய பத்திரிகையை நடத்தித் தந்தனர். இவ்வள்ளன்மைக்கு நாம் என்ன கைம்மாறு செய்யவல்லோம்? ஆனால், முதலியார் அவர்கள் கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடையார்.

முதலியாரவர்களைப்பற்றி ஒரு நிருபர் எழுதுகின்றார் : " பல்லாண்டுகளாகத் துயில்கொண்டு கிடந்த நமது செங்குந்த சமூகம் நித்திரை தெளியும் இந்த விடியற்காலத்திலே நமது குலத்தவரைக் கூவி யெழுப்பும் சேவல் நமது சபாபதி வள்ளலாரே யாவர். அவர் நமது சமூகத்திற்கு ஆற்றியதும் ஆற்றுகின்றதுமான நன்மைகள்

தங்கள் தொழிலாகிய வெற்றி முழவடித்து வெண்ணிறம் கான்றன. நங்கை வைகலும் செய்கின்ற வழிபாடெல்லாம் இனிது ஆற்றிச் செந்தமிழ் மறைபாடத் தொடங்கி,

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா
சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைய மணாளனென்றும்
ஆரூரா என்றென்றே அலறுநில்லே"

முதலிய அருந்தமிழ்ப் பாக்களை, இசை நூல் வல்லார் கூறியாங்கு,சிறிதும் அசையாது புரிசையிற் றீட்டிய ஓவியமென்ன, மாங்குயிலினும் இனிய இசையில் தீங்குறலில் பாடி வழிபாட்டைச் செவ்விதின் முடித்த பின்னர், அறையை விட்டு நீங்கும் நங்கை பலகணிப் பக்கமாகத் திரும்பினள். அப்பொழுது இருவருடைய நோக்கும் ஒருமைப்பட்டு என்றுமில்லாத ஒரு புதிய அன்பு தோன்றி இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடியேஇமைக்காது இருந்தனர்.

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்வாய்ச்
என்ன பயனுமில." [சொற்கள்

இந்நங்கை மெய்மறந்திருப்பதை நன்கு தெரிந்த தோழியொருத்தி பொல்லென அறையிற் புகுந்து தலைவியின் கையைப்பற்றி மெள்ள வேறு அறைக்கு அழைத்துச் சென்று சந்தனம், பனிநீர் முதலிய குளிர் பொருள்களைப் பூசியும் பொழிந்தும் உணர்வு வருமாறு செய்தனள்.

புலவரோ என்னில், தாங்கற்ற கல்வியின் ஆற்றல்களெல்லாம் வள்ளையின் அழகெலாம் கொள்ளைகொண்ட மங்கையின் சிலம்பொலிக்கு முன்னிற்காமல் ஓடியதைக்கண்டு பெரியதொரு இறும்பூதுகொண்டவராய்மெய்மறந்திருந்தனர். இதைக் கண்கூடாகக்கண்ட பெரியார்கள்இருவருக்கும் உண்மைக் காதல் நிகழ்ந்தமைக்குப் பேருவகை பூத்தனர். மறுநாளும் நன்னாளாக இருந்தமையின் மணச்சடங்குகளியற்றத் தூய செங்குந்த ஆசிரியரை அழைத்து வந்து, ஆரிய மறையும் தமிழ்மறையும் ஒத்த நான்முறை சிறிதும் பிறழாது திருமணத்தை இனிது ஆற்றினார்.

திருமணம் செய்துகொண்ட இருவரும் தலைவியும், உடலும் உயிரும்போல் ஒத்த அன்பினராய், இல்லறம் நெறி வழுவாது செவ்வனே நடத்தினர். அன்பின்திறனால் செவ்வி ஆண்மகவொன்றை ஞாலப்பரிதியெனப் பெற்றுக் களித்தனர். புலவர் தம்முடைய வருவாய்முழுமேல் அறநெறியில் செலவிட்டமையால் நல்குரவு என்னும் பெரியாரை நண்பராகப் பெற்றார். இந்த நல்குரவுப் பெரியாரோடு நட்பு பூணவே, தன் பிள்ளைக்குப் பாலில்லாத பெருமையை அடைந்தார். நல்குரவுப் பெரியாராகிய அன்னையோரைக் களையப் போவாக்கொண்டு, கொடையாளராகிய காளத்தி பூபதியை அடைந்து,சீரிய தங் கல்விப் பொருளைக் கொடுத்து நிலையில்லாச் செல்வப்பொருளைப் பெற விரும்பிக் கீழ்வரும் பாவைப் பாடினார்.

"பெற்றதொருபிள்ளை யென்மனையாட்டியப்
பிள்ளைக்குப்பால்
பற்றாத கஞ்சி குடிக்குந் தரமல்ல பாலிரக்கச்
சிற்றாளுமில்லை யிவ்வெல்லா வருத்தமுந்தீரவொரு
கற்றா தரவல்லையோ வல்லை மாகனக்காளத்தியே."

இவ்வரிய பாடலைத் தமிழாய்ந்த காளத்தி பூபதி செவியாகிய வாயின் உண்டு, அறிவாகிய வயிற்றை நிறைத்து, அவையின்கணுள்ள பாவலரையும் பெருமக்களையும் பார்த்து, "அன்பர்களே! இப்பாட்டுத் தலைக்கொடையாளியாகிய குமண மன்னனைப் பெருந்தலைச்சாத்தனார் காட்டிற் கண்டு பாடியபாடலை ஒக்கு" மெனக்கூறிப் புலவரைக் கொண்டாடினர்.

இவ்வாறு தமிழ்ப்புலவருடைய பெருமையை வியந்த காளத்தி பூபதி, புலவர் விழைந்தாங்கு கற்றாவோடமையாது, சிறப்பாக வேண்டிய செல்வப் பொருள்களையும் கொடுத்துப் பிரிய மனதிலராய்ப் போற்றியனுப்பினர். ஆவும் பொருளும் பெற்ற புலவர், கொடையாளரைப் புகழ்ந்து செம்பாவொன்றோதி விடைகொண்டு தமதில்லிற் போந்து பொருளைச் செலவிட்டுச் சிறிது நாள் வாழ்ந்த பின்னர் மாவண்டூரில் பெருஞ் செல்வராயிருந்த கறுப்ப முதலியார் வேண்டுகோட்கிசைந்து, "தொண்டை மண்டல சதகம்" என்னும் அரிய நூலைப் பாடி அரங்கு ஏற்றிப் பெரும்பொருள் பெற்றுக் களித்தனர். பிறகு சிவபெருமான் திருக்கோயில்களைக் காணுமவாவோடு சில திருக்கோயில்களுக்குச்சென்று மனமொழிமெய்களாலியன்ற



வழிபாடியற்றி வந்தவர், தில்லையை யடைந்து மன்றவாணன் மலரடி பரவி அம்மையைக் கண்டு,—

"வேல்கொடுத்தாய்திருச்செந்தூரர்க்
கம்பியின் மீதுவைக்க
கால்கொடுத்தாய்நின் மணவாள
னுக்குக் கவுணியர்க்குப்
பால்கொடுத்தாய் மதவேளுக்கு
மூவர் பயப்படச் செங்
கோல்கொடுத்தாயன்னையேயெனக்
கேதுங் கொடுத்திலையே"

என்று பாட அம்மையின் அருளால் படியில் பொற்காசு கிடைக்கப் பெற்று, 'படிக்காசுப் புலவ' ரெனப் பெயர் பூண்டு மகிழ் வெய்தினர். இப்பெயரே சிறந்து விளங்கியதால் இயற்பெயர் தெரியவில்லை. தில்லையினின்று தென்னாடு சென்று, இறைவன் கோயில்களையும் பல குறுநில மன்னர்களையும் கண்டு பாடிப் பரிசு பெற்றுப் போற்றி வந்தனர். இவர் இரகுநாத சேதுபதி சீதக்காதி முகம்மதியர் முதலியவர்களை மிகப் புகழ்ந்துளார். திருமலை நாயக்கரின் ஆட்சிக்குள் அடங்கியவர்களைப் புலவர்புகழ்ந்து பாடுவதைக் கேள்வியுற்றுப்பொறுமைகொண்ட நாயக்கர் இவரைப்பிடித்துச் சிறையிலிட்டனர். சிறையில் புலவருக்கு வேண்டிய காலத்தில் உணவு கிடைக்காமல் இருக்கும்பொழுது பார்வையிட வந்த அரசரைப் பார்த்து,

"நாட்டிற் சிறந்த திருமலையா துங்க நாகரிகா
காட்டில் வனத்தில் திரிந்துழலாமற் கலைத் தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காசன் எனும் பைங்கிளியைக்
கூட்டி லடைத்து வைத்தாயிறைதா வென்று கூப்
[பிடுதே"

என்று பாடினர். இப்பாடலைக் கேட்ட மன்னன் மனமிரங்கிப் புலவரைச் சிறையினின்றும் நீக்கிப் "புலவீர்! யான் அறியாமற் செய்த பெரும் பிழையை அன்பு கூர்ந்து பொறுத்தருள்க" எனப் பணிந்தனன். ஆடிபோல் மனதுடைய புலவர் தன்னைச் சிறை செய்த கொடுமையை மறந்தவராய், "அரசே! நீ நீடுவாழ்க" என வாழ்த்தினர். அரசன் பெரும் பொருள் கொடுத்துப் புலவரை அனுப்பினன்.

(தொடரும்.)

இம்முடி குமாரசாமி,
வடமொழிக் கல்லூரி, திருவையாறு.

# மாதர் பகுதி

## இந்திய மாதர்

நமது மாதர்களின் வாழ்க்கையையும், எண்ணங்களையும், நடத்தையையும், நிலைமையையும் பண்டைநாள் முதல் உண்ணின்றும் உருவாக்கி அந்தப்படுத்தும் சில மூலாதாரங்கள் உள. ஒரு ஹிந்து மாது அறிந்துகொள்வது முக்கியமாய்த் தன்னைச் சுற்றிலுமிருக்கும் இயற்கையும் தானும் எல்லாமாகிய இறைவனது பிரதிபிம்பங்கள் என்பதேயாம். அவள் எதிலும் கடவுளது செயலைக் காண்கிறாள். நமது தாயர்கள் நமக்கு இளமையில் "தூணை யடிக்காதே. அது கடவுளிடம் போய் உன்னை அடிக்கச் சொல்லும்" என்றதையும், "பசுஞ் செடிகளைக் கிள்ளாதே, பாபம்" என்றதையும் இன்னும் மறந்தோம் இல்லை. ஜீவகோடிகளின் ஒன்றும் தன்மையை ஒட்டிய இந்த நம்பிக்கையே சகுந்தலையைத் தனது தகப்பனது ஆசிரமத்திலுடைய செடிகளையும் கொடிகளையும் மான்களையும் தனது சகோதரர்களாக விரும்பிப் பாராட்டச் செய்தது. இந்நம்பிக்கையினின்றும் உண்டாகும் பரிசுத்த எண்ணத்தினாலும், ஆழ்ந்த அன்பினாலும், பரந்த பரோபகாரத்தாலுமே சீதை ஹிந்து மாது லக்ஷணங்களின் ஆதியுருவாய் நிற்கின்றனள்.

இந்திய மாது ஒருவித தெய்வீகத் தன்மையை அடைந்திருக்கின்றனள். இல்லங்களில் புனிதமென்னும் கொழுந்தைத் தீட்டுபவள் மாதே. கோவில்களில் உன்னத ஸ்தானத்தை அடைந்திருப்பவள் மாதே. எக்யங்களிலும் மற்றும் பல சடங்குகளிலும் மாதுக்கே முதல் மரியாதையையும் பக்தியையும் செலுத்துகின்றனர். யாத்திரைகளில் எவற்றையும் செவ்வனே சீர்பெறச் செய்பவள் மாதுதான். இந்திய நாடே ஒரு பெண்மணியாக நின்று, யாவராலும் தாயாகப் பாவிக்கப்பட்டு, வழிபாடும் அன்பும் ஏற்றுக் கொண்டு வருகின்றது. சரஸ்வதி அணங்கே நமது கல்விக்கடவுள். இலக்ஷ்மி மாதே நமது

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

ஸ்ரீலஸ்ரீ கா. ச. ஸ்வாமிநாத தேசிகரால் கணிக்கப்பட்டது.

பிரபவஸூ பங்குனிமீ, விபவஸூ சித்திரைமீ (1928ஸூ ஏப்ரல்மீ)

உத்தராயணம், சசிருது, வசந்தருது, கலி-5029-30, பசலீ-1337, சாலி-1850-51, விபவ 2.

| ஏப்ரல் | | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | நேத்திரம். | ஜீவன். | யோகினி. | வா. ஹோரை. | விசேட நாட்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பங்குனி—மீனம் | 20 | ஞா | துவா, 56-39 | ம, 56-53 | ம, 56-53 சி | 2 | 1 | வட | துவா | கரிநாள் |
| 2 | | 21 | திங் | திர, 59-27 | பூ, 60 | சி, 60 | 2 | 1 | தெ-கி | திர | பிரதோஷம் |
| 3 | | 22 | செவ் | சது, 60 | பூ, 1-3 | சி, 13 அ | 2 | 1 | தெ-மே | சது | பங்குனி உத்திரம் |
| 4 | | 23 | புத | ச ○ 3-5 | உ, 6-10 | அ, 6-10 ம | 2 | 1 | தெ-மே | பௌ | அனுமத் ஜயந்தி |
| 5 | | 24 | வியா | பௌ 7-34 | அ, 12-10 | சி, 60 | 2 | 1 | தெற் | பிர | விதைவிதைக்க |
| 6 | | 25 | வெ | பிர, 13-4 | சி, 18-57 | சி, 60 | 2 | 1 | மேற் | துதி | காரைக்கால் அம்மை |
| 7 | | 26 | சனி | துவி, 19-4 | சு, 26 34 | அ, 26-34 சி | 2 | 1 | வ-மே | ... | தானியஞ் செலவிட |
| 8 | | 27 | ஞா | திரி, 25-42 | வி, 34-14 | ம, 60 | 2 | 1 | வ-கி | திரி | சுபம் விலக்க |
| 9 | | 28 | திங் | சது, 32-14 | அ, 42-3 | சி, 60 | 2 | 1 | ஆகா | சது | பும்சவனம் |
| 10 | | 29 | செவ் | பஞ், 38-27 | கே, 49-24 | ம, 49-24 அ | 2 | 0 | பூமி | பஞ் | ஆயுதம்பயிற்ற |
| 11 | | 30 | புத | ஷஷ், 43-48 | மூ, 55-52 | ம, 55-52 அ | 2 | ½ | கீழ | சஷ் | சுபம்விலக்க |
| 12 | | 31 | வியா | ஸப், 47-32 | பூ, 60 | சி, 60 | 1 | ½ | வட | சப் | மேஷ ரவி 52-42 |
| 13 | சித்திரை—மேஷம் | 1 | வெ | அஷ், 49-38 | பூ, 0-58 | பி, 0-58 சி | 2 | ½ | தெ கி | ... | வருஷப்பிறப்பு |
| 14 | | 2 | சனி | நவ, 48-37 | உ, 4-12 | சி, 60 | 1 | ½ | தெ-மே | நவ | மாவோங்க |
| 15 | | 3 | ஞா | தச, 47-27 | தி, 5-18 | அ, 5-18 ம | 1 | ½ | தெற் | தச | சுபம் செய்ய |
| 16 | | 4 | திங் | ஏகா, 43-19 | அ, 4-25 | சி, 60 | 1 | ½ | மேற் | ஏகா | வித்தியாரம்பம் |
| 17 | | 5 | செவ் | துவா, 37-24 | ச, 1-25<br>பூ, 56-50 | ம, 56-50 அ | 1 | ½ | வ-மே | துவா | அவமாகம் |
| 18 | | 6 | புத | திர, 30-9 | உ, 50-53 | சி 50-53 ம | 0 | ½ | வ-கி | திர | கரிநாள் |
| 19 | | 7 | வியா | ச ●, 21-28 | ரே, 44-3 | சி, 44-3 அ | 0 | 0 | ஆகா | சது<br>அமா | அமாவாசை |
| 20 | | 8 | வெ | அமா, 12-24 | அசு 36-45 | அ, 36-45 சி | 0 | 0 | பூமி | பிர | அவமாகம் |
| 21 | | 9 | சனி | பிர, 3-4<br>துவி, 54-0 | ப*, 28-28 | சி, 29-28 அ | 0 | 0 | கீழ | துதி | சிறுத்தொண்டர் |
| 22 | விபவஸ்ரீ | 10 | ஞா | திரி, 45-37 | கி 22-40 | சி, 60 | 0 | ½ | தெ-கி | திரி | |
| 23 | | 11 | திங் | சது, 38-5 | ரோ 16-48 | அ, 60 | 0 | ½ | தெ-மே | சது | |
| 24 | | 12 | செவ் | பஞ், 31-48 | மி, 12-3 | சி, 12-3 ம | 1 | ½ | தெற் | பஞ் | |
| 25 | | 13 | புத | ஷஷ், 27-7 | தி, 8-43 | சி, 60 | 1 | ½ | மேற் | சஷ் | |
| 26 | | 14 | வியா | ஸப, 24-9 | பு, 6-55 | அ, 60 | 1 | ½ | வ-மே | சப | |
| 27 | | 15 | வெ | அஷ், 22-54 | பூ, 6-50 | ம, 60 | 1 | ½ | வ-கி | அஷ் | |
| 28 | | 16 | சனி | நவ, 23-14 | ஆ, 8-30 | ம, 8-30 | 1 | ½ | ஆகா | நவ | |
| 29 | | 17 | ஞா | தச, 25-3 | ம, 11-35 | சி, 11-35 | 2 | ½ | பூமி | தச | |
| 30 | | 18 | திங் | ஏகா, 28-8 | பூ, 15-18 | சி, 60 | 2 | 0 | கீழ | ஏகா | |

| | | |
|---|---|---|
| புத<br>கு-சு | கு | ராகு |
| செவ் | 11 மே-பு<br>18 மே-சுக்<br>20 மே-குரு<br>26 மீ. அங<br>26 ரிஷ-பு | |
| | சனி<br>கேது | |

விபவஸூத்திய பலனுவது, நெல் விளைவுண்டு, மழை அதிகம் ஜனங்களால் அரசன் சிறப்படைவான், மனிதர்கள் சுகமடைவார்கள். பசுக்கள் விருத்தி, மன்மதனுல் ஜனங்கள் பாதை அடைபவர்களாக இருப்பார்கள். காலாகாலங்களில் பயிரிட்டால் விருத்தியுண்டு. காலந்தவறினல் பயிர்கள் நோயால் மடியும், வெள்ளி, வெல்லம், எள், எண்ணெய், உப்பு, பால் முதலியவைகள் விலையேற்றமாகும். பொன், செம்பு, நவமணிகள் விலை குறைவாக விற்கும். சித்திரைமீ 20, குரு கிழக்கே உதயம், அஸ்தமனம் இல்லை. சுக்கிரன் வைகாசி 21, கிழக்கே அஸ்தமனம், ஆடி 13, மேற்கே உதயம். சூரிய கிரஹணம் 3, சந்திர கிரஹணம் 2. இவ்வருடம் ஆதாயம் குறைந்தும விரயம் அதிகரித்தும் இருபபதால் ஜனங்களுக்கு கஷ்டமும் நஷ்டமும் உண்டாகும். மிதமான செலவால் சுகமடையலாம், 22-ஏப். மநுகையர்கரசி; 24 விறல்மிண்டர்.

# 'செங்குந்தமித்திரன்' புத்தகசாலை.

**புத்தகங்கள்!** — **நம்பிக்கையான விலைகள்!!**

இது வெளியூர்களிலுள்ள செங்குந்த நேயர்களுக்குத் தேவையான புத்தகங்களை வி. பி. தபாலில் அனுப்புவதற்கெனவே ஏற்பட்டுள்ளது. இவ்விடம் தமிழிலும் ஆங்கிலத்திலும் அகராதிகள், புராணங்கள், நவீனகதைப் புத்தகங்கள், பிரபந்தங்கள், வைதிகநூல்கள் புத்தகங்கள் முதலியவற்றின் திருத்தமானபதிப்புகள் அழகான கட்டடங்களில் கிடைக்கும். தேவையான புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புக. ஆர்டர் அனுப்புவதோடு அதன் மதிப்பின் பாகத்தை முன்பணமாக மணியார்டர் செய்தனுப்புக. மிகுதிநிற்கும் ரூபாயைத் தபாலின் செலவோடு வி. பி. போஸ்டில் புத்தகமனுப்பி வாங்கிக்கொள்ளுவோம். முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்பட மாட்டா.

இவ்வியாபாரத்தில் வரும் லாபமனைத்தும் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் ஏழைச் செங்குந்தமாணவரின் கல்வி சம்பந்தமாகச் செய்யும் தருமங்களுக்கு உதவுகையால், புதிய புத்தகங்களை வாங்க விரும்பும் செங்குந்த நேயர்கள் குலாபிமான சிந்தையுடன் நமது 'செங்குந்தமித்திரன் புத்தகசாலை'க்கே ஆர்டர் அனுப்ப வேண்டிக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

மானேஜர் :—'செங்குந்தமித்திரன்' ஆபீஸ்,
31, அரண்மனைக்காரன் தெரு.

# செங்குந்தமித்திரன்.

## சில முக்கியமான குறிப்புக்கள்.

(1) நமது பத்திரிகை ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் நான்காம் தேதி தபாலில் போடப்படும். இதில் தவறுதலேனும் தவக்கமேனும் நேராது. எந்தச் சஞ்சிகையாவது யாருக்காவது எம்மாதமேனும் கிடைக்காமலிருந்தால் அவர் தபால் அதிகாரிகளுக்கு மனு எழுதி எமக்கும் தெரிவிக்கவேண்டும்.

(2) சந்தாதாரர் எந்த மாதத்திற் சேரினும் தைமாதம் முதற்கொண்டே சேர்ந்ததாக் கணக்கிடப்பட்டு அது முதலுள்ள சஞ்சிகைகள் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் அனுப்பும் கடிதங்களிலும் மணியார்டர்களிலும் அவரவர்களுடைய சந்தா நெம்பரைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும். சந்தா நெம்பர்கள் போடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

(4) புதிய சந்தாதாரர்கள் அனுப்பும் கடிதங்களிலும் மணியார்டர்களிலும் 'புதிய சந்தாதார்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

## விளம்பர விகிதங்கள்.

'செங்குந்த மித்திர'னில் விளம்பரஞ் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விகிதம் முன்பணமாகக் கட்டணஞ் செலுத்தவேண்டும். மாதம் மாதம் 4,000 பிரதிகள் அச்சாகின்றன. ஜாதீய பத்திரிகைகளுள் இதற்கு மேலான பத்திரிகை இல்லை :—

| | | ஒரு வருஷம். | ஆறு மாதம். | மூன்று மாதம். | ஒரு மாதம். |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 100 | 50 | 26 | 10 |
| ½ பக்கம் | ,, | 60 | 30 | 16 | 6 |
| ¼ பக்கம் | ,, | 40 | 20 | 11 | 4 |

இங்ஙனம்:

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.